தமிழ்ப் புறம்
(எட்டுத்தொகை நூல்கள்)

அழகப்பா பல்கலைக்கழக முனைவர்
பட்டத்திற்காக அளிக்கப் பெறும் ஆய்வேடு

ஆய்வாளர் :

வை. இராமராஜபாண்டியன்

பதிவு எண் - 690

நெறியாளர் :

முனைவர். **மு. பாண்டி**

தமிழ்த் துறை

அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி - 630 003.

டிசம்பர் - 2003

முனைவர் மு.பாண்டி, எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃ.பில்., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630 003.

நாள்: 17. 12. 2003

ஆய்வுநெறியாளர் சான்றிதழ்

"தமிழ்ப்புறம்" என்னும் தலைப்பில் செல்வன்.வை.இராமராஜபாண்டியன் அவர்கள் முனைவர்ப் பட்டத்திற்காகச் செய்த இந்த ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பெற்றது என்றும் இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

(மு.பாண்டி)
நெறியாளர்

முனைவர் மு. பாண்டி,
எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃ.பில்., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி – 630 003.

வை. இராமராஜபாண்டியன்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630 003.

நாள்: 17-12-2003

ஆய்வாளர் உறுதிமொழி

"தமிழ்ப்புறம்" என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக எழுதப்பெற்ற இவ்வாய்வேடு எனது சொந்த முயற்சியால் உருவானதாகும். இவ்வாய்வேடு, இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்று உறுதியளிக்கின்றேன்.

வை. இராமராஜபாண்டியன்
(வை. இராமராஜபாண்டியன்)
ஆய்வாளர்

உறுதிகையொப்பம்

முனைவர் மு. பாண்டி,
எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி - 630 003

முனைவர் மு.பாண்டி, எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630 003.

நன்றியுரை

'தமிழ்ப்புறம்' என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்பளித்த அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் என் நன்றி.

இவ்வாய்விற்கு மேற்பார்வையாளராக இருந்து நெறிப்படுத்தியதுடன், நாள்தோறும் தூண்டியும், ஊக்கப்படுத்தியும் இவ்வாய்வு சிறப்பாக முடிவதற்குப் பெருந்துணையாக இருந்த என் பேராசிரியர் முனைவர் மு.பாண்டி அவர்களுக்குக் காலமெல்லாம் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்வுக்காலத்தில் துணை செய்த துறைப் பேராசிரியர்கள் முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை, முனைவர் சு.இராசாராம், திரு.மு.நடேசன் ஆகியோருக்கும் என் நன்றி.

இவ் ஆய்வினைச் செய்வதற்கு முழுமுதற் காரணமாய் அமைந்த எனது குடும்பத்தினருக்கும், இனிய நண்பர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி.

ஆய்வின் போது உதவி புரிந்த செல்வி. தாமரைச்செல்வி உள்ளிட்ட ஆய்வாளர் அன்பர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆய்வினைச் செம்மையாக அச்சிட்ட கற்பகம் கணிப்பொறி மையத்திற்கும், ரவி அச்சகத்திற்கும் நன்றி.

அன்புடன்

வை. இராமராஜபாண்டியன்

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

உ.ஆ	-	உரையாசிரியர்
தொல்	-	தொல்காப்பியம்
நூ.	-	நூற்பா
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
பதி.	-	பதிப்பாசிரியர்
பதிற்.	-	பதிற்றுப்பத்து
பன்னிரு	-	பன்னிருபடலம்
புறத்	-	புறத்திணையியல்
புறம்	-	புறநானூறு
மேலது	-	மேலே காட்டியது
(பதிற்றுப்பத்து) 3.10 ; 40-44	-	மூன்றாம் பத்தின், பத்தாவது பாடலின், நாற்பது முதல் நாற்பத்து நான்கு அடிகள்

பொருளடக்கம்

முன்னுரை

முன்னுரை

1. முன்னுரை
2. ஆய்வுத்தலைப்பு
3. ஆய்வுநோக்கம்
4. கருதுகோள்
5. ஆய்வுமூலங்கள்
6. ஆய்வுஎல்லை
7. ஆய்வு முன்னோடிகள்
8. ஆய்வு அணுகுமுறை
9. ஆய்வுச்சிக்கல்
10. ஆய்வுப்பகுப்பு

10.1 புறத்திணைக் கோட்பாடு

10.2 புறத்துறைக் கோட்பாடு

10.3 புறப்பொருளும் புறநானூறும்

10.4 புறப்பொருளும் பதிற்றுப்பத்தும்

10.5 புறத்திணைக்குறிக்கோள்

11. முடிவுரை

1. முன்னுரை

எட்டுத்தொகையும், பத்துப்பாட்டுமான சங்க இலக்கியங்களை, பாடு பொருள்களால் அகம், புறம் என்ற பாகுபாடுகளுக்குள் அடக்குவர். தூய காதல் வாழ்வினைப் பேசுவது அகமாகும். அகம் தவிர்த்த பிற அனைத்தும் புறமாகும். எட்டுத்தொகையுள் புறநானூறும் பதிற்றுப்பத்தும் முற்றிலும் புறப்பொருளால் அமைந்தனவாகும். பரிபாடல் அகமும் புறமும் ஒருங்கே கொண்டது. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முதலான ஆறு நூல்கள் புறம் சார்ந்தவை. "புறநானூற்றில் பொதுவியல்" என்ற தலைப்பில் இளமுனைவர்ப்பட்டத்திற்காக ஆய்வு செய்யப்பெற்றது. புறம் சார்ந்த முன்னைய ஆய்வுக்களத்தினை அடியொற்றி "தமிழ்ப்புறம்" எனும் தலைப்பில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளப்பெறுகிறது.

2. ஆய்வுத்தலைப்பு

தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் புறத்திணைகளையும், புறத்துறைகளையும் எவ்வாறு விளக்குகின்றன என்றும், புற இலக்கியங்களான புறநானூறும் பதிற்றுப்பத்தும் புற இலக்கணத்துடன் ஒத்து அமைகின்றனவா? என்றும் புற இலக்கியங்களின் குறிக்கோள் குறித்தும் ஆய்வு செய்யும் முகமாகத் "தமிழ்ப் புறம்" எனும் தலைப்பு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

3. ஆய்வு நோக்கம்

புறத்திணைகளின் பாகுபாடுகளைக் கண்டறிவதும், புறத்துறைகளின் பாகுபாடுகளைக் காண்பதும், புறநானூற்றின் பாடல்களையும், பதிற்றுப்பத்தின் பாடல்களையும் புறஇலக்கணத்தோடு ஒப்பிட்டு நோக்குவதும், புற இலக்கியங்களின் குறிக்கோள்களினைக் காண்பதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

4. கருதுகோள்

புறத்திணைகளிலும், துறைகளிலும் இலக்கணங்களிடையே பாகுபாடுகள் காணப்படினும் ஒற்றுமைக் கூறுகள் இருக்கவேண்டும். புறநானூற்றின் பாடல்களும், பதிற்றுப்பத்தின் பாடல்களும் புற இலக்கணத்தை ஏற்று அமைய வேண்டும். அமைதியான சமுதாயத்தினை உருவாக்குவது புறத்திணையின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பன இவ்வாய்வின் கருதுகோள்களாகும்.

5. ஆய்வு மூலங்கள்

தொல்காப்பியம், புறப்பொருள்வெண்பாமாலை, வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்களும், புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புற இலக்கியங்களும் முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன. சங்க இலக்கியங்கள் குறித்த திறனாய்வு நூல்கள், ஆய்வேடுகள், இதழ்கள், கட்டுரைகள் போன்றவை துணைமைச் சான்றாதாரங்களாக இடம்பெறும்.

6. ஆய்வு எல்லை

புற இலக்கணங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் நிலையில் தொல்காப்பியம், புறப்பொருள்வெண்பாமாலை, வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கணநூல்கள் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

எட்டுத் தொகையில் பதிற்றுப்பத்தும், புறநானூறும் முற்றிலும் புறம் சார்ந்த இலக்கியங்களாதலால் அவையும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பரிபாடல் அகமும், புறமும் கொண்டதாதலால் இங்கு ஆய்வு செய்யப்படவில்லை. ஆய்வுச் சுருக்கம் கருதியும், பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படை நூல்கள், ஆற்றுப்படைத் துறைகளின் வளர்ச்சியே ஆதலானும், பத்துப் பாட்டின் புறநூல்கள் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

7. ஆய்வு முன்னோடிகள்

புற இலக்கியங்கள் குறித்து எண்ணற்ற ஆய்வுகள் வெளிவந்துள்ளன. "புறத்திணை" என அ.சீனிவாசனும், "புறத்திணை விருந்து" என சுந்தரமகாலிங்கமும், "சங்க இலக்கியத்தில் புறப்பொருள்" என கு.வெ.பாலசுப்பிரமணியனும் ஆய்வுகளைச் செய்துள்ளனர். புறத்திணையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து இராமகிருட்டுணனும், "புறத்திணை இலக்கணங்களின் திணை துறை" குறித்து து.பட்டாபிராமனும் ஆய்வு செய்துள்ளனர். தனிப்பட்ட நிலையில், ஒரு குறிப்பிட்ட புறத்திணையினை குறித்து ஆய்வுகளும் எழுந்துள்ளன. "வாகைத் திணை" குறித்து கோ.சிவகுருநாதனும், "பாடாண் திணை" குறித்து நா.செயராமனும் செய்த ஆய்வுகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. பல ஆய்வுகள் புறப்பொருள் குறித்து எழுந்த போதும், புறத்திணைகளையும், துறைகளையும் புறப்பொருள்வெண்பாமாலையின் அடிப்படையில் தொல்காப்பியம் முதலான பிற இலக்கணங்களோடு ஒப்பிட்டும், புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இலக்கியங்களின் பாடல்களைப் புறப்பொருள்வெண்பாமாலையின் இலக்கணத்தோடு ஒப்பிட்டும் பார்க்கும்படியான ஆய்வுகள் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. அவ்வகையில் இதுவே முதலாவது ஆய்வாக அமைகிறது.

8. ஆய்வு அணுகுமுறை

புறத்திணைகளையும், துறைகளையும், புறப்பொருள் இலக்கணங்களிடையே ஒப்பிட்டும், புறநானூறு பதிற்றுப்பத்தின் பாடல்களைப் புற இலக்கணத்தோடு ஒப்பிட்டும் நோக்குவதால் ஒப்பியல் அணுகுமுறையும், புறத்திணையின் குறிக்கோளினை விளக்கும் விதத்தில் விளக்கவியல் அணுகுமுறையும் இவ்வாய்விற்குரிய அணுகுமுறைகளாக இடம்பெறுகின்றன.

9. ஆய்வுச்சிக்கல்

புறத்திணைகளைப் புறப்பொருள்வெண்பாமாலை பன்னிரெண்டு எனவும், தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகியன ஏழு எனவும், வீரசோழியம் பத்து எனவும் குறிக்கின்றன. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்கள் பன்னிரெண்டு எனும் கொள்கையினை மறுத்துரைப்பர். இங்குப் புறத்திணைகளின் எண்ணிக்கை வேறுபாடு குறித்த சிக்கல் எழுகிறது. புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றைப் புற இலக்கணத்தோடு ஒப்பிடுகையில் புறஇலக்கணங்களில் இல்லாத பல புதிய துறைகளைக் காணமுடிகிறது. இப்புதிய துறைகளின் பொருளினைக் குறித்து அறிவதும் இவ்வாய்வின் சிக்கலாக அமைகிறது.

10. ஆய்வுப் பகுப்பு

இந்த ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாகக் கீழ்க்கண்ட ஐந்து இயல்களைக் கொண்டிருக்கும்.

முன்னுரை

1. புறத்திணைக் கோட்பாடு
2. புறத்துறைக் கோட்பாடு
3. புறப்பொருளும் புறநானூறும்
4. புறப்பொருளும் பதிற்றுப்பத்தும்
5. புறத்திணைக் குறிக்கோள்

முடிவுரை

10.1 புறத்திணைக் கோட்பாடு

புறப்பொருள்வெண்பாமாலை பன்னிரெண்டாகக் குறிக்கும் புறத்திணைகள் தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகியவற்றில் ஏழாகக் குறிக்கப்பெறுகின்றன. தமிழிலக்கணங்களில்

முதன்மையானதாகக் கருதப்படும் தொல்காப்பியம், புறத்திணைகளை ஏழு எனக் குறித்த போதும், புறப்பொருள்வெண்பாமாலை சுட்டியுள்ள பன்னிரெண்டு திணைப் பொருள்களையும் தன்னகத்தே கொண்டுள்ளமை "புறத்திணைக் கோட்பாடு" எனும் முதல் இயலில் விளக்கப்படுகிறது. தொல்காப்பியம், 'புறத்திணை ஏழு' எனக் குறித்ததனைப் புறப்பொருள்வெண்பாமாலை பன்னிரெண்டு எனக் குறித்ததன் பயனும் இவ்வியலில் ஆய்வு செய்யப்படுகிறது.

10.2 புறத்துறைக்கோட்பாடு

புறப்பொருள்வெண்பாமாலையே அதிகப் புறத்துறைகளைக் கொண்ட இலக்கண நூலாகும். இவற்றிலுள்ள புறத்துறைகளைத் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகியவற்றின் புறத்துறைகளோடு "புறத்துறைக் கோட்பாடு" எனும் இரண்டாமியலில் ஒப்பிட்டு நோக்கப்படும். இவ்வியலில் புறப்பொருள்வெண்பாமாலையில் கூறப்பட்டுத் தொல்காப்பியம் முதலான இலக்கணங்களில் கூறப்படாத துறைகளும், தொல்காப்பியம் முதலான இலக்கணங்களில் கூறப்பட்டுப் புறப்பொருள்வெண்பாமாலையில் கூறப்படாத துறைகளும் விளக்கப்பெறும்.

10.3 புறப்பொருளும் புறநானூறும்

புறநானூற்றிற்குத் திணை, துறை வகுத்தோர் அதன் பாடல்களுக்குப் பதினொரு திணைகளைக் கூறுவதோடு அவர்கள் குறித்த துறைகளும் பெரும்பான்மையும் புறப்பொருள்வெண்பாமாலையினை ஒட்டியே அமைகின்றன. எனவே, புறநானூற்றிற்குக் குறிக்கப்பட்டுள்ள பாடலின் துறைகள், புறப்பொருள்வெண்பாமாலையின் அடிப்படையில் பாடற் பொருளுடன் ஒத்து அமைவதனைக் குறித்து ஆய்வது "புறப்பொருளும் புறநானூறும்" எனும் மூன்றாம் இயலாகும். இதன் மூலம் புறநானூற்றில் துறை பொருந்தாப் பாடல்களை அறியமுடிவதோடு, இலக்கணங்கள் சுட்டாத புதிய துறைகளையும் உணரமுடிகிறது. புறத்துறைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் அளவிலேயே

திணைகளும் பொருந்திவிடுவதால் தனியாகத் திணை ஒப்பீடு இவ்வியலில் ஆராயப்படவில்லை.

10.4 புறப்பொருளும் பதிற்றுப்பத்தும்

"புறப்பொருளும் பதிற்றுப்பத்தும்" எனும் நான்காமியலில் பதிற்றுப்பத்திற்குத் துறை வகுத்தோரால் குறிக்கப்பட்டுள்ள துறைகள் அவ்வவற்றின் பாடல்களுடன் பொருந்துமாற்றைப் புறப்பொருள்வெண்பாமாலையின் அடிப்படையில் ஒப்பிட்டாய்வு செய்யப்படுகிறது. முன்னைய இயலில் கண்டது போன்றே புறஇலக்கணங்கள் சுட்டாத பல புதிய துறைகளை இவ்வியலும் சுட்டும்.

10.5 புறத்திணைக்குறிக்கோள்

வ.சுப.மாணிக்கம் தமது "தமிழ்க்காதல்" எனும் நூலில் அகத்திணையின் குறிக்கோள் இன்பத்தைப் பாடுவது என்பர். புறத்திணை இவ்வாறு இன்பத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டதல்ல. உலக நிகழ்வுகளைக் கூறுவதால், இத்திணையில் இன்பம், துன்பம் ஆகிய இரண்டும் இடம் பெறுகின்றன. போரில் பெற்ற வெற்றி புகழப்படுவதுடன், போரினைத் தடுத்தலும் இத்திணையில் உள்ளது. அமைதியான, அறமிக்க சமுதாயத்தினைப் படைப்பதே புறத்திணையின் குறிக்கோள் என்பது இவ்வியலில் துணியப்படுகிறது.

11. முடிவுரை

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் இயல்முடிவுகள் தொகுப்புரையாக இடம்பெறும். ஆய்வில் கண்ட முடிவுகளின் சாராம்சங்கள் தொகுக்கப்பெற்று ஆய்வின் முடிவுகளாக முடிவுரையில் இடம்பெறும். ஆய்வுக்குத் துணைபுரிந்த நூல்கள் அகரவரிசையில் துணை நூற்பட்டியலாகத் தரப்பெறும்.

இயல்- 1

புறத்திணைக் கோட்பாடு

புறத்திணைக்கோட்பாடு

1.1 முன்னுரை

1.2 வெட்சி, கரந்தைத் திணைகள்

1.3 வஞ்சி, காஞ்சித்திணைகள்

1.4 நொச்சி, உழிஞைத் திணைகள்

1.4.1 சிறப்பில்லா அரசியல்

1.5 தும்பைத்திணை

1.6 வாகைத்திணை

1.7 பாடாண்திணை

1.8 பொதுவியல்

1.8.1 பொதுவியல்: தனித்திணை காரணம்

1.9 கைக்கிளை, பெருந்திணைத் திணைகள்

1.9.1 கைக்கிளை

1.9.2 பெருந்திணை

1.9.3 கைக்கிளை, பெருந்திணைக்குரியோர்

1.9.4 பெயர் சுட்டும் மரபு

1.9.5 அகப்புற வேறுபாடுகள்

1.9.6 புறநானூற்றில்

1.10 புறத்திணைகள் - ஏழா? பன்னிரெண்டா?

1.11 விரித்ததன் பயன்

1.12 தொகுப்புரை

1.1 முன்னுரை

தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் புறத்திணைகளை, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழாகக் குறிப்பிடுகின்றது. பன்னிருபடலத்தின் வழிநூலாகக் கருதப்படும் புறப்பொருள்வெண்பாமாலை இவற்றை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப் பன்னிரெண்டாக விரித்துரைக்கின்றது. பிந்தைய இலக்கண நூல்களில் வீரசோழியம் 'பத்து' எனவும், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகியன 'ஏழு' எனவும் புறத்திணைகளை எண்ணுகின்றன. இவ்விடத்து, புறத்திணைகளின் எண்ணிக்கை வேறுபாடு குறித்த சிக்கல் எழுகிறது. இவ்வெண்ணிக்கை வேறுபாடு குறித்து ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

1.2 வெட்சி, கரந்தைத் திணைகள்

புறப்பொருள்வெண்பாமாலை, பகைவருடைய ஆநிரைகளைக் கவர்தல் வெட்சித்திணை என்றும், கவரப்பட்ட ஆநிரைகளை மீட்டல் கரந்தைத்திணை என்றும் கூறுகிறது. தொல்காப்பியம் இவ்விரு செயல்களையும் வெட்சி என ஒரே திணையாகக் கொள்கிறது. எனினும் 'வெறியறி சிறப்பின்' எனத் தொடங்கும் இதன் புறத்திணையியல் நூற்பாவில்,

"மனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்"(1)

எனக் கரந்தை என்ற சொல்லாட்சியை ஆநிரை மீட்டலுடன் தொடர்புபடுத்திப் பேசுகிறது. எனவே தொல்காப்பியருக்கும் ஆநிரைமீட்டலைக் கரந்தை எனக் குறிப்பது உடன்பாடே எனலாம். இந்நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர் "வேலன் முதலாக வெட்சித்திணைக்குரிய துறை கூறினார். இனி அதற்கு மாறாகிய கரந்தைத் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று அதுவும் ஆநிரை மீட்டல் காரணமாக அந்நிலத்தின்கண் நிகழ்வதாகலின் வெட்சியின்பாற்பட்டு குறிஞ்சிக்குப் புறனாயிற்று"(2) என்கிறார். மேலும் "மலையாகிய

குறிஞ்சித்திணைப்புறம் - நிரைகோடலும் நிரைமீட்டலும் என்னும் வேறுபாடு குறித்து வெட்சி எனவும் கரந்தை எனவும் இரண்டு குறி பெறுதலும்"(3) என்றும் இளம்பூரணர் வெட்சி கரந்தைத் திணைகளைக் குறிப்பிடுகிறார். இவரின் கூற்றுக்களின் மூலம் கரந்தையினை வெட்சிக்குள் அடக்கி ஒரே திணையாகக் கொண்ட போதிலும், இவர் கரந்தையினை வெட்சியின் எதிர்ச் செயலாகக் கொண்டமை தெளிவாகும்.

நச்சினார்க்கினியர், "கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரைமீட்டோர் பூச்சூடுதலிற் பெற்ற பெயராதலின் வெட்சித்திணை போல ஒழுக்கமன்று"(4) எனக் கரந்தையினைத் தனித்திணையாகக் கொள்வதனை மறுக்கிறார். இவரின் கூற்றிலும் நிரைமீட்டலைக் கரந்தை எனக் குறிப்பது வெளிப்படை. சோமசுந்தரபாரதியார், வெள்ளைவாரணர், ஆகியோர் நிரைமீட்டலைக் கரந்தை எனக் குறித்தபோதும், அது வெட்சியினுள்ளேயே அடங்கும் என்கின்றனர். மேற்கண்டவற்றின் மூலம் தொல்காப்பியர் முதல் இளம்பூரணர் முதலான உரையாசிரியர்களும் நிரைமீட்கும் செயலைக் கரந்தை எனக் குறிப்பிடுவது தெளிவாகிறது.

புத்தமித்திரரின் வீரசோழியம் புறப்பொருள்வெண்பாமாலையைப் பின்பற்றி கரந்தையினைத் தனித்திணையாகக் கூறுகிறது. சுவாமிநாதம், இலக்கணவிளக்கம் ஆகியவை கரந்தையினைத் தனித்திணையாகக் கொள்ளவில்லை. ஆனால் கரந்தை எனும் சொல்லாட்சியைப் பயன்படுத்துகின்றன. 19-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் முத்துவீரியம் கரந்தையினைத் தனித்திணையாகவே குறிப்பிடுகிறது. இவற்றின் மூலம் பின்னர் தோன்றிய இலக்கணநூல்கள் அனைத்தும் நிரைமீட்டலைக் கரந்தை எனக் குறிப்பது தெளிவாகும்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றிற்கும் இலக்கணம் கூறுகிறது. புறத்தைக் குறித்து 'புறத்திணையியல்' என்ற ஒரு இயலில் மட்டும் பேசுகிறது. அதனோடு வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற ஏழு புறத்திணைகளையும் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என்ற ஏழு அகத்திணைகளுடன் ஒப்புமைபடுத்திக் கூறுகிறது. வெட்சி, கரந்தையினை இரண்டு திணைகளாகக் கொண்டால் இவ்வொப்புமை கூற இயலாது. மேற்கண்ட

காரணங்களால் தொல்காப்பியம் வெட்சி கரந்தையினை ஒரே திணையாகக் கொண்டதாக எண்ணத்தோன்றுகிறது. ஆயின் புறப்பொருள்வெண்பாமாலை புறப்பொருளை மட்டும் பேச எழுந்ததால் புறப்பொருளை விரித்துக்கூறுதல் இயல்பானதாகும். அவ்வகையில் நிரைகவர்தல், நிரைமீட்டல் ஆகிய இரண்டு செயல்களையும் இரண்டு திணைகளாக விரித்துரைக்கிறது. சோமசுந்தரபாரதியார் "களவில் ஆகொளவரும் முனைஞரைத் தடுத்து நிரைகாவலர் மீட்க முயல்வதும், அவரொடு நிரைகொள்வார் பொருதுவதும் வேறு திணையாகமல் ஆகோளின் இடைநிகழ்ச்சிகளாயடங்கும் இயல்கருதி அவற்றை 'அனைக்குரி மரபிற் கரந்தை' என வெட்சித்துறைகளில் அடக்குவர் தொல்காப்பியர்"(5) என்று தொல்காப்பியர் வெட்சிக்குள் கரந்தையினை அடக்கியதற்கான காரணத்தைக் கூறுகிறார். இவரின் கூற்றுப்படி ஆநிரைமீட்டலானது ஆகோளின் இடைநிகழ்ச்சி என்ற போதிலும், இது ஆகோளின் எதிர்ச்செயலாகும். ஒருவர் பகைவரின் ஆநிரையைக் கவர்வதும், கவரப்பட்ட ஆநிரைக்குரியவர் அதனை மீட்பதும் இரண்டு வேறுபட்ட செயல்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே, இவ்வேறுபட்ட இரண்டு செயல்களையும் இரண்டு திணைகளாகக் குறிப்பது தவறாகாது.

இங்குத் தொல்காப்பியமும் புறப்பொருள்வெண்பாமாலையும் எண்ணிக்கை அளவில் வேறுபடுகின்றனவேயன்றி சொல்முடிபும், பொருள் முடிபும், ஒத்தே அமைகின்றன என்பது நோக்கத்தக்கது.

1.3 வஞ்சி, காஞ்சித்திணைகள்

புறப்பொருள்வெண்பாமாலை வஞ்சியையும் காஞ்சியையும் ஒன்றிற்கு ஒன்று எதிர்த்திணைகளாகக் குறிப்பிடுகிறது. ஒரு வேந்தன் பகையரசன் நாட்டைக் கொற்றங் காரணமாகக் கைப்பற்றக் கருதியது வஞ்சித்திணை எனவும், அந்நாட்டிற்குரியவர் தம் நாட்டைக் காத்தற் பொருட்டு எதிர்த்துப் போரிடல் காஞ்சி எனவும் இந்நூல் சுட்டுகிறது.

அளவு கடந்த மண்ணாசையுடைய பகைமன்னன் படையெடுத்து வரும் முன்னர் தாமே படையெடுத்துச் சென்று அவனை அழிப்பது வஞ்சித்திணை என்கிறது தொல்காப்பியம். இதற்கு எதிர்த்திணையாக எதையும்

குறிப்பிடவில்லை. புறப்பொருள்வெண்பாமாலையினால் வஞ்சியின் எதிர்த்திணையாகக் குறிக்கப்படும் காஞ்சியினைத் தொல்காப்பியம்,

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே"(6)

என நிலையாமைத் திணையாகக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் புறத்திணைகள் ஏழு எனவும், புறப்பொருள்வெண்பாமாலை பன்னிரெண்டு எனவும் கூறும் தலையாய வேறுபாட்டினை அடுத்து இவ்விரண்டிற்குமிடையேயான மற்றுமொரு பெரிய வேறுபாடு இதுவாகும்.

வீரசோழியம் வஞ்சித்திணையினை அடுத்து காஞ்சித்திணையை வைத்துள்ள போதிலும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி காஞ்சியினை நிலையாமைத் திணையாகவே குறிப்பிடுகிறது. இலக்கணவிளக்கம் எழுதிய வைத்தியநாததேசிகர் தொல்காப்பியத்தைப் போன்று வாகையினை அடுத்து காஞ்சியினை அமைத்துள்ளார். காஞ்சித்திணை நிலையாமையைக் குறிப்பது என்றும் சுட்டுகிறார். ஆயின் அதன் துறைகள் எதிரூன்றலாகிய புறப்பொருள் வெண்பாமாலையினை அடியொற்றியே அமைந்துள்ளன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த சுவாமிநாதமும் இலக்கணவிளக்கத்தைப் போன்றே அமைந்துள்ளது. இதே நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் முத்துவீரியம் காஞ்சியினை வஞ்சியின் எதிர்த்திணையாகக் குறிப்பிடுகிறது.

சங்க நூலான புறநானூற்றிற்குத் திணை, துறை வகுத்தவர்கள் காஞ்சித்திணையினை வஞ்சியின் எதிர்த்திணையாகவே கொண்டுள்ளனர். ஆயின் "மதுரைக் காஞ்சி, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இலக்கியங்களில் 'காஞ்சி' நிலையாமைப் பொருண்மை உணர்த்துவதாகவே காணப்படுகிறது"(7) என்கிறார் சோ.ந.கந்தசாமி. இது மேலும் ஆய்விற்குரியது.

'காஞ்சி என்பது நிலையாமை'(8) என்கிறது கழகத்தமிழ் அகராதி. புறப்பொருள்வெண்பாமாலை எதிரூன்றலைக் காஞ்சி என்று கூறிய போதிலும், பொதுவியல் திணையில் 'காஞ்சிப் பொதுவியற்பால' என்ற தலைப்பின் கீழ் நிலையாமைத் துறைகளை விளக்குகிறது. எனவே 'காஞ்சி நிலையாமையை உணர்த்தும் சொல்' என்பதற்கு ஐயனாரிதனாரும் உடன்படுகிறார். மேலும் தொல்காப்பியர் காஞ்சித்திணையில் குறிப்பிடும் துறைகளில் ஏழு துறைகளை

(தலையோடு முடிதல், மறக்காஞ்சி, பேய்நிலை, தொடாக்காஞ்சி, மன்னைக்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி) ஐயனாரிதனார் தமது காஞ்சித்திணையில் எடுத்தாள்கிறார். அதாவது தொல்காப்பியர் நிலையாமை எனக் குறிப்பிட்ட துறைகளை ஐயனாரிதனார் எதிருன்றலில் குறிப்பிடுகிறார். இதில் மகட்பாற்காஞ்சி தவிர்த்த ஏனையத் துறைகள் வெளிப்படையாகவே நிலையாமையை உணர்த்துகின்றன. ஐயனாரிதனார் வஞ்சியின் எதிருன்றலாகக் காஞ்சியினைக் கூறியுள்ளதற்கான காரணத்தைப் பின்வரும் வெள்ளைவாரணர் கூற்றின் மூலம் ஒருவாறு தெளியலாம். "உலகியலில் பலவகைத் துன்பியற் கூறுகளையும், கண்டு அஞ்சிப் பின்னிடாது அவற்றை எதிரேற்றுத் தாங்கி நிற்றல் காஞ்சித்திணையாம் எனத் தொல்காப்பியனார் பொதுப்படக் கூறிய இவ்விலக்கணத்தினை அடிப்படையாகக் கொண்டே தன்மேற் படையெடுத்துவரும் வஞ்சிவேந்தன் சேனையினைப் போரில் எதிர் ஏற்றுத் தடுத்து நிறுத்துதல் காஞ்சித் திணையாம் என்னும் சிறப்பிலக்கணம் பிற்காலத்து உருப்பெறுவதாயிற்று"(9)

1.4 நொச்சி, உழிஞைத் திணைகள்

"பகைவருடைய தாக்குதலினின்றும் தம்முடைய மதிலைக் காத்தல் நொச்சித்திணை. பகைவருடைய மதிலைக் கைப்பற்றக் கருதி அதனை வளைத்தல் உழிஞைத்திணை. தொல்காப்பியம் இவ்விரண்டையும் உழிஞை என ஒரே திணையாகக் குறிக்கிறது.

புறப்பொருள்வெண்பாமாலையில், வெட்சிக்குக் கரந்தையும், வஞ்சிக்குக் காஞ்சியும், எனத் தாக்கும் திணைகள் முன்னதாக அமைய, அவற்றைத் தொடர்ந்து அதன் எதிர்த்திணைகள் அமைகின்றன. ஆயின் இங்குத் தாக்கும் திணையாகிய உழிஞைக்கு முன்னதாக மதிலைக் காத்துக் கொள்ளும் நொச்சித்திணை கூறப்பட்டுள்ளது. இதற்கான காரணத்தைத் தெளிவுபட அறிய இயலவில்லை. புறப்பொருள் வெண்பாமாலைக்கு உரை எழுதிய உ.வே.சாமிநாதையர் தமது முகவுரையில் 'இந்நூலிலுள்ள 19-ஆம் சூத்திரத்தினாலும், "உழிஞையும் நொச்சியுந் தம்முண் மாறே" (பன்னிரு) என்பது முதலியவற்றாலும் உழிஞைப் படலதிற்குப் பின் நிற்றற்குரியதாக அறியப்படும்

நொச்சிப்படலம் எல்லாப் பிரதிகளிலும் அதற்கு முன்பே காணப்பட்டமையால் அவ்வாறே பதிப்பிக்கப்பட்டது'[10] என்கிறார். மேலும் இவர்,

"வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம் - உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்தல் நொச்சி
அதுவளைத்த லாகு முழிஞை – அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்"[11]

என்னும் பழைய செய்யுள் ஒன்றினையும் எடுத்துக்காட்டுகிறார். இதில் உழிஞைக்கு முன்னதாக நொச்சி குறிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில்,

"முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்"[12]

என அரண் முற்றுதலை அடுத்துப் பாதுகாத்தல் சுட்டப்பட்டுள்ளது. மேலும் இந்நூல் உழிஞைத் துறைகளை விளக்கும் போது,

"அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும்"[13]
"அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்"[14]

என நொச்சியினை அடுத்து உழிஞையைக் குறிக்கிறது. அகத்தோனின் செயலை நொச்சி எனக்குறிப்பது தொல்காப்பியருக்கும் உடன்பாடே என்பது இதன் மூலம் தெளிவாகிறது. எனினும் தொல்காப்பியத்தில் மட்டுமே கூட, உழிஞையினை அடுத்து நொச்சியும், நொச்சியை அடுத்து உழிஞையும் என இரண்டு வேறுபட்ட வைப்பு முறைகளைக் காணமுடிகிறது.

புறப்பொருள்வெண்பாமாலையும் இதே போன்றதொரு முரண்பட்ட வைப்புமுறைகளைக் கொண்டுள்ளது. முதலில் நொச்சியினை அடுத்து உழிஞையினை விளக்கும் இந்நூலின் இறுதி நூற்பா,

"உட்குடை உழிஞை நொச்சி தும்பை"[15]

என உழிஞையினை அடுத்து நொச்சியைக் குறிப்பிடுகிறது. இவற்றின் மூலம், இவ்விருவகையான வைப்பு முறைகளையும் புறப்பொருள்வெண்பாமாலை, தொல்காப்பியம் ஆகிய இரண்டு நூல்களுமே ஏற்றுக் கொள்கின்றன என்பது

தெளிவாகிறது. இவ்விரண்டு பட்ட வைப்பு முறைகளுக்கான காரணங்களைப் பின்வருமாறு யூகிக்க இடனுண்டு

1. ஒரு வேந்தன் பகைவனது அரணைக் கைப்பற்றக் கருதி அவனது அரணை முற்றுகையிடுவான். உள்ளிருக்கும் வேந்தன் அவனோடு போர் செய்து அரணைக் காத்துக் கொள்வான். இக் கொள்கையின்படி உழிஞையினை அடுத்து நொச்சி இடம் பெறும்.
2. பகைவன் தனது அரணை முற்றுகையிடாத போதும், அதாவது உழிஞை நிகழாத காலத்தும் அரணைப் பாதுகாக்கும் தொழில் நடைபெற்றிருக்கும். இதனைக் குறிக்கும் பொருட்டு நொச்சி முன்னதாக இடம்பெற்றிருக்க வேண்டும்.
3. வலியில் மிக்க பகைவனுடன் போர் செய்யத் தயங்கிய வேந்தன் ஒருவன் தமது அரணைத் துணையாகக் கொண்டு போர் செய்யக்கருதி, பகைவன் தமது அரணை முற்றுகையிடும் முன்னமே அரணிற்குள் புகுந்து கொள்ள உழிஞை வேந்தன் முற்றுகையிடல் அதன் பின்னர் நிகழ்ந்திருக்கும். இதன்படி நொச்சியினை அடுத்து உழிஞை நடைபெறுகிறது.

இவ்விரு வகையான வைப்பு முறைகளுமே பொருத்தமாக அமைவதாலும், புறப்பொருள்வெண்பாமாலை, தொல்காப்பியம் ஆகிய இரண்டும் இவ்விருவகையான வைப்புமுறைகளையும் ஏற்றுக் கொள்வதாலும் இடத்திற்குத்தக்க ஏதாவது ஒரு வைப்பு முறையைக் கொள்ளலாம்.

வீரசோழியம் உழிஞை, நொச்சி ஆகிய இரண்டினையும் தனித்தனித் திணைகளாகக் கொள்கிறது. சுவாமிநாதம், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டு இலக்கண நூல்களும் தொல்காப்பியத்தைப் போன்றே உழிஞைக்குள் நொச்சியை அடக்கி ஒரே திணையாகக் கொள்கின்றன. எனினும் தொல்காப்பியம் மிகத் தெளிவாக உழிஞையின் எதிர்ச்செயலாக நொச்சியைச் சுட்டுகிறது. முற்கூறியவாறு தொல்காப்பிய அமைப்பு முறைக்கும், புறப்பொருள் வெண்பாமாலையின் அமைப்பு முறைக்கும் ஏற்ப இச்செயல்கள் முறையே ஒரு திணையாகவும், இரண்டு திணைகளாகவும் இடம் பெற்றன எனக் கருதலாம்.

1.4.1 சிறப்பில்லா அரசியல்

மதிலினை அடிப்படையாகக் கொண்டு நிகழும் இப்போரினை “இங்ஙனம் அடைத்திருத்தலும் அவனைச் சூழ்ந்தழித்தலும் கலியூழி தோறும் பிறந்த சிறப்பில்லா அரசியலாதலின் இவை வஞ்சமுடையதாயிற்று”(16) என்கிறார் நச்சினார்க்கினியர். மேலும் சிறப்புடைய அரசியலாக “மடிந்த உள்ளத்தோனையும் மகப்பெறாதோனையும் மயிர்குலைந்தோனையும் அடிபிறக்கிட்டோனையும் பெண்பெயரோனையும் படையிழந்தோனையும் ஒத்த படையெடாதோனையும் பிறவும் இத்தன்மையுடையோரையுங் கொல்லாது விடுதல்”(17) ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இவர் கூறும் இப்போர் முறைகள் பண்டைத் தமிழரின் சிறந்த போர் நெறிகளைக் காட்டுகின்றன. ஆயின் இலக்கணத்தில் உழிஞை, நொச்சி ஆகியன இடம்பெற்றுள்ளன. தமக்கு ஒத்த படையினைக் கொண்டிராதவனையும், பெண் பெயரினைக் கொண்டவரையும் கூட தாக்காத பண்டைத் தமிழர்கள் எவ்வாறு அரணினை அடைத்துக் கொண்டு உள்ளிருக்கும் நொச்சியாரைத் தாக்க முனைந்தனர் என்பது சிந்திக்கத்தக்கது.

பண்டைய போர்க்காரணங்களில் தலையாயதாகக் கருதப்படுவது மானஉணர்வே ஆகும். ஒரு வேந்தனை மற்றொரு வேந்தன் இகழ்ந்து பேசிவிட, முதலாமவன் இகழ்ந்து பேசியவன் மீது படைதொடுப்பான். அவ்வேளையில் இகழ்ந்து பேசிய இரண்டாமவன் அரணிற்குள் புகுந்து கொண்டாலும் அவனைப் பணிய வைக்க வேண்டும் என்ற எண்ணம் பாதிக்கப்பட்ட வேந்தனுக்குத் தோன்றுதல் இயல்பானதாகும். இவ்வகையிலேயே உழிஞைப்போர் பெரும்பான்மையும் நடைபெற்றிருத்தல் வேண்டும். எனினும் சங்கப்புலவர்கள் உழிஞைப் போரினை ஊக்குவிக்கும் விதமாக ஒரு பாடலையும் பாடவில்லை. புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் பன்னிரெண்டு திணைகளில் உழிஞைத் திணையைத் தவிர்த்த பிற பதினொரு திணைகளும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. நொச்சித் திணையின் கீழ் ஆறு பாடல்கள் (புறம் 109, 110, 111, 271, 272, 299) புறநானூற்றில் காணப்படுகின்றன.

இவற்றுள் வேள்பாரி மீது கபிலர் பாடிய மூன்று பாடல்கள் (புறம் - 109, 110, 111) மகள்மறுத்தல் துறையின் கீழ் அமைந்தனவாகும். மூன்று தமிழ் வேந்தர்களும் வேள்பாரியிடம் மகட்கொடை வேண்ட; வேள்பாரி மறுத்து

விடுகிறான். இதனைப் பெருத்த அவமானமாகக் கருதிய மூவரும் அவனை அழிக்கும் பொருட்டுப் போர் மேற்கொண்டனர். வேள்பாரி அவர்களுடன் அரணுள்ளிருந்து நொச்சிப் போர் புரிந்தான். மகண் மறுத்தலைவிடத் தம்மை அவமதித்தாகவே மூவேந்தரும் கருதியிருத்தல் வேண்டும். அதன் பொருட்டே இவர்கள் உழிஞைப்போரினை மேற்கொண்டனர் எனக் கருதலாம். எனினும் எந்த ஒரு புலவரும் இவர்களின் செயலைப் புகழ்ந்து பாடவில்லை. மேலும் கபிலர் இவர்களின் செயலை இகழ்ந்து கூறுவதும் (புறம் 109, 110, 111) புலவர்களுக்கு இதில் உடன்பாடில்லை என்பதைத் தெளிவாக்கும்.

1.5 தும்பைத்திணை

புறப்பொருள்வெண்பாமாலையில் இறுதிப்போர்க்காட்சியாக அமைவது இத்திணையாகும்.

"செங்களத்து மறங்கருதிப்
பைந்தும்பை தலைமலைந்தன்று"(18)

என இத்திணையைப் புறப்பொருள்வெண்பாமாலை குறிக்கிறது. 'குருதியாற் சிவந்து களத்து, மாறுபாட்டை நினைந்து பசுந்தும்பையாகிய பூவினை முடியிடத்து சூடியது' இதன் பொருளாகும். இவ்விடத்துத் தும்பைப் பூவினைச் சூடுவது தும்பைத்திணை என்று குறித்தபோதிலும் பகைவனுடன் போர் செய்யும் ஒழுக்கமே தும்பைத்திணை எனக் கொள்ள வேண்டும். மேலும் இது போர் செய்யும் இரு பெரு வேந்தர்களுக்கும் பொதுவானதாகும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலையார் வெளிப்படையாகக் குறிக்கவில்லை என்ற போதிலும் தும்பைத் திணையைத் தனி ஒருவர் மேல் ஏற்றிக் கூறாததும், தானைமறம், இருவரும் தபுநிலை, தானைநிலை, தொகைநிலை ஆகிய இத்திணையின் துறைகள் இரு வேந்தர் படையினரையும் தெளிவாகக் குறிப்பிட்டு பேசுவதும் இதனை உறுதிப்படுத்தும். ஏனைய துறைகள் தனியொரு படைவீரன், தேர், குதிரை முதலியவற்றின் சிறப்பினைக் கூறுவனவாக உள்ளன. இத்துறைகளும் இருபடையினருக்குமே பொதுவாக அமையக் காணலாம். இரு படையினரும் ஒரே காலத்தில் போர்க்களம் குறித்து அவ்விடத்தே போர் செய்வதால் இது ஒரு திணையிலேயே அமைந்து விடுகிறது.

முன்னைய போர்களில் முதலாவதாக ஒருவர் ஆநிரைகளைக் கவர்ந்து செல்ல, ஆநிரைக்குரியார் அதனை மீட்பர். இது இரண்டு குறிகளைப் பெற்று முறையே வெட்சி, கரந்தை என இரண்டு திணைகளாயின.

ஒரு வேந்தன் பகைவனது நாட்டின் எல்லையளவும் சென்று போர் புரிய அந்நாட்டிற்குரியவன் தனது நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு எதிர்த்துப் போரிடுவான். இதுவும் இரண்டு குறிகளைப் பெற்று முறையே வஞ்சி, காஞ்சி என இரண்டு திணைகளாகின்றன.

உழிஞை, நொச்சிப் போர்களில் ஒரு வேந்தன் பகைவனுடைய அரணைக் கைப்பற்றக் கருதி அதனை முற்றுகை இடுவான். அரணிற்குரியவன் அவனுடன் போரிட்டு அரணைக் காக்க முயல்வான். எனவே, இச்செயல்கள் உழிஞை, நொச்சி ஆகிய இரண்டு குறிகளைப் பெறுதல் தெளிவு. ஆயின் தும்பைப் போரானது இப்போர்களினின்றும் மாறுபட்டது. இரு பெரு வேந்தர்களும் போர் செய்யக் கருதிய பின்னர் போர்க்களம் ஒன்றினைக் குறித்து அவ்விடத்தில் வலிமையினை நிருபிக்கப் போர் செய்வர். எனவே, இது ஒருகுறியிலேயே அடங்கிவிடுகிறது. தொல்காப்பியர் இப்போரினை,

'தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப"[19]

வஞ்சித்திணைக்கும் தும்பைத் திணைக்குமான வேறுபாட்டை வெள்ளைவாரணர் பின்வருமாறு விளக்குகிறார். "படையெத்துச் செல்லும் வேந்தன் தனது நாட்டெல்லையளவில் அமையாது பகைவனது நாட்டின் எல்லையளவும் படையுடன் மேற்சேறலே வஞ்சித்திணை எனவும், இவ்வாறன்றி இரு பெருவேந்தரும் ஒருவர் ஒருவனைப் பொருது வெற்றிகோடல் கருதித் தத்தம் நாட்டின் எல்லையளவும் சென்று தங்குதல், 'மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்று தலையழிக்குஞ் சிறப்பினதாகிய தும்பைத்திணையின் தொடக்கமாயடங்கும் எனவும் கொள்ளுதலே தொல்காப்பியனார் கருத்துக்கு ஏற்புடையதாகும்".[20]

வீரசோழியம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்களும், தும்பைத்திணையினைத் தொல்காப்பியம் மற்றும்

புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய இலக்கண நூல்களை அடியொற்றியே விளக்கியுள்ளன.

தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்கினியர், வெட்சிபுறத்துத் தும்பை, வஞ்சிபுறத்துத் தும்பை, உழிஞைப் புறத்துத் தும்பை ஆகிய மூன்று நிலைகளில் தும்பைப்போர் நிகழும் என்கிறார். "நிரை கொள்ளப்பட்டோன் பொருகளங் குறித்துப் போர் செய்தலும் அவன் களங்குறித்தது பொறாது நிரை கொண்டானுங் களங்குறித்துப் போர் செய்தலும் வெட்சிபுறத்துத் தும்பையாம். வஞ்சியுள்ளும் விழுப்புண்பட்ட வீரரை நோக்கி வேந்தர்க்குப் பொறாமை நிகழ்ந்து துறக்கம் வேண்டுழி நிகழ்ந்த தும்பையும் வஞ்சிப்புறத்துத் தும்பையாம். முற்றப்பட்டோனை முற்றுவிடுத்தற்கு வேறொரு வேந்தன் வந்துழி, அவன் புறம் போந்து களங்குறித்துப் போர் செய்யக் கருதுதலும், அவன் களங்குறித்துழிப் புறத்தோனும் களங்குறித்துப் போர் செய்யக் கருதுதலும் உழிஞைப்புறத்துத் தும்பையாம்"(21) என்பது நச்சினார்க்கினியரின் கூற்றாகும். இவரின் கூற்றின் மூலம் இருவேந்தர்களும் களம்குறித்துப் போர் செய்வதே தும்பை என்பது தெளிவாகிறது. மேலும் இது இறுதிப்போர் என்பது போன்றும் காணப்படுகிறது.

1.6 வாகைத்திணை

வாகைத்திணை புறப்பொருள்வெண்பாமாலையில் எட்டாவது திணையாக அமைகிறது. பகைவேந்தனைக் கொன்று வெற்றி பெற்றதால் வாகை மாலை சூடி ஆரவாரிக்கும் ஒழுக்கம் வாகை என்னும் திணையாகும். இதனை வெண்பாமாலையார்,

"இலைபுனை வாகை சூடி இகல்மலைந்து
அலைகடல் தானை அரசட் டார்த்தன்று"(22)

என்னும் கொளுவின் மூலம் குறிக்கிறார். தொல்காப்பியர் வாகைத் திணை குறித்து,

"வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"(23)

என்னும் சூத்திரத்தில் விளக்கியுள்ளார். 'உலக மக்கள் குற்றமற்ற கொள்கையினால் தத்தமக்கு உரிய செயல்களில் ஏனையோரினும் மிகுத்து மேம்படுதல் வாகைத்திணை' என்னும் இவரின் கூற்றிலிருந்து புறப்பொருள் வெண்பாமாலையார் வேறுபடுதல் தெளிவாகும். ஐயனாரிதனார் 'போரிற் பகைவரை வெல்வது வாகை' எனும் கருத்துப்படி வேந்தன் மேல் இத்திணையை ஏற்றிக் கூற, தொல்காப்பியர் இதனை மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகக் குறிப்பிடுகிறார்.

வீரசோழியம் வாகை இலக்கணத்தைத் தனித்துக் கூறவில்லை. வாகைத் திணையின் துறைப்பெயர்களை மட்டும் ஒரு நூற்பாவில் கூறி அமைகிறது. இத்துறைகள் தொல்காப்பியத்தை ஒட்டியே பெரும்பான்மையும் அமைகின்றன. இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் தொல்காப்பியம் கூறிய கருத்தையே கொண்டுள்ளன. இங்குப் புறப்பொருள் வெண்பாமாலையார் போர் வெற்றியைக் குறிப்பதாக வாகைத் திணையைக் கொண்டமைக்கான காரணம் சிந்திக்கத்தக்கது.

வெட்சி முதலான போர்முறைகளையும், கடும் போர்ச் செயலான தும்பையினையும் அடுத்து வெற்றித்திணையைக் குறிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாகவே வெண்பாமாலையார் இத்திணையைப் போர் வெற்றியைக் குறிப்பதாகக் கொண்டிருக்கவேண்டும். எனினும் பார்ப்பனனின் வெற்றியைக் கூறும் பார்ப்பனவாகை, வணிகனின் சிறப்பைக் கூறும் வணிகவாகை, வேளாளனின் சிறப்பைக் கூறும் வேளாண் வாகை, அறிவனின் திறனைக் கூறும் அறிவன்வாகை, தாபதர் தவவொழுக்கத்தில் மேம்பட்டதைக் கூறும் தாபதவாகை ஆகிய துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையில் இடம்பெற்றுள்ளன. இத்துறைகள், தொல்காப்பியர் வாகைக்குக் கூறிய பொருள் முறையையும் வெண்பாமாலையார் ஏற்றுக் கொண்டு நூல் செய்ததைக் காட்டுகின்றன.

தொல்காப்பியர் வாகைத்திணை போர் வெற்றியைக் குறிப்பதாகவும் கொண்டார் என்பது கோ.சிவகுருநாதனின் கருத்தாகும். இவர் 'வாகைத்திணை' என்னும் தமது நூலில் "வாகைத் துறைகளுள் முதற்கண் வீரத்தொடர்பான துறைகளையே தொல்காப்பியர் எண்ணுகிறார். எனவே, போர் வெற்றியே

வாகையின் முதற்கருத்தாகும். மாந்தர்களை நிரல்படுத்தி அவர்தம் உயர்நிலை காட்டும் பிறவாகைகள் பின்னர் வளர்ச்சி பெற்றன"(24) எனக் குறிப்பிடுகிறார்.

இக்கருத்துக்களின் மூலம் போர் வெற்றி மற்றும் உலகமாந்தர்கள் வாழ்க்கையில் பெறும் வெற்றி ஆகிய இரண்டு வகையான வெற்றிகளையும் கூறுவது வாகைத்திணை எனலாம்.

1.7 பாடாண்திணை

இது புறப்பொருள்வெண்பாமாலையில் ஒன்பதாவது திணையாக அமைந்துள்ளது. ஒரு மன்னனது புகழ் முதலியவற்றை ஆராய்ந்து கூறுவது பாடாண்திணை.

"ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று"(25)

என்பது பாடாண்திணை குறித்த கொளுவாகும். தொல்காப்பியர்

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங்காலை நாலிரண் டுடைத்தே"(26)

எனப் பாடாண்திணை கைக்கிளைக்குப் புறன் என்றும் அது எட்டுவகைப்படும் என்று கூறி பின்னர் அவற்றைக் குறித்து விளக்கிச் செல்கிறார். ஆனால் பாடாண் குறித்து எதுவும் கூறவில்லை. வீரசோழியமும் பாடாண் திணைக்குப் பொருள் கூறவில்லை. ஆயின் இலக்கணவிளக்கம்,

"..
பாடுதற் குரிய ஆண்மகன் தனாது
பாடமை ஒழுக்கம் பாடும் அந்நெறித்தே"(27)

எனப் பாடாண்திணை குறித்து விளக்குகிறது. தொல்காப்பியம் பாடாண் குறித்து விளக்கவில்லை என்றாலும் அதன் துறைகளின் மூலம் பாராட்டும் திணையே பாடாண்திணை என்பது பெறப்படும்.

பாடாண்திணை குறித்து வெள்ளைவாரணர், "வெட்சி முதலிய புறத்திணைகளிலும் குற்றமற்ற மனைவாழ்க்கையாகிய அகத்திணையிலும் அமைந்த செயல்களாய்த் தலைமக்களுக்குரிய கல்வி, தறுகண் இசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதப் பண்புகளாய்ப் புலவராற்

பாடுதற்கமைந்த ஒழுகலாறு பாடாண்திணையாகும் எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்"(28) என விளக்கம் தருகிறார். வீரம் முதலியவற்றைப் புகழ்தல் என்ற அடிப்படையில் வாகைத் திணையும் பாடாண்திணையும் ஒன்றுபடுகின்றன. ஒருவர் பெற்ற வெற்றியினைப் பாராட்டிக் கூறுதல் என்பது இரு திணையிலும் உண்டு. இரண்டு திணைகளுக்குமான வேறுபாடு மிகவும் நுண்மையானதாகக் காணப்படுகிறது. கு.வெ.பாலசுப்பிரமணியன் அவர்கள் இவ்விரண்டு திணைகளுக்குமான வேறுபாட்டினை "குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியிற் பெற்ற வெற்றி வலியும் வருத்தமும் தாங்கி அவற்றை வெற்றி கொள்ளும் திறம் ஆகியவற்றைக் குறித்துப் பாடுவது வாகை எனவும், பொதுப்பட ஒருவரின் வீரச்சிறப்பையும், கொடை மேம்பாட்டையும் பாடுவது பாடாண் எனவும் கொண்டனர்"(29) எனக் குறிக்கின்றார். மேலும் இவர் ஒருவரின் வெற்றியும் விறலும் கண்டு உளங்கிளர்ந்த ஒருவன் அவற்றைப் புகழ்தல் வாகை எனவும், ஒருவனின் ஆண்மை வீரச் சிறப்புகளைக் கொடை முதலிய பயன் கருதி ஒருவன் போற்றுதல் பாடாண் எனவும் கொள்ளுதல் தக்கதாகும். வாகைப் பாடல்கள் வெற்றி, மேம்பாடு குறித்த இயல்பு நவிற்சிகளாக அமைய, பாடாண் பாடல்கள் ஆற்றுப்படை, தேம்பாணி, கைக்கிளை ஆகிய இலக்கிய உத்திகள் அமையப் புனைந்துரை கலந்து பாடப்பட்டுள்ளன"(30) என இவ்விரு திணைகளுக்குமான வேறுபாட்டைக் கூறுகிறார்.

1.8 பொதுவியல்

புறப்பொருள்வெண்பாமாலையின் பத்தாவது படலமாக 'பொதுவியல்' அமைகிறது. இது "முற்கூறப்பட்ட புறத்திணைகட்கெல்லாம் பொதுவாய் உள்ளனவும், அவற்றிற் கூறாதொழிந்தனவுமாகிய இலக்கணங்களைத் தொகுத்துக் கூறுவது"(31) என்பர். இப்பொதுவியலினை வெண்பாமாலையார் பொதுவியற்பால, சிறப்பிற் பொதுவியற்பால, காஞ்சி பொதுவியற்பால, முல்லைப் பொதுவியற்பால என நான்கு பகுதிகளாகக் கூறுகிறார்.

தொல்காப்பியர் இதனைத் தனித்திணையாகக் குறிப்பிடவில்லை. ஆயின் 'வெறியறி சிறப்பின்' எனத் தொடங்கும் நூற்பாவானது எல்லாத் திணைகளுக்கும் பொதுவான துறைகளையும் கொண்டுள்ளது. இளம்பூரணர்,

நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்களும் இதனைக் குறிக்கின்றனர். "இவை யெல்லாம் கரந்தைக்கு உரித்தாக ஓதப்பட்டனவேனும் 'ஒரு பாற்கிளவி ஏனைப்பாற் கண்ணும் வருவகைதானே வழக்கென மொழிப' (பொருளியல்-2அ) என்றதனான், மறத்துறை ஏழிற்கும் கொள்ளப்படும்"(32) எனும் இளம்பூரணர் உரையும் "இது முன் இருபெருவேந்தர்க்கும் போர் செயத் தொடங்குதற்குரிய பொதுநிலைமை கூறிய அதிகாரத்தானே புறத்திணைக் கெல்லாம் பொதுவாகிய வழுவேழும் உணர்த்துத நுதலிற்று. இவை வேத்தியலின் வழீஇத் தன்னுறு தொழிலாய் வருதலின் வழுவாயின. இவை அகத்திற்கும் புறத்திற்கும் உரியவாய் வருவனவும் புறத்திற்கெல்லாம் பொதுவாய் வருவனவுமாதலிற் பொதுவியலுமாயின"(33) எனும் நச்சினார்க்கினியர் உரையும் இதனைத் தெளிவுபடுத்தும். தொல்காப்பியர் இந்நூற்பாவினுள் கூறியுள்ள, எல்லாத் திணைகளுக்கும் பொதுவாக அமையும் போந்தை முதலான துறைகளையே வெண்பாமாலையார் 'பொதுவியற்பால' என்ற பகுதியினுள் அடக்கியுள்ளார். மேலும் தொல்காப்பியர் காஞ்சித்திணையில் கூறிய நிலையாமைத் துறைகளை, இவர் 'சிறப்பிற் பொதுவியற்பால' என்னும் பகுதியிலும் 'காஞ்சிப் பொதுவியற்பால' என்னும் பகுதியிலும் கூறியுள்ளார். தொல்காப்பியர் வாகைத் திணைக்கண் கூறிய துறைகள் சில புறப்பொருள் வெண்பாமாலையின் 'முல்லைப் பொதுவியற்பால" எனும் பகுதியில் காணப்படுகின்றன.

இவற்றிலிருந்து தொல்காப்பியத்தில் கூறப்பட்ட எல்லாத் திணைகளுக்கும் பொதுவான துறைகளே பின்னர் புறப்பொருள் வெண்பாமாலையில் 'பொதுவியல்' என்ற தலைப்பில் இடம் பெற்றது எனலாம். புறப்பொருள்வெண்பாமாலையார் பொதுவியலுக்கு எனத் தனியே திணை வகுத்துக் கூறியமையால் தொல்காப்பியர் கூறாத துறைகள் சிலவற்றையும் சேர்த்துக் கூறியுள்ளார்.

வீரசோழியம், பொதுவியலையும், பாடாணையும் 'புறப்புறம்' என்று சுட்டுகிறது. எனினும் பொதுவியல் துறைகளைக் குறித்துத் தனியே காரிகை ஒன்றும் இதில் காணப்படவில்லை.

இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இரண்டும், புறப்பொருள் வெண்பாமாலை பொதுவியலில் குறிப்பிடும் துறைகள் அனைத்தையும் 'ஒழிபு' என்ற பெயரில் அடக்குகின்றன.

1.8.1 பொதுவியல் தனித்திணை காரணம்

புறப்பொருள்வெண்பாமாலையார் பொதுவியலைத் தனித்திணையாகக் கொண்டமைக்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கருத இடனுண்டு.

1. தொல்காப்பியருக்கும், 'எல்லாத் திணைகளுக்கும் பொதுவான துறைகள் உண்டு' என்பதில் உடன்பாடே என்பது அவரின் 'வெறியறி சிறப்பின்' என்ற நூற்பாவின் மூலம் உணரமுடிகிறது. இவர் முதற்திணையான வெட்சித் திணைக்குள் இத்துறைகளைக் கூறியுள்ளார்.
2. வெண்பாமாலையார், எல்லாத் திணைகளுக்கும் பொதுவாக அமையக்கூடியத் துறைகளைப் பிற திணைகளின் இடையே கூறுவதை விடத் தனியே கூறுவதே பொருத்த முடையது என்ற நோக்கில் இதனைத் தனித்திணையாகக் கொண்டார்.
3. புறப்பொருள்வெண்பாமாலை புறத்திற்கு மட்டும் இலக்கணம் கூற எழுந்ததாகையால் விளக்கமாகக் கூறுதல் இயல்பானதாகும். அந்த வகையில் வெண்பாமாலையார் எல்லாத் திணைகளுக்கும் பொதுவான துறைகளைப் 'பொதுவியல்' என்ற தனித் திணையில் அடக்கினார் எனலாம்.

நன்னூலார் சொல்லதிகாரத்தின் பொதுவான செய்திகளைத் திரட்டி 'பொதுவியல்' என்ற இயலில் கூறியுள்ளார். இது பொதுவான கருத்துக்களைத் திரட்டி ஓரியலாக அமைப்பது பண்டையோர் மரபு என்பதைக் காட்டுகிறது. எனவே புறப்பொருள்வெண்பாமாலையார் எல்லாத் திணைகளுக்கும் பொதுவான துறைகளைப் 'பொதுவியல்' எனக் குறித்தது எவ்வகையிலும் தவறாகாது.

1.9 கைக்கிளை, பெருந்திணைத் திணைகள்

கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் அகத்திணைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவற்றைப் புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணைகளின் இறுதியில் வைத்து எண்ணுகிறது.

தொல்காப்பியர் காதல் ஒழுக்கத்தை,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"(34)

என மூன்று பகுதிகளாகக் கூறுகிறார். இவற்றுள் கைக்கிளை, பெருந்திணை ஒழிந்த ஐந்திணைகளுக்கு மட்டும் முதல், கரு, உரிப்பொருள்களைச் சுட்டியுள்ளார். இதன் மூலம் குறிஞ்சி முதலான ஐந்திணைகளைப் போன்று சிறந்த காதல் ஒழுக்கமாகக் கைக்கிளை பெருந்திணைகளைத் தொல்காப்பியர் கருதவில்லை என்பது தெளிவாகும்.

1.9.1 கைக்கிளை

"காமஞ்சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"(35)

என்பது கைக்கிளை குறித்த தொல்காப்பிய நூற்பாவாகும். தலைவன் தலைவி ஆகிய இருவரிடத்தும் ஒருங்கே காதல் தோன்றாமல், யாரேனும் ஒருவரிடத்து மட்டும் தோன்றும் காதலே கைக்கிளையாகும். தொல்காப்பியம் இதனை ஆண்பாற்கு மட்டும் உரியதாகக் காட்டுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை இதனை ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என இரண்டாகக் கூறுகிறது. ஆண் விரும்பி பெண் விரும்பாத நிலையை ஆண்பாற் கைக்கிளை என்றும், பெண் விரும்பி ஆண் விரும்பாத நிலையைப் பெண்பாற் கைக்கிளை என்றும் இந்நூல் விளக்குகிறது. எனவே, கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம்

என்ற பொருளளவில் தொல்காப்பியம் புறப்பொருள்வெண்பாமாலை ஆகிய இரண்டுமே உடன்படுகின்றன. பெண்பாற்குரிய கைக்கிளையினைத் தொல்காப்பியம் சுட்டவில்லை. எனினும் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் பெண்பாற் கைக்கிளையினை "புல்லித் தோன்றும் புல்லாமற்றோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும். அஃதாவது – காமஞ்சான்ற தலைமகள் மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி"(36) எனக் குறிக்கிறார். ஆயின் இது அகத்தோடு பொருந்தாது என்பதும் இவரின் கருத்தாகும். மேலும் பாடாண்திணையில் தொல்காப்பியர் கைக்கிளை வகை என்று குறித்ததற்கு இவர் "ஆண்பாற்கூற்று கைக்கிளையும் பெண்பாற் கூற்று கைக்கிளையும்"(37) என விளக்கம் தருகிறார். புறப்பொருள் வெண்பாமாலையிலும் பாடாண் திணையில் கைக்கிளை என்னும் துறை ஒன்று குறிக்கப்பட்டுள்ளது. இது பெண்பாற்கு மட்டும் உரியதாகக் காணப்படுகிறது. பாடாண் திணையில் இடம் பெறும் கைக்கிளைத் துறைக்கும் கைக்கிளைத் திணைக்கும் இடையேயான வேறுபாடு சிந்திக்கத்தக்கதாகும். கைக்கிளைத் துறையில், தலைவி பாட்டுடைத் தலைவன் மேல் ஒருதலைக் காதலினைக் கொண்டாலும் அதன் மூலம் அவனின் புகழ் கூறப்படும்.

தொல்காப்பியத்தின் பொருள் முடிபோடு ஒத்துச் செல்லும் புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம் சுட்டும் 'சொல்லி இன்புறல்' எனும் வகையில் சில துறைகளைச் சேர்த்து மொத்தம் இருபத்தொரு துறைகளைக் கைக்கிளைத் திணைக்குக் கூறுகிறது.

1.9.2 பெருந்திணை

"ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"(38)

என்பது பெருந்திணை குறித்த தொல்காப்பிய நூற்பாவாகும். இதன் மூலம் மிகுதியான காமத்தைக் குறிப்பது பெருந்திணை எனக் கொள்ளலாம். புறப்பொருள் வெண்பாமாலையும் பெருந்திணையினை இதே கருத்தில்

எடுத்தாள்கிறது. தொல்காப்பியம் கூறிய நான்கினுள் மடல் ஏறியதனை மட்டும் சுட்டும் புறப்பொருள் வெண்பாமாலை மேலும் முப்பத்தைந்து புதிய துறைகளைக் கூறுகிறது. பெருந்திணையும் இருபாற்குமுரியதாகவே புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெற்றுள்ளது.

தொல்காப்பியமும், புறப்பொருள்வெண்பாமாலையும் இவ்வாறு பொருளளவில் முற்றிலும் ஒத்து அமைந்திருக்கின்றன. ஆனால் தொல்காப்பியம் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றை அகமாகக் கூற; புறப்பொருள் வெண்பாமாலை புறமாகக் கூறி வேறுபடுகிறது. இந்த வேறுபாட்டினைக் குறித்து ஆய்வது இன்றியமையாததாகிறது.

1.9.3 கைக்கிளை, பெருந்திணைக்குரியோர்

அடியோரும், வினைவலரும், ஏவல்மரபினோரும் கைக்கிளை பெருந்திணைக்குத் தலைவராவதற்கு உரியவர் என்பர் தொல்காப்பியர்.

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்"(39)

"ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்"(40)

எனும் நூற்பாக்கள் இதனைத் தெளிவுபடுத்தும். அகத்திணையியலின் இருபத்தைந்தாவது நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர் "இது நடுவணைந்திணைக்குரிய தலைமக்களைக் கூறி, அதன் புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணைக்குரிய மக்களை உணர்த்துதல் நுதலிற்று"(41) என்கிறார். 'அடியோர், வினைவலர் ஆகிய இருவரும் குற்றேவல் செய்பவர்கள். இவர்கள் அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் நடைபெறும் தூய அகத்திணை வாழ்வினை மேற்கொள்ள இயலாது'(42) என்பது இவரின் கருத்து.

உலகவாழ்க்கையில் இவ்வகையினரிடையே தூய அன்பான காதல் வாழ்க்கை இடம்பெற்றிருக்கலாம். அதே போன்று அன்பின் ஐந்திணைக்குரிய தலைமக்களாகக் கருதப்பட்ட நன்மக்களிடையே கைக்கிளை, பெருந்திணை நிகழ்ந்திருக்கலாம். எனின் தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணையினை

இம்மூவகையினருக்குரியதாகப் பாடியதற்கான காரணம் சிந்திக்கத்தக்கது. இலக்கியத்தில் பாடப்படும் ஒரு தலைமகன் சிறந்தவனாக, எல்லோரினும் உயர்ந்தவனாகப் பாடப்படல் வேண்டும் என்பதே மரபு. அந்த வகையில் பிறர்க்குக் குற்றேவல் செய்யாத, பிறர் ஏவிய தொழிலைச் செய்யாத ஒருவனே சிறந்த தலைவனாக இருக்க முடியம். இக்கருத்தினாலேயே தொல்காப்பியர் மேற்கண்ட நூற்பாக்களைச் செய்திருக்க வேண்டும். இதன் மூலம் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் தூய அகத்திணைகள் ஆகா என்பது தெளிவாகும்.

1.9.4 பெயர் சுட்டும் மரபு

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்"(43)

எனும் தொல்காப்பிய நூற்பா தமிழரின் சிறந்த பண்பாட்டைக் காட்டுவதாக அமைகிறது. குறிஞ்சி முதலான ஐந்து அகத்திணை ஒழுக்கங்களையும் பாடும் போது குறிப்பிட்ட ஒருவரின் இயற்பெயரைச் சுட்டி இலக்கியம் செய்யக் கூடாது என்பது இதன் பொருளாகும். எனின் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றில் பெயர் சுட்டியும் வரலாம் என்பது இதன் மூலம் பெறப்படுகிறது. அந்த வகையில் பெயர் சுட்டி வரக்கூடிய கைக்கிளை, பெருந்திணைகளையே புறப்பொருள் வெண்பாமாலையார் புறமாகக் கொண்டார் எனலாம். எனினும் இவ்விரண்டையும் முழுவதும் புறமாக அறிஞர்கள் கொள்ளவில்லை. அக ஒழுக்கத்தின் வரம்பினைக் கடந்து நிற்பதால் இவற்றை அகப்புறம் என்றே குறித்தனர்.

சுருக்கமாக இயற்பெயர் இல்லாமல் பாடப்படும் கைக்கிளை பெருந்திணைகள் அகம் என்றும், இயற்பெயர் சுட்டி பாடப்படும் கைக்கிளை பெருந்திணைகள் அகப்புறம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். க.வெள்ளைவாரணரும் இதே கருத்துப்பட,

"புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே"(44)

எனும் நூற்பாவிற்கு விளக்கம் எழுதுகையில் 'அகன் ஐந்திணைக்கும் புறமாகக் கருதப்பெறும் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் தலைமக்கள் பெயர்

சுட்டப்பெறா நிலையில் அகத்திணை மருங்கு என்று அழைக்கப்பெறும். எனின் அவர்தம் பெயர் சுட்டப்பெறுதலின் அவ்விரண்டும் புறத்திணை மருங்கு என்று குறிக்கப்பெறும்'(45) என்கிறார்.

1.9.5 அகப்புற வேறுபாடுகள்

பெயர் சுட்டாமையும், சுட்டியும் வருவன முறையே அக, புற கைக்கிளை பெருந்திணைகள் என முன்னர் விளக்கப்பட்டது. நுணுகி நோக்கின் இவ்விரண்டிற்குமான வேறுபாடுகள் மேலும் காணப்படுகின்றன.

அக ஆண்பாற் கைக்கிளை, காமஞ்சாலா இளையவளிடத்து ஒருவன் காமுற்று, சொல்லெதிர் பெறாது தன்னுள் சொல்லி இன்புறலாகும். இங்கு வெளிப்பட இரத்தல் முதலிய நிகழ்ச்சிக்கு இடமில்லை. இவன் கொண்ட காமக்குறிப்பைக் காமஞ்சாலா இளையவள் அறியாள்.

ஆயின் அகப்புற ஆண்பாற் கைக்கிளையோ பருவம் எய்திய பெண்பாலிடத்து ஒருவன் நயத்தல், அவள்பால் வெளிப்பட இரத்தல் முதலியனவாம். பெண்பால் உடன்படாத நிகழ்ச்சியாதலின் இது கைக்கிளையாகிவிடும்.

மேலும் பெருந்திணைப்படலத்தின் இறுதியில் காமம் சாராத வென்றி பற்றி பத்தொன்பது துறைகளைப் புறப்பொருள் வெண்பாமாலை கொண்டுள்ளது. இத்துறைகள் வீரம்பற்றி அமைந்தன அல்ல. கொடுப்போர் ஏத்திக் கொடாரைப் பழித்தல், வணிகவென்றி, உழவன் வென்றி என்று வாகைத்திணையின் ஒழிபாகவும், பாடாண் திணையின் ஒழிபாகவும் சில வென்றிகள் கூறப்படுகின்றன. மேலும் கோழிவென்றி, யானை வென்றி, கிளி வென்றி, குதிரை வென்றி, என்ற வகையில் சில தொழிற் போட்டிகளைப் பற்றியும், யாழ்வென்றி, சூது வென்றி, பாடல் வென்றி, ஆடல் வென்றி என்ற வகையில் சில கலைப் போட்டிகளைப் பற்றியும் பெருந்திணையில் காணமுடிகிறது.

எனவே, 'பெருந்திணை' என்ற குறியீட்டைப் புறப்பொருள் வெண்பாமாலையார் காமம் பற்றிய குறியீடாக மட்டும் கருதாமல்,

காமத்திலாயினும் பிற துறையிலாயினும் அளவு கடந்த நிலைகள் பெருந்திணைப்பாற்படும் என்று கருதினார் எனலாம்.

1.9.6 புறநானூற்றில்

புறநானூற்றில் கைக்கிளையின் கீழ் மூன்று (புறம்.83, 84, 85) பாடல்களும், பெருந்திணையின் கீழ் ஐந்து (புறம்.143, 144, 145, 146, 147) பாடல்களும் அமைந்துள்ளன. இப்பாடல்கள் அனைத்துமே இயற்பெயர் சுட்டி எழுதப்பட்டவைகளாகும்.

புறநானூற்றின் 83, 84, 85 ஆகிய மூன்று கைக்கிளைப் பாடல்களும் போரவைக் கோப் பெருநற்கிள்ளியின் மீது பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியதாகும். இப்பாடல்கள் கிள்ளியின் மீது இவர் கொண்ட கைக்கிளைக் காதலை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

புறநானூற்றின் 143, 144, 145, 146, 147 ஆகிய ஐந்து பெருந்திணைப் பாடல்களும் வையாவிக் கோப்பெரும்பேகன் மீது பாடப்பட்டவைகளாகும். இப்பாடல்கள், பேகன் தனது மனைவியை விடுத்துப் பரத்தையின் பால் காமுற்று இருப்ப, புலவர்கள் (கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார்) பொருந்தாத காமத்தை விடுத்து மனைவியிடம் சேருமாறு அறிவுறுத்துவனவாக உள்ளன.

இவற்றின் மூலம், பெயர் சுட்டிவரும் கைக்கிளை, பெருந்திணைகள் அகப்புறமாய் அடங்கும் என்ற மேற்குறித்த கருத்து உறுதிப்படுகிறது. தொல்காப்பியர், அடியோர், வினைவலர், ஏவலர் ஆகிய மூவருமே கைக்கிளை, பெருந்திணைக்குரியவர்கள் என்று கூறியிருப்ப, இப்புறநானூற்றுப் பாடல்களில் நக்கண்ணையார், பேகன் ஆகிய மேன்மக்கள் இவற்றிற்குரியவர்களாகக் குறிக்கப்படுகின்றனர். இது ஆராயத்தக்கது.

அகப்பாடல்கள் பெரும்பான்மையும் நாடகவழக்காகப் பாடப்படுபவை. இதில் கற்பனையே மிகுந்திருக்கும். இப்பாடல்கள் எந்த ஒரு தனிப்பட்ட மனிதரையும் குறித்து எழுந்தவை அல்ல. எனவே, அகப்பாடல்களைப் பாடும் போது அடியோர், வினைவலர், ஏவலர் ஆகியோரைக் கைக்கிளை, பெருந்திணைக்குரியவராகப் பாடமுடியும். ஆயின் புறப்பாடல்கள் உலக

வாழ்க்கையைப் பாடுபவை. ஒவ்வொரு பாடலும் உலகத்தில் வாழ்ந்த தனிப்பட்ட மனிதனைப் பற்றி பாடப்பட்டவை. இதில் ஒருவர் செய்ததை மற்றவர் செய்ததாகப் பாட முடியாது. அவ்வாறு செய்யின் இது பெரும் வரலாற்றுப் பிழையாக அமையும். அவ்வகையிலேயே புறநானூற்றில் மேன்மக்களாகிய நக்கண்ணையார், பேகன் ஆகியோர் குறிக்கப்பட்டனர் எனலாம். இதன் மூலம் அடியோர், வினைவலர், ஏவலர் ஆகிய மூவரும் அகத்திணையில் கைக்கிளை, பெருந்திணைக்குரியவர்கள் என்பதும் அகப்புறத்திணையாகிய கைக்கிளை, பெருந்திணையில் யார் வேண்டுமானாலும் இடம் பெறலாம் என்பதும் பெறப்படுகிறது.

1.10 புறத்திணைகள் - ஏழா? பன்னிரெண்டா?

இது காறும் கண்டவற்றால், தொல்காப்பியர், புறப்பொருள் வெண்பாமாலையார் சுட்டும் பன்னிரண்டு புறத்திணைகளையும் கூறியுள்ளார் என்பது தெளிவாகும். ஆனால் இத்திணைகள் அனைத்தையும் ஏழாகக் கூறியுள்ளார். இதற்கு, முன்பு கூறப்பட்ட 'தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றிலக்கணங்களையும் கூற எழுந்த நூல். ஆயின் புறப்பொருள்வெண்பாமாலை புறப்பொருளை மட்டும் பேச எழுந்த நூலாகும். எனவே, இதில் புறப்பொருளை விரித்துச் செல்லுதல் இயல்பானதாகும். அந்த வகையில் இதனைப் புறப்பொருளின் வளர்ச்சி எனக் கொள்ளலாம்' என்ற கருத்தே விடையாக அமையும்.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சோமசுந்தரபாரதியார் ஆகியோர் புறத்திணைகள் பன்னிரெண்டு என்பதனை மறுத்துரைக்கின்றனர். "புறத்திணைத் தொகையைப் பெருக்கி ஒழுக்க வேறுபாடின்றி எண்ணுக்குப் பன்னிரெண்டாக்கி அவற்றிற்கு அகத்திணை யேழனொடுந் தொடர்பறுத்துக் காணும் பயன்தா னென்ன?"[46] என்பது சோமசுந்தரபாரதியாரின் கேள்வியாகும். தொடர்பறுத்துக் காணவேண்டும் என்பதோ, மரபை, மீற வேண்டும் என்பதோ முந்தைய தமிழ் அறிஞர்களின் கொள்கையாய் இருந்திருக்காது.

"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூலாகும்".[47]

என்பது நன்னூல் பாயிரவியலில் கூறப்படும் வழிநூலுக்கான இலக்கணமாகும். இதற்கு உரை எழுதிய யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர், "பின்னோன் வேண்டும் விகற்பங் கூறலாவது, பழைய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்காதவைகளை இறந்தது விலக்கலென்னும் உத்தியினாலே விலக்கியும், புதிய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்குமவைகளை எதிராது போற்ற லென்னும் உத்தியினாலே தழுவியுங் கூறுதன் முதலியன"[48] என்கிறார். மேலும் நன்னூலின் ஐம்பதாவது நூற்பாவானது,

"தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப்
பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப"[49]

என்பதாகும். விரிந்து கிடந்ததைத் தொகுத்துச் செய்தலும், தொக்குக் கிடந்ததை விரித்துச் செய்தலும், தொகுத்தும் விரித்துஞ் செய்தலும், ஒரு பாடையில் உள்ள நூலை மற்றொரு பாடையில் திருப்பிச் செய்தலும் என்று தக்க நூல் யாப்பானது நால்வகைப்படும்' என்பது இதன் பொருளாகும். இதன் அடிப்படையில் தொல்காப்பியம் ஏழு என தொகுத்துச் சொன்னதைப் புறப்பொருள்வெண்பாமாலை பன்னிரெண்டு என விரித்தது எனலாம்.

இவ்விளக்கங்களின் அடிப்படையில் பன்னிருபடலத்தின் வழிநூல் புறப்பொருள் வெண்பாமாலை என்று கூறுவதைவிட, தொல்காப்பியத்தின் வழிநூல் புறப்பொருள்வெண்பாமாலை என்று கூறும் அளவிற்கு ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

உ.வே.சாமிநாதையர் அவர்கள் புறப்பொருள்வெண்பாமாலைக்கு முகவுரை எழுதுகையில் "இதிற் கூறப்பட்ட யுத்தமுறை முதலியவற்றிருக்கும் தொல்காப்பிய புறத்திணையியலிற் கூறப்பட்டுள்ளவற்றிற்கும் ஆங்காங்கே சிற்சில வேறுபாடுகள் காணப்படினும் சொன்முடிபும் பொருள்முடிபும் வேறுபடாமையின் 'மரபு நிலை திரியாதன' என்று பெரியோர் கூறுவர்"[50] என்கிறார். மேலும் புறப்பொருள்வெண்பாமாலைக்கு உரை எழுதிய மற்றொருவரான பொ.வே.சோமசுந்தரனார், "இந்நூலுக்கு முதல்நூல் பன்னிருபடலம் எனப்படினும் இதன் ஆசிரியர் முந்நூல் கண்டு முறைப்பட எண்ணி இதனைச் செய்துள்ளார்.

ஆதலின் சிற்சில வேற்றுமைகள் காணப்படினும் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தின் பொருள்முடிபோடு ஒருங்கொத்து நடத்தலால் இதற்கு அத்தொல்காப்பியப் பெருநூலும் முதனூலேயாகும் எனக் கோடல் தவறானது"[51] என்கிறார். 'சிவஞான முனிவரும் இதே கருத்துடையவராக இருக்கிறார்'[52]. இவர்களின் கூற்றுக்களின் மூலமும், தொல்காப்பியத்திற்கு முரணபட்டு எழுந்ததல்ல புறப்பொருள் வெண்பாமாலை என்பதும், தொல்காப்பியத்தை அடியொற்றி விரிவாகச் சொல்லுவதே இதன் அமைப்பு என்பதும் பெறப்படும். "விதிகள் வரையறுக்கும் தன்மை உடையன. வரையறை வளர்ச்சியற்ற, உயிரற்ற பொருள்கட்கே பொருந்தும். இலக்கியம் உயிரினங்களைப் போல் தோற்றமும் வளர்ச்சியும் வாழ்வும் உடையது. ஆகவே இவ்வாறுதான் இருத்தல் வேண்டும் என்று வரையறை செய்வது இலக்கியத்தின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் பொருந்தாத தடையாகும்"[53] எனும் மு.வவின் கருத்தும் இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது.

1.11 விரித்ததன் பயன்

தொல்காப்பியம் ஏழு என்று கூறிய புறத்திணைகளை, இவ்வாறு பன்னிரெண்டாக விரித்ததன் பயனென்ன என்பதும் இவ்விடத்து நோக்கத்தக்கது.

தொல்காப்பியரின் கருத்துப்படி ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் ஆகிய இரண்டினையும் வெட்சித்திணை எனறு வைத்துக் கொண்டால் ஒரு பாடலை, திணை-வெட்சி என்று குறிக்குமிடத்தில் இங்குக் குறிப்பிடப்படும் வெட்சி என்பது ஆநிரை கவர்தலைக் குறிக்கின்றதா? அல்லது ஆநிரை மீட்டலைக் குறிக்கின்றதா? என்ற ஐயம் எழுகிறது. அவ்வேளையில், அப்பாடல் முழுவதையும் படித்தால் மட்டுமே அவ்வய்யம் நிவர்த்தி பெறும். ஆயின் ஆநிரை கவர்தலை வெட்சி என்றும், மீட்டலைக் கரந்தை என்றும் குறிப்பதாகக் கொண்டால், பாடலின் திணைக்குறிப்பைப் பார்த்த உடனேயே இப்பாடல் எதனைக் குறிக்கிறது என்பதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இது போன்றே பிறதிணைகளுக்கும் அமையும்.

மேற்கண்டவாறு, ஒரு பாடலின் திணைக் குறியீட்டைப் பார்த்தவுடனேயே புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அமைந்த பன்னிரெண்டு என்ற திணைப்பகுப்பு முறையைப் புறத்திணை வளர்ச்சி என்று கொள்ளுவதே சிறப்பாக அமையும்.

1.12 தொகுப்புரை

- மூன்றிலக்கணம் கூறும் தொல்காப்பியம் ஆநிரை கவர்தலை வெட்சி எனவும், ஆநிரை மீட்டலைக் கரந்தை எனவும் கூறி இரண்டையும் வெட்சித் திணைக்குள் அடக்கிக் கூறுகிறது. புறப்பொருளை மட்டும் கூற எழுந்த புறப்பொருள் வெண்பாமாலை இதே பொருளில் இவற்றைக் குறித்து எண்ணிக்கை அளவில் இரண்டு திணைகளாகக் கொள்கிறது.
- அளவு கடந்த மண்ணாசையுடைய பகைமன்னன் படையெடுத்து வரும் முன்னர் எதிர்வேந்தன் தாமே படையெடுத்துச் சென்று அவனை அழிப்பது வஞ்சித்திணை என்கிறது தொல்காப்பியம். ஆனால் புறப்பொருள்வெண்பாமாலை ஒரு வேந்தன் பகையரசன் நாட்டைக் கொற்றங் காரணமாகக் கைப்பற்றக் கருதியது வஞ்சித்திணை எனவும், அந்நாட்டிற்குரியவர் தம் நாட்டைக் காத்தற் பொருட்டு எதிர்த்துப் போரிடல் காஞ்சி எனவும் இரண்டு திணைகளாகக் கூறுகிறது. தொல்காப்பியர் காஞ்சித்திணையை நிலையாமை எனக் குறிக்கிறார். வெண்பாமாலையாரும் காஞ்சி பொதுவியற்பால என்ற பகுதியினைக் குறிப்பதன் மூலம் காஞ்சி என்ற சொல் நிலையாமையைக் குறிக்கிறது என்பதற்கு உடன்படுகிறார். ஆயின் இங்கு வெண்பாமாலையார் காஞ்சியினை எதிர்த்திணையாகக் கொண்டமைக்கான காரணமாக 'உலகில் ஏற்படும் துன்பங்களைக் கண்டு அஞ்சிப் பின்னிடாது அவற்றைத் தாங்கி நிற்றல் காஞ்சித்திணை போல வஞ்சிவேந்தன் சேனையினைப் போரில் எதிர்ஏற்றுத் தடுத்து நிறுத்துதல் காஞ்சித்திணை எனும் நோக்கில் பிற்கால இலக்கணம் வளர்ச்சியுற்றது' என்பதனைக் கொள்ளலாம்.
- பகைவருடைய மதிலை முற்றுகையிடல் உழிஞை எனவும் மதிலுக்குரியோர் அதனைக் காத்தல் நொச்சி எனவும் கூறும் தொல்காப்பியம், இவ்விரண்டு

செயல்களையும் உழிஞை என ஒரு திணையாகக் கொள்கிறது. புறப்பொருள் வெண்பாமாலை இவ்விரண்டு செயல்களையும் முறையே உழிஞை, நொச்சி என இரண்டு திணைகளாகக் கூறுகிறது.

- தும்பை, வாகை, பாடாண் ஆகிய மூன்று திணைகளையும் எண்ணிக்கை அளவில் தனித்தனித் திணைகளாகவே தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் குறிக்கின்றன. இவற்றின் பொருள் அமைப்பிலும் இவ்விரு நூல்களுக்குமிடையே மிக்க வேறுபாடில்லை.
- புறப்பொருள்வெண்பாமாலையார் கூறியுள்ள பொதுவியல் என்ற திணை அமைப்பில் தொல்காப்பியருக்கும் உடன்பாடே என்பதை அவரின் 'வெறியறி சிறப்பின்' என்ற நூற்பாவின் மூலம் அறியமுடிகிறது. இதில் அவர் எல்லாத் திணைகளுக்கும் பொதுவாக அமையக் கூடிய துறைகளைக் கூறியுள்ளார்.
- தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணைகளை அகம் என்று கூற புறப்பொருள் வெண்பாமாலையார் இவற்றை அகப்புறமாகக் கொள்கிறார். பெயர் சுட்டாமல் வரும் கைக்கிளை, பெருந்திணைகள் அகம் என்றும் இயற்பெயர் சுட்டி வரும் கைக்கிளை பெருந்திணைகள் அகப்புறம் என்றும் கொள்ளப்படும். இதனைப் புறநானூற்றின் பாடல்களும் உறுதிப்படுத்துகின்றன.
- வீரசோழியம் புறத்திணைகளைப் பத்தாகக் குறிப்பிடுகிறது. கைக்கிளை, பெருந்திணைகளை இது குறிக்கவில்லை. இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் தொல்காப்பியத்தைப் பின்பற்றி புறத்திணைகளை ஏழாகவே குறிப்பிடுகின்றன.
- இவ்வாறு பிற இலக்கண நூல்கள் பல்வேறு வகைப்பட கூறியிருப்பினும், பன்னிருபடலத்தின் வழிநூலான புறப்பொருள்வெண்பாமாலை தொல்காப்பியத்தின் சொல் முடிபோடும் பொருள்முடிபோடும் ஒருங்கொத்து புறத்திணைகளைப் பன்னிரெண்டாகக் கூறியுள்ளது. இது புறத்திணையின் வளர்ச்சியினைக் குறிக்கிறது. ஆகவே புறத்திணைகள் பன்னிரெண்டு. இவை கால வளர்ச்சியில் ஏற்பட்டவை.
- புறப்பாடலின் திணைக்குறியீட்டைப் பார்க்கும் அளவிலேயே, அப்பாடலின் தன்மையினை முழுமையாக உணர்த்துதல், இப்புறத்திணை வளர்ச்சியின் பயனாகும்.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ 5; 14
2. இளம்பூரணர், தொல்காப்பியம் - புறத்திணையியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பக் 51-52.
3. மேலது, ப.1
4. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், புறத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பக் 65-66.
5. சோமசுந்தரபாரதியார், தொல்காப்பியர் பொருட்படலப்புத்துரை, ப.30
6. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ. 18.
7. சோ.ந.கந்தசாமி, புறத்திணை வாழ்வியல், ப.132.
8. கழகத்தமிழ் அகராதி (1964) ப. 317
9. க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம் புறத்திணையியல் - உரைவளம், பக் 235-236.
10. உ.வே.சாமிநாதையர், புறப்பொருள்வெண்பாமாலை – முகவுரை, ப. IX
11. மேலது, ப. IX
12. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ. 8;2.
13. மேலது, நூ. 10;4-5
14. மேலது, நூ. 11;5-6
15. புறப்பொருள்வெண்பாமாலை, நூ. 19;2
16. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் புறத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப 120.
17. மேலது, ப.120
18. புறப்பொருள்வெண்பாமாலை, தும்பை, கொளு; 1
19. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ. 12
20. க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம் - புறத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப 105.
21. நச்சினார்க்கினியர், மேலது, ப.150.

22. புறப்பொருள்வெண்பாமாலை, வாகை, கொளு ; 1

23. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ. 15

24. கோ.சிவகுருநாதன், வாகைத்திணை, ப.55

25. புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண், கொளு ; 1

26. தொல்காப்பியம் - புறத்திணையியல், நூ. 20

27. இலக்கணவிளக்கம், நூ. 616;1-3

28. க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம் - புறத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பக் 263-264

29. கு.வெ.பாலசுப்பிரமணியன், வாகைத்திணை, ப.30

30. மேலது ப.31

31. பொ.வே.சோமசுந்தரனார், புறப்பொருள்வெண்பாமாலை – உரை, ப.13

32. இளம்பூரணர், தொல்காப்பியம் - புறத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப 54.

33. நச்சினார்க்கினியர், மேலது, பக். 55-56

34. தொல்காப்பியம் - அகத்திணையியல், நூ ; 1

35. மேலது, நூ. 53

36. இளம்பூரணர், தொல்காப்பியம் - அகத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப. 542.

37. இளம்பூரணர், தொல்காப்பியம் - புறத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப. 321.

38. தொல்காப்பியம் - அகத்திணையியல், நூ. 54

39. மேலது, நூ. 25

40. மேலது, நூ. 26

41. இளம்பூரணர், தொல்காப்பியம் - அகத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப. 259

42. மேலது, ப.260.

43. தொல்காப்பியம் - அகத்திணையியல், நூ. 57

44. மேலது, நூ. 58

45. க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம் - புறத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பக் 355-356

46. சோமசுந்தரபாரதியார், மேலது, ப.16

47. நன்னூல் - பாயிரவியல், நூ. 7

48. ஆறுமுகநாவலர், நன்னூல் - உரை, ப.8

49. நன்னூல் - பாயிரவியல், நூ. 50

50. உ.வே.சாமிநாதையர், புறப்பொருள்வெண்பாமாலை – உரை, ப.6

51. பொ.வே.சோமசுந்தரனார், புறப்பொருள்வெண்பாமாலை – உரை, ப.7

52. சிவஞானமுனிவர், தொல்காப்பிய பாயிரவிருத்தி, ப.11

53. மு.வரதராசன், இலக்கியமரபு, ப.186.

இயல்- 2

புறத்துறைக் கோட்பாடு

புறத்துறைக்கோட்பாடு

2.1 முன்னுரை

தொல்காப்பியம், புறப்பொருள்வெண்பாமாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் புறத்திணைகள் குறித்து விளக்கியுள்ளன. இவற்றில் முத்துவீரியம் புறத்துறைகளைத் தொகுத்துக் கூறவில்லை. ஏனைய இலக்கண நூல்களிடையே துறைகளைப் பொருத்த அளவில் சிற்சில பாகுபாடுகள் காணப்படுகின்றன. "புறத்திணை ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள துறைகள், சங்ககாலத் தமிழ் மக்கள் போர் நடத்திய முறைகளை விரிவாகக் கூறுகின்றன"(1) என்பர் பாண்டுரங்கன். தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள துறைகள் பல, அவ்வாறே பின் எழுந்த இலக்கண நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. சில துறைகள் பெயரளவிலும், சில துறைகள் பொருள் அளவிலும் வேறுபடுகின்றன. பல புதிய துறைகளும் இடம் பெற்றுள்ளன. இந்தப் பாகுபாடுகள் குறித்து ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும். ஆய்வின் தன்மை கருதி, புறப்பொருள் வெண்பாமாலையை அடிப்படையாகக் கொண்டு துறைகள் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

2.2 வெட்சித்துறைகள்

புறப்பொருள்வெண்பாமாலை வெட்சித்திணையின் கீழ் 19 துறைகளைக் கூறியுள்ளது. தொல்காப்பியம் 16 துறைகளையும், வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் முறையே 14, 22, 22 துறைகளையும் கொண்டுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலை சுட்டும் வெட்சித் துறை நிகழ்ச்சிகளாவன.

1) ஆநிரை கவரப் புறப்படும் வெட்சியினர் ஆரவாரம் செய்தல், 2) நற்சொல் கேட்டல், 3) ஆநிரை கவரும் பொருட்டுக் காட்டிடத்தே செல்லுதல், 4) ஒற்றர்கள் ஒற்றுக் கூறல், 5) ஒற்று நன்றாகத் தெளிந்த பின் பகைவருடைய ஆநிரைப் புறத்தே தங்கியிருத்தல், 6) பகைவரின் அரணினை அழித்தல்,

7) பகைவர்களைக் கொன்று அவர்தம் ஆநிரைகளைக் கைப்பற்றல், 8) தம்மேல் வந்து பூசலிட்ட கரந்தையாரைக் கொன்று அப்பூசலை மாற்றல், 9) ஆநிரைகளை வருத்தமின்றி கொண்டு செல்லுதல், 10) ஆநிரை கைப்பற்றி வருகின்ற வரவினை அறிந்து சுற்றத்தார் மகிழ்தல், 11) ஆநிரைகளை வெட்சியார் ஊரம்பலத்தே கொண்டு வந்து நிறுத்துதல், 12) ஆநிரை கொள்ள உதவியவர்க்கு அவற்றைப் பகிர்ந்து கொடுத்தல், 13) வெற்றி காரணமாகக் கள்ளுண்டு களித்தாடுதல், 14) இரவலர்க்கு ஆநிரைகளைக் கொடை வழங்குதல், 15) ஒற்றர்களுக்கு மறவர் தம்மினும் மிகுதியாக வழங்கிச் சிறப்பித்தல், 16) நிமித்தம் கூறியோர்க்கு ஆநிரைகளை வழங்குதல், 17) துடி கொட்டுபவனது குணத்தைப் பாராட்டுதல், 18) கொற்றவையினது அருட்சிறப்பை வியந்து கூறுதல், 19) மறக்குடி மகளிர் தங்கணவர் கருதிய வினை நன்றாம் பொருட்டு வேலனோடு வெறியாடுதல் என்பனவாகும்.

புறப்பொருள்வெண்பாமாலையின் மேற்கண்ட வெட்சித்துறை நிகழ்ச்சிகளின் துறைப்பெயர்கள் கீழ்க்காணும் அட்டவணையில் வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியம் முதலான ஏனைய மூன்று இலக்கண நூல்களிலும் காணப்படும் வெட்சித் துறைப் பெயர்களும் இவ்வட்டவணையில் ஒப்பீடு செய்து காட்டப்பட்டுள்ளன.

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	வெட்சியரவம்	படையியங்கரவம்	ஒருப்பாடு	படையியங்கரவம்	படையியங்கரவம்
2	விரிச்சி	பாக்கத்துவிரிச்சி	நற்சொல்	விரிச்சி ஓர்தல்	விரிச்சி ஓர்தல்
3	செலவு	செலவு	செலவு	மறவர் வழிச்செலவு	மறவர் வழிச் செலவு
4	வேய்	வேய்	ஒற்றுரைப்பு	வேய்	வேய்
5	புறத்திறை	புறத்திறை	புகல்	புறத்திறை	புறத்திறை
6	ஊர்க்கொலை	ஊர்க்கொலை	பொருதல்	ஊர்க்கொலை	ஊர்க்கொலை
7	ஆகோள்	ஆகோள்	விருப்பா	ஆகோள்	ஆகோள்
8	பூசன்மாற்று	பூசன்மாற்று	நிரை கொண்ட வரைத் தடுத்தல்	பூசன்மாற்று	பூசல்விலக்கு

9.	சுரத்துய்த்தல்	நோயின்றுய்த்தல்	நெறி செலுத்துதல்	நோயின்றுய்த்தல்	இடர் இன்று உய்த்தல்
10.	தலைத் தோற்றம்	நுவலுழித் தோற்றம்	செருப்பாடு	நுவலுழித் தோற்றம்	நுவலுழித் தோற்றம்
11.	தந்துநிறை	தந்துநிறை	கைப்படை	தந்துநிறை	நிறைத்தல்
12.	பாதீடு	பாதீடு	கூறிடுதல்	பாதீடு	பாதீடு
13	உண்டாட்டு	உண்டாட்டு	பருப்பாடு	உண்டாட்டு	உண்டாட்டு
14	கொடை	கொடை	பாலாற் களித்தல்	உறுகொடை	ஈகை
15	புலனறிசிறப்பு	-	-	புலனறிசிறப்பு	புலனறிசிறப்பு
16.	பிள்ளைவழக்கு	-	-	பிள்ளைவழக்கு	புள்வழக்கு
17.	துடிநிலை	துடிநிலை	-	பெருந்துடிநிலை	துடிநிலை
18.	கொற்றவைநிலை	கொற்றவைநிலை	-	கொற்றவைநிலை	கொற்றவை சீர்
19	வெறியாட்டு	-	-	வெறியாட்டு	வெறியாட்டு

வெட்சித் துறைகளைப் பொருத்த அளவில் புறப்பொருள்வெண்பாமாலையும் தொல்காப்பியமும் பெரிதும் ஒத்தே அமைகின்றன. எனினும் புறப்பொருள்வெண்பாமாலையில் சுட்டப்பட்டுத் தொல்காப்பியத்தில் சுட்டப்படாதனவாக மூன்று துறைகள் உள்ளன. அவையாவன,

1) புலனறிசிறப்பு
2) பிள்ளை வழக்கு
3) வெறியாட்டு என்பனவாகும்.

இதில் புலனறிசிறப்பு, பிள்ளைவழக்கு ஆகிய இரண்டினையும் 'பாதீடு' எனற துறைக்குள் அடக்கிவிடலாம். எனவே 'பாதீடு' துறையின் வளர்ச்சியாகவே இவ்விரு துறைகளையும் கொள்ள வேண்டும்.

தொல்காப்பியர் கூறும்,

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தள் ...."(2)

எனும் பகுதி புறப்பொருள்வெண்பாமாலையார் கூறிய 'வெறியாட்டு' என்ற துறையோடு நோக்கத்தக்கது.

வெட்சித்துறைகளைச் சுருக்கமாகக் கூறும் வீரசோழியம் 'ஒருப்பாடு' என்ற புதியதுறை ஒன்றினைச் சுட்டுகிறது. வெட்சிவீரர்கள் ஒன்று கூடி நிரை கொள்ளத் துணிவது இத்துறையின் பொருளாகும். இதனைப் புறப்பொருள்வெண்பாமாலையின் வெட்சியரவத்துள் அடக்கலாம்.

இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் 19 துறைகளையும் கூறுவதோடு, மேலும் மூன்று துறைகளைக் கூறுகின்றன. இலக்கணவிளக்கத்தில்,

1) மண்டமர்க்கி வர்ந்தோன் மருவலர் நிரையினைத் தண்டத் தலைவரைத் தருக எனப் பணித்தல்
2) பணிதலைக் கோடல்
3) வேண்டாவீரம் என்ற மூன்றும் சுட்டப்படுகின்றன.

இதில் முன்னிரண்டு துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலை வெட்சித் திணைக்குக் கூறிய விளக்கங்களேயாகும்.

'வேண்டாவீரம்' என்பது வெட்சியார் விரிச்சி கேட்கும்போது, விரிச்சி தீயதாயினும் அது விலக்கிச் செலவு மேற்கொள்ளும் வீரச்சிறப்பைச் சுட்டுவதாகும். இது புறப்பொருள்வெண்பாமாலை சுட்டாத புதிய துறையாகும். 'விரிச்சியின்' வளர்ந்த நிலையாக இதனைக் கொள்ளலாம். சுவாமிநாதம்,

1) வேந்தன்வய வரைமருவார் நிரைகவர்கொன் றுரைத்தல்
2) உகந்து பணிதலைக் கோடல்
3) வேண்டாவீரம் - என மேலே இலக்கணவிளக்கம் கூறிய துறைகளையே தாமும் குறித்துள்ளது.

2.3 கரந்தைத்துறைகள்

புறப்பொருள்வெண்பாமாலை இத்திணையின் கீழ் 13 துறைகளைக் கூறியுள்ளது. தொல்காப்பியர் ஆறு துறைகளைக் கூறுகிறார். வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் முறையே 8, 27,

27 எனக் கரந்தைத் திணைக்குத் துறைகளைக் கூறியுள்ளன. புறப்பொருள்வெண்பாமாலை மூலம் அறியலாகும் கரந்தைத்துறை நிகழ்ச்சிகளாகக் கீழ்க்கண்டவை அமைகின்றன.

1) வெட்சியாரால் தமது ஆநிரைகள் கவர்ந்து செல்லப்பட்டது என்ற செய்தியைக் கேட்ட கரந்தையார் ஓரிடத்தே கூடுதல், 2) வெட்சியார் சென்ற வழியே கரந்தையார் தொடர்ந்து செல்லுதல், 3) வெட்சியாரை வளைத்துக் கொண்டு போரிடுதல், 4) கரந்தை மறவர் புண்ணோடு வருதல், 5) கரந்தையார் வெட்சியாருடன் போரிட்டுப் போர்களத்திலேயே உயிர்விடுதல், 6) கரந்தை மறவன் ஒருவனே எதிர் சென்று வெட்சி மறவரை வெட்டி வீழ்த்துதல், 7) கரந்தை மறவன் தான் பெற்ற விழுப்புண்ணிற்கு மகிழ்ந்து கூத்தாடுதல், 8) பகைவர் குடரைத் தன் வேலிலே மாலையாகச் சூடி கரந்தை வீரன் ஆடுதல், 9) போரிலே பட்ட கரந்தை மறவன் நிலை கண்டு பாணர் முதலானோர் தமது செயலறுதியைக் கூறுதல், 10) கரந்தை மறவன் மன்னனுக்குத் தனது பெருமையைக் கூறுதல், 11) நிரை மீட்டு வந்த கரந்தையாருக்கு மன்னன் சிறப்புச் செய்தல், 12) மறவர் மன்னனைப் புகழ்தல், 13) கரந்தை மறவர் தமது குடியினது வரலாற்றைப் புகழ்தல் ஆகியனவாகும்.

2.3.1 கரந்தைத் துறைகளின் ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	கரந்தையரவம்	-	-	படையியங்கரவம்	சேய்படைஒலி
2	அதரிடைச் செலவு	-	-	நடைவயிற்சேறல்	நடையிற் செல்லு
3	போர்மலைதல்	ஆரமர்ஓட்டல்	ஆரமர்ஓட்டல்	திறப்படப் பொருதல்	-
4	புண்ணொடுவருதல்	-	-	புண்ணொடுவருதல்	புண்ணொடு வந்திடல்
5	போர்க்களத் தொழிதல்	பிள்ளைநிலை (வாள்வாய்த்துக் கவிழ்தல்)	-	போர்க்களத் தொழிதல்	போர்க்களத் தொழிவு

6	ஆளெறிபிள்ளை	பிள்ளைநிலை (வருதார்தாங்கல்)	ஓடாப்படை-யாண்மை	ஆளெறிபிள்ளை	ஆளெறி பிள்ளை
7	பிள்ளைத்தெளிவு	(வருதார்தாங்கல்)	(ஓடாப்படை-யாண்மை)	பிள்ளைத்தெளிவு	பிள்ளைத் தெளிவு
8	பிள்ளைப் பாட்டு	(வருதார்தாங்கல்)	(ஓடாப்படை-யாண்மை)	பிள்ளையாட்டு	பிள்ளையாட்டு
9.	கையறுநிலை	-	-	கையறுநிலை	கையறுநிலை
10.	நெடுமொழி கூறல்	நெடுமொழி	தன்திறங்கூறல்	நெடுமொழிகூறல்	நெடுமொழி
11.	பிள்ளைப்பெயர்ச்சி	பிள்ளையாட்டு	-	பிள்ளைப்பெயர்ச்சி	பிள்ளைப் பெயர்ச்சி
12.	வேத்தியன் மலிபு	வேந்தன்சிறப் பெடுத்து உரைத்தல்	மன்னர்கோடத் திறங்கூறல்	வேத்தியன்மலிபு	வேத்தியன்ம லிபு
13.	குடிநிலை	-	-	குடிநிலை	குடிநிலை

தொல்காப்பியர் 'ஆபெயர்த்துத் தருதல்' என்று கூறிய ஒரு துறையைப் புறப்பொருள்வெண்பாமாலையார் கரந்தைத் திணையின் உரிப்பொருளாகக் குறிப்பிடுகின்றார். புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் 'போர் மலைதல்' என்ற துறையோடு தொல்காப்பியத்தின் 'ஆரமர் ஓட்டல்' பொருளளவில் ஒன்றுபடுகிறது. அதே போன்று 'போர்க்களத்தொழிதல்' எனும் வெண்பாமாலையின் துறை, தொல்காப்பியப் பிள்ளைநிலைத் துறையின் 'வாள்வாய்த்துக் கவிழ்தல்' எனும் பகுதியுள் அடங்குகிறது. இதன் மற்றோரு பகுதியான 'வருதார் தாங்கல்' புறப்பொருள்வெண்பாமாலை சுட்டிய 'ஆளெறிபிள்ளை', 'பிள்ளைத்தெளிவு', 'பிள்ளையாட்டு' எனற மூன்றினையும் குறித்து நிற்கிறது. இதன் மூலம் தொல்காப்பியம் சுட்டாத புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் புதுத்துறைகள்.

1) கரந்தையரவம்
2) அதரிடைச்செலவு
3) புண்ணொடு வருதல்

4) கையறுநிலை

5) குடிநிலை

ஆகியனவாகும். இவற்றுள் முன்னிரண்டு துறைகள் எல்லாத் திணைக்கும் பொதுவானவை என்ற வகையில் இங்கும் இடம்பெற்றன எனலாம். ஏனைய மூன்று துறைகளும் மறவரின் வீரச்சிறப்பைக் கூறும் புதிய துறைகளாகும்.

வீரசோழியம் இத்திணைக்குக் குறிக்கும் எட்டுத் துறைகளில் மூன்று துறைகள் பொதுவியல் துறைகளாகும். ஏனைய ஐந்தில் நான்கு துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையுடன் ஒத்து வருகின்றன. இந்நூல் சுட்டும் 'நிரை மீட்டல்' என்னும் மற்றொரு துறை புறப்பொருள்வெண்பாமாலை கரந்தைத் திணைக்குக் கூறும் உரிப்பொருளாகும்.

இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டிய 13 துறைகளோடு மேலும் 14 புதிய துறைகளைக் கூறியுள்ளன. அவற்றின் நிகழ்ச்சிகளாவன.

1) ஆநிரையைக் கவர்ந்து சென்றதை மீட்க என்று அரசன் கூறல், 2) புள்ளின் சகுனம் பார்த்தல், 3) ஒற்றாய்தல், 4) புறத்தே தங்குதல், 5) பசுக்களை இடம் மாற்றுதல், 6) போரை விலக்குதல், 7) ஆநிரைகளைக் கொண்டு செல்லுதல், 8) நிரைமீட்டோர் வரவு தெரிதல், 9) ஊர்புறத்துத் தாம் கொண்ட நிரையை நிறுத்தல், 10) நிரையைப் பங்கிட்டுக் கொள்ளல், 11) உண்டு மகிழ்தல், 12) கொடை செய்தல், 13) துடிநிலை, 14) கொற்றவைநிலை என்பன. இவற்றில் 'அரசன் கவரப்பட்ட ஆநிரைகளை மீட்கும் படி படைவீரர்களுக்குக் கூறுதல் தவிர ஏனைய அனைத்துத் துறைகளும் வெட்சியின் அமைப்பிலேயே அமையக் காணலாம். 'வெட்சியின் பல நிகழ்ச்சிகள் கரந்தையிலும் அடங்கும்' எனும் கொள்கையுடையவர்களாகவே வைத்தியநாததேசிகரும், சாமிகவிராசரும் காணப்படுகின்றனர்.

2.4 வஞ்சித் துறைகள்

புறப்பொருள்வெண்பாமாலை வஞ்சித் திணைக்கு 20 துறைகளைக் கூற தொல்காப்பியம் 13 துறைகளைக் கூறியுள்ளது. வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகியன முறையே 12, 25, 25 – என்ற

எண்ணிக்கையில் வஞ்சித் துறைகளை விளக்கியுள்ளன. புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் வஞ்சித் துறைகளின் நிகழ்ச்சிகளாவன.

1) வஞ்சி வீரர்கள் போர் கருதி வெகுண்டு எழுதல், 2) வஞ்சி அரசன் தனது கொற்றக் குடையைப் புறவீடு விடுதல், 3) வாளினைப் புறவீடு விடுதல், 4) வஞ்சி வேந்தனுக்கு வெற்றி தருகின்ற கொற்றவையினது அருளைப் பாராட்டுதல், போர் மறவரின் செயலைச் சிறப்பித்துக் கூறல், 5) வஞ்சி வேந்தனது வாட்போரினது வெற்றியைச் சிறப்பித்தல், 6) வஞ்சி வேந்தனது புகழைக் கூறி பகைநாட்டின் அழிவிற்கு இரங்குதல், 7) பகைவரை வென்ற மறவர்கட்கு வஞ்சிவேந்தன் சிறப்புச் செய்தல், வஞ்சிவேந்தன் பகைவர் திறை கொடுக்க சினந்தணிந்து மீண்டு போதல், 8) மன்னனால் சிறப்புப் பெற்ற மறவர் மாண்பு கூறுதல், 9) ஒரு வஞ்சிமறவன் தன் பகைப்படை முன்னின்று தனது ஆண்மையை மிகுத்துக் கூறுதல், 10) ஒரு மறவனுடைய குடி முதல்வனைப் புகழ்தல், 11) வஞ்சிவேந்தன் பகைநாட்டினைத் தீக்கொளுத்துதல், 12) பகைவர் நாட்டைக் கொள்ளையிடுதல், 13) வஞ்சி வேந்தன் தனது வெற்றியைப் பாடிய புலவர்க்குப் பரிசில் வழங்குதல், 14) வஞ்சி மன்னனுக்குப் பகையரசன் திறை கொடுத்துத் தன் குடிகளை ஓம்புதல், வஞ்சி வேந்தனது பாசறையினைப் புகழ்தல், 15) தன் படை தளர்தல் கண்ட வஞ்சி மறவன் ஒருவன் தனியாளாய் பகைப்படைஞரைத் தடுத்து நிற்றல், ஒரு மறவன் தனக்காற்றாது புறங்கொடுப்பார்பால் படைவிடாத பேராண்மையைக் கண்டோர் கூறுதல், 17) வஞ்சி மன்னன் பகைவர் பணிந்த பின்னும் மீளாது பாசறையிடத்தே தங்குதல், 18) வஞ்சியார் இரண்டாவது முறையாகப் பகைவர் நாட்டை தீயிட்டுக் கொளுத்துதல், 19) வஞ்சிவேந்தன் தன் படைவீரர்களுக்குப் பெருஞ்சோறு வழங்குதல், 20) வஞ்சிவேந்தனது வெற்றியைப் புகழ்தல், பகைநாட்டின் ஆழிபிற்கு இரங்குதல் என்பனவாகும்.

2.4.1 வஞ்சித்துறைகளின் ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	வஞ்சியரவம்	படையரவம்	அரவம்	படையியங்கரவம்	படையொலி
2	குடைநிலை	-	-	குடைநாட்கோள்	குடைநாட்கோள்
3	வாள்நிலை	-	-	வாள்நாட்கோள்	-
4	கொற்றவைநிலை (2*)	-	-	கொற்றவைநிலை	கொற்றவைநிலை
5	கொற்றவஞ்சி	கொற்றவஞ்சி	-	கொற்றவஞ்சி	-
6	கொற்றவள்ளை	கொற்றவள்ளை	-	கொற்றவள்ளை	கொற்றவள்ளை
7	பேராண்வஞ்சி (2*)	பேராண்வஞ்சி	-	பேராண்வஞ்சி	பேராண்வஞ்சி
8	மாராயவஞ்சி	மாராயம் பெற்ற நெடுமொழி	-	மாராயவஞ்சி	மாராயவஞ்சி
9	நெடுமொழிவஞ்சி	(மாராயம் பெற்ற நெடுமொழி)	-	நெடுமொழிவஞ்சி	நெடுமொழிவஞ்சி
10	முதுமொழிவஞ்சி	-	-	முதுமொழிவஞ்சி	முதுமொழிவஞ்சி
11	உழுபுலவஞ்சி	எரிபரந்தெடுத்தல்	-	உழுபுலவஞ்சி	உழுபுலவஞ்சி
12	மழபுலவஞ்சி	-	-	மழபுலவஞ்சி	மழபுலவஞ்சி
13	கொடை வஞ்சி	கொடைவஞ்சி	ஈகை	கொடைவஞ்சி	கொடைவஞ்சி
14	குறுவஞ்சி (2*)	தோற்றோர்தேய்வு	கொற்றவர் மெலிவு	குறுவஞ்சி	குறுவஞ்சி
15	ஒருதனிநிலை	ஒருவன்தாங்கிய பெருமை	தனிச்சேவகம்	ஒருதனிநிலை	தனிநிலை
16	தழிஞ்சி	தழிஞ்சி	பரவுதழிஞ்சி	தழிஞ்சி	தழிஞ்சி
17	பாசறைநிலை	வென்றோர் விளக்கம்	வென்றோர் விளக்கம்	பாசறைவஞ்சி	பாசறைவஞ்சி
18	பெருவஞ்சி	(எரிபரந்தெடுத்தல்)	-	பெருவஞ்சி	பெருவஞ்சி
19	பெருஞ்சோற்று நிலை	பெருஞ்சோற்று நிலை	சோற்றுநிலை	பெருஞ்சோற்று நிலை	பெருஞ்சோற்று வஞ்சி
20	நல்லிசைவஞ்சி (2*)	(வென்றோர் விளக்கம்)	-	நல்லிசைவஞ்சி	நாடழிபுக்கு இரங்கல்

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

தொல்காப்பியத்தில் கூறப்பட்டு, புறப்பொருள்வெண்பாமாலையில் கூறப்படாத ஒரு துறை 'வயங்கல் எய்திய பெருமை' என்பதாகும். 'துணைப்படையைப் பெற்று வலியைப் பெருக்கிக் கொள்ளுதல் இதன் பொருளாகும்'(3) இப்பொருளில் புறப்பொருள்வெண்பாமாலையில் துறை இல்லை.

மேலே துறை ஒப்பீடு செய்யப்பட்டவற்றுள் புறப்பொருள் வெண்பாமாலை சுட்டும் 'தழிஞ்சி' துறையும் தொல்காப்பியம் சுட்டும் 'தழிஞ்சி' துறையும் பொருளளவில் மாறுபடுகின்றன. புறமுதுகிட்டவனைக் கொல்லாத பேராண்மையைக் கூறுதல் 'தழிஞ்சி' என புறப்பொருள்வெண்பாமாலை கூற தொல்காப்பியமோ 'படைதடுத்து புண்பெற்ற வீரரை வேந்தன் தழுவிக் கொள்ளுதல்' எனக் கூறுகிறது. இதே போன்று பேராண்வஞ்சியின் துறைப்பொருளும் இவ்விரு நூல்களுக்கிடையே மாறுபட்டுக் காணப்படுகிறது. 'பகைவனை ஒரு பொருட்டாக மதியாது போரிடுவது' தொல்காப்பியம் சுட்டும் பேராண்வஞ்சியாகும். பகைவரை வென்ற மறவர்கட்கு வஞ்சிவேந்தன் சிறப்புச் செய்தலும் பகைவர் திறை கொடுத்ததால் வஞ்சிவேந்தன் சினந்தணிந்து மீண்டு போதலும் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் பேராண்வஞ்சியாகும்.

புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் 'உழுபுலவஞ்சி', 'பெருவஞ்சி' என்ற இரண்டு துறைகளும் தொல்காப்பியத்தின் 'எரிபரந்தெடுத்தல்' எனும் துறைக்குள் அடங்கிவிடுகின்றன. புறப்பொருள்வெண்பாமாலையின் 'மாராய வஞ்சி', 'நெடுமொழிவஞ்சி' என்ற இரண்டு துறைகளும் தொல்காப்பியத்தின் 'மாராயம் பெற்ற நெடுமொழி' எனும் துறையிலிருந்து வளர்ந்தவை. மேலும் தொல்காப்பியத்தின் 'வென்றோர் விளக்கம்' எனும் துறை புறப்பொருள்வெண்பாமாலையில் 'பாசறைநிலை', 'நல்லிசைவஞ்சி' என வளர்ந்தது. தொல்காப்பியத்தில் இல்லாத புறப்பொருள்வெண்பாமாலையில் காணப்படும் புதுத்துறைகளாவன,

1) குடைநிலை

2) வாள்நிலை

3) கொற்றவைநிலை

4) முதுமொழி வஞ்சி

5) மழபுலவஞ்சி

எனபனவாகும். இத்துறைகளைப் புறப்பொருளின் வளர்ச்சியாகக் கொள்ளலாம்.

வீரசோழியத்தைப் பொருத்த அளவில் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டிய துறைகளில் ஏழினை மட்டுமே கூறி, தொல்காப்பியம் சுட்டிய 'வயங்கல்' எனும் துறையோடு, படையெடுத்தல், விலக்கருமை, வென்றி கூறல், நிரவும் வழிகை ஆகிய ஐந்தினையும் புதிதாகக் கூறுகின்றது.

இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் புறப்பொருள் வெண்பாமாலையைப் பின்பற்றியே இத்திணைக்கான துறைகளை விளக்கியுள்ளன. இலக்கணவிளக்கம் புறப்பொருள்வெண்பாமாலையின் 20 துறைகளையும் சுட்டுவதோடு புதிய ஐந்து துறைகளைக் கூறுகின்றது. ஆவை,

1) வாடாவஞ்சி மலைதல்

2) வெற்றிவேலுழவா் செய்தொழில் கூறிய மற்றதன் பகுதி (கொற்றவைநிலை)

3) மன்னவன் பெயா்ந்த பக்கம் (பேராண்வஞ்சி)

4) கட்டூா் வகைமை கட்டுரைத்த பக்கம் (குறுவஞ்சி)

5) நாடழிபு இரங்கி மறுத்துரைத்த பக்கம் (நல்லிசைவஞ்சி)

எனபனவாகும். இவற்றில் முதலாவதான 'வாடாவஞ்சி மலைதல்' என்பது புறப்பொருள்வெண்பாமாலையில் வஞ்சித்திணையின் உரிப்பொருளாகக் கூறப்பட்டதேயாகும். கொற்றவைநிலை, பேராண்வஞ்சி, குறுவஞ்சி, நல்லிசைவஞ்சி ஆகியவற்றிற்குப் புறப்பொருள்வெண்பாமாலை முறையே இரண்டு பொருள்களைக் கூறியுள்ளது. இவ்விரண்டாவது பொருள்களையே இலக்கணவிளக்கம் மேலே கண்டவாறு தனித்துறைகளாக எண்ணுகிறது. அதாவது புறப்பொருள்வெண்பாமாலை ஒரு துறைக்கு இரண்டு பொருள்களைக் கூறி எண்ணிக்கையில் ஒரே துறையாகக் கொள்ள, இலக்கணவிளக்கம் அவற்றை எண்ணிக்கையில் இரண்டு துறைகளாகக் கொள்ளுகிறது.

சுவாமிநாதத்தைப் பொருத்த அளவில் இலக்கணவிளக்கத்தை ஒட்டியே பெரிதும் அமைந்த போதிலும்

1) செல்லுமவர் நாட்கோள்

2) இசைவஞ்சி

ஆகிய இரண்டு துறைகளை முற்றிலும் புதியதாகக் கூறுகின்றது.

2.5 காஞ்சித்துறைகள்

புறப்பொருள்வெண்பாமாலையில் இத்திணையின் கீழ் 21 துறைகள் காணப்படுகின்றன. தொல்காப்பியம் இத்திணைக்குரியனவாக 20 துறைகளைக் கூறினாலும், புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் வஞ்சியின் எதிர்த்திணை என்பதிலிருந்து மாறுபட்டு 'நிலையாமையைக் குறிப்பது' என்ற கொள்கையுடைய தாகையால் ஒன்பது துறைகளே பொருந்தி வருகின்றன. அதிலும் பெருங்காஞ்சி என்ற துறை பொருளளவில் மாறுபடுகின்றது. தொல்காப்பியம் சுட்டியுள்ள ஏனைய 11 துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலையில் பொதுவியல் திணைக்குள் கூறப்பட்டுள்ளன. வீரசோழியத்தில் இத்திணையின் கீழ் 12 துறைகள் கூறப்பட்டாலும் இரண்டு துறைகள் மட்டுமே வெண்பாமாலையுடன் பொருந்தி வருகின்றன. இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியன முறையே 25,24 காஞ்சித்துறைகளைக் கொண்டுள்ளன.

புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் காஞ்சித் துறைகளின் நிகழ்ச்சிகள் வருமாறு.

1) வஞ்சியார் படையரவினை ஆற்றாத ஒரு காஞ்சி மறவனின் வெற்றியைப் பாராட்டுதல், 2) வஞ்சியார் தம் நாட்டினுள் புகாதபடி காஞ்சியார் காத்தல், 3) காஞ்சி வேந்தன் தன் மறவர்களுக்குப் படை வழங்குதல், வீரக்கழலையுடைய மறவர் தமது மறப்பண்பினை விதந்து கூறுதல், 4) காஞ்சி மறவர் வஞ்சி மறவரை எதிர்த்துத் தமது போர் வலிமையை வெளிப்படுத்தல், 5) காஞ்சியரசன் வாளினைப் புறவீடு விடுதல், 6) குடையினைப் புறவீடு விடுதல், 7) காஞ்சி வேந்தன் தன் பகைவரை வெல்லுதல் பொருட்டு சூள் மொழிதல், வஞ்சியாருடன் போர் செய்யும் பொருட்டுக்காஞ்சியார் தமது மன்னனிடம் பூப்பெறுதல், 9) பகைவரைக் கலக்கி இறுதியில் மாண்ட மறவனுடைய தலையைப் பாராட்டுதல், 10) போரில் பட்ட மறவன் தலையைக்

கொணர்ந்தவனுக்குக் காஞ்சிவேந்தன் பொருள் வழங்குதல். 11) போரின்கண் இறந்த தலைவனைக் கண்டு அவனது மனைவியும் உடன் இறத்தல். 12) வஞ்சியார் அஞ்சும்படி காஞ்சி வேந்தன் போரினைச் செய்தல். காஞ்சி மறவர் பகைவர் உயர்ச்சியைப் பொறாது தன் விழுப்புண்ணைப் பிளந்து உயிர்நீத்தல். 13) களத்தில் புண்பட்டு வீழ்ந்த மறவனைப் பேய் காவல் செய்தல். 14) விழுப்புண்பட்டு வீழ்ந்த மறவரைப் பேய் அச்சமுறுத்தியது. 15) மனையின்கட் பாதுகாக்கப்படும் மறவனுடைய புண்ணைப் பேய் தீண்டுதல். 16) புண்ணைத் தீண்டச் சென்ற பேய் தீண்ட அஞ்சி மீளுதல். 17) போரில் பட்டவனது புகழ் பாராட்டி இரங்குதல். 18) காஞ்சி வேந்தன் தன் மறவர்களுக்குக் கள் வழங்குதல். 19) கணவனோடு தீப்புகுந்து மாயும் கற்புடைய மகளைப் பாராட்டுதல். கணவனின் மார்பினைப் பிளந்த வேலாலே மனைவி தனது உயிரைப் போக்குதல். 20) தனது மகளை விரும்பும் அரசனோடு மாறுபட்டு நிற்றல். 21) காஞ்சி மன்னன் வஞ்சியார் படையைப் புறங்கொடுத்தோடுமாறுபோர் செய்து போகச் செய்தல்.

2.5.1 காஞ்சித்துறைகள் ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	காஞ்சியெதிர்வு	-	-	எதிர்த்தல்	எதிர்த்தல்
2.	தழிஞ்சி	-	-	தழிஞ்சி	தழிஞ்சி
3.	படைவழக்கு (2*)	-	-	படைவழங்கல்	படைவழங்கல்
4.	பெருங்காஞ்சி	பெருங்காஞ்சி	-	பெருங்காஞ்சி	-
5.	வாள்செலவு	-	-	வாள்செலவு	வாள்செலவு
6.	குடைசெலவு	-	-	குடைமுனைச் சேறல்	குடையிற்சேறல்
7.	வஞ்சினக்காஞ்சி	வஞ்சினக்காஞ்சி	சூளுரவு	வஞ்சினக்காஞ்சி	சூழ்உரைத்தல்
8.	பூக்கோள் நிலை	-	-	பூக்கோள் நிலை	பூக்கூறல்
9.	தலைக்காஞ்சி	-	-	தலைக்காஞ்சி	தலைக்காஞ்சி
10.	தலைமாராயம்	-	-	தலைமாராயம்	தலை தந்தவர்க் குதவல்

11.	தலையொடுமுடிதல்	தலையொடு முடிதல்	-	தலையொடு முடிந்த நிலை	பதிதலை கண்டவள் உயிர் மாய்த்திடல்
12.	மறக்காஞ்சி (2*)	மறக்காஞ்சி	-	மறக்காஞ்சி	புண்கிழித்து முடிதல்
13.	பேய்நிலை	பேய்ப்பக்கம்	-	பேயோம்புதல்	பேய் ஓம்பல்
14.	பேய்க்காஞ்சி	-	-	பேய்க்காஞ்சி	-
15.	தொட்டகாஞ்சி	-	-	தொட்டகாஞ்சி	பேய்தொடுதல்
16.	தொடாக்காஞ்சி	தொடாக்காஞ்சி	கலையார் மனைவி	தொடாக்காஞ்சி	தொடாக்காஞ்சி
17.	மன்னைக்காஞ்சி	மன்னைக்காஞ்சி	-	மன்னைக்காஞ்சி	ஆற்றிலினென்று இரங்குதல்
18.	கட்காஞ்சி	-	-	கட்காஞ்சி	கள்ஈதல்
19.	ஆஞ்சிக்காஞ்சி(2)	ஆஞ்சிக்காஞ்சி	-	ஆஞ்சிக்காஞ்சி	ஏரிமூழ்கல்
20.	மகட்பாற்காஞ்சி	மகட்பாற்காஞ்சி	-	மகட்பாற்காஞ்சி	-
21.	முனைகடி முன்னிருப்பு	-	-	முசித்த முன்னிருப்பு	முனைமுரிப்பு

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

காஞ்சி மறவர் வஞ்சிமறவரை எதிர்த்துத் தமது போர் வலிமையை வெளிப்படுத்தியதைப் 'பெருங்காஞ்சி' என்று புறப்பொருள்வெண்பாமாலை சுட்ட, தொல்காப்பியம் இத்துறைக்கு 'யாவருக்கும் முடிவுக்காலம் என்பது தவிர்க்க முடியாதது எனச் சான்றோர் அறிவுறுத்துவது' என்று விளக்கம் தந்து பொருளளவில் மாறுபடுகிறது.

காஞ்சி யெதிர்வு, தழிஞ்சி, படைவழக்கு, வாள்செலவு, குடைசெலவு, பூக்கோள்நிலை, முனைகடி முன்னிருப்பு ஆகியன, வஞ்சியின் எதிர் துறைகள் என்பதால் புறப்பொருள்வெண்பாமாலையில் கூடுதலாக இடம்பெறுகின்றன. தலைக்காஞ்சி, தலைமாராயம், பேய்க்காஞ்சி, தொட்டகாஞ்சி, கட்காஞ்சி ஆகியன புதிதாக வளர்ந்த துறைகளாகும்.

வீரசோழியம் தொல்காப்பியத்தினைப் பின்பற்றி காஞ்சித்துறைகளை விளக்கியுள்ளது. வீரசோழியத்தின் இரண்டு துறைகள் மட்டுமே

புறப்பொருள்வெண்பாமாலையுடன் ஒத்து அமைகின்றன. ஏனைய 10 துறைகளும் நிலையாமையைக் கூறுவனவாகும். இத்துறைகள் புறப்பொருள்வெண்பாமாலை பொதுவியலின் கண் சுட்டும் துறைகளோடு ஒப்புமைப்படுகின்றன.

இலக்கணவிளக்கம் 'காஞ்சித்திணை நிலையாமையைக் கூறுவது' என்ற கொள்கையை உடையது. ஆயின் துறைகளை விளக்கும் முறையில் முற்றிலும் புறப்பொருள்வெண்பாமாலையினையே இது பின்பற்றுகிறது. இலக்கணவிளக்கம் புறப்பொருள்வெண்பாமாலை இத்திணைக்குக் கூறிய 21 துறைகளையும் அப்படியே கூறுவதோடு மேலும்,

1. காஞ்சி சூடுதல்
2. கழங்கொலி முரசிற் சாற்றிய பக்கம் (படைவழக்கு)
3. புண்கிழித்து முடியும் துறை (மறக்காஞ்சி)
4. மனையோள் இன்னுயிர் நீத்த துறை (ஆஞ்சிக்காஞ்சி)

என நான்கு துறைகளைக் கூறுகிறது. எனினும் இத்துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டியவைகளேயாகும். 'காஞ்சி சூடல்' என்பது புறப்பொருள்வெண்பாமாலையில் திணையின் உரிப்பொருளாக இடம்பெற இந்நூலில் துறையாக இடம்பெறுகிறது. முன்பு கூறியது போன்றே, புறப்பொருள்வெண்பாமாலை படைவழக்கு, மறக்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி ஆகிய மூன்று துறைகளுக்கும் முறையே இரண்டு பொருள்களைக் கூறி எண்ணிக்கையில் ஒரே துறைகளாகக் கொள்ள, இலக்கண விளக்கம் அவற்றை இரண்டு துறைகளாக எண்ணுகிறது. எனவே, புறப்பொருள்வெண்பாமாலையை விட துறை எண்ணிக்கையில் இலக்கணவிளக்கம் அதிகப்படுகிறது.

இலக்கணவிளக்கத்தைப் பெரிதும் பின்பற்றித் துறைகளை விளக்கும் சுவாமிநாதம்,

1. நில்லாத உலகம் பேணுதல்
2. மாற்றார் வருதல்
3. பேய் அஞ்சல்

என்ற மூன்று துறைகளைப் புதியதாகக் கூறுகின்றது.

2.6 உழிஞைத்துறைகள்

புறப்பொருள்வெண்பாமாலையில் 28 உழிஞைத் துறைகள் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியம் உழிஞையின் வகைகள் எட்டு எனவும், துறைகள் 12 எனவும் விளக்கியுள்ளது. தொல்காப்பியம் சுட்டிய எட்டு வகைகளுள், நான்கு வகைகளைத் துறைகளாகப் புறப்பொருள்வெண்பாமாலை குறிக்கிறது. வீரசோழியத்தில் இத்திணையின் கீழ் 14 துறைகள் காணப்படுகின்றன. இலக்கண விளக்கமும், சுவாமிநாதமும் முறையே 32 துறைகளைக் கொண்டுள்ளன.

புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் உழிஞைத் துறைகளின் நிகழ்ச்சிகளாவன,

1) உழிஞை அரசன் பகைவரது அரணைக் கைப்பற்றக் கருதி தனது குடையைப் புறவீடு விடுதல், 2) வாளினைப் புறவீடு விடுதல், 3) உழிஞை வேந்தனது முரசின் நிலைமையைக் கூறல், 4) படையெடுத்துச் செல்லுதல், 5) உழிஞை வேந்தனது புகழைப் பாராட்டுதல், 6) அவனைத் திருமாலாகத் துணிந்து அத்திருமால் வீரசோவினை அழித்த மறத்தினைப் புகழ்தல், 7) கூத்த பெருமான் சூடிய உழிஞைமாலையைப் புகழ்தல், 8) முருகக்கடவுள் சூரபன்மாவை அழிக்கும் பொருட்டு சூடிய காந்தளின் மாண்பினைக் கூறுதல், 9) உழிஞையார் பகைவனின் அரண்புறத்தே சென்று தங்குதல், 10) பகைவரது மதிலின் திண்மையைக் கூறல், 11) கிடுகுப்படையைப் பாராட்டல், 12) பகைவரது மதிலின்மேல் தான் ஒருவனுமேயாகி உழிஞைமன்னன் மாறுபாட்டினைப் பெருக்குதல், உழிஞை மன்னன் நொச்சி மன்னனின் காவற்காட்டைக் கடந்து உட்புகுதல், உழிஞைமறவர் கூத்தாடிக்கொண்டு நொச்சியாரது குறும்பினை அடைதல், 13) உழிஞையார் நொச்சியாரது காவற்காட்டை வென்று கைப்பற்றி அகழிக்கரையில் தங்குதல், 14) அவர் நொச்சியாருடன் அகழியிடத்தே போர் செய்தல், 15) உழிஞையார் நொச்சியாருடைய மதிலின்கண் ஏணியைச் சார்த்தல், 16) சாத்திய ஏணி மேல் உழிஞையார் ஏறுதல், 17) நொச்சியாரது மதிலகத்தே குதித்தல், உழிஞை ஒற்றர் மதிலகத்து நொச்சியார் பண்பினைக் கூறுதல், 18) உழிஞை மறவர் மதிலகத்து நொச்சியாரை

வெல்லுதல், 19) உழிஞை மன்னனின் வெகுளி மிகுதியைக் கூறல், 20) உழிஞையார் நொச்சியாரை வென்று அவர்தம் யானையையும் காவற்படையையும் கைப்பற்றுதல், 21) நொச்சியாருக்கு உதவியாக வேற்றுப்படை வருதல், 22) நொச்சியாருடைய அரணகத்தே கழுதை ஏரால் உழுது வித்திடுதல், 23) உழிஞையரசனது வாளினைக் கடவுள் நீராட்டுதலைச் சொல்லுதல், 24) உழிஞை மன்னன் நொச்சியார் மதிலைக் கைக் கொண்டு மங்கல நீராடுதல், 25) நொச்சி அரசனது மகளை விரும்பிய உழிஞையரசனது நிலைமையைக் கூறல், 26) உழிஞையரசன் நொச்சியான் தரும் திறைபெற்று மீளுதல், 27) அவன் பாசறையில் நீண்ட காலம் தங்குதல், 28) பகைவனது மதிலைக் கைப்பற்றிய உழிஞை மன்னனது அடியினை அவனது ஏனைய பகைமன்னர் எல்லாம் வந்து எய்துதல் என்பனவாகும்.

2.6.1 உழிஞைத்துறைகள் ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	குடைநாட்கோள்	குடைநாட்கோள்	நாட்கோள்	குடைநாட்கோள்	குடைநாட்கோள்
2.	வாள்நாட்கோள்	வாள்நாட்கோள்	(நாட்கோள்)	வாள்நாட்கோள்	வாள்நாட்கோள்
3.	முரசஉழிஞை	-	-	முரசுஉழிஞை	முரசுஉழிஞை
4.	கொற்றஉழிஞை	-	-	கொற்றஉழிஞை	கொற்றஉழிஞை
5.	அரசஉழிஞை	வேந்தனது சிறப்பு	வேந்தன் சிறப்பு	அரசஉழிஞை	அரண்எய்தும்
6.	கந்தழி	-	-	கந்தழியுழிஞை	கந்தழியுழிஞை
7.	முற்றுழிஞை	-	-	முற்றுழிஞை	முற்றுழிஞை
8.	காந்தள்	-	-	காந்தள்	காந்தள்
9.	புறத்திறை	-	-	புறத்தொருங் கிருத்தல்	புறத்திருத்தல்
10.	ஆரெயில் உழிஞை	ஆரையில்	-	மதிலின்நிலை யெடுத்தியம்பல்	மதினிலைக் கோடச்சொலல்
11	தோல்உழிஞை	தோலின்பெருக்கம்	படைமிகை	தோன்மலி புரைத்தல்	தோன்மலி புரைத்தல்

12.	குற்றுழிஞை (3*)	ஒருதான் மண்டிய குறுமை	குறுமை	குற்றுழிஞை	குற்றுழிஞை
13.	புறத்துழிஞை	-	-	புறத்துவந்திறுதல்	புறத்திருத்தல்
14.	பாசிநிலை	நீர்ச்செரு வீழ்ந்தபாசி	-	பாசிநிலை	பெரும்பாசி
15.	ஏணிநிலை	ஏணிமிசைமயக்கம்	-	ஏணிசாத்தல்	ஏணிசாத்தல்
16.	எயிற்பாசி	(ஏணிமிசை மயக்கம்)	மதிலேறுதல்	எயிற்பாசி	எயிற்பாசி
17.	முதுஉழிஞை (2*)	-	-	முதுழிஞை	ஆன்றமதில் பாய்தல்
18.	அகத்துழிஞை	-	-	அகத்துழிஞை	அகத்தரையாடல்
19.	முற்றுமுதிர்வு	முற்றியமுதிர்வு	முதிர்வு	முற்றுமுதிர்வு	தோன்றல்சூல் சொல்லல்
20.	யானைகைக்கோள்	-	-	யானைகைக் கோள்	யானைக் கோள்
21.	வேற்றுப்படைவரவு	-	-	வேற்றுப்படை வரவு	வேற்றுப்படை வரவு
22.	உழுதுவித்திடுதல்	-	-	உழுதுவித்திடுதல்	வரகுவிதைத்திடல்
23.	வாள்மண்ணுநிலை	வென்றவாளின் மண்ணுமங்கலம்	வாட்சிறப்பு	வாள்மங்கலம்	வாள்மங்கலம்
24.	மண்ணுமங்கலம்	மண்ணுமங்கலம்	முடிகோள்	மணந்தமங்கலம்	மணத்தல்
25.	மகட்பால்இகல்	-	-	மகட்பால்இகல்	மகட்கேட்குமிகல்
26.	திரைகொண்டு பெயர்தல்	-	-	திரைகொண்டு பெயர்தல்	திரைகொண்டு ஏகல்
27.	அடிப்பட இருத்தல்	-	-	அடிப்படவிருத்தல்	பாக்கியிருத்தல்
28.	தொகைநிலை	தொகைநிலை	தொகை நிலை	தொகைநிலை	தொகை

(3*) மூன்று பொருள்களைக் கொண்ட துறை

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

புறப்பொருள்வெண்பாமாலையில் உழிஞைத்திணைக்குக் கூறப்பட்டுள்ள 28 துறைகளில் தொல்காப்பியம் 12 துறைப் பொருள்களைக் கொண்டுள்ளது. இதில் நான்கு துறைப்பொருள்கள் தொல்காப்பியம் உழிஞையின் வகைகளாகக் கூறியனவாகும். அவை,

1) வேந்தன் சிறப்பு

2) ஆரெயில்

3) தோலின் பெருக்கம்

4) ஒருதான் மண்டிய குறுமை

எனபனவாகும். இவை புறப்பொருள்வெண்பாமாலையில் முறையே அரசஉழிஞை, ஆரெயில் உழிஞை, தோல் உழிஞை, குற்றுழிஞை என இடம் பெறுகின்றன. தொல்காப்பியம் மேற் குறித்த நான்கினோடு மேலும் நான்கு உழிஞை வகைகளைக் கூறுகிறது. அவையாவன,

1) கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்

2) தொல்லெயிற் கிவர்தல்

3) அகத்தோன் செல்வம்

4) புறத்தோன் அணங்கிய பக்கம்

இந்நான்கு பொருள்களும் புறப்பொருள்வெண்பாமாலையில் சுட்டப்படவில்லை. தொல்காப்பியம் சுட்டிய 'ஏணிமிசை மயக்கம்' எனும் ஒரு துறையே புறப்பொருள்வெண்பாமாலையில் 'ஏணிநிலை', 'எயிற்பாசி' என இரண்டு துறைகளாகக் குறிக்கப்படுகின்றன.

புறப்பொருள்வெண்பாமாலையில் காணப்படும் ஏனைய 15 துறைகளும் தொல்காப்பியம் சுட்டாத புதுத்துறைகளாகும். தொல்காப்பியம் கூறும் நொச்சி, புதுமை, பாசிமறன், அகமிசைக்கிவர்தல் ஆகிய துறைகளைப் புறப்பொருள்வெண்பாமாலையில் காணமுடியவில்லை.

வீரசோழியத்தின் ஒன்பது துறைகள் மட்டுமே புறப்பொருள் வெண்பாமாலையுடன் ஒத்து வருகின்றன. இது குறிப்பிடும் காவல், கொற்றம், நீர்ப்போர், செல்வம், ஊர்ச்செரு ஆகியன புறப்பொருள்வெண்பாமாலையில் இல்லாத துறைகளாகும்.

இலக்கணவிளக்கம், புறப்பொருள்வெண்பாமாலையினை அடிவொற்றியே இத்திணைக்கான துறைகளையும் விளக்கியுள்ளது. இது புறப்பொருள்வெண்பாமாலையை விட எண்ணிக்கையில் கூடுதலாக நான்கு துறைகளைக் குறித்த போதிலும், அவையும் புறப்பொருள்வெண்பாமாலையில் இடம் பெற்றவைகளேயாகும். முன்பு குறித்தது போன்று புறப்பொருள்வெண்பாமாலை ஒரு துறைக்கு இரண்டு பொருள்களைக் கூறி எண்ணிக்கையில் ஒரே துறையாக எண்ண, இலக்கணவிளக்கம் இரண்டு துறைகளாக எண்ணுகிறது. எனவே, இந்த எண்ணிக்கை மாறுபாடு ஏற்படுகிறது. இலக்கணவிளக்கம் குறிக்கும்,

1) உழிஞை

2) மிளைபிறக் கொழிய விரைந்த பக்கம் (குற்றுழிஞை)

3) ஆடலோடடைந்த பக்கம் (குற்றுழிஞை)

4) செருமதிலோர் சிறப்புரைத்த பக்கம் (முதுஉழிஞை)

என்ற நான்கினுள், முதலாவதான 'உழிஞை' என்பது புறப்பொருள்வெண்பாமாலையில் இத்திணைக்குக் கூறப்பட்ட உரிப்பொருளாகும். ஏனையவை புறப்பொருள்வெண்பாமாலையின் 'குற்றுழிஞை', 'முதுஉழிஞை" ஆகியவற்றுக்குள் அடங்கியனவாகும். இது அடைப்புக்குறிக்குள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுவாமிநாதத்தைப் பொருத்த அளவில் இலக்கணவிளக்கத்தை அப்படியே பின்பற்றி துறைகளைக் கூறியுள்ளது. இவ்விரண்டு நூல்களுக்குமிடையே துறைப்பெயர்களில் மட்டும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

2.7 நொச்சித் துறைகள்

தொல்காப்பியம் தனித்திணையாகச் சுட்டாத இத்திணையின் கீழ் புறப்பொருள்வெண்பாமாலை எட்டுத் துறைகளைக் கூறுகிறது. தொல்காப்பியத்தில் 'நீரைமீட்டலுக்குரியனவாக' மூன்று துறைகளை மட்டுமே காணமுடிகிறது. வீரசோழியத்தின் இரண்டு துறைகளை இத்திணைக்குரியனவாகக் கொள்ளலாம். இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் முறையே ஒன்பது துறைகளை இத்திணைக்குக் கூறியுள்ளன. புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் நொச்சித் துறைகளின் நிகழ்ச்சிகளாவன,

1) நொச்சிமறவர் மதில் முற்றிய உழிஞை மறவரோடு பொருது புறங்கொடாது படுதல். 2) உழிஞையாரால் தம்மரண்கள் சிதைவுறாதபடி நொச்சியார் போர் செய்து காத்தலைப் பாராட்டுதல். 3) தமது அரண் காத்தற் பொருட்டுப் போரிலே பட்ட நொச்சி மறவருடைய வெற்றியைச் சொல்லுதல். 4) நொச்சியாரது குதிரையின் மறப்பண்பைப் பாராட்டுதல். 5) மதிலினைக் காவல் செய்யும் நொச்சி மறவரின் போர்த்திறத்தைப் புகழ்தல். 6) மதிலினைக் காவல் செய்த நொச்சி மறவனது அழிவைக் கூறுதல். 7) உழிஞையாரால் தமது படை அழிந்தமை பொறாது நொச்சி மறவர் சினந்து தமது மதில் காத்தலின்கண் உறுதி கொள்ளுதல். 8) உழிஞையரசன் நொச்சியரசனது மகளைத் தனக்குத் தரும்படி வேண்ட அதனை அந்நொச்சியரசன் மறுத்துக் கூறல்.

2.7.1 நொச்சித் துறைகள் - ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	மறனுடைப்பாசி	ஊர்ச்செரு வீழ்ந்த அதன் மறன்	-	மறப்பாசி	மறப்பாசி
2.	ஊர்ச்செரு	(ஊர்ச்செரு வீழ்ந்த அதன் மறன்)	ஊர்ச்செரு	ஊர்ச்செரு	ஊர்ச்செரு
3.	செருவிடை வீழ்தல்	(ஊர்ச்செரு வீழ்ந்த அதன் மறன்)	-	வீழ்ந்தவேலோர் விறன்மேம்படல்	விறன்மேம்படல்
4.	குதிரைமறம்	-	-	இவுளிமறம்	குதிரைமறம்
5.	எயிற்போர்	-	-	எயிற்போர்	எயிற்போர்
6.	எயில்தனை-யழித்தல்	முதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கம்	-	எயின்மிசை அழிந்த நொச்சி	எயிலின்மிசை அழிதல்
7.	அழிபடைதாங்கல்	-	-	அழிபடை தாங்கல்	அழிபடை தாங்குதல்
8.	மகள்மறுத்து மொழிதல்	-	-	மதிலோர் மறுத்து உரைத்த பக்கம்	மகட்கோண் மறுத்தல்

தொல்காப்பியம் சுட்டி புறப்பொருள்வெண்பாமாலை சுட்டாத ஒரு துறை 'அகத்தோன் செல்வம்' ஆகும். 'ஊர்ச்செரு வீழ்ந்த அதன் மறன்' எனும் தொல்காப்பியத்துறை, புறப்பொருள்வெண்பாமாலையின் 'மறனுடைப்பாசி', 'ஊர்ச்செரு', 'செருவிடை வீழ்தல்' ஆகிய மூன்று துறைப்பொருள்களையும் கொண்டு அமைகின்றது.

தொல்காப்பியத்தை முற்றிலும் பின்பற்றிக் கூறும் வீரசோழியத்தில் நொச்சித் துறைகள் குறித்த தனி நூற்பா ஏதும் இல்லை. இந்நூல் உழிஞைத் திணைக்கண் கூறிய 'ஊர்ச்செரு', 'செல்வம்' ஆகிய துறைகளை நொச்சித்திணைக்குரியனவாகக் கொள்ளலாம். வீரசோழியம் தொல்காப்பியத்தைப் பெரிதும் பின்பற்றுவதால் இங்கு குறிக்கப்படும் 'செல்வம்' என்பது தொல்காப்பியம் சுட்டிய அகத்தோன் செல்வத்தையே எனத் தெளியலாம்.

இலக்கண விளக்கமும், சுவாமிநாதமும் புறப்பொருள் வெண்பாமாலையை அப்படியே பின்பற்றி எட்டுத் துறைகளை இத்திணைக்குக் கூறுகின்றன. மேலும் இலக்கணவிளக்கம் குறிப்பிடும் ஒரு துறை 'பூப்புனைபுகழ்ச்சி' ஆகும். நொச்சி வீரர் மதிலைக் காக்கும் பொருட்டு நொச்சிப் பூவினைச் சூடுதல் இத்துறையின் பொருளாகும். இதனைச் சுவாமிநாதம் 'நொச்சி சூடல்' என்று சுட்டுகிறது. இத்துறை புறப்பொருள்வெண்பாமாலை நொச்சித் திணைக்குக் கூறும் உரிப்பொருளேயாகும்.

2.8 தும்பைத்துறைகள்

புறத்தில் கடுமையான போர்த்திணையாகக் கருதப்படும் தும்பைத் திணைக்குப் புறப்பொருள்வெண்பாமாலை 23 துறைகளைக் கூறுகிறது. தொல்காப்பியம் 12 துறைகளைச் சுட்டுகிறது. வீரசோழியம் இத்திணைக்கு ஐந்து துறைகள் மட்டுமே கூறியுள்ளது. இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் முறையே 28 துறைகளைக் கொண்டுள்ளன. புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் தும்பைத் துறைகளின் நிகழ்ச்சிகள் வருமாறு

1) தும்பை சூடிய அரசன் தனது படையைத் தலையளி செய்தல், 2) பொருதற் கெதிர்ந்த படைகள் தம்முள் ஒத்த ஆற்றலுடைமை காரணமாகப் போர் செய்து மடியாமல் விலக்குதல், அரசனுக்கு உறுதி கூறிப் போர் செய்வித்தல், தும்பை மன்னனின் படை மேம்பாட்டைக் கூறிப்பகைவரது கேட்டிற்கு இரங்குதல், 3) தும்பையானுடைய இளங்களிற்றினது தறுகண்மையைச் சொல்லுதல், 4) அவனது குதிரையின் திறஞ்சொல்லுதல், 5) ஒரு மறவன் மன்னனுக்குத் தான் தூசிப்படையைத் தடுப்பேன் என்று கூறல், தன் மன்னனைப் பகைமன்னர் பலர் வளைந்துழி ஒரு மறவன் தனியே நின்று அவரனைவரையும் தடுத்தல், 6) தும்பை மன்னனுடைய தேரினது நன்மையைச் சொல்லுதல், 7) போர்க்களத்தில் பட்ட மறவர்க்குப் பாணர் உரிமை செய்தல், 8) இருவர் படையும் பொருது மடிந்தமையால் இரண்டு மன்னரும் தம்முட் பொருது படுதல், 9) ஒரு மறவன் புறமுதுகிட்டு ஓடும் தன் படைக்குப் பின்னே நின்று சினந்து பகைவரைத் தடுத்தல், 10) ஒரு மறவன் பகைவர் களிற்றின் மேல் தன் வேலை எறிந்து மெய்வலியானே போர் செய்து வெல்லுதல், 11) ஒரு மறவன் பகைப்படையைக் கொன்று வேலைத் திரித்து ஆடுதல், 12) மறவன் ஒருவன் தனது மார்பைப் பிளந்த பகைவர் வேலினைப் பறித்து அப்பகைவர் அஞ்சியோட எறிதல், 13) தும்பை மறவர்கள் தம் மன்னன் தேர் முன்னர் ஆடுதல், 14) அவனது தேரின் பின்னே மறவர்களுடன் சேர்ந்து விறலியரும் ஆடுதல், 15) பேய்கள் தும்பை மன்னனது தேரின் முன்னும் பின்னும் ஆடுதல், 16) ஒரு மறவன் யானையின் மேல் வேலெறிந்து வீழ்த்தி அவ்யானையின் கீழ் படுதல், 17) வாளேந்திய தும்பை மறவர்கள் போரிற்பட்ட பகையரசனைச் சூழ்ந்து ஆடுதல், 18) இரண்டு மன்னர் படைகளும் களத்திலே தன்னை வாழ்த்தும்படி ஒரு மறவன் சிறப்பெய்துதல், 19) ஒரு மறவனின் உடல் பகைவரின் அம்புகள் தைத்து நிலத்தைத் தீண்டாதபடி தாங்குதலானே நிற்கின்ற நிலைமையைக் கூறுதல், 20) போர்க்களத்தில் பட்டுக் கிடந்த மறவன் உடலை மகளிர் தழுவுதல், 21) போர்க்களத்தில் விழுப்புண்பட்டு வீழ்ந்தவனின் உடலைக் கண்ட அவனது மனைவி கண்ணீர் உகுத்தல், 22) தன் மன்னன் போரின்கண் இறந்தமை பொறாத ஒரு மறவன் அக்களத்திலேயே தனது உயிரைப் போக்குதல், களத்தில் பட்ட கணவனைக் காண மனைவி அக்களத்திற்குச்

செல்லுதல். 23) போரிட்ட இருபெரு வேந்தரும் படைஞரும் ஒருவரொழியாமல் அனைவரும் களத்தில் படுதல் என்பனவாகும்.

2.8.1 தும்பைத்துறைகள் ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	தும்பையரவம்	-	-	பீடுபெறும்அரவம்	ஒலிபடை
2.	தானைமறம்(3*)	-	-	தானைமறம்	தானைமறம்
3.	யானைமறம்	யானைமறம்	நிலை	யானைமறம்	யானைமறம்
4.	குதிரைமறம்	குதிரைமறம்	(நிலை)	குதிரைமறம்	குதிரைமறம்
5.	தார்நிலை	தார்நிலை	-	தூசிநிலை	தூசிநிலை
6.	தேர்மறம்	-	(நிலை)	தேர்மறம்	தேர்மறம்
7.	பாண்பாட்டு	-	-	பாணர்கடன் முறை கழித்தல்	பாணர்கடன் கழித்தல்
8.	இருவரும்தபுநிலை	இருவர்தலைவர் தபுதிப் பக்கம்	-	போர்புரிநிலை	போர்நிலை
9.	எருமைமறம்	கூழைதாங்கிய எருமை	-	எருமைமறம்	எருமைமறம்
10.	ஏம எருமை	ஏமம்	பாழிகோள்	ஏம எருமை	ஏம எருமை
11	நூழில்	நூழில்	உடைபடை	நூழில்	நூழில்
12.	நூழில்ஆட்டு	-	-	நூழில்ஆட்டு	நூழில்ஆட்டு
13.	முன்தேர்க்குரவை	-	-	முன்தேர்க்குரவை	முன்தேர்க்குரவை
14.	பின்தேர்க்குரவை	-	-	பின்தேர்க்குரவை	பின்தேர்க்குரவை
15.	பேய்க்குரவை	-	-	பேயாடுகுரவை	பேயாட்டு
16.	களிற்றுடனிலை	களிறுஎறிந்தோர் பாடு	களிற்றின் தொலையார் மலைவு	களிற்றுடனிலை	களிற்றொடு படுதல்
17.	ஒள்வாள் அமலை	வாளோர் ஆடும் அமலை	வாளாட்டம்	ஒள்வாள்அமலை	வாளமலை
18.	தானைநிலை	தானைநிலை	(நிலை)	தானைநிலை	தானைநிலை
19.	வெருவருநிலை	-	-	வெருவருநிலை	உடல்தீண்டா அச்சம்

20.	சிருங்காரநிலை	-	-	சிருங்காரநிலை	சிங்காரவாழ்வு
21.	உவகைக்கலுழ்ச்சி	-	-	உவகைக் கலுழ்ச்சி	உவகைக் கலுழ்ச்சி
22.	தன்னைவேட்டல்(2*)	நல்லிசைநிலை	-	வேள்விவேட்டல்	முரணின் இறந்திடல்
23.	தொகைநிலை	தொகைநிலை	-	தொகைநிலை	முற்றும் இறந்திடல்

(3*) மூன்று பொருள்களைக் கொண்ட துறை

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

தும்பைத்திணைக்கண் தொல்காப்பியம் கூறிய 12 துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலைக்குள் அடங்குகின்றன. தானைநிலைத் துறையின் பொருளில் இவ்விரண்டு நூல்களுக்குமிடையே வேறுபாடு காணப்படுகிறது. 'பகைவர் பொறுத்தலாற்றாது உளம் நடுங்குதற்கேதுவாகிய தானைநிலை' எனத் தொல்காப்பியம் கூற, 'இரண்டு மன்னர் படைகளும் களத்திலே தன்னை வாழ்த்தும்படி ஒரு மறவன் சிறப்பெய்தும் தானைநிலை' எனக் கூறி புறப்பொருள்வெண்பாமாலை பொருளளவில் வேறுபட்டு நிற்கிறது. ஆயின் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் 'தானைமறம்' (தும்பை மன்னனின் படைமேம்பாட்டைக்கூறல்) எனும் துறையோடு தொல்காப்பியத்தில் 'தானைநிலை' ஒத்துவருகிறது. தொல்காப்பிய 'நூழில் துறை' புறப்பொருள்வெண்பாமாலையில் 'நூழில்' எனவும் 'நூழில்ஆட்டு' எனவும் விரித்துக் கூறப்பட்டுள்ளது.

"வீரசோழியத்தில் குறிக்கப்படும் 'நிலை' எனும் துறை தானை, யானை, குதிரை, தேர் இவற்றின் நிலையைக் குறிப்பதாகும் என்கிறார் இதன் உரையாசிரியர் பெருந்தேவனார்"[(4)]. இதன்படி புறப்பொருள்வெண்பாமாலையின் 'யானைமறம்', 'குதிரைமறம்', 'தேர்மறம்', 'தானைநிலை', ஆகியன வீரசோழியத்தின் 'நிலை' எனும் துறைக்குள் அடங்குகின்றன.

புறப்பொருள்வெண்பாமாலை தும்பையின் உரிப்பொருளாகக் கூறியதனை இலக்கணவிளக்கம் தனித்துறையாக எண்ணுகிறது. புறப்பொருள்வெண்பாமாலை 'தானைமறம்' எனும் துறையின் கீழ் மூன்று

பொருள்களையும், 'தார்நிலை', 'தன்னை வேட்டல்" ஆகிய இரண்டு துறைகளின் கீழ் முறையே இரண்டு பொருள்களையும் கூறியுள்ளது. ஆயின் இலக்கணவிளக்கம் இவ்வெல்லாப் பொருள்களையும் தனித்தனித் துறைகளாக எண்ணி எண்ணிக்கையளவில் ஐந்து துறைகளை அதிகமாகக் கூறுகிறது. இது முன்னைய திணைகளில் காணப்பட்ட வேறுபாடேயாகும். சுவாமிநாதம் இத்திணையின் துறைகளை விளக்குவதில் அப்படியே இலக்கணவிளக்கத்தைப் பின்பற்றுகிறது. துறைகளின் பெயர்க் குறியீட்டில் மட்டும் இந்நூல் சிறிது வேறுபடுகிறது.

2.9 வாகைத்துறைகள்

தொல்காப்பியம் இத்திணையின் துறைகளாகப் பதினெட்டினைக் கூறுவதோடு இதன் வகைகளாக ஏழினைச் சுட்டுகிறது. புறப்பொருள்வெண்பாமாலையோ வாகையின் வகைகள் 33 எனக்கூறுகின்றது. இதில் தொல்காப்பியம் இத்திணைக்குச் சுட்டிய எழு வகைகளும் அடங்குகின்றன. 'தொல்காப்பியம் வாகையின் வகைகள் இவை, துறைகள் இவை என்று பகுத்துக் கூறியதை விடுத்து எல்லாவற்றையும் "வாகைத்திணையது வகையே" என்ற வெண்பாமாலையின் குறியீடு பொருந்தாது'(5) என்பர் சுந்தரமகாலிங்கம். வீரசோழியம் இத்திணைக்கு 14 துறைகளையும், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகியன முறையே 32,31-துறைகளையும் கூறியுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலை சுட்டும் வாகைத் துறைகளின் நிகழ்ச்சிகள்.

1) போர்மறவர் பகைவரை வென்று வாகை சூடும்போது ஆரவாரம் எழுதல், 2) செங்கோன்மையுடைய அரசனது இயல்பினைக் கூறல், 3) அரசனது வெற்றி முரசின் தன்மையைக் கூறல், 4) செங்கோன் மன்னனை உழவனாக உருவகித்துப் பாராட்டல், 5) வாகை மன்னன் களவேள்வி செய்தல் 6) வாகை மன்னனின் தேர் முன்னர் பேய்கள் கூத்தாடுதல், 7) தேரின் பின் வீரரும் விறலியரும் கூத்தாடுதல், 8) பார்ப்பனனுடைய வெற்றியைக் கூறல், 9) வணிகனுடைய தொழிற்சிறப்பைக் கூறல், 10) வேளாளனின் சிறப்பைக்

கூறல், 11) தன்னோடு ஒப்புமை இல்லாத காரணத்தால் பிறரை இகழாதே எனக்கூறல், 12) மூன்றுகால நிகழ்ச்சிகளையும் உணர்ந்து கூறும் அறிவனுடைய தன்மையைக் கூறல், 13) தாபதர் தம் தவவொழுக்கத்தில் பிறழாது மேம்பட்டமை கூறல், 14) கூதிர்காலத்தும் மறமே நினைத்து மன்னன் பாசறையிடத்தே தங்குதல், 15) வாடைக்காற்று மிகுதியாகத் துன்பம் செய்யவும் மன்னன் பாசறையிலேயே இருத்தல், 16) அரசனது இயல்பு மிகுதியைக் கூறல், 17) அந்தணனது செப்புத் தன்மையைச் சொல்லுதல், 18) சான்றோரது இயல்பினைச் சொல்லுதல், 19) காலக் கணிதனுடைய திறத்தைப் புகழ்தல், 20) மறக்குடி மகளிரின் மறப்பண்பினைக் கூறல், 21) மறக்குடியின் ஒழுக்கத்தைக் கூறல், 22) ஒரு மறவனுடைய குடி, ஊர், பண்பு முதலியவற்றைப் பாராட்டி அவனது ஆண்மையை விதந்து கூறல், 23) வேந்தனது உலகம் காக்கும் தொழிலைச் சிறப்பித்தல், காவலியல்பினைப் பிறர் பொருந்த எடுத்துக்கூறல், 24) மன்னன் போர்க்களத்தை வென்று கைப்பற்றிய சிறப்பைக் கூறல், 25) பகை வெல்லலே குறிக்கோளாகக் கொண்டு சினக்கும் மறவன் தன்மையைச் சொல்லுதல், 26) மன்னனது குடையைப் புகழ்தல், 27) வாகை கொண்ட மன்னனின் துயிலைப் பாராட்டுதல், 28) தம் அரசனுக்கு உற்றுழிப் போர்க்களத்தின் கண் செஞ்சோற்றுக் கடனினை நினைந்து மறவர் தம் உயிரை வழங்குதல், 29) சான்றோரின் இயல்பு மிகுதியைச் சொல்லுதல், 30) வேளாளனைக் கிணைவன் புகழ்தல், 31) பொய்ப்பொருளின் கண் பற்றகற்றி மெய்ப்பொருளை விரும்புதல், 32) உலகத்தின்கண் நிகழும் துன்பத்தை உணர்ந்து அதன் மேல் பற்று நீக்குதல் எனபனவாகும்.

2.9.1 வாகைத்துறைகள் ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	வாகை அரவம்	-	-	அரவம்	-
2.	அரசவாகை	அரசர்பக்கம்	நாற்குலப் பக்கம்	அரசவாகை	அரசவாகை
3.	முரசவாகை	-	-	முரசுநிலை யுரைத்தல்	முரசுநிலை
4.	மறக்களவழி	ஏரோர்களவழி தேரோர் வென்றி	களவழி	மறக்களவழி	மறக்களவழி
5.	களவேள்வி	(ஏரோர்களவழி தேரோர் வென்றி)	-	அடுகளம் வேட்டல்	-
6.	முன்தேர்க்குரவை	முன்தேர்க்குரவை	குரவை	தேர்முன்குரவை	-
7.	பின்தேர்க்குரவை	பின்தேர்க்குரவை	(குரவை)	தேர்பின் ஆடல்	-
8.	பார்ப்பனவாகை	பார்ப்பனப்பக்கம்	(நாற்குலப் பக்கம்)	பார்ப்பனவாகை	பார்ப்பனவாகை
9.	வாணிகவாகை	ஏனோர்பக்கம்	(நாற்குலப் பக்கம்)	வாணிகவாகை	வாணிகர் வாகை
10.	வேளாண்வாகை	(ஏனோர்பக்கம்)	(நாற்குலப் பக்கம்)	வேளாண்வாகை	வேளாண்வாகை
11.	பொருநவாகை	பொருநர்வாகை	படையாளர் பக்கம்	பொருநவாகை	பொருநவாகை
12.	அறிவன்வாகை	அறிவன்தேயம்	முக்காலம்	அறிவன்வாகை	அறிஞர்வாகை
13.	தாபதவாகை	தாபதப்பக்கம்	-	தாபதவாகை	தாபதவாகை
14.	கூதிர்ப்பாசறை	இருவகைப்பாசறை	-	கூதிர்ப்பாசறை	கூதிர்தனித்த பாசறை
15.	வாடைப்பாசறை	-	-	வாடைப்பாசறை	வாடைப்பாசறை
16.	அரசமுல்லை	அனைநிலைவகை	-	அரசமுல்லை	அரசமுல்லை
17.	பார்ப்பனமுல்லை	(அனைநிலை வகை)	-	பார்ப்பனமுல்லை	பார்ப்பான் முல்லை
18.	அவையமுல்லை	அவையகம்	-	அவையமுல்லை	அவையமுல்லை

19.	கணிவன்முல்லை	(அனைநிலை வகை)	-	கணிவன்முல்லை	கணிவன்முல்லை
20.	மூதில்முல்லை	-	-	மூதில்முல்லை	மூதில்முல்லை
21.	ஏறான்முல்லை	-	-	ஏறான்முல்லை	-
22.	வல்லாண்முல்லை	வல்லாண் பக்கம்	வல்லாண் பக்கம்	வல்லாண்முல்லை	வல்லாண் முல்லை
23.	காவல் முல்லை (2*)	பிழைத்தோர் தாங்கும் காவல்	காவல்	காவல் முல்லை	காவல் முல்லை
24.	பேராண் முல்லை	-	-	பேராண் முல்லை	பேராண் முல்லை
25.	மறமுல்லை	-	-	மறமுல்லை	மறமுல்லை
26.	குடைமுல்லை	-	-	குடைப்புகழ் முல்லை	குடைப்புகழ் முல்லை
27.	கண்படைநிலை	-	-	கண்படைநிலை	துயில்நிலை
28.	அவிப்பலி	அவிப்பலி	-	அவிப்பலி	அவி கொடுத்தல்
29.	சால்புமுல்லை	சான்றோர் பக்கம்	-	சால்புமுல்லை	சால்புமுல்லை
30.	கிணைநிலை	-	-	கிணை புகழ்ந்த களவழி	கிணைவன் நிலை
31.	பொருளொடு புகறல்	பொருளோடு புணர்ந்த பக்கம்	அரும்பொருள்	பொருளொடு புகறல்	தத்துவத்தின் பயனுணர்தல்
32.	அருளோடுநீங்கல்	அருளோடு புணர்ந்த அகற்சி	துறவு	அருளோடு நீங்கல்	அருளால் நீங்கல்

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

தொல்காப்பியம் கூதிர், வேனில் என்றிரு பாசறைகளைக் கூறியிருக்க புறப்பொருள்வெண்பாமாலை கூதிர்ப்பாசறையை மட்டும் கூறியுள்ளது. தொல்காப்பியத்தில் சுட்டப்பட்ட புறப்பொருள்வெண்பாமாலையில் சுட்டப்படாத பிற துறைகள்.

1) பெரும்பகை தாங்கும் வேல்

2) அரும்பகை தாங்கும் ஆற்றல்

3) ஒல்லார் இடவயிற் புல்லியபாங்கு

4) கடிமனை நீத்த பால்

5) கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை

6) வண்புகழ் கொடை

7) காமம் நீத்தபால் எனபனவாகும்.

புறப்பொருள்வெண்பாமாலையின் 'மறக்களவழி', 'களவேள்வி' ஆகிய துறைகள் தொல்காப்பியத்தின் 'ஏரோர்களவழி.......தேரோர்வென்றி' எனும் துறைப்பொருளுடன் ஒத்து வருகின்றன. 'வாணிகவாகை', 'வேளாண்வாகை' எனும் புறப்பொருள்வெண்பாமாலையின் துறைகள் தொல்காப்பியம் சுட்டும் ஏனோர் பக்கத்திற்குள் அடங்குகின்றன.

தொல்காப்பியம் 'அனைநிலை வகை' என்று குறித்ததற்கு 'வாளானும் தோளானும் பொருதுவேலன்றி அத்தன்மைத்தாகிய நிலவகையான் வேறலொடு அஃதாவது, சொல்லான் வேறலும் பாட்டான் வேறலும், கூத்தான் வேறலும், சூதான் வேறலும் தகர்ப்போர் பூழ்ப்போர் என்பவற்றான் வேறலும் - பிறவும் அன்ன"[(6)] என விளக்கம் தருகிறார் இளம்பூரணர். எனவே இந்த வகைக்குள் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டிய 'அரசமுல்லை', 'பார்ப்பனமுல்லை', 'கணிவன்முல்லை' ஆகிய துறைகளை அடக்கலாம். தொல்காப்பியத்தில் இல்லாத புறப்பொருள்வெண்பாமாலையில் மட்டும் காணப்படும் புதிய துறைகள் பத்தாகும். இவை அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளன.

வீரசோழியம் இத்திணைக்குக் கூறிய 'நாற்குலபக்கம்' எனும் துறைக்கு உரை எழுதிய பெருந்தேவனார் 'பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வருக்கும் உரித்து'[(7)] என்கிறார். இதன்மூலம் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் 'பார்ப்பனவாகை', 'அரசவாகை', 'வாணிகவாகை', 'வேளாண்வாகை' ஆகிய நான்கு துறைகளும் வீரசோழியத்தின்

நாற்குலபக்கத்திற்குள் அடங்கும் எனலாம். மேலும் இந்நூலில் புறப்பொருள்வெண்பாமாலையில் இல்லாத ஐந்து புதிய துறைகள் காணப்படுகின்றன. அவை,

1. ஆற்றல்
2. கொடை
3. வேட்கையார் பக்கம்
4. மேன்மை
5. ஒற்றுமை என்பனவாகும்

இவற்றில் பின்னைய மூன்று துறைகள் தொல்காப்பியத்திலும் இடம்பெறாதவையாகும். 'விருந்தோம்பலும் அழலோம்பலும் உட்பட எண்வகைத்தாம் பக்கமும், பெரும்பகை தாங்கும் மேன்மையும், சிறியோர் நாணப் பெரியோர் கூறிய கூறுபாட்டிற் கழிமனத்தை ஒற்றுமை கொள்ளலும் ஆகிய இம்மூன்றும் முறையே வேட்கையார் பக்கம், மேன்மை, ஒற்றுமை ஆகிய வீரசோழியத்தின் துறைகளுக்குப் பெருந்தேவனார் தரும் விளக்கங்களாகும்'.[8]

இலக்கணவிளக்கம், புறப்பொருள்வெண்பாமாலையைப் பின்பற்றியே வாகைத்துறைகளை விளக்கியுள்ளது. முன்னைய திணைகளில் கண்டது போலவே 'பகைவனை வென்று வாகைமாலை சூடுதல்' புறப்பொருள்வெண்பாமாலையில் திணைப் பொருளாகக் கூறப்பட; இலக்கணவிளக்கம் தனித்துறையாகக் கொள்கிறது. சுவாமிநாதம் இலக்கணவிளக்கத்தை ஒட்டியே வாகைத்துறைகளை விளக்கியுள்ளது.

1) 'மாலையினையும் கச்சினையும் கழலினையும் இனி அணிந்து கொள்வோம்' என்று கூறல்
2) போர்க்களத்தில் பேய்கள் கூடுதல்.

ஆகிய இரண்டு துறைகள் சுவாமிநாதத்தில் புதியனவாக இடம்பெறுகின்றன.

2.10 பாடாண் துறைகள்

பாடாண் திணையின் கீழ் புறப்பொருள்வெண்பாமாலை 47 துறைகளைக் கூறுகிறது. தொல்காப்பியம் பாடாண் வகைகளாக எட்டினைக் கூறுகிறது. அவை,

1. அமரர்கண் முடியும் அறுவகை

2. புரைதீர் காமம் புல்லியவகை

3. செந்துறை வண்ணப்பகுதி

என்பனவாகும். இவை புறப்பொருள்வெண்பாமாலையில் குறிக்கப்படாதவையாகும். மேலும் தொல்காப்பிய புறத்திணையியலின் 29, 30 ஆகிய இரண்டு நூற்பாக்களும் 21 பாடாண் துறைகளைக் கூறுகின்றன. பாடாண் மரபு குறித்தும் இரண்டு நூற்பாக்கள் இதில் இடம்பெறுகின்றன. இவை புறப்பொருள்வெண்பாமாலையில் துறைகளாக இடம்பெறுகின்றன.

வீரசோழியம் இத்திணையின் கீழ் ஆறு துறைகளை மட்டுமே மிகச் சுருக்கமாக இயம்புகிறது. இலக்கணவிளக்கமும் சுவாமிநாதமும் இத்திணையின் கீழ் முறையே 49, 48 துறைகளைக் கூறியுள்ளன.

புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் பாடாண்திணை நிகழ்ச்சிகளாவன,

1) அரண்மனை வாயிலை அடைந்த புலவன் ஒருவன் தனது வருகையினை மன்னனுக்குச் சொல்லுக என்று வாயில் காவலனுக்குக் கூறுதல், 2) அரசனால் தொழப்படும் கடவுளை உயர்த்திக் கூறல், 3) காயாம்பூவினை மாயவன் திருமேனியோடு உவமித்துப் புகழ்தல், 4) இரவலன் வேந்தன் முன்னே சென்று தான் பெறக்கருதிய பரிசில் இஃதெனக் கூறுதல், 5) இன்ன வள்ளல் இத்தகைய பொருளை வழங்கினர் நீயும் அவர் போன்று எமக்கு வழங்குவாயாக என இரவலன் புரவலனுக்குக் கூறுதல், ஒரு வேந்தனது தன்மையைக் கூறி புகழ்தல், 6) வெற்றி மன்னனுடைய உறக்கத்தைப் பாராட்டுதல், 7) ஒரு மன்னனை நின் பகைவர்க்கு அருள எழுக என்று துயில் எழுப்புதல், 8) துயினீத்தெழும் மன்னன் முன் மங்கலம் கூறிய பகுதியைச் சொல்லுதல், ஒரு மன்னன் சிறப்புடைய மங்கலத்தை உடையவன் ஆயினன் என்று கூறுதல், 9) அரசனுடைய திருவிளக்கின் நிலையினைச் சொல்லுதல், அரசனைக் கதிரவனோடு உவமித்துக் கூறல், 10) அரசன் அந்தணர்க்கு வழங்கக் கருதிய ஆவினது சிறப்பைக் கூறுதல், 11) அரசன் அறக்கள வேள்வி செய்த சிறப்பினைச் சொல்லுதல், 12) நினது செங்கோன்மை காரணமாக மழை பொழியும் என்று கூறுதல், 13) ஒரு மன்னனது நாட்டினைப் புகழ்தல்,

14) அரண்மனையிடத்துக் கிணைவன் தான் பெற்ற வளங்கூறுதல், 15) ஒரு மன்னன் போர்க்களத்தே கொண்ட செல்வத்தினைப் பாணர் கூறல், 16) அரசன் தனது அரியணை மீது செம்மாந்திருந்த வெற்றியைப் பாராட்டுதல், 17) ஒரு மன்னன் தன்னுடைய பகைவர் அரணை எறிந்து அவர்தம் முடியினைக் களைந்தமையைப் புகழ்தல், 18) மன்னன் மகளிரைப் புணர்ந்த நன்மையைச் சொல்லுதல், 19) மன்னனின் மகப்பேற்றினைப் பலரும் கொண்டாடுதல், 20) அரசன் பிறந்த நாளைப் பாராட்டுதல், 21) வள்ளல் மகிழ்ந்துறையும் காலத்தே இரப்பாளன் தன்னூர்க்குப் போகத் துணிதல், 22) அரசன் பரிசிலர்க்குப் பொருள் வழங்கி விடை கொடுத்தல், 23) மன்னனுடைய இல்லறச் சிறப்பைக் கூறல், 24) பாணன் ஒருவன் எதிர்வரும் பாணனைப் பரிசில் பெறும் வழியிலே செலுத்துதல், 25) ஒரு வள்ளலிடம் பரிசில் பெற்று வரும் கூத்தன் ஒருவன் எதிர்வரும் கூத்தனை அவ்வள்ளல்பால் செல்லும்படி வழிப்படுத்துதல், ஒரு பொருநன் மற்றொரு பொருநனை இன்ன வள்ளல்பால் செல்க என ஆற்றுப்படுத்துதல், 27) வள்ளலிடத்தே விறலியை ஆற்றுப்படுத்துதல், 28) அறிஞர் தம் மொழியியல்பு கூறல், 29) மன்னனுக்கு நிலை பெற்ற கருத்தினைச் சான்றோர் கூறுதல், 30) மன்னனது குடையைப் புகழ்தல், 31) மன்னனுடைய வாளைப் புகழ்தல், 32) மன்னன் மங்கல நீராடலின் மிகுதியைக் கூறுதல், 33) அறிவன் மன்னனுக்கு முன்னின்று இன்னது செய்தல் நினக்குத் தகுதியாகும் என்று கூறுதல், 34) நீ வழிபடுதெய்வம் நின்னைப் புரப்பதாக என வாழ்த்துதல், 35) மன்னன் கொடியை முதற்கடவுளர் மூவர் கொடியுள் ஒன்றனோடு உவமித்துப் புகழ்தல், 36) மாயோன் வீரசோவினை அழித்த வெற்றியைப் புகழ்தல், 37) மகளிர் முருகனுக்கு வெறிக்கூத்தாடல், 38) இறையருள் பெற்ற புலவன் ஒருவன் அது பெறத்தகுதியடைய மற்றொரு புலவனை இறைவன்பால் செல்ல வழிப்படுத்துதல், 39) இன்னதொரு பேற்றைப் பெறுவோமாக என்று சொல்லி தெய்வத்தின் திருவடியைத் தொழுதல், 40) இவ்வுலக இன்பங்களைப் பெறக்கருதி இறைவனை வாழ்த்துதல், 41) அன்புடையாளொருத்தி ஒரு தலைவனது மாலையை விரும்புதல், 42) தன்னை விரும்பாத தலைவன் ஒருவனைத் தான் தழுவ விரும்பி இருளிலே அவனிருக்குமிடம் செல்லும் பெண் ஒருத்தியின் தன்மையைச் சொல்லுதல், 43) ஒருத்தி தலைவன் மார்பினை யாம் புல்லேம்

என ஊடிச் சொல்லுதல், 44) கடவுள் பெண்டிர் கடவுளரை விரும்புதல், 45) கடவுளை மானிட மகளிர் விரும்புதல், 46) குழவிப் பருவத்தையுடைய சிறாரிடத்து மங்கையர் காமுறுதலைச் சொல்லுதல், 47) காதல் மிக்க ஆடவரும் மகளிரும் அழகு பொருந்தக்கூடும் ஊரைச் சொல்லுதல் - ஆகியனவாகும்.

2.10.1 பாடாண்துறைகள் ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	வாயில்நிலை	கடைநிலை	-	கடைநிலை	கடைநிலை
2.	கடவுள்வாழ்த்து	கடவுள்வாழ்த்து	குறிப்பு	வாழ்த்து	கடவுள் வணக்கம்
3.	பூவைநிலை	-	-	பூவைநிலை	உருபகமாகச் சாற்றல்
4.	பரிசில்துறை	-	-	பரிசில்	பரிசில் இவை என்றல்
5.	இயல்மொழி வாழ்த்து (2*)	இயல்மொழி வாழ்த்து	-	இயல்மொழி வாழ்த்து	அவர்போல் ஈகென்றல்
6.	கண்படைநிலை	கண்படைநிலை	-	கண்படைநிலை	-
7.	துயிலெடைநிலை	துயிலெடைநிலை	-	துயிலெடை நிலை	துயில்எழுப்பல்
8.	மங்கலநிலை (2*)	-	-	மங்கலநிலை	மங்கலம் பாடுதல்
9.	விளக்குநிலை(2*)	விளக்குநிலை	-	விளக்குநிலை	விளக்குநிலை
10.	கபிலைகண்ணிய புண்ணியநிலை	கபிலைகண்ணிய வேள்விநிலை	-	கபிலைநிலை	கபிலைநிலை
11.	வேள்விநிலை	(கபிலைகண்ணிய வேள்விநிலை)	-	வேள்விநிலை	வேள்விநிலை
12.	வெள்ளிநிலை	-	-	வெள்ளிநிலை	வெள்ளிநிலை
13.	நாடுவாழ்த்து	-	-	நாடுவாழ்த்து	நாடுவளம்
14.	கிணைநிலை	-	-	கிணைநிலை	கிணைநிலை
15.	களவழிவாழ்த்து	-	-	களவழி	மறக்களவழி

16.	வீற்றினிதிருந்த பெருமங்கலம்	-	-	வீற்றினிதிருந்த பெருமங்கலம்	-
17.	குடுமிகளைந்த புகழ் சாற்றுநிலை	-	-	புகழ் சாற்றுநிலை	-
18.	மணமங்கலம்	-	-	மணமங்கலம்	மணச்சிறப்பு
19.	பொலிவுமங்கலம்	-	-	பொலிவு மங்கலம்	மகப்பயத்தல்
20.	நாள்மங்கலம்	பிறந்த நாள் பெருமங்கலம்	-	நாள்மங்கலம்	நாட்சிறப்பு
21.	பரிசில்நிலை	பரிசில்கடைஇய கடைக் கூட்டுநிலை	-	பரிசில்நிலை	-
22.	பரிசில்விடை	இருவகைவிடை	-	பரிசில்விடை	விடைச்செலவு
23.	ஆள்வினை வேள்வி	-	-	ஆள்வினை வேள்வி	-
24.	பாணாற்றுப்படை	பாணாற்றுப்படை	-	பாணாற்றுப்படை	பாணாற்றுப்படை
25.	கூத்தராற்றுப்படை	கூத்தராற்றுப்படை	-	கூத்தராற்றுப் படை	கூத்தராற்றுப்படை
26.	பொருநராற்றுப் படை	பொருநராற்றுப் படை	-	பொருநராற்றுப் படை	பொருநராற்றுப் படை
27.	விறலியாற்றுப் படை	விறலியாற்றுப் படை	-	விறலியாற்றுப் படை	விறலியாற்றுப் படை
28.	வாயுரைவாழ்த்து	வாயுரைவாழ்த்து	-	வாயுரை வாழ்த்து	வாயுரைவாழ்த்து
29.	செவியறிவுறூஉ	செவியறிவுறூஉ	-	செவியறிவுறூஉ	செவியறிவுறுத்தல்
30.	குடைமங்கலம்	குடைநிழல்மரபு	-	குடைமங்கலம்	ஆயுதமங்கலம்
31.	வாள்மங்கலம்	வாள்மங்கலம்	-	வாள்மங்கலம்	(ஆயுதமங்கலம்)
32.	மண்ணுமங்கலம்	மண்ணுமங்கலம்	-	மண்ணுமங்கலம்	-
33.	ஓம்படை	ஓம்படை	-	ஓம்படை நிலை	ஓம்படைநிலை
34.	புறநிலைவாழ்த்து	புறநிலைவாழ்த்து	-	புறநிலை வாழ்த்து	புறநிலைவாழ்த்து

35.	கொடிநிலை	கொடிநிலை	கொடிநிலை	கொடிநிலை	கொடிவளம்
36.	கந்தழி	கந்தழி	கந்தழி	கந்தழி	-
37.	வள்ளி	வள்ளி	வள்ளி	வள்ளி	ஆடும்வெறி
38.	புலவராற்றுப்படை	-	-	புலவராற்றுப் படை	புலவராற்றுப்படை
39.	புகழ்ந்தனர் பரவல்	-	-	புகழ்ந்தனர் பரவல்	-
40.	பழிச்சனர் பணிதல்	-	-	பழிச்சனர் பணிதல்	-
41.	கைக்கிளை	கைக்கிளை	-	கைக்கிளை	-
42	பெருந்திணை	-	-	பெருந்திணை	-
43.	புலவி பொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டு	-	-	புலவி	-
44.	கடவுள் மாட்டு கடவுள் பெண்டிர் நயந்த பக்கம்	(காமப்பகுதி...)	-	படிமிசையியங்கா மகளிர் கடவுளை நயந்த கடவுட் பக்கம்	-
45.	கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்	(காமப்பகுதி...)	-	பூதலத்தரிவையர் வானவரைக் காதலித்துரைத்த கடவுட்பக்கம்	கடவுள் மின்னார் விரும்பல்
46.	குழவிக்கண் தோன்றிய காமப்பகுதி	(குழவி...)	-	குழவிமருங்கிற் கூறியபகுதி	-
47.	ஊரின்கண் தோன்றிய காமப்பகுதி	(ஊரொடு...)	-	பதிநிலை உரைத்தல்	-

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

புறப்பொருள்வெண்பாமாலை கூறியுள்ள பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விரலியாற்றுப்படை ஆகிய நான்கு துறைகளையும் தொல்காப்பியம் ஒரே துறையாக எண்ணுகிறது. தொல்காப்பியத்தில், தனி நூற்பாவில் இடம்பெறும் செய்திகள் புறப்பொருள்வெண்பாமாலையில் துறைகளாக இடம்பெறுகின்றன.

"காமப்பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்"[9]

எனும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "அது கடவுண்மாட்டு கடவுட்பெண்டிர் நயப்பனவும், அவர் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவுங் கடவுண் மானிடப்பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம்"[10] என்கிறார். இதன் மூலம் புறப்பொருள்வெண்பாமாலையின்

1. கடவுள்மாட்டு கடவுட்பெண்டிர் நயந்த பக்கம்
2. கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கம்

ஆகிய துறைகள் மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவிற்குள் அடங்குகிறது. மேலும்,

"குழவி மருங்கினும் கிழவ தாகும்"[11]

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப"[12]

ஆகிய தொல்காப்பியநூற்பாக்கள் புறப்பொருள்வெண்பாமாலையில் முறையே,

1. குழவிக்கண் தோன்றிய காமப்பகுதி
2. ஊரின்கண் தோன்றிய காமப்பகுதி – என இடம் பெறுகின்றன.

தொல்காப்பியர் சுட்டிய,

"கொற்ற வள்ளை ஓரிடத்தான"[13]

என்பது புறப்பொருள்வெண்பாமாலையாரால் சுட்டப்படவில்லை. தொல்காப்பியர் கூறிய 'இருவகை விடை' என்பதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "இருவகையாவன, தலைவன் தானே விடுத்தலும் பரிசிலன் தானே போகல் வேண்டுமெனக் கூறி விடுத்தலுமாம்"[14] என்கிறார். இவற்றில் தலைவன் விடுத்தலாகிய 'பரிசில் விடை' மட்டுமே வெண்பாமாலையாரால் குறிக்கப்படுகிறது. மேலும் 'கொடுப்போர் ஏத்திக் கொடார் பழித்தல்', 'மன்எயில்

அழித்த மண்ணுமங்கலம்' ஆகிய தொல்காப்பியத்துறைகளும் புறப்பொருள் வெண்பாமாலையின் பாடாண்படலத்தில் இல்லை. ஆயின் 'கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல்' மட்டும் புறப்பொருள்வெண்பாமாலையின் ஒழிபுப் பகுதியில் உள்ளது. தொல்காப்பியத்தின் 'கபிலைக் கண்ணிய வேள்விநிலை' எனும் துறை புறப்பொருள்வெண்பாமாலையில்,

1. கபிலைக்கண்ணிய புண்ணிய நிலை
2. வேள்விநிலை

என இரண்டாயிற்று. புறப்பொருள்வெண்பாமாலை இத்திணையின்கண் சுட்டும் 'பூவைநிலை' எனும் துறை தொல்காப்பியத்தில் 'வெட்சித்திணைக்கான' நூற்பாவிற்குள் கூறப்பட்டுள்ளது.

வீரசோழியம் கூறும் 'குறிப்பு' என்ற துறைக்கு உரை எழுதிய பெருந்தேவனார். "குறிப்பாவது, நன்மை வேண்டின் தெய்வத்தை வழிபடும் என்பது"(15) என்கிறார். இது புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் கடவுள் வாழ்த்துடன் ஒன்றுபடுகிறது. 1. புகட்சி, 2. பரவல் என்ற இரண்டு துறைகளை வீரசோழியம் புதியனவாகக் கூறுகின்றது. ஆயின் 'புகட்சி' என்பது புகழைக் குறிப்பதாகையால் புறப்பொருள்வெண்பாமாலையில் புகழ்தல் அடிப்படையில் வரும் 'பூவைநிலை' 'இயன்மொழி வாழ்த்து' முதலான துறைகளின் அடிப்படையில் இது அமைந்தது எனலாம்.

இலக்கணவிளக்கம், புறப்பொருள்வெண்பாமாலையைப் பின்பற்றியே இத்திணைக்கான துறைகளையும் கூறியுள்ளது. புறப்பொருள்வெண்பாமாலை திணை விளக்கமாகக் கூறியதனை, ஏனைய திணைகளுக்குக் கூறியது போன்றே இந்நூல் தனித்துறையாகக் கூறுகிறது. புறப்பொருள்வெண்பாமாலை இயல்மொழி வாழ்த்து, மங்கலநிலை, விளக்குநிலை ஆகிய துறைகளுக்குக் கூடுதலாக முறையே ஒரு பொருளைக் கூறுகிறது. இலக்கணவிளக்கமும் இவற்றைக் குறிப்பதோடு, அவற்றைத் தனித்துறைகளாக எண்ணுகின்றது. புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் 'பூவை நிலை' என்ற துறையோடு 'பூவைநிலைப்பக்கம்' என்ற ஒன்றினைப் புதிதாக இலக்கணவிளக்கம் குறிக்கிறது. அரசன் ஒருவனைத் திருமாலுடன் அன்றிப் பிற தெய்வங்களுடனும் உவமித்துப்

போற்றுதல், இத்துறையின் பொருளாகக் கூறப்படுகிறது. மேலும் இந்நூல் தொல்காப்பியத்தைப் பின்பற்றி பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை ஆகியவற்றை 'ஆற்றுப்படை' என ஒரே துறையாக எண்ணுகிறது.

சுவாமிநாதம் கூறியுள்ள 48 பாடாண்துறைகளில் 31 துறைகளே புறப்பொருள்வெண்பாமாலையுடன் ஒத்து வருகின்றன. சுவாமிநாதத்தின் மூலம் அறியலாகும் புதியதுறை நிகழ்ச்சிகளாவன,

மடல் ஏறுதல், சபையில் மங்கலம் பாடுதல், ஞாயிற்றின் பண்போடு உவமித்துச் செல்லுதல், மழைக்குறி கூறுதல், இல்வாழ்க்கையின் சிறப்புக்கூறுதல், வேந்தன் அரசிருப்பு, நகரின் வளம் சொல்லுதல், மலையின் வளம் சொல்லுதல், ஆற்றின் வளம் சொல்லுதல், தாரின் சிறப்புச் சொல்லுதல், பாணர்க்குக் கொடுத்தல், கடவுளை வணங்கிப் பெறும் பயன் சொல்லுதல், அரசவையில் பரிசில் பெற்றும் விடைபெற்றுச் செல்லாது தங்கியிருத்தல் என்பனவாகும்.

இவற்றில் 'மடல் ஏறுதலை' புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் பெருந்திணைத் துறைக்குள்ளும், 'சபையில் மங்கலம் பாடுதல்', 'ஞாயிற்றின் பண்போடு உவமித்துச் சொல்லுதல்' ஆகியவற்றை முறையே 'மங்கலநிலை', 'விளக்குநிலை' ஆகிய துறைகளுக்குள்ளும் அடக்கலாம். இதே போன்று சுவாமிநாதம் குறிக்கும் 'பாணர்க்குக் கொடுத்தல்' எனும் துறைப் பொருள் பாணாற்றுப்படையுடன் தொடர்புடையதாகும்.

2.11 பொதுவியல் துறைகள்

புறப்பொருள்வெண்பாமாலை பொதுவியல் படலத்தை 1. பொதுவியற்பால, 2. சிறப்பிற் பொதுவியற்பால, 3. காஞ்சி பொதுவியற்பால, 4. முல்லை பொதுவியற்பால என நான்காகப் பகுத்துக் கூறி இவற்றின் கீழ் 37 துறைகளைக் கூறுகிறது.

	திணைப்பகுப்பு	துறைகளின் எண்ணிக்கை
1	பொதுவியற்பால	12
2	சிறப்பிற்பொதுவியற்பால	11
3	காஞ்சிபொதுவியற்பால	06
4	முல்லைபொதுவியற்பால	08
	மொத்தம்	37

தொல்காப்பியம் 'பொதுவியல்' எனத் தனியே திணை ஒன்றினைக் குறிக்கவில்லை எனினும் 'வெறியறிசிறப்பின்' எனத் தொடங்கும் வெட்சித்திணைக்கான நூற்பாவின் கீழ் கூறியுள்ள துறைகளுள் 11 துறைகளும், காஞ்சித்திணையின் கீழ் கூறியுள்ள துறைகளுள் 12 துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலையின் 'பொதுவியல்' பகுதியுடன் ஒத்து அமைகின்றன. வீரசோழியம் இத்திணையினை

"... வண்புகட்சி

பற்றிய பாடாண் பொதுவிய லாதியும் பார்த்தறியே"(16)

எனவும்,

"... வாகைதன்பின்

கொட்கும் பொதுவியல் பாடாண் புறப்புறங் கொண்டிவற்றை"(17)

எனவும் குறிக்கிறது. ஆயின் இத்திணைக்கான துறைகளை இந்நூல் விளக்கவில்லை. இதன் உரையாசிரியரான பெருந்தேவனார் "ஐந்திணைக்குப் புறனும் ஆனந்தமும் அறநிலைத் திணையுமாவது பொதுவியற் படலம் எனக் கொள்க"(18) என்கிறார். ஆயின் காஞ்சித் திணையின்கண் இந்நூல் குறிக்கும் 12 துறைகளில் இரண்டு துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் காஞ்சித் துறைகளுடன் பொருந்தி வருகின்றன. இது முன்னர் விளக்கப்பட்டது. ஏனைய 10 துறைகளில் 'முதுமை' என்ற ஒரு துறை தவிர்த்த ஒன்பது துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் பொதுவியல் துறைகளுடன் பொருந்தி வருகின்றன. மேலும் வீரசோழியம் கரந்தைத் திணையில் கூறிய 'உன்னநிலை', 'கொற்றாப் பொற்றார் சூடாப் பொலிகுதல்', ஆகிய துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலையின் பொதுவியல் துறைகளுடன் பொருந்துகின்றன.

இலக்கணவிளக்கம், புறப்பொருள்வெண்பாமாலை பொதுவியலின் கீழ் கூறியுள்ள துறைகளை 'ஒழிபு' என்ற பகுதியின் கீழ் கூறுகிறது. இந்நூல் இப்பகுதியின் கீழ் 62 துறைகளைக் கூறுகிறது. இவற்றுள் 43 துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் 'பொதுவியல்' பகுதியினுள்ளும் ஏனைய 19 துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் இறுதியில் குறிக்கப்பட்டுள்ள ஒழிபுப் பகுதியிலும் கூறப்பட்டவையாகும். இலக்கண விளக்கதைப் பின்பற்றித் துறைகளை விளக்கும் சுவாமிநாதம் தனது ஒழிபுப்பகுதியில் பொதுவான 96 துறைகளைக் கூறியுள்ளது. புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் பொதுவியல் துறைகளின் நிகழ்ச்சிகளாவன,

1) போரின்போது சேரன் சூடும் பூவைப் புகழ்தல், 2) பாண்டியன் சூடும் பூவைப் புகழ்தல், 3) சோழன் சூடும் பூவைப் புகழ்தல், 4) வேந்தனை உன்னமரத்தோடு சார்த்திப் புகழ்தல், 5) மன்னன் இளைஞனாயினும் அவனது மனவெழுச்சியைப் பாராட்டுதல், ஒரு மன்னன் தனது இளமையை எண்ணாமல் அரசுரிமையை மேற் கொண்டு நடத்தல், 6) போர்க்களத்தின்கண் வலிமிக்க வீரன் கழல் கட்டுதல், 7) போரில் பட்ட மறவனுக்குக் கல்நடும் பொருட்டு நல்ல கல்லினை ஆராய்ந்து காணல், 8) கண்ட கல்லினைக் கைக் கொள்ளுதல், 9) அந்நடுகல்லை நீர்ப்படை செய்தல், நடுகல்லைச் செலுத்தி நிரைத்தல், 10) மறவர் பெயரும் பீடும் எழுதிக் கல்லை நடுதல், 11) நட்ட கல்லினை வாழ்த்துதல் 12) கல்லைக் கோயிலெடுத்து அதன்கட் கொண்டு புகுதல், 13) காட்டினிடத்தே கணவனை இழந்தாளது தனிமையைச் சொல்லுதல், 14) மனைவியைக் காட்டினிடத்தே இழந்த கணவனது தன்மையைச் சொல்லுதல், 15) காதலியை இழந்த பின் மனையகத்துத் தனிமையோடு பொருந்தி இல்லினிருக்கும் ஆடவன் நிலையைச் சொல்லுதல், 16) கணவனை இழந்தாளின் கைம்மை நிலையைக் கூறல், 17) போர்க்களத்தில் பட்ட மகனோடு பட்ட தாயின் நிலையைச் சொல்லுதல், 18) போரின்கட்பட்ட இளைஞனின் சுற்றத்தார் அழுகையாரவாரத்தைக் கூறல், அரசன் இறந்தமைக்காக உலகோர் இரங்குதல், 19) தன் கணவன் உயிர்துறக்க ஒரு தலைவி தீப்புகுதற் பொருட்டு மாலைப்பொழுதில் நிற்றல், 20) தன் கணவனோடு இறந்தாளொரு தலைவியின் செயலைக்கண்ட வழிப்போவோர் வியந்து சொல்லுதல், ஒரு மறவன் பகைவர்

கணைபட்டுத் தான் கருதிய வினை முடியாது வீழ்தல், 21) தன் கணவனுக்குப் புண்ணோம்புவாளொருத்தி விரிச்சியும் நிமித்தமும் தீயனவாதல் கண்டு அஞ்சி நடுங்குதல், மிகப்பெரிய போர்ச் செயலில் தலைப்பட்டானொரு மறவனுக்கு அவன் காதலி இரங்குதல், 22) கணவன் பட்டமையால் தலைவி மெலிந்து வருந்துதல், 23) மன்னன் இறந்தானாக அவனைச் சேர்ந்தோர் கையற்றுக் கூறுதல், இறந்தவனுடைய புகழை எடுத்துக் கூறி இரங்கல், 24) அறிவுடைய புலவர் அறம்பொருள் இன்பங்களின் இயல்பினை உணர்த்துதல், 25) நிலையாமையைக் கூறல், 26) மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவென அதன் இயல்புணர்த்துதல், 27) அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கினுள் வீட்டினது தன்மையைச் சொல்லுதல், 28) நித்தியாநித்தியப் பொருள்களின் இயல்புணர்த்துதல், 29) சுடுகாட்டை வாழ்த்துதல், 30) ஒரு தலைவன் தன் தலைவியோடு கூடியதனால் உண்டான மகிழ்ச்சி மிகுதியைக் கூறல், 31) தலைவன் வினைமுற்றி மீளுமுன்னர் முகில் நீரை முகந்து கொண்டு வருதல், 32) பகைவரையடக்கி மீண்டு வரும் தலைவரது தேர் வருகையைக் கூறல், 33) கணவனைப் பிரிந்த ஒருத்தி தனது நாணே காவலாகத் தன்னைக் காத்துக் கொள்ளுதல், 34) கற்புடை இல்லாளின் இயல்பு மிகுதியைக் கூறல், 35) வேளாண் தலைவனை எருத்தோடு உவமித்தல், 36) இயற்கைப் புணர்ச்சி எய்திய தலைவன் தலைவியைத் தனக்குத் தந்த ஊழினை வாழ்த்துதல், 37) தலைவி தலைவன் நலத்தைப் பாராட்டல், கணவன் பிரியினும் மகளிர்க்குளதாகிய நிறைகாவலைக் கூறுதல், தலைவி தலைவன் மனைவளத்தை வாழ்த்துதல் என்பனவாகும்.

2.11.1 பொதுவியற் துறைகள் - ஒப்பீடு

	புறப்பொருள் வெண்பாமாலை	தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1	போந்தை	போந்தை+	கொற்றாப் பொற்றார் சூடாப் பொலிகுதல்	போந்தை	-
2.	வேம்பு	வேம்பு+	(கொற்றாப் பொற்றார் சூடாப் பொலிகுதல்)	வேம்பு	-
3.	ஆர்	ஆர் +	(கொற்றாப் பொற்றார் சூடாப் பொலிகுதல்)	ஆர்	-
4.	உன்னநிலை	உன்னநிலை+	உன்னநிலை	உன்னநிலை	உன்னநிலை
5.	ஏழகநிலை (2*)	-	-	ஏழகநிலை	ஏழகநிலை
6.	கழல்நிலை	கழல்நிலை+	-	கழல்புனைதல்	கழல்புனைதல்
7.	கற்காண்டல்	காட்சி+	துகளறு கல்தேடாப் பொறித்தல்	கற்கண்டிடுதல்	கற்காண்டல்
8.	கற்கோள்நிலை	கல்கோள்+	(துகளறு கல்தேடாப் பொறித்தல்)	கற்கோணிலை	கல்லை கொள்ளுதல்
9.	கல்நீர்ப் படுத்தல் (2*)	நீர்ப்படை+	(துகளறு கல்தேடாப் பொறித்தல்)	கன்னீர்படுத்தல்	நிராட்டுதல்
10.	கல்நடுதல்	நடுதல்+	(துகளறு கல்தேடாப் பொறித்தல்)	கல்நாட்டுதல்	நாட்டுதல்
11.	கல்முறை பழிச்சல்	வாழ்த்தல்+	(துகளறு கல்தேடாப் பொறித்தல்)	கல்முறை பழிச்சல்	பழிச்சல்

12.	இற்கொண்டு புகுதல்	சீாதகுசிறப்பு+	(துகளறு கல்தேடாப் பொறித்தல்)	இற்கொண்டு புகுதல்	தன்னகத்திற் கொடுபுகுதல்
13.	முதுபாலை	முதுபாலை●	சுரத்திடைத் தன்தலையாா் கணவனை இழத்தல்	முதுபாலை	முதுபாலை
14.	சுரநடை	-	-	சுரநடை	சுரநடை
15.	தபுதாரநிலை	தபுதாரநிலை●	தனியேயிரங்கல்	தபுதாரநிலை	தபுதாரநிலை
16.	தாபதநிலை	தாபதநிலை●	நிலை	தாபதநிலை	தாபதநிலை
17.	தலைப்பெயல் நிலை	தலைப்பெயல் நிலை●	-	தலைப்பெயல் நிலை	தலைப்பெயல் நிலை
18.	பூசல் மயக்கு (2*)	பூசல் மயக்கம் ●	மயக்கம்	பூசல் மயக்கம்	-
19.	மாலைநிலை	முாலைசொல் நிலை●	தீப்பாய்தல்	மாலைநிலை	எரிமூழ்குதல்
20.	மூதானந்தம்(2*)	மூதானந்தம் ●	-	மூதானந்தம்	மூதானந்தம்
21.	ஆனந்தம் (2*)	-	-	ஆனந்தம்	ஆனந்தம்
22.	ஆனந்தப்பையுள்	தாங் கரும்பையுள் ●	-	ஆனந்தப் பையுள்	ஆனந்தத்துயா்
23.	கையறுநிலை (2*)	கையறுநிலை●	(நிலை)	கையறுநிலை	கையறுநிலை
24.	முதுமொழிக் காஞ்சி	முதுமை●	பெருமை	முதுமொழிக் காஞ்சி	முதுமொழி
25.	பெருங்காஞ்சி	கூற்றம் சாற்றிய பெருமை●	நிலையாமை	பெருங்காஞ்சி	-
26.	பொருள்மொழிக் காஞ்சி	-	-	பொருள் மொழிக்காஞ்சி	-
27.	புலவரேத்தும் புத்தேள் நாடு	-	-	புலவரேத்தும் புத்தேள் நாடு	-

28.	முதுகாஞ்சி	-	-	முதுகாஞ்சி	-
29.	காடுவாழ்த்து	காடுவாழ்த்து●	(வாழ்த்து)	காடுவாழ்த்து	காடுவாழ்த்து
30.	முல்லை	-	மகிழ்ச்சி	முல்லை	-
31.	கார்முல்லை	-	-	கார்முல்லை	-
32.	தேர்முல்லை	-	-	தேர்முல்லை	-
33.	நாண்முல்லை	-	-	நாண்முல்லை	நாண் துணையின் உறல்
34.	இல்லாள் முல்லை	-	-	இல்லாள் முல்லை	இல்லாள் முல்லை
35.	பகட்டு முல்லை	-	-	பகட்டு முல்லை	-
36.	பால்முல்லை	-	(வாழ்த்து)	பால்முல்லை	பால்முல்லை
37.	கற்புமுல்லை(3*)	-	(வாழ்த்து)	கற்புமுல்லை	கற்புமுல்லை

+ தொல்காப்பிய வெட்சித்திணையில் கூறப்பட்ட துறைகள்

● தொல்காப்பிய காஞ்சித்திணையில் கூறப்பட்ட துறைகள்

(3*) மூன்று பொருள்களைக் கொண்ட துறை

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

தொல்காப்பியத்தில் கூறப்படாத 14 புதிய துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையில் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தின் 'சீர்தகு சிறப்பு', 'கூற்றம் சாற்றிய பெருமை' ஆகிய துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையில் முறையே 'இற்கொண்டு புகுதல்', 'பெருங்காஞ்சி' எனக் குறிக்கப்படுகின்றன. இவை தவிர ஏனைய துறைப் பெயர்கள் அனைத்தும் பெரும்பான்மையும் ஒத்தே அமைகின்றன.

வீரசோழியத்தின் 12 காஞ்சித்துறைகள் புறப்பொருள் வெண்பாமாலையுடன் பொருந்துகின்றன. இலக்கணவிளக்கம் முற்றிலும் புறப்பொருள்வெண்பாமாலையைப் பின்பற்றி இதற்கான துறைகளை விளக்குகிறது. இது போந்தை, வேம்பு, ஆர் என்ற மூன்றினையும் ஒரே

துறையாக எண்ணுகிறது. முன்னர் கண்டது போன்றே ஏழகநிலை, கல்நீர்ப்படுத்தல், பூசல்மயக்கு, மூதானந்தம், ஆனந்தம், கையறுநிலை என்ற துறைகளுக்குப் புறப்பொருள் வெண்பாமாலை முறையே இரண்டு பொருள்களையும் கற்புமுல்லை துறையின்கீழ் மூன்று பொருள்களையும் கூற, இலக்கணவிளக்கம் இவற்றைத் தனித்தனித் துறைகளாக எண்ணி 43 துறைகளைக் கூறுகிறது. இது சுட்டும் ஏனைய 19 துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலையின் ஒழிபுப்பகுதியில் இடம் பெற்றவையாகும்.

சுவாமிநாதம் பூச்சூடலைக் குறிக்கவில்லை. ஏனைய துறைகளைப் பொருத்த அளவில் இந்நூல் முன்னைய இலக்கண நூல்களையே பின்பற்றுகிறது. இந்நூல் ஒழிபியலினுள் கூறும் 96 துறைகளில் 25 துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் பொதுவியல் துறைகளுக்குள் அடங்குகின்றன. 'சேய்மாய்ந்த திணை மயக்கம்' என்பது சுவாமிநாதம் சுட்டும் புதிதான துறையாகும். அரசனை இழந்து வருத்தப்படுதல், போர்க்களத்தில் இறந்தவருக்கு வருத்தப்படுதல், இறந்தவனுடைய புகழை விரும்பி பாராட்டி உரைத்தல் ஆகிய சுவாமிநாதத் துறைகளைக் கையறுநிலைக்குள்ளேயே அடக்கிக் கொள்ளலாம். மேலும் இந்நூல் சுட்டும் 'நிலையாமை' எனும் துறை புறப்பொருள்வெண்பாமாலை 'காஞ்சிபொதுவியற்பால' எனும் பகுதிக்குள் கூறிய துறைகளின் மையப்பொருளேயாகும். ஏனைய 62 துறைகளில் பல துறைகள் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் ஒழிபுத் துறைகளோடு ஒத்து அமைகின்றன.

2.12 கைக்கிளைத் துறைகள்

புறப்பொருள்வெண்பாமாலை கைக்கிளைக்கான துறைகளை ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று என இரண்டாகப் பகுத்துக் கூறுகிறது. ஆண்பாற்கூற்றின் கீழ் ஒன்பது துறைகளும் பெண்பாற் கூற்றின் கீழ் பத்து துறைகளும் காணப்படுகின்றன. தொல்காப்பியம் கைக்கிளையினை அகத்திணையாக வைத்து எண்ணுகிறது. எனினும் பாடாண் திணையின்கண்,

"கைக்கிளை வகையோடு ...."(19)

எனக் குறிக்கிறது. இதற்கு உரை எழுதிய இளம்பூரணர் "ஆண்பாற்கூற்றுக் கைக்கிளையும் பெண்பாற்கூற்றுக் கைக்கிளையும்"(20) என்று கூறி புறப்பொருள் வெண்பாமாலையுடன் ஒருவகையில் கருத்தொருமைப்படுகிறார். ஆயின் தொல்காப்பிய புறத்திணையியலில் இது குறித்த துறைகள் இல்லை. தொல்காப்பியம் அகத்திணையியலில்,

"காமஞ்சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தால்
தன்னோடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே"(21)

எனக் கைக்கிளையினைக் குறிக்கிறது. தொல்காப்பிய அகத்திணைக் கைக்கிளை, புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் புறத்திணைக் கைக்கிளையுடன் 'ஒருதலைக் காமத்தைக் கூறுவது' என்ற அளவில் ஒன்றுபடுகிறது. வீரசோழியம் அகப்புறம் குறித்து விளக்கும் நூற்பாவில் முதுபாலை, பாசறை, முல்லை, வள்ளி, சுரநடை, இல்லவன்முல்லை, காந்தள், குறுங்கலி, தாபதம், குற்றிசை, கைக்கிளை, பெருந்திணை எனப் பன்னிருபொருள்களைச் சுட்டியுள்ளது. இவற்றில் குறிக்கப்படும் கைக்கிளை, பெருந்திணை தவிர தனியாக இவற்றிற்குத் துறைகள் ஏதும் இந்நூலில் இல்லை.

புறப்பொருள்வெண்பாமாலையையே முற்றிலுமாகப் பின்பற்றி துறைகளை விளக்கிய இலக்கணவிளக்கம் கைக்கிளை, பெருந்திணை குறித்து நூற்பா ஏதும் செய்யவில்லை. எனின் வைத்தியநாத தேசிகர் 'ஒழிபு' நூற்பாவின்,

"இன்ன பிறவும் எழுவகைத் திணையுட்
துன்னிய ஒழிபுஎனத் தூக்கினர் கொளலே"(22)

எனும் பகுதிக்கு உரை எழுதுகையில் புறப்பொருள்வெண்பாமாலை கைக்கிளை, பெருந்திணைக்குக் கூறிய நூற்பாக்கள் மற்றும் எடுத்துக்காட்டுப் பாடல்கள் அனைத்தையும் அப்படியே எடுத்துக்கூறுகிறார். இலக்கணவிளக்கத்தைப் பின்பற்றி எழுந்ததாகக் கருதப்படும் சுவாமிநாதமும் அதனுடைய ஒழிபுப் பகுதியில்,

"........................... இவைகள் போல்பிறவும் ஒழிபாகும்"(23)

என்று குறிக்கிறது. இது, இலக்கண விளக்கம் மேலே குறித்துள்ளதையே குறிக்கிறது எனத் துணியலாம். எனவே, இவ்விரு நூல்களும் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றைத் தனியே குறிக்காது விட்டாலும் 'ஒழிபு' பகுதியில் ஏற்றுக் கொண்டுள்ளன.

புறப்பொருள்வெண்பாமாலை மூலம் அறியலாகும் ஆண்பாற்கூற்று நிகழ்ச்சிகளாவன,

1) பூம்பொழிலினிடத்தே ஒரு தலைவன் பெரிய விழியையுடைய ஒரு தலைவியைக் கண்டு விரும்புதல், 2) அவளைக் கண்ட தலைவன் அவளின் தன்மையறியாது ஐயமுறுதல், 3) அங்ஙனம் ஐயுற்றவன் இவள் மானிட மகளே எனத் தெளிந்து சொல்லுதல், 4) தலைவி தன்னை அறிந்திலள் எனக் கருதுதல், 5) தலைவியின் தாய்தந்தையரை வாழ்த்துதல், 6) தலைவன் அத்தலைவியின் அழகினைப் பாராட்டல். 7) தலைவியின் புணர்ச்சியின்பத்தை விரும்பிய தலைவன் சொல்லெதிர் பெறாமையின் அவளைப் பெரிதும் புகழ்தல், 8) தலைவியைக் கூடப்பெறாத துன்பத்தோடு தலைவன் தனிமையுறத் தங்குதல், 9) புணர்ச்சி கூடாமையால் துயர்மிக்கு வெளிப்பட இரத்தல் என்பவையாகும்.

பெண்பாற்கூற்று நிகழ்ச்சிகள் வருமாறு

10) ஒரு தலைவி ஒரு தலைவனைக் கண்டு காமுற்று மெலிதல், 11) தலைவனைக் கண்ட தலைவி அவனை நயந்ததனைச் சொல்லுதல், 12) அங்ஙனம் நயந்த தலைவி அவனைக் கூடக் கருதுதல், 13) தலைவி அலர்நாணி வருந்துதல், 14) காமம் வருத்தத் தலைவி மெலிதலைக் கூறல், 15) காமம் நலிதலால் தலைவி மீண்டும் தலைவனைக் காண உறுதி கொள்ளுதல், 16) தலைவி பகலினை வெறுத்ததைக் கூறல், 17) தலைவி இரவுப்பொழுதில் காமத்தால் துன்புற்றதனைச் சொல்லுதல், 18) கனவில் தோன்றிய தலைவன் மறைந்தமையால் தலைவி அரற்றல், யான் இவ்விரவின்கண் தலைவனைச் சேர்ந்தால் பிழைப்பேன் என்று தலைவி கூறல், 19) தலைவி இரவின்கண் இருள்நெறியில் தலைவன் உறையுள் சேர விரும்புதலைச் சொல்லுதல், தலைவன்பாற் செல்லத் துணிந்தேன் அலர் தூற்றும் பெண்டிர் இதனையும் அறிக என்று தலைவிகூறல் என்பனவாகும்.

2.12.1 கைக்கிளைத் துறைகள் ஒப்பீடு

	புறப்பொருள்வெண்பாமாலை	தொல்காப்பியம்
1	காட்சி	-
2	ஐயம்	-
3	துணிவு	-
4	உட்கோள்	-
5	பயந்தோர்ப்பழிச்சல்	-
6	நலம்பாராட்டல்	தன்னோடும் அவளோடும் தருக்கிய புணர்த்தல்
7	நயப்பற்றிரங்கல்	சொல்லெதிர்பெறான் சொல்லி இன்புறுதல்
8	புணராஇரக்கம்	-
9	வெளிப்பட இரத்தல்	-
10	காண்டல்	-
11	நயத்தல்	-
12	உட்கோள்	-
13	மெலிதல்	-
14	மெலிவொடு வைகல்	-
15	காண்டல் வலித்தல்	-
16	பகல்முனிவுரைத்தல்	-
17	இரவுநீடு பருவரல்	-
18	கனவின் அரற்றல் (2*)	-
19	நெஞ்சொடு மெலிதல் (2*)	-

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

'நச்சினார்க்கினியர் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்ற நான்கும் கைக்கிளைக்கு உரியவை'(24) என்பர். இவை புறப்பொருள்வெண்பாமாலையின் காட்சி, ஐயம், துணிவு ஆகிய துறைகளோடு ஒத்து அமையக் காணலாம். மேலும் தொல்காப்பியம் குறிக்கும்

"காமஞ்சாலா இளமையோள் வயின்

ஏமஞ்சாலா இடும்பை எய்தலும்"

என்பது புறப்பொருள்வெண்பாமாலை குறிக்கும் கைக்கிளைத் துறைகளின் மூலக்காரணமாகும். அதனோடு

1. "நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
   தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்தலும்"
2. "சொல்லெதிர் பெறான் சொல்லி இன்புறுதலும்"

ஆகிய தொல்காப்பியத்தின் செயல்கள் முறையே புறப்பொருள்வெண்பாமாலையின் 'நலம்பாராட்டல்', 'நயப்புற்றிரங்கல்' ஆகிய துறைகளுடன் தொடர்பு பெறுகின்றன. தொல்காப்பியர் பாடாண்திணையின்கண் கைக்கிளையினை குறித்தது ஒருவரைப் புகழும் நோக்கிலேயே ஆகும். ஏனெனில் ஒரு தலைவனைப் பார்த்து ஒரு தலைவி ஒரு தலையாகக் காதல் கொள்வது அத்தலைவனுக்கும் பெருமையேயாகும். பிற்காலத்தில் எழுந்த 'உலா' நூல்களில் பேதை முதலான ஏழு பருவ மகளிரும் ஒரு தலைவனைக் கண்டு காதல் கொள்வதாகப் பாடப்பட்டது இதனை உறுதி செய்கிறது. புறப்பொருள்வெண்பாமாலையில் பாடாண்திணைக்கண் குறிக்கப்படும் கைக்கிளைத் துறையும் இவ்வமைப்பிலேயே அமைந்தது. ஆயின் புறப்பொருள்வெண்பாமாலையில் இங்குக் குறிக்கப்படும் கைக்கிளைத் திணையானது ஒருவரைப் புகழும் நோக்கில் அமைந்ததல்ல. இதனை இந்நூல் குறிக்கும் துறைகள் மூலம் அறியலாம்.

வீரசோழியம் குறிக்கும் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றிற்கு உரை எழுதிய பெருந்தேவனார் 'கைக்கிளையாவது ஒருதலைக்காமம் என்றும் பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்'(25) என்றும் சுட்டுகிறார். ஆயின் இவற்றிற்குரிய துறைகள் இவையென இவ்வுரையாசிரியரும் குறிக்கவில்லை.

2.13 பெருந்திணைத்துறைகள்

ஐயனாரிதனார் இத்திணையினைப் பெண்பாற்கூற்றுப் பெருந்திணை, இருபாற்கூற்றுப்பெருந்திணை என இரண்டாகப் பிரித்து இவற்றின் கீழ் முறையே

19, 17 என்ற எண்ணிக்கையில் துறைகளை விளக்கியுள்ளார். தொல்காப்பியம் பெருந்திணைக்குரிய இலக்கணத்தை,

"ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"(26)

என அகத்திணையியலில் குறிக்கிறது. புறத்திணையியலில் எவ்விடத்தும் பெருந்திணை குறித்து விளக்கவில்லை.

வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் இத்திணை குறித்துக் கூறிய செய்திகள் முன்னர் விளக்கப்பட்டன.

புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் பெண்பாற்கூற்றுப் பெருந்திணை நிகழ்ச்சிகளாவன,

1) தலைவன் வேட்கையைக் கூறுதற்கு முன்னே தலைவி கூறல், 2) தலைவி தலைவனை இரந்து பின்னிற்றல், 3) தலைவன் பிரிவினைத் தலைவி ஆற்றியிருத்தல், 4) தலைவி தன் மனையிடத்தே தலைவன் வருகையை ஏற்றல், 5) தீ நிமித்தம் கண்ட தலைவி தலைவன் வாரான் எனக் கருதி வருந்துதல், 6) தலைவி தலைவனைக் காண விரும்பித் தன் மனையினின்றும் நீங்கி இருள் நெறிச் செல்லுதல், 7) தலைவி தலைவன் செய்யாதவற்றைச் செய்தனவாகச் சொல்லி நகைத்தல், 8) தலைவி தலைவனோடு ஊடித் தனிமையுற்றல், 9) தலைவி உயிர் நிற்றலைப் பொறாளாய்ச் சுழன்று மாலைப்பொழுதினைக் கண்டு வருந்துதல், 10) தலைவனோடு நீர் விளையாட்டை விரும்பிய தலைவி பரத்தையை ஏசல், 11) பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனது மாலையைக் கண்டு தலைவி கோபம் கொள்ளுதல், 12) தலைவி மிக்க காமத்தாலே தலைவனைத் தழுவி மகிழ்தல், 13) தலைவி காம மிகுதியாலே தலைவனைக் கண்டு தன் இல்லினுட் கொண்டு புகுதல், 14) தலைவி தலைவனோடு புணர்ந்திருக்கும் போதே அவன் பிரிவான் என்னும் நினைவினால் ஆற்றாளாய் நெஞ்சு நெகிழ்தல், 15) தலைவி மாலைப்பொழுதிலே தன் நெஞ்சு ஊடிய வழிக்குழைதல், 16) காமத்துன்பத்தில் அழுந்தியிருந்த தலைவி தலைவனது மொழி கேட்டு விரும்புதல், 17) தலைவன் தனது அடியில்

வணங்கிய பின்னர்த் தலைவி நெஞ்சு நெகிழ்தல், 18) தலைவி தலைவனைப் போகவிடாமல் படுக்கையிடத்தில் இருத்திக் கொள்ளுதல், 19) இருட்பொழுதில் மற்றொரு தலைவியின்பாற் செல்லும் தலைவனைத் தலைவி செல்க என விடுத்தல் என்பனவாகும்.

புறப்பொருள்வெண்பாமாலை மூலம் அறியலாகும் இருபாற் பெருந்திணை நிகழ்ச்சிகளாவன.

20) தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லத் துணிந்து பின்னர்ச் செலவழுங்குதல், 21) தலைவன் ஊரம்பலத்தே மடல்மாவூர்தல், 22) மாலைக் காலத்தே தலைவியின் துயர்கண்டு தோழி தலைவன்பால் தூது செல்லல், 23) தலைவி மாலைக் காலத்தே ஆற்றாது வருந்துதலைத்தோழி தலைவனுக்குச் சொல்லுதல், 24) தலைவி காமம் மிக்கு ஆற்றாளாதல் கண்ட தோழி செய்வதறியாது திகைத்தல், 25) தலைவியின் ஆற்றாமை கண்ட தோழி காலத்தை ஐயுற்றுத் துன்பமெய்துதல், தலைவி தலைவன் குறித்த பருவம் வந்தும் அப்பருவம் அன்றெனத் தெளிதல், 26) காமம் எல்லை கடத்தலானே ஏங்கி மயங்கிய தலைவன் கூறல், 27) என்னை அலர்தூற்றும் இவ்வூரினர் என் நலங்கவர்ந்த தலைவனை அறிந்திலர் எனத் தலைவி கூறல், 28) தலைவி தலைவன் அளி செய்தல் பொருட்டுத் தாய் அறியாதபடி முருகனுக்கு வெறிக் கூத்தாடுதல், 29) தோழி தலைவனுடைய பாணன் வரவினைத் தலைவிக்கு உணர்த்துதல், 30) பாங்காயினர் கேட்பப் பரத்தை தலைவன் மாலையைப் பெறுதல் எமக்கெளிதென்று கூறல், 31) தோழி தலைவனுக்குப் பரத்தையர் முயக்கம் அமிழ்தத்தோடொக்கும் எனப் பாணிச்சிக்குக் கூறல், 32) தலைவனது முதுமை பரத்தையருக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தரும் என விறலி தோழிக்குச் சொல்லுதல், 33) தலைவன் எம் இல்லிற்கு வருவான் என சேரிப்பரத்தையின் தோழி இற்பரத்தையின் தோழிக்குச் சொல்லுதல், 34) தலைவன் பரத்தையர் சேரியிலுறைந்த நிலையைப் பாணிச்சி தலைவிக்குக் கூறல், 35) தலைவன் தலைவியோடு கடைபோக வாழாது இடையே கைவிடல், 36) தலைவன் தலைவியைக் கைவிட்டுப் பிற மகளிரை விரும்புதற்கு அவன் நெஞ்சத்தே மாறுபட்டெழுந்த காமவேட்கை கெடும்படி கூறல் ஆகியனவாகும்.

2.13.1 பெருந்திணைத் துறைகள் ஒப்பீடு

	புறப்பொருள்வெண்பாமாலை	தொல்காப்பியம்
1	வேட்கைமுந்துறுதல்	தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி
2.	பின்னிலைமுயறல்	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
3.	பிரிவிடை ஆற்றல்	-
4.	வரவெதிர்ந்திருத்தல்	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
5.	வாராமைக்கு அழிதல்	-
6.	இரவுதலைச் சேரல்	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
7.	இல்லவை நகுதல்	-
8.	புலவியுட் புலம்பல்	-
9.	பொழுது கண்டிரங்கல்	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
10.	பரத்தையை ஏசல்	-
11.	கண்டுகண் சிவத்தல்	-
12.	காதலிற்களித்தல்	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
13.	கொண்டகம் புகுதல்	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
14.	கூட்டத்துக் குழைதல்	-
15.	ஊடலுள் நெகிழ்தல்	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
16.	உரைகேட்டு நயத்தல்	-
17.	பாடகச்சீரடி பணிந்தபின் இரங்கல்	-
18.	பள்ளிமிசை தொடர்தல்	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
19.	செல்கென விடுத்தல்	-
20.	செலவழுங்கல்	-
21.	மடலூர்தல்	ஏறியமடல்திறம்
22.	தூதியாடல்	-
23.	துயரவறற்குரைத்தல்	-
24.	கண்டு கை சோர்தல்	-
25.	பருவமயங்கள் (2*)	-
26.	ஆண்பாற் கிளவி	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)

27.	பெண்பாற் கிளவி	(தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி)
28.	வெறியாட்டு	-
29.	பாணவரவுரைத்தல்	-
30.	பரத்தை கூறல்	-
31.	விறலிகேட்பத்தோழி கூறல்	-
32.	விறலி தோழிக்கு விளம்பல்	இளமைதீர்திறம்
33.	பரத்தைவாயில் பாங்கி கண்டுரைத்தல்	-
34.	பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல்	-
35.	குற்றிசை	-
36.	குறுங்கலி	-

(2*) இரண்டு பொருள்களைக் கொண்ட துறை

தொல்காப்பியம் குறிக்கும் 'ஏறிய மடல்திறம்' என்பது புறப்பொருள்வெண்பாமாலையில் மடல் ஏறியதனைப் பொருளாகக் கொண்ட துறையான மடலூர்தலுடன் ஒன்றுபடுகிறது.

இளமைதீர்ந்த பின்பும் காமம் தொடர்வது தொல்காப்பியம் குறிப்பிடும் 'இளமை தீர்திறம்' ஆகும். புறப்பொருள்வெண்பாமாலையின் 'விறலி தோழிக்கு விளம்பல்' எனும் துறை மேற்கண்ட பொருளிலேயே அமைகிறது.

தொல்காப்பியத்தின் 'தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி' எனும் பகுதிக்கு இளம்பூரணர் "தெளிவு ஒழிந்த காமத்தின்கண் மிகுதலும்"(27) என்கிறார். இதனடிப்படையில் வேட்கை முந்துறுதல், பின்னிலை முயறல், வரவெதிர்ந்திருத்தல், இரவுதலைச் சேரல், பொழுது கண்டிரங்கல், காதலிற்களித்தல், கொண்டகம் புகுதல், ஊடலுள் நெகிழ்தல், பள்ளிமிசைத் தொடர்தல், ஆண்பாற்கிளவி, பெண்பாற்கிளவி ஆகிய புறப்பொருள் வெண்பாமாலையின் துறைகள் அமைகின்றன எனலாம். தொல்காப்பியம் நான்காவதாகக் குறிப்பது 'மிக்க காமத்து மிடல்' ஆகும். இது தூய காதலின்

மாறுபட்டு வருவதாகும். புறப்பொருள்வெண்பாமாலை இத்திணையின் கீழ் குறிக்கும் எல்லாத் துறைகளும் தூய காதலின் மாறுபட்டு அமைந்தனவாகும். இவற்றின் மூலம் தொல்காப்பியம் கூறிய நான்கு பொருள்களே புறப்பொருள்வெண்பாமாலையில் 36 துறைகளாக வளர்ந்தன எனத் தெரியலாம்.

2.13.2 ஒழிபு

புறப்பொருள்வெண்பாமாலையின் ஒழிபுப் பகுதியில் 19 துறைகள் காணப்படுகின்றன. இத்துறைகளின் நிகழ்ச்சிகள் வருமாறு.

1) ஈவோரைப் புகழ்ந்து ஈயாதோரைப் பழித்தல், 2) வாணிகத் தொழில் செய்வோரின் மிகுதியைக் கூறல், 3) மற்போர் வீரனின் மிகுதியைச் சொல்லுதல், 4) வேளாளனது மிகுதியைச் சொல்லுதல், 5) ஏற்றைத் தழுவி எய்தும் வென்றியைச் சொல்லுதல், 6) தோழியைப் பொரவிடுத்து கொள்ளும் வென்றியைச் சொல்லுதல், 7) போர்க்கிடாய்களைப் பொரவிடுத்துக் கொள்ளும் வென்றியைச் சொல்லுதல், 8) யானைகளைப் பொரவிடுத்துக் கொள்ளும் வென்றியைச் சொல்லுதல், 9) பூழைப் பொரவிடுத்துக் கொள்ளும் வென்றியைச் சொல்லுதல், 10) சீவல்களைப் பொரவிடுத்துக் கொள்ளும் வென்றியைச் சொல்லுதல், 11) கிளிகளைப் பூவைக்கெதிர் பாடவிடுத்து வென்றி கோடலைச் சொல்லுதல், 12) சொற்போரின்கண் கிளியைப் பூவை வென்றதனைச் சொல்லுதல், 13) குதிரை ஏறும் தொழிலில் பிறரின் மேம்பட்டு வெல்லுதலைச் சொல்லுதல், 14) தேரின் வெற்றியைச் சொல்லுதல், 15) யாழ் வாசித்தலில் பிறரை வென்றதனைச் சொல்லுதல், 16) சூதாட்டத்தின்கண் வென்றதனைச் சொல்லுதல், 17) கூத்தாடுதல் தொழிலில் வென்றதனைச் சொல்லுதல், 18) பாடுதலில் வென்றதனைச் சொல்லுதல், 19) மகளிர் பிடிபோல ஆடும் கூத்தின்கண் வென்றதனைச் சொல்லுதல் ஆகியனவாகும்.

2.13.3 ஒழிபுத் துறைகள் - ஒப்பீடு

	புறப்பொருள்வெண்பாமாலை	இலக்கணவிளக்கம்	சுவாமிநாதம்
1.	கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல்	கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல்	ஈவார் துதித்து ஈயார் பழித்தல்
2.	வாணிகவென்றி	வாணிகன்வென்றி	-
3.	மல்வென்றி	மல்லவென்றி	மல்லன் சிறப்பு
4.	உழவன்வென்றி	உழவன்வென்றி	-
5.	ஏறுகொள்வென்றி	ஏற்றுகொள்வென்றி	-
6.	கோழிவென்றி	கோழிவென்றி	கோழி சிறப்பு
7.	தகர் வென்றி	தகர் வென்றி	தகர் சிறப்பு
8.	யானை வென்றி	யானை வென்றி	யானை சிறப்பு
9.	பூழ் வென்றி	பூழ் வென்றி	பூழ் சிறப்பு
10.	சீவல் வென்றி	சீவல் வென்றி	சீவல் சிறப்பு
11.	கிளிவென்றி	கிளிவென்றி	கிளி சிறப்பு
12.	பூவை வென்றி	பூவை வென்றி	பூவை சிறப்பு
13.	குதிரை வென்றி	குதிரை வென்றி	பரி சிறப்பு
14.	தேர் வென்றி	தேர் வென்றி	தேர் சிறப்பு
15.	யாழ் வென்றி	யாழ் வென்றி	யாழ் சிறப்பு
16.	சூது வென்றி	சூது வென்றி	சூது சிறப்பு
17.	ஆடல் வென்றி	ஆடல் வென்றி	ஆடல் சிறப்பு
18.	பாடல் வென்றி	பாடல் வென்றி	பாடல் சிறப்பு
19.	பிடி வென்றி	பிடி வென்றி	-

தொல்காப்பியம் பாடாண் திணையில் குறித்த 'கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் எனும் துறை ஐயனாரிதனாரால் இவ்வொழிபுப் பகுதியில் குறிக்கப்படுகிறது. ஒழிபுப் பகுதியில் காணப்படும் ஏனைய துறைகள் தொல்காப்பியத்தில் இல்லாதவைகளாகும்.

இலக்கணவிளக்கத்தைப் பொருத்த அளவில் அதன் ஒழிபுப் பகுதியில் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டிய ஒழிபுத் துறைகள் அனைத்தையும் அப்படியே கூறியுள்ளது. சுவாமிநாதம் வாணிகவென்றி, உழவன் வென்றி, ஏறுகொள்வென்றி, பிடிவென்றி, ஆகிய நான்கினைத் தவிர்த்து ஏனைய எல்லாத்துறைகளையும் சுட்டியுள்ளது. மேலும் இந்நூல் உந்தி, கடைதிறப்பு, இடைமை, வலிமை, குறம், தவம், உலா, சுடர்தோற்றம், தூது, தொழில் சிறப்பு, பூப்பறித்தல், நீராடுதல், பொழில் ஆடுதல், சுண்ணம் இடித்தல், காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வாரானை, நிலவைக் கூப்பிடல், சிறுபறை, சிற்றில் அழித்து விளையாடல், சிறுதேர் உருட்டல், அம்மானை, கழங்கு ஆடுதல், ஊஞ்சலாடுதல், சோபானம், கட்டியம், துறைக் கொம்மை தத்தாங்கி, கப்பல், மதங்கு, ஏசல் ஆகியவற்றை மேலும் அதிகமாகக் குறிக்கிறது. இவற்றில் பெரும்பான்மையான துறைகள் பாட்டியல் செய்திகளாக அமைகின்றன.

2.14 தொகுப்புரை

- வெட்சித் துறைகளைப் பொருத்த அளவில் புலனறிசிறப்பு, பிள்ளைவழக்கு, வெறியாட்டு ஆகிய மூன்று புறப்பொருள்வெண்பாமாலையின் துறைகளைத் தவிர ஏனைய 16 துறைகளையும் தொல்காப்பியத்தில் காணமுடிகிறது. மேற்குறித்த மூன்று துறைகளிலும் புலனறிசிறப்பு, பிள்ளைவழக்கு ஆகியன 'பாதீடு' துறையின் வளர்ந்த நிலையேயாகும்.
- வெட்சித்துறைகளை விளக்கும் முறையில் வீரசோழியம் தொல்காப்பியத்தையும், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகியன புறப்பொருள் வெண்பாமாலையையும் பின்பற்றுகின்றன.
- இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் புறப்பொருள்வெண்பாமாலை திணைக்கு விளக்கமாகக் கூறிய பொருளைத் தனித் துறையாக எடுத்தாளுகின்றன.
- புறப்பொருள்வெண்பாமாலை ஒரு சில துறைக்கு இரண்டு பொருள்களைக் கூறி எண்ணிக்கையளவில் ஒரே துறையாகக் கொள்ள, இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் அவ்விருபொருள்களையும் எண்ணிக்கையில் இரண்டு துறைகளாகக் கொள்கின்றன.

எனவே, எண்ணிக்கையளவில் மட்டும் இவ்விரு இலக்கண நூல்களும் புறப்பொருள்வெண்பாமாலையிலிருந்து வேறுபடுகின்றன. ஏனைய திணைகளிலும் இதே அமைப்பு காணப்படுகிறது.

- கரந்தைத் திணையின் எட்டுத் துறைகள் புறப்பொருள் வெண்பாமாலையிலும் தொல்காப்பியத்திலும் ஒத்து அமைகின்றன. இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் புறப்பொருள்வெண்பாமாலையினைப் பின்பற்றி துறைகளைக் கூறியுள்ளன.
- வஞ்சித்திணையில் புறப்பொருள்வெண்பாமாலையும், தொல்காப்பியமும் 15 துறைகளில் ஒன்றுபடுகின்றன. 'வயங்கல் எய்திய பெருமை' என்பது இத்திணையின் கீழ் தொல்காப்பியம் சுட்டி புறப்பொருள்வெண்பாமாலை சுட்டாத துறையாகும். வீரசோழியம் இத்திணையின் கீழ் புறப்பொருள்வெண்பாமாலை குறித்த 20 துறைகளில் ஏழினை மட்டுமே கூறி ஐந்து துறைகளைப் புதிதாகக் கூறுகின்றது. இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் வேறுபாடில்லாமல் புறப்பொருள்வெண்பாமாலையினைப் பின்பற்றி இத்திணையின் துறைகளை விளக்கியுள்ளன.
- புறப்பொருள்வெண்பாமாலை – காஞ்சித்திணையினை வஞ்சித்திணையின் எதிர்த்திணையாகக் கூற, தொல்காப்பியம் இதனை நிலையாமைத் திணையாகக் குறிக்கிறது. எனவே, காஞ்சித்திணையில் ஒன்பது துறைகள் மட்டுமே இவ்விரு நூல்களிலும் ஒத்து வருகின்றன. புறப்பொருள் வெண்பாமாலை இத்திணையின் கீழ் 21 துறைகளையும், தொல்காப்பியம் 20 துறைகளையும் கூறுகின்றன.
- புறப்பொருள்வெண்பாமாலை குறித்துத் தொல்காப்பியம் குறிக்காத ஏனைய 12 துறைகள் வஞ்சித்திணையின் எதிர்நிகழ்ச்சிகளாகும். அதே நிலையில் தொல்காப்பியத்தில் மீதமுள்ள துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் 'பொதுவியல் படலத்தில்' காணப்படுகின்றன. வீரசோழியம் 12 துறைகளை இத்திணையின் கீழ் கூறியுள்ளது. ஆயின் இரண்டு துறைகள் மட்டுமே புறப்பொருள்வெண்பாமாலையுடன் ஒத்து வருகின்றன.
- இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் இத்திணையினைத் தொல்காப்பியத்தைப் பின்பற்றி 'நிலையாமைத் திணை' எனக் குறித்த

போதிலும் துறைகளை விளக்கும் முறையில் முழுவதும் புறப்பொருள்வெண்பாமாலையைப் பின்பற்றியுள்ளன.

- உழிஞைத் திணையின் கீழ் புறப்பொருள்வெண்பாமாலை 28 துறைகளைக் கூறியுள்ளது. தொல்காப்பியம் உழிஞையின் வகைகள் எட்டு எனவும், துறைகள் 12 எனவும் விளக்கியுள்ளது. புறப்பொருள்வெண்பாமாலை தொல்காப்பியம் சுட்டிய எட்டு வகைகளினுள் நான்கு வகைகளை உழிஞையின் துறைகளாகச் சுட்டியுள்ளது. 13 துறைகள் இவ்விரண்டு நூல்களிலும் ஒத்து அமைகின்றன. வீரசோழியம் இத்திணையின் கீழ் 14 துறைகளைக் கூறினும் ஒன்பது துறைகள் மட்டுமே புறப்பொருள்வெண்பாமாலையுடன் ஒத்து வருகின்றன. இலக்கணவிளக்கமும் சுவாமிநாதமும் இத்திணையின கீழ் 32 துறைகளைக் கூறியுள்ளன. கூடுதலாக அமைந்த நான்கு துறைகளும் புறப்பொருள் வெண்பாமாலை சுட்டியனவே யாகும்.
- நொச்சித்திணையில் புறப்பொருள்வெண்பாமாலை எட்டுத் துறைகளைக் கூறுகிறது. இதனைத் தனித்திணையாகக் கொள்ளாத தொல்காப்பியம் மூன்று துறைகளை மட்டுமே குறிக்கிறது. ‘அகத்தோன் செல்வம்’ எனும் துறை புறப்பொருள்வெண்பாமாலை சுட்டாத தொல்காப்பியத் துறையாகும். தொல்காப்பியத்தைப் பின்பற்றி துறைகளை விளக்கும் வீரசோழியத்தில் 2 துறைகள் இத்திணைக்குரியனவாகக் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று புறப்பொருள்வெண்பாமாலையில் காணப்படும் ‘ஊர்ச்செரு’ எனும் துறையாகும். ஏனைய ஒன்று ‘செல்வம்’ என்பதாகும். இது தொல்காப்பியம் குறித்த ‘அகத்தோன் செல்வம்’ எனும் துறையை ஒத்தது. முன்னைய திணைகளில் கண்டது போன்று இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் புறப்பொருள்வெண்பாமாலையினை அப்படியே பின்பற்றி இத்திணைக்கான துறைகளை விளக்கியுள்ளன.
- புறப்பொருள்வெண்பாமாலை தும்பைத்திணைக்கு 23 துறைகளைக் கூற, தொல்காப்பியம் 12 துறைகளைக் கூறியுள்ளது. தொல்காப்பியத்தின் இப் பன்னிரெண்டு துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலையின் 12 துறைகளுடன் முற்றிலும் பொருந்தி வருகின்றன. ஏனைய 11 துறைகளும் புறப்பொருள் வெண்பாமாலை சுட்டும் புதிய துறைகளாகும். வீரசோழியம்

இத்திணைக்கு 5-துறைகளைக் கூறியுள்ளது. இதன் ஐந்து துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலையுடன் ஒத்தே அமைகின்றன. இலக்கணவிளக்கமும் சுவாமிநாதமும் புறப்பொருள்வெண்பாமாலையுடன் வேறுபாடின்றி ஒத்து அமைகின்றன.

- தொல்காப்பியம் வாகைத்திணையினை 7 வகைகளாகவும், 18 துறைகளாகவும் கூறி விளக்கியுள்ளது. புறப்பொருள்வெண்பாமாலை வாகையின் வகைகள் 33 எனக் குறிக்கிறது. எனின் இவை துறைகளைப் போன்றே விளக்கம் பெறுகின்றன. தொல்காப்பியம் சுட்டிய வகைகளுள் ஆறினையும், துறைகளுள் பதினொன்றினையும் புறப்பொருள்வெண்பாமாலையில் காணமுடிகிறது. புறப்பொருள் வெண்பாமாலையில் மட்டும் காணப்படும் கூடுதல் துறைகள் பத்தாகும். வீரசோழியம் இத்திணையின் கீழ் 14 துறைகளைக் கூறுகிறது. இவற்றில் ஐந்து துறைகள் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டாதவை. இலக்கணவிளக்கமும் சுவாமிநாதமும் புறப்பொருள்வெண்பாமாலையினை அடியொற்றி இத்திணைக்கான துறைகளை விளக்கியுள்ளன.
- பாடாண்திணையின் வகைகளாக எட்டினையும், துறைகளாக 21-றினையும் தொல்காப்பியம் குறிக்கிறது. தொல்காப்பியம் குறித்த பாடாணின் வகைகளைச் சுட்டாத புறப்பொருள்வெண்பாமாலை இத்திணைக்கு 47 துறைகளைக் கூறுகிறது. பாடாணின் மரபு குறித்த இரண்டு நூற்பாக்கள் (தொல், புறத். 26, 27) தொல்காப்பியத்தில் இடம்பெறுகின்றன. இவை துறைகளாகப் புறப்பொருள்வெண்பாமாலையில் குறிக்கப்பட்டுள்ளன. 28 துறைகள் இவ்விரண்டு நூல்களிலும் ஒத்து அமைகின்றன. வீரசோழியம் இத்திணைக்கு ஆறு துறைகளை மட்டுமே குறிக்கிறது. இவற்றில் இந்நூல் நான்கு துறைகளில் மட்டும் புறப்பொருள்வெண்பாமாலையுடன் ஒத்து, இரண்டு துறைகளைப் புதியனவாகக் கூறுகிறது. புறப்பொருள்வெண்பாமாலையினை அப்படியே பின்பற்றி துறைகளை விளக்கும் இலக்கணவிளக்கம் இத்திணையில் ஒரு துறையினைக் கூடுதலாகக் குறிக்கிறது. சுவாமிநாதம் இத்திணையின் கீழ் 48 துறைகளைக் கூறுகிறது. இவற்றில் 31 துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையுடன் ஒத்து அமைய, ஏனைய துறைகள் புதியதாய் காணப்படுகின்றன.

- புறப்பொருள்வெண்பாமாலை பொதுவியல் திணையின் கீழ் 37-துறைகளைக் கூறுகின்றது. தொல்காப்பியம் பொதுவியல் எனத்தனியே திணையினைக் குறிக்கவில்லை. எனினும் இந்நூல் வெட்சித்திணையின்கண் குறிக்கும் 11 துறைகளும் காஞ்சித்திணையின் கண் குறிக்கும் 12 துறைகளுமாக 23 துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் பொதுவியல் துறைகளோடு ஒத்து வருகின்றன. வீரசோழியத்தின் காஞ்சித் திணையில் காணப்படும் 10 துறைகளைப் பொதுவியல் துறைகளோடு ஒப்பிடலாம். இலக்கணவிளக்கம், புறப்பொருள்வெண்பாமாலை பொதுவியலின் கீழ் கூறிய துறைகளை 'ஒழிபு' என்ற நூற்பாவில் விளக்குகிறது. இந்நூல் இந்நூற்பாவில் சுட்டும் 62 துறைகளில் 43 துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் பொதுவியல் பகுதியிலும், ஏனைய 19 துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையின் ஒழிபுப் பகுதியிலும் குறிக்கப்பட்டவைகளேயாகும். சுவாமிநாதம் ஒழிபாக 96 துறைகளைக் கூறுகிறது. இவற்றில் புறப்பொருள்வெண்பாமாலையின் பொதுவியல் பகுதியுடன் 25 துறைகள் ஒன்றுபடுகின்றன. புறப்பொருள்வெண்பாமாலையின் ஒழிபுப்பகுதியுடன் 15 துறைகள் ஒத்துப்போகின்றன. ஏனைய 56 துறைகளும் புறப்பொருள்வெண்பாமாலையில் சுட்டப்படாத துறைகளாகும். இவற்றில் பெரும்பான்மையானவை பாட்டியல் நிகழ்ச்சிகளாகும்.
- புறப்பொருள்வெண்பாமாலை கைக்கிளைத்திணையின் கீழ் 19 துறைகளைக் கூறுகின்றது. தொல்காப்பியம் அகத்திணையில் குறித்த கைக்கிளையே புறப்பொருள்வெண்பாமாலையில் விரிந்தது. மேலும் தொல்காப்பியம், பாடாண் துறைகளை விளக்குகையில் கைக்கிளையைச் சுட்டுகிறது. தொல்காப்பியர் 'ஒருவரைப் புகழும் நோக்கில்' கைக்கிளைத் துறையினை இங்கு அமைத்திருக்க வேண்டும். வீரசோழியம் கைக்கிளையினையும் பெருந்திணையினையும் அகப்புறம் எனச் சுட்டுகிறது. இவை குறித்த துறைகள் எதையும் இந்நூல் கூறவில்லை. இலக்கண விளக்கமும், சுவாமிநாதமும் ஒழிபுப்பகுதியில் கைக்கிளை, பெருந்திணைகளைக் கூறுவதாகக் கொள்ளமுடிகிறது.
- புறப்பொருள்வெண்பாமாலை பெருந்திணையின் கீழ் 36 துறைகளைக் கூறுகிறது. தொல்காப்பியம், அகத்திணையியலில் கூறிய பெருந்திணையின்

நான்கு நிகழ்ச்சிகளே புறப்பொருள்வெண்பாமாலையில் 36 துறைகளாக வளர்ந்துள்ளன.

- புறப்பொருள்வெண்பாமாலையின் இறுதியில் அமைந்துள்ள ஒழிபுப் பகுதியில் 19 துறைகள் உள்ளன. தொல்காப்பியம் பாடாண்திணையில் குறித்த 'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்' எனும் துறையினைப் புறப்பொருள் வெண்பாமாலை இவ்வொழிபுப் பகுதியில் சுட்டுகிறது. ஏனைய துறைகள் தொல்காப்பியத்தில் இல்லாத புதிய துறைகளாகும்.
- தொல்காப்பியம், புறப்பொருள்வெண்பாமாலை, இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இந்நான்கு இலக்கணநூல்களும் புறத்துறைகளை விளக்கும் வகையில் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும், பெரும்பான்மையும் ஒத்தே அமைகின்றன. தொல்காப்பியத்தை விட பின்னைய நூல்களில் எண்ணிக்கையளவில் அதிகத் துறைகள் காணப்படுகின்றன. இதனைப் புறத்துறைகளின் வளர்ச்சியாகக் கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. கி.பாண்டுரங்கன், பண்டைத்தமிழர் போரியல் வாழ்க்கையும் தற்காலப்போர் நடவடிக்கையும், ப.45.
2. தொல்காப்பியம் - புறத்திணையியல், நூ. 5 ; 1-2.
3. எச்சினார்க்கினியர், தொல்காப்பியம் - புறத்திணையியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.100.
4. பெருந்தேவனார், வீரசோழியம் - மூலமும் உரையும், ப.116.
5. சுந்தரமகாலிங்கம், புறத்திணைவிருந்து, ப.107
6. இளம்பூரணர், தொல்காப்பியம் - புறத்திணையியல் உரைவளம், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.179.
7. பெருந்தேவனார், வீரசோழியம் - மூலமும் உரையும், பக்.113-114.
8. மேலது, பக். 114-115.
9. தொல்காப்பியம் - புறத்திணையியல், நூ. 23
10. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் - புறத்திணையியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.285.
11. தொல்காப்பியம் - புறத்திணையியல், நூ. 24
12. மேலது, நூ. 25 ; 1.
13. மேலது, நூ. 28.
14. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் - புறத்திணையியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.343.
15. பெருந்தேவனார், வீரசோழியம் - மூலமும் உரையும், ப.116.
16. வீரசோழியம் - பொருட்படலம், நூ. 86 ; 3-4
17. மேலது, நூ. 96; 3-4.
18. பெருந்தேவனார், வீரசோழியம் - மூலமும் உரையும், ப.118.
19. தொல்காப்பியம் - புறத்திணையியல், நூ. 29 ; 10
20. இளம்பூரணர், தொல்காப்பியம் - புறத்திணையியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.321.
21. தொல்காப்பியம் - அகத்திணையியல், நூ. 36

22. இலக்கணவிளக்கம், நூ. 619 ; 88-89

23. சுவாமிநாதம், நூ. 151 ; 6

24. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் - அகத்திணையியல் உரைவளம், மதுரைப் பல்கலைக்கழகம், ப.570.

25. பெருந்தேவனார், வீரசோழியம் - மூலமும் உரையும், ப.108.

26. தொல்காப்பியம் - அகத்திணையியல், நூ. 54

27. இளம்பூரணர், தொல்காப்பியம் - அகத்திணையில் உரைவளம், மதுரை பல்கலைக்கழகம், ப.554.

இயல்- 3

புறப்பொருளும் புறநானூறும்

புறப்பொருளும் புறநானூறும்

3.1 முன்னுரை

3.2 வெட்சித்திணை

3.3 கரந்தைத்திணை

3.3.1 செருமலைதல்

3.3.2 கையறுநிலை

3.3.3 நெடுமொழி, நீண்மொழி

3.3.4 வேத்தியல்

3.3.5 குடிநிலையுரைத்தல்

3.4 வஞ்சித்திணை

3.4.1 கொற்றவள்ளை

3.4.2 மழுபுலவஞ்சி

3.4.3 பெருஞ்சோற்றுநிலை

3.4.4 துணைவஞ்சி

3.5 காஞ்சித்திணை

3.5.1 பெருங்காஞ்சி

3.5.2 வஞ்சினக்காஞ்சி

3.5.3 பூக்கோட்காஞ்சி

3.5.4 மறக்காஞ்சி

3.5.5 தொடாக்காஞ்சி

3.5.6 மகட்பாற்காஞ்சி

3.5.7 மனையறம் துறவறம்

3.6 நொச்சித்திணை

3.6.1 செருவிடைவீழ்தல்

3.6.2 குதிரைமறம்

3.6.3 மகண்மறுத்தல்

3.7 தும்பைத்திணை

3.7.1 தானைமறம்

3.7.2 குதிரைமறம்

3.7.3 பாண்பாட்டு

3.1 முன்னுரை

சங்க இலக்கியத்துள் தலைசிறந்து விளங்கும் தொகை நூல் 'புறநானூறு' ஆகும். புறத்திணைகளுக்குரிய துறைப்பொருள் அமைந்த நானூறு பாடல்களைத் தன்னகத்துக் கொண்டமையால் இது 'புறநானூறு' எனப் பெயர் பெற்றது. இதன் நானூறு பாடல்களுள் இரண்டு பாடல்கள் (புறம். 267,268) முற்றிலும் சிதைந்து விட்டன. பல பாடல்கள் இடையிடையே சிதைந்து காணப்படுகின்றன. இந்நூலிலுள்ள பாடல்கள் எல்லாம் அகவற்பாக்கள் ஆகும். "பதிற்றுப்பத்து சேர மன்னர்களின் போர்ச் சிறப்புக்களைப்பற்றி மட்டும் கூறுவது. புறநானூறு ஒன்றே தமிழகத்து முடிவேந்தரும், குறுநில மன்னரும் தமிழ்நாட்டெங்கும் செய்த போர்களைக் கொண்டதாய்த் தலைமைசான்ற புறப்பொருள் நூலாக விளங்குவது"(1) என கிருட்டிணமூர்த்தியும், "இந்நூல் தமிழிலக்கியத்தின் அணையா விளக்கு; பழங்காலக் கருவூலம்; பண்டைத் தமிழர்களின் பண்பாட்டுச் சேமிப்பு. எட்டுத்தொகையுள் இதற்கிணையானது ஏதொன்றும் இல்லை. எத்தகைய புகழுக்கும் ஏற்றது புறநானூறு"(2) என சாமி சிதம்பரனும் இந்நூலினைப் போற்றுவர். இந்நூலில் பதினொரு புறத்திணைகளும், எழுபது புறத்துறைகளும் உள்ளன. புறநானூற்றிற்குத் திணை, துறை வகுத்தோர் கரந்தை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய திணைகளையும் புறநானூற்றுப் பாடல்களுக்கு வகுத்துக் கூறுவதால் தொல்காப்பியத்தைக் காட்டிலும் புறப்பொருள்வெண்பாமாலையையே பெரிதும் பின்பற்றியுள்ளனர் என்பது தெளிவாகிறது. புறநானூற்றின் எழுபது துறைப்பாடல்களையும், புறப்பொருள் இலக்கணத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பதாக இவ்வியல் அமைகிறது. இதன் மூலம் புறநானூற்றுப் பாடல்களின் துறைப்பொருத்தம் அறியமுடியும்.

3.2 வெட்சித்திணை

புறநானூற்றின் 257, 258, 262, 269, 297, ஆகிய ஐந்து பாடல்களும் வெட்சித்திணையின் 'உண்டாட்டு' என்னும் துறைக்கு உரியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 262-ஆவது பாடல் கூடுதலாக 'தலைத்தோற்றம்' எனும் துறையையும் பெறுகிறது.

"தொட்டிமிழுங் கழன்மறவர்
மட்டுண்டு மகிழ்தூங்கின்று"(3)

என்பது புறப்பொருள்வெண்பாமாலை 'உண்டாட்டு' துறைக்குத் தரும் கொளுவாகும். ஆநிரை கவர்ந்து வந்த வெட்சி மறவர் மதுவையுண்டு மனங்களித்து ஆடுவது இதன் பொருளாகும். புறநானூற்றில் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ள ஐந்து பாடல்களுள் 257-ஆவது பாடல் தவிர ஏனைய நான்கு பாடல்களும் மேற்கண்ட பொருளிலேயே அமைந்துள்ளன.

"................விளைந்த தேங்கந் தாரம்
நிறுத்த ஆயம் தலைச் சென்று உண்டு
பச்சூன் தின்று பைந்நிணம் பெருத்த
எச்சில் ஈரங்கை ...."(4)

எனப் புறநானூற்றின் 258-ஆவது பாடலில் உண்டு மகிழ்ந்த செய்தி வருகிறது. இந்நூலின் 269-ஆவது பாடலில்,

"..............................புலிக்கண் வெப்பர்
ஒன்றிரு முறையிருந்து உண்ட ...."(5)

எனவும் 297-ஆவது பாடலில்,

"...........................புரவே நாரரி
நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தித்"(6)

எனவும் 'உண்டாட்டு' இடம் பெறுகிறது.

ஆநிரை கவர்ந்து வருவதை உணர்ந்த சுற்றத்தார் மகிழ்வது 'தலைத்தோற்றம்' எனும் துறையாகும். இதனை,

"உரவெய்யோ னினந்தழீஇ

வரவுணர்ந்து கிளைமகிழ்ந்தன்று"(7)

என்ற கொளுவினால் புறப்பொருள் வெண்பாமாலை சுட்டுகிறது. புறநானூற்றின் 262-ஆவது பாடலின் துறை 'உண்டாட்டு; தலைத்தோற்றமுமாம்' எனக் குறிக்கப்படுகின்றது.

"நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்

பசுவல் இட்ட புன்கால் பந்தர்ப்

புனல்தரும் இளமணல் நிறையப் பெய்ம்மின்

ஓன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று

நிரையொடு வரூஉம் என்ஐக்கு

உழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே"(8)

இப்பாடலில், கரந்தையாரை வென்று ஆநிரையோடு வரும் வெட்சியாரின் வரவுணர்ந்த அவரது சுற்றத்தார் பெரிதும் மகிழ்ந்து, மதுவைப் பிழிந்தும் ஆட்டுக் கிடாய்களை வெட்டியும் அவ்வீரர்கள் உண்டாட்டு நிகழ்த்துவதற்கு உரியன செய்வதால் இப்பாடல் 'உண்டாட்டு', 'தலைத்தோற்றம்' எனும் இரண்டு துறைகளுக்கும் பொருந்தி வருகிறது.

புறநானூற்றின் 257-ஆவது பாடல் 'உண்டாட்டு' துறைக்குரியதாக குறிக்கப்பட்டபோதும் இப்பாடலில் இத்துறைப்பொருள் வெளிப்படையாக இல்லை. கரந்தையாரை வென்ற தானைத்தலைவரை ஒருவன் புகழ்வதாக அமைந்துள்ளது. இப்பாடலின் எவ்விடத்தும் உண்டு மகிழ்ந்ததான செய்தி இல்லை. ஆயின் 'கள்ளுண்டு மகிழும் போதே ஒருவன் தானைத் தலைவரைப் புகழ்ந்ததாகக் கொண்டு இப்பாடலினை உண்டாட்டுத்துறைக்குள் அடக்கியுள்ளனர்'(9) .

3.3 கரந்தைத் திணை

புறநானூற்றுள் பகைவரால் கவரப்பட்ட ஆநிரையை மீட்கும் செயலான கரந்தைத் திணையின் கீழ் பன்னிரெண்டு பாடல்கள் உள்ளன. அட்டவணை வருமாறு

	கரந்தைத் துறைகள்	புறநானூற்றுப்பாடல் எண்	எண்ணிக்கை
1	செருமலைதல் பிள்ளைப்பெயர்ச்சி*	259*	1
2	கையறுநிலை பாண்பாட்டு*	260*,261,263-265,270	6
3	நெடுமொழி	298	1
4	நீண்மொழி	287	1
5	வேத்தியல்	286,291	2
6	குடிநிலையுரைத்தல்	290	1
	மொத்தப்பாடல்கள்		12

*இரண்டு துறைகள் கொண்ட பாடல்

3.3.1 செருமலைதல்

இது 'போர்மலைதல்' எனப் புறப்பொருள்வெண்பாமாலையில் சுட்டப்படுகிறது. 'செரு என்பதற்குச் சண்டை, போர், ஊடல் என விளக்கம் தருகிறது கழகத்தமிழ் அகராதி'[10] இவ்விரண்டு நூல்களிலும் குறிக்கப்படுவது ஒரு துறையின் இருவேறு குறியீடுகளேயாகும்.

"வெட்சி யாரைக் கண்ணுற்று வளைஇ

உட்குவரத் தாக்கி உள்செருப் புரிந்தன்று"[11]

என்பது புறப்பொருள்வெண்பாமாலையின் 'போர்மலைதல்' குறித்த கொளுவாகும். கரந்தையார் ஆநிரையைக் கவர்ந்து செல்லும் வெட்சியாரை வளைத்துக் கொண்டு கடுமையாகப் போரிடல் இதன் பொருளாகும். புறநானூற்றின் 259-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகச் சுட்டப்படுகிறது. மேலும் இப்பாடல் 'பிள்ளைப்பெயர்ச்சி' எனும் துறையில் அடங்குவதாகவும் கூறப்பட்டுள்ளது.

"போர்தாங்கி புள்விலங்கியோனைத்

தார்வேந்தன் தலையளித்தன்று"[12]

என்பது 'பிள்ளைப்பெயர்ச்சி' ஆகும். தீ நிமித்தத்தைப் பொருட்படுத்தாது ஆநிரை மீட்டுவந்த மறவனை வேந்தன் சிறப்புச் செய்தல் இதன் பொருளாகும். ஆயின்

மேற்குறித்த புறப்பாடலில் இப்பொருள் இல்லையாதலால் 'பிள்ளைப்பெயர்ச்சி' துறையை இப்பாடல் பெறாது. 'ஆநிரை கவர்ந்து செல்லும் வெட்சியார் காட்டில் மறைந்திருந்து தாக்குவர் ஆதலின் அவர் காவலைக் கட்டழித்த பின் அல்லது நிரை மீட்க அவரிடையே செல்வது நன்றன்று' எனச் சான்றோர் நிரை மீட்கச் செல்லும் வீரருக்கு அறிவுறுத்துவது இப்பாடலின் பொருள்.

"இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந்து இருந்த
வல்வில் மறவர் ஒடுக்கம் காணாய்
செல்லல் செல்லல் ...."(13)

இது, போர்மலைதலுக்குக் கரந்தைமறவனை ஊக்குவிப்பதாக உள்ளதால் இப்பாடலினை 'போர்மலைதல்' துறைக்குள் அடக்கலாம்.

3.3.2 கையறுநிலை

புறநானூற்றின் 260, 261, 263-265, 270 ஆகிய ஆறு பாடல்கள் 'கையறுநிலை' துறையில் உள்ளன. இவற்றுள் 260-ஆவது பாடல் பாண்பாட்டுக்கும் உரியதாகக் குறிக்கப்படுகிறது. புறப்பொருள்வெண்பாமாலை கரந்தைத் திணையில்,

"வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு
கருவி மாக்கள் கையற வுரைத்தன்று"(14)

எனக் கையறுநிலைக்கு விளக்கம் தருகிறது. போரில் இறந்து பட்ட கரந்தை மறவன் நிலை கண்டு அவனால் புரக்கப்பட்ட பாணர் தம் கையறவு கூறுவது இதன் பொருளாகும். இத்துறைக்கு உரியனவாகப் புறநானூற்றில் குறிக்கப்படும் ஆறு பாடல்களும் மேற்குறித்த கொளுவின் பொருளிலேயே அமைந்துள்ளன.

"அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
இனிநட் டனரே கல்லும் கன்றோடு
கறவை தந்து பகைவ ரோட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது
இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே"(15)

எனும் பாடலடிகள் பாணரின் கையறவு நிலையினைத் தெளிவாக உணர்த்துகின்றன. இது போன்றே ஏனைய பாடல்களும் அமைகின்றன. புறநானூற்றின் 260-ஆவது பாடல் 'பாண்பாட்டு' எனும் துறைக்கும் உரியதாக வகுக்கப்பட்ட போதிலும் துறைப்பொருத்தம் அமையவில்லை.

"வெண்கோட்ட களிறெறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்
கைவல்யாழ்ப் பாணர் கடனிறுத்தன்று"(16)

என்பது 'பாண்பாட்டு' குறித்த புறப்பொருள் வெண்பாமாலையின் கொளுவாகும். போர்க்களத்தில் பட்ட மறவர்க்குப் பாணர் உரிமை செய்வதை இத்துறை குறிக்கிறது. ஆயின் மேற்குறித்த பாடலில் பாணர் உரிமை செய்தது போன்ற எந்த ஒரு செய்தியும் இல்லை. எனவே, இப்பாடலையும் (புறம். 260) 'கையறுநிலை' எனும் ஒரு துறைக்குள் அடக்கிக் கொள்ளலாம்.

3.3.3 நெடுமொழி, நீண்மொழி

புறநானூற்றில் 'நெடுமொழி' எனும் துறையின் கீழ் 298-ஆவது பாடலும் 'நீண்மொழி' எனும் துறையின் கீழ் 287-ஆவது பாடலும் குறிக்கப்படுகின்றன. 'நெடுமொழி' என்பதும் 'நீண்மொழி' என்பதும் ஒரே பொருளுடையனவாயினும் புறநானூற்றில் இருவேறுபட்ட துறைகளைப் போன்று குறிக்கப்படுகின்றன. புறப்பொருள் வெண்பாமாலை 'நெடுமொழி கூறல்' என இதனைச் சுட்டுகிறது.

"மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்
தன்மேம் பாடு தானெடுத் துரைத்தன்று"(17)

ஒரு மறவன் தனது பெருமையைத் தன் அரசனுக்குத் தானே எடுத்துக் கூறுவது இதன் பொருளாகும். புறநானூற்றின் 298-ஆவது பாடலில் மறவன் ஒருவன், தன்னைத் தன் வேந்தன் பகைவருடன் போரிட முன்னால் செல்க என ஏவாததால் வேந்தன் தன் மீது அன்பில்லாதவனாயினான் என்று கூறுகிறான்.

"இன்னான் மன்ற வேந்தே இனியே
நேரார் ஆரெயில் முற்றி
வாய்மடித்து உரறிநீ முந்தென் னானே"(18)

இங்கு ஒரு மறவன் தனது வீரப்பண்பைக் கூறுவதால் இப்பாடல் நெடுமொழி கூறலாயிற்று.

'புறநானூற்றின் 287-ஆவது பாடலில், யானையானது கொம்பால் குத்தினாலும் புறமுதுகிட்டு ஓடாதவர் எனவும், போரில் படுவதையே விரும்பும் இயல்புடையவர் எனவும் மறவரின் பெருமை பேசப்படுகிறது.

"................................ யானை

இலங்குவான் மருப்பின் நுதிமடுத்து ஊன்றினும்

ஓடல் செல்லாப் பீடுடை யாளர்"(19)

இப்பாடலும் 'நெடுமொழி கூறல்' துறையில் அடங்கும். இது மறவரின் கூற்றாக அமையாமல் பிறரின் கூற்றில் அமைந்துள்ளது. இவ்வேறுபாட்டைக் குறிக்கும் பொருட்டு 'நீண்மொழி' என்ற பெயரை இப்பாடலுக்கான துறைப் பெயராக வழங்கியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஒரு மறவன் தனது புகழைத் தான் கூறுவது 'நெடுமொழி' என்றும், பிறர் மறவனைக் குறித்துப் புகழ்வது 'நீண்மொழி' என்றும் வகுக்கும் பழக்கம் துறை வகுத்தோரிடையே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இவ்விரு பாடல்களிலும் கூற்றமைப்பில் மட்டுமே வேறுபாட்டைக் காணமுடிகிறது. எவ்வாறாயினும் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் 'நெடுமொழி கூறல்' எனும் துறைப்பொருண்மையையே இவ்விரு பாடல்களும் கொண்டுள்ளன.

3.3.4 வேத்தியல்

புறநானூற்றின் 286, 291 ஆகிய இரண்டு பாடல்கள் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன. இத்துறையினை,

"தோள்வலிய வயவேந்தனை

வாள்வலிமறவர் சிறப்புரைத்தன்று"(20)

என்கிறது புறப்பொருள்வெண்பாமாலை. மறவர் தனக்குச் சிறப்புச் செய்யும் மன்னனைப் புகழ்ந்தது, இதன் பொருளாகும்.

'தன்னோ ரன்ன விளைய ரிருப்பப்

பலர்மீது நீட்டிய மண்டையென்.........."[21]

எனவும்,

"கொன்னும் சாதல் வெய்யோற்குத் தன்தலை

மணிமருள் மாலைசூட்டி அவன்தலை

ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே"[22]

எனவும் மன்னன் மறவனுக்குச் சிறப்புச் செய்தமை புகழப்படுவதால் இப்பாடல்கள் வேத்தியல் ஆயிற்று.

3.3.5 குடிநிலையுரைத்தல்

புறப்பொருள்வெண்பாமாலையில் இது 'குடிநிலை' எனச் சுட்டப்படுகிறது.

"மண்திணி ஞாலத்துத் தொன்மையுமறனும்

கொண்டுபிற ரறியுங் குடிவர வுரைத்தன்று"[23]

என்பது புறப்பொருள் வெண்பாமாலையின் இத்துறை குறித்த கொளுவாகும். கரந்தை மறவர் தம் குடியினது வரலாற்றைப் புகழ்ந்து கூறுதல் இதன் பொருளாகும்.

"நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை

எடுத்தெறி ஞாட்பின் இமையான் தச்சன்

அடுத்தெறி குறட்டின் நின்றுமாய்ந் தனனே"[24]

எனப் புறநானூற்றின் 290-ஆவது பாடல் இப்பொருளில் அமைந்து 'குடிநிலையுரைத்தல்' ஆயிற்று.

3.4 வஞ்சித்திணை

வஞ்சித்திணையின் கீழ் புறநானூற்றில் பதினொரு பாடல்கள் நான்கு துறைகளில் அமைந்துள்ளன.

	வஞ்சித்துறைகள்	புறநானூற்றுப்பாடல்எண்	எண்ணிக்கை
1	கொற்றவள்ளை மழபுலவஞ்சி*	4,7*, 41	3
2	மழபுலவஞ்சி	16	1
3	பெருஞ்சோற்று நிலை	292	1
4	துணைவஞ்சி	36, 45-47,57,213	6
	மொத்தப்பாடல்கள்		11

* இரண்டு துறைகள் கொண்ட பாடல்

3.4.1 கொற்றவள்ளை

இத்துறையினைப் புறப்பொருள் வெண்பாமாலை,

"மன்னவன் புகழ்கிளந்
தொன்னார்நா டழிபிரங்கின்று"[25]

என்கிறது. வஞ்சிவேந்தனது புகழை எடுத்துக்கூறி அவனது பகை நாட்டின் அழிவிற்கு இரங்குதல் இதன் பொருள். புறநானூற்றின் 4,7,41 ஆகிய மூன்று பாடல்கள் இத்துறைக்கு உரியனவாகச் சுட்டப்படுகின்றன. இம்மூன்று பாடல்களும், வேந்தனது புகழ் கூறி அவனது பகைவனின் நாடழிபிற்கு இரங்குவனவாகவே உள்ளன.

"தோல் பெயரிய எறுழ் முன்பின்
எல்லையும் இரவும் எண்ணாய் பகைவர்
ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை ஆகலின் நல்ல
இல்லஆ குபவால் ...."[26]

இங்கு ஒரு வேந்தன் புகழப்படுவதுடன் அவனது பகைவனின் நாடழிபும் குறிக்கப்படுகிறது. ஏனைய புறநானூற்றின் 4,14 ஆகிய பாடல்களும் இதே பொருளமைப்புடையன எனவே இம்மூன்று பாடல்களும் 'கொற்றவள்ளை' துறைக்குள் அடங்கும்.

வஞ்சிவேந்தன் பகைவர் நாட்டைக் கொள்ளையிடுவது 'மழபுலவஞ்சி' ஆகும். மேற்குறித்த மூன்று பாடல்களுள் புறநானூற்றின் ஏழாவது பாடலில்,

"............................ பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலின் நல்ல
இல்லஆ குபவால் ...."(27)

எனப் பகைவரின் பொருட்கள் கொள்ளையிட்டது குறிக்கப்படுவதால் மழபுலவஞ்சிக்கும் ஆயிற்று.

3.4.2 மழபுலவஞ்சி

"கூடார்முனை கொள்ளைசாற்றி
வீடறக்கவர்ந்த வினைமொழிந்தன்று"(28)

என்பது 'மழபுலவஞ்சி' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். புறநானூற்றின் 16-ஆவது பாடல் இத்துறைக்கு உரியதாகக் குறிக்கப்படுகிறது.

"விளைவயல் கவர்பூட்டி"(29)

என்ற இப்பாடலடியில் பகைவரின் நெல்விளையும் வயல்கள் கொள்ளையிடப்பட்டமை குறிக்கப்படுவதால் 'மழபுலவஞ்சி' ஆயிற்று. மேலும் இப்பாடலில்,

"ஏம நன்னாடு ஒள்ளெரி ஊட்டினை"(30)

எனப் பகைவரின் நாடு தீக்கிரையாக்கப்பட்டமை குறிக்கப்படுகிறது. வஞ்சிவேந்தன் பகைநாட்டினைத் தீக்கொளுத்தியதை 'உழபுலவஞ்சி' என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை. இதன்படி இப்பாடலினை உழபுலவஞ்சியாகவும் கொள்ளவேண்டும். ஆயின் துறைவகுத்தோர் இதனைக் குறிக்கவில்லை.

3.4.3 பெருஞ்சோற்றுநிலை

புறநானூற்றின் 292-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகச் சுட்டப்பட்டுள்ளது.

"திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவரெனப்

பெருஞ்சோ றாடவர் பெறுமுறை வகுத்தன்று"(31)

என்பது இத்துறை குறித்த புறப்பொருள் வெண்பாமாலையின் கொளு. வஞ்சிவேந்தன் தன் மறவர்களுக்கு மிக்க சோற்றுத்திரளை அவர் கொள்ளும் முறையாலே கொடுத்தது இதன் பொருளாகும்.

"வேந்தற்கு ஏந்திய தீந்தண் நறவம்

யாம்தனக்கு உறுமுறை வளாவ ...."(32)

என இப்பாடலடிகளில் மேற்குறித்த பொருள் வருகிறது. ஆகையால் இப்பாடல் 'பெருஞ்சோற்றுநிலை' ஆயிற்று.

3.4.4 துணைவஞ்சி

'துணைவஞ்சி' எனும் துறையின் கீழ் புறநானூற்றின் 36,45-47,57,213 ஆகிய ஆறுபாடல்கள் உள்ளன. இத்துறையினை எந்த இலக்கணநூலிலும் காணமுடியவில்லை. இத்துறையினைச் சுட்டிய இலக்கணநூல் காலவசத்தால் அழிந்துபட்டிருக்கக் கூடும். அந்நூல் புறப்பொருள்வெண்பாமாலையைப் பெரிதும் ஒத்து அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் புறப்பொருள்வெண்பாமாலையே புறநானூற்றின் திணை, துறையோடு பெரிதும் ஒத்து அமைகின்றது. இது முன்பே சுட்டப்பட்டது.

புறநானூற்றில் இத்துறையின் கீழ் அமைந்துள்ள ஆறு பாடல்களையும் நோக்கும் போது 'சந்து செய்வித்தல்' துணைவஞ்சித் துறையின் பொருளாதல் வேண்டும். புறநானூற்றிற்கு உரை எழுதியுள்ள ஒளவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் புறநானூற்றின் 36-ஆவது பாடலுக்கு விளக்கம் எழுதுகையில், "மேற்சென்றோனைச் சந்து செய்து மீட்டலின் இது துணைவஞ்சியாயிற்று"(33) என்கிறார்.

"கடிமரம் தடியும் ஒசை தன்னூர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப
ஆங்கினி திருந்த வேந்தனொடு ஈங்குநின்
சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே"(34)

காவல் மரங்களை வெட்டி வீழ்த்தியது தெரிந்தும் போருக்கு வராமல் இருக்கும் பகை வேந்தனுடன் போரிடல் நாணந்தரும் செயலாகும். எனவே போரை ஒழிப்பாயாக என்று கூறி இப்பாடலில் வேந்தனொருவன் சந்து செய்விக்கப்படுகிறான். மேற்குறித்த ஆறு துணைவஞ்சித் துறைப் பாடல்களுள் 46,47-ஆகிய இரண்டு பாடல்கள் தவிர்த்த ஏனைய பாடல்கள் இதே போன்று போரை நீக்கி சந்து செய்விப்பனவாகும்.

புறநானூற்றின் 46-ஆவது பாடலில், வேந்தனொருவன் தனது பகைவனின் மக்களை யானைக் காற்கீழிட்டுக் கொல்ல முயன்றபோது,

"புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கண்நோ வுடையார்
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே"(35)

என்று கூறி, புலவர் ஒருவர் அச்செயலைத் தடுத்துச் சந்து செய்விக்கிறார். புறநானூற்றின் 47-ஆவது பாடலிலும் இதே போன்று, வேந்தனொருவன் தவறுதலாகப் புலவன் ஒருவனைக் கொல்ல முயன்றபோது மற்றொரு புலவர் அதனைத் தடுத்துச் சந்து செய்விக்கிறார். போரைத் தடுத்துச் சந்து செய்வித்தல் மட்டுமன்றி, ஒருவரைக் கொல்லாமற் சந்து செய்வித்தலும் 'துணைவஞ்சி' துறையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

3.5 காஞ்சித்திணை

புறநானூற்றில் காஞ்சித்திணையின் கீழ் முப்பத்திரெண்டு பாடல்கள் அமைந்துள்ளன. இவை ஏழு துறைகளில் அடங்குகின்றன.

	காஞ்சித்துறைகள்	புறநானூற்றுப்பாடல் எண்	எண்ணிக்கை
1	பெருங்காஞ்சி	359, 360, 365, 366	4
2.	வஞ்சினக்காஞ்சி	71 – 73	3
3	பூக்கோட்காஞ்சி	293	1
4	மறக்காஞ்சி பெருங்காஞ்சி*	357*	1
5	தொடாக்காஞ்சி	281	1
6	மகட்பாற்காஞ்சி	336 – 356	21
7	மனையறம்துறவறம்	358	1
	மொத்தப்பாடல்கள்		32

* இரண்டு துறைகள் கொண்ட பாடல்

3.5.1 பெருங்காஞ்சி

புறநானூற்றில் 359,360,365,366-ஆகிய நான்கு பாடல்கள் 'பெருங்காஞ்சி' துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன. புறப்பொருள் வெண்பாமாலை இத்துறையினை,

"தாங்குதிறல் மறவா் தத்தம் ஆற்றல்

வீங்குபெறும் படையின் வெளிப்படுத்தன்று"(36)

என்கிறது. காஞ்சி மறவா் வஞ்சிமறவரை எதிா்த்துத் தமது போா் வலிமையை வெளிப்படுத்துவது இதன் பொருளாகும். ஆயின் மேற்குறித்த புறநானூற்றின் நான்கு பாடல்களும் இப்பொருளில் அமையவில்லை.

தொல்காப்பியம் தனது காஞ்சித்திணையில்,

"மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்"(37)

எனப் 'பெருங்காஞ்சி' துறையைக் குறிக்கிறது. இதற்கு உரை எழுதிய இளம்பூரணா் "மாற்றுதற்கு அரிய கூற்றம் வருமெனச் சொல்லப்பட்ட பெருங்காஞ்சியும்"(38) என்கிறாா். புறநானூற்றின் 359-ஆவது பாடலில்,

"காடுமுன் னினரே நாடுகொண் டோரும்

நினக்கும் வருதல் வைகல் அற்றே"(39)

'சுடுகாட்டைப் பெருநாடுகளை வென்றோரும் சென்றடைந்தனர். உனக்கும் அதே நிலை நாளை நிலைபெறும்' எனக் குறிக்கப்படுகிறது. இங்குக் கூற்றம் தப்பாது வரும் என்பது மறைமுகமாகச் சுட்டப்படுவதால் 'பெருங்காஞ்சி' ஆயிற்று. புறநானூற்றின் ஏனைய 360,365,366-ஆகிய பாடல்களும் இதே பொருளமைப்பில் அமைந்து பெருங்காஞ்சித் துறைக்குள் அடங்குகின்றன.

புறப்பொருள் வெண்பாமாலை எல்லாத் திணைகளுக்கும் பொதுவான துறைகளைக் குறித்துள்ள பொதுவியல் படலத்திலும் பெருங்காஞ்சித் துறையைக் குறித்துள்ளது.

"மலையோங்கிய மாநிலத்து
நிலையாமை நெறியுரைத்தன்று"(40)

'உலகத்தில் தோற்றமுடையன யாவும் நிலையில்லாதன' என்பது இதன் பொருளாகும். இது மேற்கண்ட புறநானூற்றுப் பாடல்களின் பொருள்களோடும் தொல்காப்பியப் பெருங்காஞ்சியின் துறைப்பொருளோடும் ஒத்து அமைகிறது. புறப்பொருள் வெண்பாமாலை குறிக்கும் பொதுவியல் துறைகள் எல்லாத்திணை-களுக்கும் பொதுவானவை ஆகையால் இங்குப் பொதுவியலின் பெருங்காஞ்சித்துறை காஞ்சித்திணைக்கு வந்தது எனத் துணியலாம்.

3.5.2 வஞ்சினக்காஞ்சி

இத்துறையில் புறநானூற்றின் 71-73 ஆகிய மூன்று பாடல்கள் உள்ளன. புறப்பொருள் வெண்பாமாலை இத்துறையினை,

"வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப
வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று"(41)

எனக் குறிக்கிறது. காஞ்சிவேந்தன் தன் பகைவரை வெல்லும் பொருட்டுச் சூள் மொழிந்தது இதன் பொருளாகும்.

"மடங்கலின் சினைஇய மடங்கா உள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்னொடு பொருதும் என்ப அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறம் காணேன் ஆயின் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக"(42)

எனும் புறநானூற்றின் 71-ஆவது பாடலில், ஒரு வேந்தன் 'தனது பகைவரைப் புறமுதுகிட்டு ஓடும்படி செய்யாவிட்டால் தனது மனைவியைப் பிரிவேனாகுக' எனச் சூள்மொழிகிறான். இதே போன்று சூள் மொழியப்படுவனவாகவே புறநானூற்றின் ஏனைய 72,73 ஆகிய பாடல்களும் உள்ளன. எனவே, இப்பாடல்கள் அனைத்தும் 'வஞ்சினக்காஞ்சி' ஆயின.

3.5.3 பூக்கோட்காஞ்சி

புறப்பொருள் வெண்பாமாலையில் இத்துறை 'பூக்கோள்நிலை' எனக் குறிக்கப்படுகிறது.

"காரெதிரிய கடற்றானை
போரெதிரிய பூக்கொண்டன்று"(43)

என்பது இத்துறை குறித்த கொளு. காஞ்சிமறவர் போர் செய்தற் பொருட்டுத் தம் மன்னன்பாற் பூப்பெறுதல் இதன் பொருளாகும். புறநானூற்றின் 293-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகச் சுட்டப்படுகிறது.

"நிறப்புடைக்கு ஒல்கா யானை மேலோன்
குறும்பர்க்கு எறியும் மேவல் தண்ணுமை
நாணுடை மாக்கட்கு இரங்கு ...."(44)

இங்கு வள்ளுவன், பகைவருடன் போரிடும் பொருட்டு மறவர்கள் விரைந்து சென்று போர்ப்பூவை பெறுமாறு பறையொலி எழுப்புகிறான். எனவே, இப்பாடல் 'பூக்கோட்காஞ்சி ஆயிற்று.

3.5.4 மறக்காஞ்சி

புறப்பொருள்வெண்பாமாலை இத்துறைக்கு

1. வஞ்சியார் அஞ்சும்படி காஞ்சிவேந்தன் போரைச் செலுத்துதல்
2. காஞ்சி மறவன் பகைவர் உயர்ச்சியைப் பொறாது தன் விழுப்புண்ணைப் பிளந்து உயிர்நீத்தல்

ஆகிய இரண்டு பொருள்களைக் கூறியுள்ளது. தொல்காப்பியம்,

"பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழிந்து முடியும் மறத்தினானும்"(45)

எனக்குறிக்கிறது. ஔவை துரைசாமிப்பிள்ளையின் புறநானூற்று உரையில் 357-ஆவது பாடலுக்கு மறக்காஞ்சி, பெருங்காஞ்சி, ஆகிய இரண்டு துறைகள் கூறப்பட்டுள்ளன. உ.வே.சாவின் உரையில் 'பெருங்காஞ்சியுமாம்' என்று மட்டும் காணப்படுகிறது. முன்னைய துறை எதுவென்று தெரியவில்லை. இப்பாடலில் புண்கிழித்து மடியும் எச்செய்தியும் இடம் பெறவில்லை. எனவே, இப்பாடல் மறக்காஞ்சியில் அடங்காது என்பது தெளிவு.

"...............................துணையழத்
தொக்குயிர் வெளவுங் காலை"(46)

துணைவர்கள் தம்மிற் கூடி அழ கூற்றுவனால் உயிர் கொள்ளப்படும் என்ற செய்தி இங்கு வருவதால் இப்பாடலினைப் பெருங்காஞ்சித் துறையினைச் சார்ந்ததாகக் கொள்ள வேண்டும்.

3.5.5 தொடர்க்காஞ்சி

புறப்பொருள்வெண்பாமாலை இத்துறையினை,

"அடலஞ்சா நெருந்தகைபுண்
தொடலஞ்சித் துடித்து நீங்கின்று"(47)

என்கிறது. காஞ்சி மறவனுடைய புண்ணைத் தீண்டச் சென்ற பேய் தீண்ட அஞ்சி மீண்டது இதன் பொருளாகும்.

"தீங்கனி இரவமொரு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப்பு யாழொடு பல்இயம் கறங்கக்
கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலம் தோழி"(48)

எனும் புறநானூற்றின் 281-ஆவது பாடலில், புண்பட்ட ஒருவனைப் பேய்கள் நெருங்காதவாறு காக்கச்செய்யும் சடங்குகளை அவனது மனைவி செய்வதாக உள்ளது. இங்கு மனைவியானவள் பேய் தொடாதவாறு தனது புண்பட்ட கணவனைப் பாதுகாப்பதால் இப்பாடல் 'தொடாக்காஞ்சி' ஆயிற்று.

உ.வே.சாவின் உரையில் இந்தப் பாடலின் துறை பேய்க்காஞ்சி எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'களத்தில் விழுப்புண்பட்டு வீழ்ந்த மறவரைப் பேய் அச்சமுறுத்தியது' பேய்க்காஞ்சியின் பொருளாகப் புறப்பொருள் வெண்பாமாலை சுட்டுகிறது. ஆயின் மேற்குறித்த பாடலில் பேய்க்காஞ்சித் துறையின் பொருளில்லையாதலால், இப்பாடலினை பேய்க்காஞ்சித் துறைக்குரியதாகக் கூறுதல் பொருந்தாது.

3.5.6 மகட்பாற்காஞ்சி

ஒருவன் தன் மகளை விரும்பும் அரசனோடு மாறுபட்டு நின்றது இதன் பொருள்.

"ஏந்திழையாள் தருகென்னும்
வேந்தனோடு வேறுநின்றன்று"(49)

என்பது 'மகட்பாற்காஞ்சி' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். புறநானூற்றின் 336 முதல் 356 வரையுள்ள இருபத்தொரு பாடல்கள் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. புறநானூற்றின் 326-ஆவது பாடலில்,

"வேட்ட வேந்தனும் வெஞ்சினத் தினனே

கடவன கழிப்பு இவள் தந்தையும் செய்யான்"(50)

மகட்கொடை கேட்ட வேந்தனும் வெஞ்சினமுடையவன். மகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இவள் தந்தையும் செய்யமாட்டான் என மகண் மறுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. 338-ஆவது பாடலில்,

"........................ கருஞ்சினை

வேம்பு மாரும் போந்தையு மூன்றும்

மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்

கொற்ற வேந்தர் வரினும் தன்தக

வணங்கார்க்கு ஈகுவன் அல்லன் ...."(51)

முடிவேந்தர் மூவரும் மகட்கொடை வேண்டி வந்தாலும் தன் தகுதிக்கேற்பத் தன்னை வணங்கி இரந்து கேட்டார்க்கல்லது இவள் தந்தை மகட்கொடை நேரான் என்று மகட்கொடை மறுக்கும் செய்தி இடம்பெற்றுள்ளது. 341-ஆவது பாடலில்,

"வேந்துகுறை யுறவுங் கொடாஅன் ...."(52)

எனவும் 343-ஆவது பாடலில்

"புரையர் அல்லோர் வரையவள் இவள்எனத்

தந்தையும் கொடாஅன் ...."(53)

எனவும் மகட்கொடை மறுத்த செய்தி இடம் பெற்றுள்ளது. இது போன்றே ஏனைய பதினேழு பாடல்களின் மையக்கருத்துக்களும் மகண் மறுத்து மொழிவனவாக அமைவதால் இப்பாடல்கள் அனைத்தும் 'மகட்பாற்காஞ்சி' என்னும் துறைக்குள் அடங்குகின்றன.

3.5.7 மனையறம் துறவறம்

இலக்கண நூல்களில் இத்துறை இல்லை. புறநானூற்றின் 358-வது பாடல் 'மனையறம் துறவறம்' துறைக்குரியதாகச் சுட்டப்படுகிறது.

"வையமும் தவமும் தூக்கின் தவத்துக்கு

ஐயவி அனைத்தும் ஆற்றாது"(54)

என இப்பாடலில் மனையறத்தினும் துறவறமே சிறந்தது என்று குறிக்கப்படுகிறது. இதுவே இத்துறையின் பொருளாதல் வேண்டும்.

3.6 நொச்சித்திணை

புறநானூற்றில் இத்திணையின் கீழுள்ள ஆறு பாடல்கள் மூன்று துறைகளில் அமைகின்றன.

	நொச்சித்துறைகள்	புறநானூற்றுப்பாடல் எண்	எண்ணிக்கை
1	செருவிடைவீழ்தல்	271, 272	2
2	குதிரைமறம்	299	1
3	மகண்மறுத்தல்	109 - 111	3
	மொத்தப்பாடல்கள்		6

3.6.1 செருவிடைவீழ்தல்

அரண் காத்தற் பொருட்டுப் போரில் பட்ட நொச்சி மறவருடைய வெற்றியைச் சொல்லுதல் இதன் பொருளாகும். புறப்பொருள்வெண்பாமாலையில் இத்துறை,

“ஆழ்ந்துபடு கிடங்கோ டருமிளை காத்து
வீழ்ந்த வேலோர் விறல்மிகுத் தன்று”(55)

எனச் சுட்டப்படுகிறது. புறநானூற்றின் 271,272 ஆகிய இரண்டு பாடல்கள் இத்துறைக்குரியன.

“கருங்குரல் நொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
....
வெருவரு குருதியொடு மயங்கி உருவுகரந்து
ஒருவாய்ப் பட்ட தெரியல் ஊன்செத்துப்
பருந்து கொண்டு உகப்பயாங் கண்டனம்
மறம்புகல் மைந்தன் மலைந்த மாறே”(56)

இதில் நொச்சி மறவனோடு ஒருவன் தமது அரணைக் காக்கும் பொருட்டு உயிர்நீத்த செய்தி புகழப்படுகிறது. 272-ஆவது பாடலில்

"மணிதுணர்ந் தன்ன மாக்குரல் நொச்சி

....

ஊர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை

பீடுகெழு சென்னிக் கிழமையும் நினதே"(57)

என, ஊர்ப்புறத்தைக் கைவிடாது காக்கும் நொச்சி மறவன் புகழப்படுகிறான். இவ்விரு பாடல்களிலும் அரண் காக்கும் நொச்சி மறவரின் வீரம் புகழப்படுவதால், செருவிடை வீழ்தல் துறைக்குள் அடங்குகின்றன.

3.6.2 குதிரைமறம்

நொச்சியாரது குதிரையின் மறப்பண்பைப் பாராட்டுவது இத்துறையின் பொருள்.

"ஏமாண்ட நெடும்புரிசை

வாமானது வகையுரைத்தன்று"(58)

என்பது "குதிரைமறம்" என்னும் துறை குறித்த புறப்பொருள் வெண்பாமாலையின் கொளு.

"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்

உழுந்ததர் உண்ட ஓய்நடைப் புரவி

கடன்மண்டு தோணியில் படைமுகம் போழ"(59)

என புறநானூற்று 299-ஆவது பாடலில், கடலைப் பிளந்து கொண்டு செல்லும் தோணி போலப் பகைவருடைய படையை நடுவில் இடம் உண்டாகும்படிச் சென்று போர் புரிவதாகக் குதிரையின் மறப்பண்பு பாராட்டப்படுவதால் இப்பாடல் 'குதிரைமறம்' துறைக்குள் அடங்கியது.

3.6.3 மகண்மறுத்தல்

முன்னர் குறிக்கப்பட்ட மகட்பாற்காஞ்சித்துறை காஞ்சித் திணையில் அமைந்ததாகும். அது வஞ்சிவேந்தனுக்கு காஞ்சிவேந்தன்

மகண்மறுத்தலைக் குறிக்கிறது. இங்கு நொச்சித் திணையில் இடம்பெறும் மகண்மறுத்தலாவது உழிஞையரசன் மகட்கொடை கேட்க நொச்சியரசன் மறுத்தலைச் சுட்டுகிறது.

"வெம்முரணான் மகள்வேண்ட

அம்மதிலோன் மறுத்துரைத்தன்று"[60]

என்பது இதனைக் குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். புறநானூற்றின் 109-111 ஆகிய மூன்று பாடல்கள் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்ட போதிலும் எவ்விடத்தும் இது போன்ற மகண்மறுத்த செய்தி இடம் பெறவில்லை.

"அளிதோ தானே பாரியது பறம்பே

நளிகொண் முரசின் மூவிரும் முற்றினும்

....

யான்அறி குவென் அதுகொள்ளும் ஆறே

சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி

விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர

ஆடினிர் பாடினிர் செலினே

நாடும் குன்றும் ஒருங்குஈ யும்மே"[61]

'பாரியினுடைய பறம்பினைப் போரிட்டுக் கைப்பற்றுதல் இயலாது. எனவே அவன் பால் சென்று சீறிய யாழினை இசைத்து ஆடிப்பாடினால் நாட்டையும் குன்றையும் ஒருங்கே தருவான்' என்பது மேற்கண்ட பாடலின் கருத்தாகும். இதே பொருளில் புறநானூற்றின் 110,111-ஆகிய பாடல்களும் அமைகின்றன. இவற்றில் 'மகண்மறுத்தல்' இல்லை. 'இப்பாடல்கள், பாரியின்பால் மகட்கொடை வேண்டி மறுக்கப்பட்ட மூவேந்தரும் அவனது பறம்பு மலையினைச் சூழ்ந்து கொண்டு உழிஞைப்போர் புரிந்தபோது பாடப்பட்டவைகளாகும்'[62]. இதனைக் கருத்தில் கொண்டு இம்மூன்று பாடல்களையும் நோக்கும்போது இப்பாடல்களை மகண்மறுத்தலுக்குரியதாகக் கொள்ள முடிகிறது. இதன் மூலம் பாடலின் பொருளளவில் மட்டுமல்லாமல், பாடப்பட்ட சூழலையும் கருத்தில் கொண்டே துறை வகுக்கப்பட்டமையை அறியமுடிகிறது.

3.7 தும்பைத்திணை

புறநானூற்றில் தும்பைத்திணையின் கீழ் இருபத்தேழு பாடல்கள் பத்துத் துறைகளில் அமைகின்றன.

	தும்பைத்துறைகள்	புறநானூற்றுப்பாடல்எண்	எண்ணிக்கை
1	தானைமறம்	87-90, 294, 300, 301	7
2	குதிரைமறம்	273, 302-304	4
3	பாண்பாட்டு	283, 284, 311	3
4	எருமைமறம்	80, 274, 275	3
5	நூழிலாட்டு	309, 310	2
6	களிற்றுடனிலை	307	1
7	தானைநிலை	276	1
8	மூதின்முல்லை	288	1
9	உவகைக்கலுழ்ச்சி	277,278,295	3
10	தொகை நிலை	62,63	2
	மொத்தப்பாடல்கள்		27

3.7.1 தானைமறம்

புறப்பொருள்வெண்பாமாலை இத்துறைக்கு மூன்று பொருள்களைக் கூறியுள்ளது. அவை,

1. பொருதற் கெதிர்ந்த படைகள் தம்முள் ஒத்த ஆற்றலுடைமை காரணமாகப் போர் செய்து மடியாமல் விலக்குதல்
2. அரசனுக்கு உறுதி கூறிப் போர் செய்வித்தல்
3. தும்பை மன்னனது படையின் மேம்பாட்டைக் கூறி பகைவரது கேட்டிற்கு இரங்குதல்

என்பனவாகும். இவை 'படையினது மறத்தினைப்' புகழ்ந்து பேசுவதால் 'தானைமறம்' என்ற பெயரினைப் பெற்றன. இத்துறையினைச் சேர்ந்தவையாக புறநானூற்றின் 87-90, 294, 300, 301 ஆகிய ஏழு பாடல்கள் குறிக்கப்படுகின்றன.

இவற்றுள் 90-ஆவது பாடல் தவிர ஏனைய ஆறு பாடல்களும் தும்பை மன்னனது படையின் மேம்பாட்டைக் கூறுதல் என்ற வகையில் அமைந்துள்ளன.

“களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர்எதிர்ந்து
எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே”(63)

இப்பாடலில் தும்பை மறவன் ஒருவனின் போர்த்திறம் கூறப்படுவதோடு பகைவர்களைப் போர்க்களம் புகாதீர்கள் என அறிவுறுத்தவும் படுகிறது. 300-ஆவது பாடலில்

“நெருநல் எல்லைநீ எறிந்தோன் தம்பி
அகல்பெய் குன்றியின் சுழலும் கண்ணன்
பேரூர் அட்ட கள்ளிற்கு
ஓரில் கோயில் தேருமால் நின்னை”(64)

எனத் தும்பை மறவன் ஒருவனின் வீரமும் பகைவர் அழிவது உறுதி என்பதும் குறிக்கப்படுகின்றன. இப்பாடல்கள் தும்பை மன்னனது படையின் மேம்பாடு கூறி பகைவரது கேட்டிற்கு வருந்துதல் எனும் அடிப்படையில் அமைந்து ‘தானைமறம்’ துறையில் அடங்குகின்றன. இத்துறையின் ஏனைய [புறம். 88, 89, 294,301] ஆகிய புறப்பாடல்களும் இதே பொருளமைப்புடையன.

புறநானூற்றின் 90-ஆவது பாடல்,

“வரிமணன் ஞெமரக் கல்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ
எழுமரம் கடுக்கும் தாள்தோய் தடக்கை
வழுஇல் வன்கை மழவர் பெரும
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரும் உளரோ நீகளம் புகினே”(65)

என, மன்னனுக்கு உறுதிகூறி போர்செய்வித்தல் என்ற அடிப்படையில் அமைந்து தானைமறத் துறையில் அடங்குகிறது.

3.7.2 குதிரை மறம்

குதிரை மறத்துறையில், புறநானூற்றில் 273, 302-304 ஆகிய நான்கு பாடல்கள் உள்ளன. இத்துறையினைப் புறப்பொருள் வெண்பாமாலை,

"எறிபடையான் இகலமருள்

செறிபடைமான் திறங்கிளந்தன்று"(66)

என்கிறது. தும்பையானுடைய குதிரையின் திறம் சொல்லுதல் இதன் பொருள்.

"இருபேர் யாற்ற ஒருபெருங் கூடல்

விலங்கிடு பெருமரம் போல

உலந்தன்று கொல்அவன் மலைந்த மாவே"(67)

என 273-ஆவது பாடலிலும்,

"வெடிவேய் கொள்வது போல ஓடித்

தாவுபு உகளும் மாவே ...."(68)

என 302-ஆவது பாடலிலும்,

"நிலம்பிறக் கடுவது போல்குளம்பு கடையூஉ

உள்ளம் ஒழிக்கும் கொட்பின் மான்........."(69)

என 303-ஆவது பாடலிலும்,

"வளிதொழில் ஒழிக்கும் வண்பரிப் புரவி"(70)

என 304-ஆவது பாடலிலும் தும்பையாருடைய குதிரையின் திறம் பேசப்படுவதால், இப்பாடல்கள் அனைத்தும் 'குதிரைமறம்' துறைக்குள் அடங்குகின்றன.

3.7.3 பாண்பாட்டு

புறநானூற்றில் 283, 284, 311 ஆகிய மூன்று பாடல்கள் இத்துறையில் இடம்பெற்றுள்ளன. போர்க்களத்தில் பட்ட மறவர்க்குப் பாணர் உரிமை செய்வது இத்துறையின் பொருளாகும். இதனை,

"வெண்கோட்ட களிறெறிந்து செங்களத்து வீழ்ந்தாருக்குக்

கைவல்யாழ்ப் பாணர் கடனிறுத் தன்று"(71)

என்ற கொளுவில் புறப்பொருள்வெண்பாமாலை எடுத்தியம்புகிறது. சோமசுந்தரனார், "பாணர் கடனாவது, போரிற் பட்ட மறவர்தம் உடலைத் தீப்பெய்து அவர்தம் புகழைத் தம் யாழினோடிசைத்துப் பாடுதல்"(72) என்கிறார்.

புறநானூற்றின் 283,284,311-ஆகிய மூன்று பாடல்களும் பாண்பாட்டுத் துறையைச் சேர்ந்தவையாகக் குறிக்கப்பட்ட போதிலும், இப்பாடல்களில் எவ்விடத்தும் மேற்குறித்த துறைப்பொருள் இல்லை. இம் மூன்று பாடல்களிலும் தும்பை மறவனின் வீரமே புகழப்படுகிறது.

"தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமம் தாங்கி முன்னின்று எறிந்த
ஒருகை இரும்பிணத்து எயிறு மிறையாகத்
திரிந்த வாய்வாள் திருத்தாத்
தனக்கிரிந் தானைப் பெயர்புறம் நகுமே"(73)

இது போன்ற பொருளிலேயே இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்ட ஏனைய இரண்டு பாடல்களும் [புறம் 283,311] அமைகின்றன. இப்பாடல்கள் 'பாண்பாட்டு' என்ற துறைப்பெயரினைப் பெற்றதற்கான காரணத்தை, "புலவர் ஆக்கித் தரும் இதனைப் பாணன் தன் யாழிலிட்டுப் பாடுதலின் துறை அவன் மேலதாயிற்று"(74) என்கிறார் ஔவை துரைசாமிப்பிள்ளை. புறநானூற்றுக்குத் துறை வகுத்தோர் பாடல் பாடப்பட்ட இடம், காலம், நிலை ஆகியவற்றையும் கருத்தில் கொண்டே துறை வகுத்துள்ளனர் என்பது முன்னர் விளக்கப்பட்டது. அவ்வகையில் மேற்கண்ட பாடல்கள், துரைசாமிப்பிள்ளை கூறியுள்ளது போன்று பாணர்களால் பாடப்பட்டு அதன் காரணமாக இத்துறைப் பெயரினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3.7.4 எருமை மறம்

மறவன் ஒருவன் புற முதுகிட்டோடும் தன் படைக்குப் பின்னே நின்று சினந்து பகைவரைத் தடுத்தல் 'எருமை மறம்' ஆகும். இதனை

"வெயர்பொடிப்பச் சினங்கடைஇப்
பெயர்படைக்குப் பின்னின்றன்று"(75)

எனப் புறப்பொருள்வெண்பாமாலை குறிக்கிறது. புறநானூற்றின் 80,274,275 ஆகிய மூன்று பாடல்கள் இத்துறைக்குரியனவாகச் சுட்டப்படுகின்றன. இம்மூன்று பாடல்களிலும் தும்பை மறவன் ஒருவன் பகைவர்கள் அஞ்சியலறிச் சிதையுமாறு எருமை போன்று போர்புரிவது சுட்டப்படுகிறது.

"..................... மாதோ இவற்கே செற்றிய
திணிநிலை அலறக் கூவை போழ்ந்து"(76)

எனவே இப்பாடல்கள் 'எருமை மறம்' துறையில் அடங்குகின்றன.

3.7.5 நூழிலாட்டு

"களங்கழுமிய படையிரிய
உளங்கிழித்தவேல் பறித்தோச்சின்று"(77)

என்பது 'நூழிலாட்டு' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளு. ஒரு மறவன் தனது மார்பைப் பிளந்த பகைவர் வேலினைப் பறித்து அப்பகைவர் இரிந்தோட எறிந்தது இதன் பொருளாகும். புறநானூற்றின் 309,310 ஆகிய இரண்டு பாடல்களும் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

"மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
உளனென வெரூஉம் ஓர்ஒளி
வலன்உயர் நெடுவேல் என்ஐகண் ணதுவே"(78)

என இப்பாடலில் நூழிலாட்டின் விளைவாகப் பிறந்த சிறப்பு கூறப்படுவதால், இப்பாடல் 'நூழிலாட்டு' துறையானது புறநானூற்றின் 310-ஆவது பாடலில்,

"உன்னிலன் என்னும் புண்ஒன்று அம்பு
மான்உளை மன்ன குடுமித்
தோல்மிசைக் கிடந்த புல்அண லோனே"(79)

என மறவன் ஒருவன், பகைவர் விட்ட அம்பு தனது மார்பில் தைத்துப் புண்ணாக்கியதைப் பொருட்படுத்தாமல் இருப்பது சுட்டப்படுகிறது. எனவே, இப்பாடல் 'நூழிலாட்டு' துறையானது.

3.7.6 களிற்றுடனிலை

மறவன் ஒருவன் யானையின் மேல் வேலெறிந்து வீழ்த்தி அந்த யானையின் கீழ் பட்டது இத்துறையின் பொருளாகக் கூறப்படுகிறது. இதனை

"ஒளிற்றெ.'.கம் படவீழ்ந்த

களிற்றின்கீழ்க் கண்படுத்தன்று"(80)

என்கிறது புறப்பொருள்வெண்பாமாலை. புறநானூற்றின் 307-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகக் கூறப்பட்டுள்ளது.

"குன்றத் தன்ன களிற்றொடு பட்டோன்"(81)

என இப்பாடலில், மறவன் ஒருவன் களிற்றைக் கொன்று தானும் பட்டமை சுட்டப்படுவதால் இப்பாடல் 'களிற்றுடனிலை' ஆயிற்று.

3.7.7 தானைநிலை

"இருபடையும் மறம்பழிச்சப்

பொருகளத்துப் பொலிவெய்தின்று"(82)

என்பது தும்பை 'தானைநிலை' குறித்த புறப்பொருள் வெண்பாமாலையின் கொளு. மன்னர் இருவரின் படைகளும் களத்திலே தன்னை வாழ்த்தும்படி மறவன் ஒருவன் சிறப்பெய்துதல் இதன் பொருளாகும். புறநானூற்றின் 276-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகக் குறிக்கப்படுகிறது.

"மடப்பால் ஆய்மகள் வள்உகிர்த் தெறித்த

குடப்பால் சில்லுறை போலப்

படைக்குநோய் எல்லாம் தான்ஆ யினனே"(83)

இதில் 'பேரளவில் வந்த படைத்திரளை உடைத்துக் கெடுக்கும் நோய் முழுவதற்கும் தான் ஒருவனே காரணமாயினான்', என்று ஒரு மறவன் புகழப்படுகிறான். இத்தகையோனை இருபடையினரும் புகழ்தல் இயல்பான ஒன்றாகும். எனவே இப்பாடல் 'தானைநிலை' ஆயிற்று.

3.7.8 மூதின்முல்லை

இலக்கண நூல்கள் சுட்டும் தும்பைத்திணையில் 'மூதின்முல்லை' என்ற பெயரில் துறை இல்லை. புறப்பொருள்வெண்பாமாலையின் வாகைத் திணையிலேயே 'மூதின்முல்லை' உள்ளது. மறக்குடி மகளிரின் மறப்பண்பைக் கூறுதல் இதன் பொருளாகும். எனின் புறநானூற்றில் மூதின்முல்லைத் துறைக்குரியதாகக் குறிக்கப்படும் 288-ஆவது பாடல் இப்பொருளோடு ஒத்து அமையவில்லை.

"ஆரமர் மயங்கிய ஞாட்பின் தெறுவர
நெடுவேல் பாய்ந்த நாணுடை நெஞ்சத்து
அருகுகை .... மன்ற
குருதியொடு துயல்வரு மார்பின்
முயக்கிடை ஈயாது மொய்த்தன பருந்தே"(84)

'போர்க்களத்தில் பகைவர் விட்ட அம்பால் மாண்ட தலைவனை அவனது மனைவியானவள் தழுவ இடந்தராது பருந்துகள் மொய்த்தன', என்பது இப்பாடலின் மையக்கருத்தாகும். இந்தப் பொருள் புறப்பொருள்வெண்பாமாலை தும்பைத் திணையில் கூறியுள்ள சிருங்காரநிலைத் துறையுடன் பொருந்தி வருகிறது.

"புகைபுகழக் கிடந்தானை
முகை முறுவலார் முயக்க மார்ந்தன்று"(85)

போர்க்களத்தில் பட்டுக்கிடந்த மறவன் உடலை மகளிர் தழுவும், இத்துறைப்பொருள் மேற்கண்ட பாடற்பொருளுடன் ஒத்து அமைகிறது. எனவே, புறப்பொருள் வெண்பாமாலையின் அடிப்படையில் நோக்கினால் புறநானூற்றின் 288-ஆவது பாடலை 'சிருங்காரநிலைத் துறைக்குள்' அடக்க வேண்டும்.

3.7.9 உவகைக்கலுழ்ச்சி

"வாள்வாய்ந்த வடுவாழ் யாக்கைக்
கேள்கண்டு கலுழ்ந்துவந்தன்று"(86)

என்பது புறப்பொருள்வெண்பாமாலை உவகைக்கலுழ்ச்சிக்குக் கூறிய கொளுவாகும். போர்க்களத்தில் விழுப்புண்பட்டு மாய்ந்தவனை அவன் இறக்கிழத்தி கண்டு உவந்து கண்ணீர் உகுத்தது இதன் பொருளாகும். புறநானூற்றின் 277, 278, 295 ஆகிய மூன்று பாடல்கள் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன. இம்மூன்று பாடல்களிலும் தாயானவள் தன் மகன் போர்க்களத்தில் பெரும்போர் செய்து மாண்டமை குறித்து உவந்து கண்ணீர் உகுக்கிறாள்.

> "களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
> ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
> நோன்கழை துயல்வரும் வெதிரத்து
> வான்பெயத் தூங்கிய சிதரினம் பலவே"(87)

எனவும்,

> "சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
> வாடுமுலை ஊறிச் சுரந்தன
> ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே"(88)

எனவும்,

> "படுமகன் கிடக்கை காணூஉ
> ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"(89)

எனவும் இப்பாடல்களில் தாயின் 'உவகைக்கலுழ்ச்சி' குறிக்கப்படுகிறது. புறநானூற்றிற்குத் துறைவகுத்தோர் மனைவி மட்டுமன்றி, தாயின் நிலையையும் இத்துறைக்குரியதாகவே கொண்டுள்ளனர்.

3.7.10 தொகைநிலை

போரிட்ட இரண்டு மன்னர்களும் அவர்களது படைகளும் ஒருவரொழியாமற் களத்தில் பட்டது 'தொகைநிலை' ஆகும். இதனை

> "அழிவின்று புகழ்நிறீஇ
> ஒழிவின்று களத்தொழிந்தன்று"(90)

என்ற கொளுவில் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டுகிறது. புறநானூற்றின் 62,63 ஆகிய இரண்டு பாடல்கள் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

"அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாம்மாய்ந் தனரே........................
....
பன்னூறு அடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடங்கெட ஈண்டிய வியன்கண் பாசறைக்
களங்கொளற் குரியோர் இன்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றால்........................"(91)

எனப் புறநானூற்றின் 62-ஆவது பாடலில் அரசரோடு மறவர் அனைவரும் மாண்ட செய்தி குறிக்கப்படுகிறது. இதன் 63-ஆவது பாடலிலும்,

"தேர்தர வந்த சான்றோர் எல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்குமாய்ந் தனரே
....
சாந்தமை மார்பில் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர்......"(92)

என, இருபடையினரும் தொகையாக மாண்ட செய்தி கூறப்பட்டுள்ளது. எனவே இவ்விரு பாடல்களும் 'தொகைநிலை' ஆயின.

3.8 வாகை

இத்திணையில் புறநானூற்றில் 80 பாடல்கள் உள்ளன. இவை ஒன்பது துறைகளில் அமைகின்றன. சில பாடல்கள் இரண்டு துறைகளைப் பெற்று வருகின்றன.

	வாகைத்துறைகள்	புறநானூற்றுப்பாடல் எண்கள்	எண்ணிக்கை
1	அரசவாகை		
	இயன்மொழி*	17*,19-21,22*,23•,25,26,31+	
	நல்லிசை வஞ்சி•	33,37⊕,42-44,51-54,61,66	
	மழபுலவஞ்சி+	76-79,81,82,93,94,98-100,104,	
	முதல் வஞ்சி⊕	125,167,174	35
2.	மறக்களவழி ஏர்க்கள உருவகம்•	368, 369*, 370, 371, 373*	5
3.	மறக்களவேள்வி	372	1
4.	பார்ப்பன வாகை	166, 305	2
5.	தாபதவாகை	251, 252	2
6.	மூதின்முல்லை	279, 306, 308, 312, 326-335	14
7.	ஏறாண் முல்லை	86, 296	2
8.	வல்லாண் முல்லை தானை மறம்* பாணாற்றுப்படை•	170*, 178-180•, 181, 313-325	18
9.	சால்பு முல்லை	285	1
	மொத்தப்பாடல்கள்		80

*, •, +, ⊕ - இரண்டு துறைகளைக் கொண்ட பாடல்கள்.

3.8.1 அரசவாகை

"பகலன்ன வாய்மொழி
இகல்வேந்தன் இயல்புரைத்தன்று"(93)

இது "அரசவாகை" குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். செங்கோன்மையையுடைய அரசனது இயல்பினைணக் கூறுவது இதன் பொருள். தொல்காப்பியம் இதனை,

"ஐவகை மரபின் அரசர் பக்கமும்"(94)

எனச் சுட்டுகிறது. இதற்கு உரை எழுதிய இளம்பூரணர் ஐவகை அரசர் பக்கங்களாவன, "ஓதலும், வேட்டலும், ஈதலும், படை வழங்குதலும், குடியோம்புதலுமாம்"(95) என்கிறார்.

புறநானூற்றில் இத்துறைக்குரியனவாக 35 பாடல்கள் உள்ளன. அவற்றுள் அரசவாகையோடு இயன்மொழித் துறையையும் பெறுவனவாக இரண்டு பாடல்களும் (புறம். 17,22), அரசவாகையோடு நல்லிசை வஞ்சித்துறையையும் பெறுவதாக ஒரு பாடலும் (புறம். 23), அரசவாகையோடு மழபுலவஞ்சித் துறையையும் பெறுவதாக ஒரு பாடலும் (புறம. 31), அரசவாகையோடு முதல்வஞ்சித் துறையையும் பெறுவதாக ஒரு பாடலும் (புறம. 37) அமைகின்றன. ஏனைய 19-21, 25, 26, 33, 42-44, 51-54, 61, 66, 76-79, 81, 82, 93, 94, 98, 99, 100, 104, 125, 167, 174 ஆகிய முப்பது பாடல்களும் அரசவாகைத் துறைக்கு மட்டுமே உரித்தான பாடல்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவை அரசனது வாகைத் தன்மைகளைக் கூறும் விதத்தில் பின்வரும் பாகுபாட்டிற்குள் அடங்குகின்றன.

1. பகைவரிடத்து வெவ்விய ஆற்றலினையும் நண்பரிடத்துக் குளிர்ந்த அருளையும் உடையவனாதல்
2. செங்கோன்மையுடன் மக்களைக் காத்தல்
3. பகைவரை வென்றமை
4. நற்குணம்

மேற்குறித்த பாடல்களில் அரசனின் வாகைத் தன்மைகள் கூறப்படுவதோடு, புறநானூற்றின் 44-ஆவது பாடலில் 'மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசனின் கடமை' சுட்டிக் காட்டப்படுகிறது. இத்தகைய அறிவுறுத்தலையும் துறைவகுத்தோர் 'அரசவாகை' என்றே சுட்டியுள்ளனர்.

இங்கு முதலாவதாகக் குறித்துள்ள பகைவரிடத்து வெவ்விய ஆற்றலினையும் நண்பரிடத்துக் குளிர்ந்த அருளையும் உடைய வேந்தனது வாகைத் தன்மையைக் கூறுவனவாகப் புறநானூற்றின் 19, 51, 54, 61, 94 ஆகிய ஐந்து பாடல்கள் அமைகின்றன.

"இனியை பெரும எமக்கே மற்றதன்

துன்னரும் கடாஅம் போல

இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே"(96)

என்பது புறநானூற்று 94-ஆவது பாடற் பொருளாகும். இது போன்ற பொருளமைப்பிலேயே ஏனைய நான்கு பாடல்களும் அமைந்து அரசவாகைத் துறையில் அமைகின்றன. வேந்தன் செங்கோன்மையுடன் மக்களைக் காப்பதாகப் புறநானூற்றின் 20, 42, 174 ஆகிய மூன்று பாடல்கள் அமைகின்றன.

"அறம்துஞ்சும் செங்கோலையே

புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்

விதுப்புற அறியா ஏமக் காப்பினை"(97)

என்பது பாடல். புறநானூற்றின் ஏனைய 42, 174 ஆகிய இரண்டு பாடல்களும் இதே பொருளுடன் அமைந்து அரசவாகைத் துறையில் அடங்குகின்றன.

வேந்தனின் படைத்திறம் கூறுவனவாகப் புறநானூற்றின் 21, 25, 26, 33, 52, 53, 66, 76, 77, 78, 79, 81, 82, 93, 98, 99, 100, 104, 125, 167 ஆகிய 20 பாடல்கள் அமைகின்றன. இப்பாடல்கள் அனைத்திலும் பகைவரை வென்ற திறம் கூறப்படுகிறது.

"............................. கொற்ற வேந்தே

இகழுநர் இசையொடு மாயப்

புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே"(98)

என புறநானூற்றின் 21-ஆவது பாடலிலும்,

"உடலருந் துப்பின் ஒன்றுமொழி வேந்தரை

அணங்கரும் பறந்தலை உணங்கப் பண்ணி"(99)

என புறநானூற்றின் 25-ஆவது பாடலிலும் வேந்தன் பகைவரை வென்ற வாகைத்தன்மை கூறப்படுவதால் இப்பாடல்கள் அரசவாகைத் துறையாயிற்று. ஏனைய 18 பாடல்களும் இதே பொருளமைப்புடையனவாய் அமைந்து அரசவாகைத் துறையில் அடங்குகின்றன.

அரசனின் நற்குணத்தினைக் கூறுவதாகப் புறநானூற்றின் 43-ஆவது பாடல் அமைகிறது.

"நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்
நீபிழைத் தாய்போல் நனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணும் எனக்
காண்டகு மொய்ம்ப காட்டினை................"(100)

நற்குணத்தைப் பொறுத்தே செங்கோன்மை அமையுமாதலால் இப்பாடலும் அரசவாகையாயிற்று.

புறநானூற்றின் 44-ஆவது பாடல்,

"பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீர்இல்
வினைபுனை நல்லில் இனைகூவக் கேட்பவும்
இன்னாது அம்ம ஈங்கினிது இருத்தல்"(101)

என, வேந்தன் அரணினுள் இருந்தபோது அவனது கடமை சுட்டப்படுகின்றது. இத்தகைய பொருளமைப்புடைய பாடலையும் துறைவகுத்தோர் அரசவாகைத் துறைக்குள்ளேயே அடக்கியுள்ளனர்.

புறநானூற்றின் 17,22 ஆகிய இரண்டு பாடல்களும் 'அரசவாகை'த் துறையோடு இயன்மொழித்துறையையும் பெறுகின்றன. அரசனின் இயல்பையும் கொடையையும் கூறுவது இயன்மொழியாகும்.

"கொடிதுகடிந்து கோல்திருத்திப்"(102)

எனச் செங்கோன்மையும்,

"வரையா ஈகைக் குடவர் கோவே"(103)

எனக் கொடைத்தன்மையும் கூறப்படுவதால் 17-ஆவது பாடல், அரசவாகையோடு இயன்மொழித் துறையையும் பெற்று வந்தது. புறநானூற்றின் 22-ஆவது பாடலில்,

"வானுறையும் மதிபோலும்
மாலைவெண் குடை நிழலான்
வாண்மருங்கிலோர் காப்புறங்க"(104)

எனச் செங்கோலும்,

"ஓம்பாது ஈயும் ஆற்றல் எம்கோ"(105)

எனக் கொடையும் புகழப்படுவதால் இப்பாடல் முறையே அரசவாகையையும், இயன் மொழியையும் பெற்றது.

அரச வாகையோடு நல்லிசை வஞ்சியையும் பெறுவதாகப் புறநானூற்றின் 23-ஆவது பாடல் குறிக்கப்படுகிறது. வஞ்சிவேந்தனது வெற்றியைப் புகழ்வதையும், பகைவரது நாடு அழிபிற்கு இரங்குவதையும் நல்லிசைவஞ்சித் துறையின் பொருள்களாகப் புறப்பொருள்வெண்பாமாலை குறிப்பிடும். இப்பாடலில்

"நன்னார் நாண நாள்தோறும் தலைச் சென்று
இன்றும் இன்னபல செய்குவன் யாவரும்
துன்னல் போகிய துணிவி னோன் ...."(106)

என வேந்தனின் போர்த்திறம் பேசப்படுவதால் 'அரசவாகை' ஆயிற்று. மேலும் இப்பாடலில்,

"கொள்பதம் ஒழிய வீசிய புலனும்
வடிநவில் நவியம் பாய்தலின் ஊர் தோறும்
கடிமரம் துளங்கிய காவும் நெடுநகர்
வினைபுனை நல்இல் வெவ்வெரி நைப்பக்
கனையெரி உரறிய ...."(107)

எனப் பகைவரின் நாடழிபு கூறப்படுகிறது. எனவே, இப்பாடல் நல்லிசைவஞ்சித் துறையுமாயிற்று. அரசவாகையோடு மழபுலவஞ்சியையும் பெறுவதாகப் புறநானூற்றின் 31-ஆவது பாடல் குறிக்கப்படுகிறது. வஞ்சிவேந்தன் பகைவர் நாட்டைக் கொள்ளையிடுவதை 'மழபுலவஞ்சி' என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல"(108)

என அப்பாடலில் பொருளீட்டம் குறிக்கப்படுகிறது. எனவே, இப்பாடல் மழபுலவஞ்சியாயிற்று. மேலும்

"நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொள் ளாயே"(109)

எனவும்,

"வெண்தலைப் புணரிநின் மான்குளம்பு அலைப்ப
வலமுறை வருதலும் உண்டென்று அலமந்து
நெஞ்சுநடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத்து அரசே"(110)

எனவும், வேந்தனது போர்த்திறமும் பேசப்படுவதால் இப்பாடல் அரசவாகையுமாயிற்று. புறநானூற்றின் 37-ஆவது பாடல் அரசவாகையோடு முதல்வஞ்சித்துறையையும் பெறுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இங்குக் குறிக்கப்பட்டுள்ள முதல்வஞ்சித்துறை இலக்கண நூல்களில் சுட்டப்படாததாகும்.

"கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர்
வம்பணி யானை வேந்தகத்து உண்மையின்
நல்ல என்னாது சிதைத்தல்
வல்லையால் நெடுந்தகை செருவத் தானே"(111)

எனப் புறநானூற்றின் 37-ஆவது பாடலில் வேந்தனது போர்த்திறம் குறிக்கப்படுவதால் இப்பாடல் அரசவாகை ஆயிற்று. முதல்வஞ்சித் துறையின் பொருளை அறியமுடியாததால் இப்பாடலுடன் பொருத்திப் பார்க்க முடியவில்லை. மேலும் முதல்வஞ்சிக்கு மட்டுமே உரித்தான பாடலாக இது இல்லாததாலும் இத்துறைப் பொருளை அறிய முடியவில்லை. இது ஆய்விற்குரியது.

3.8.2 மறக்களவழி

புறநானூற்றில் இத்துறையின் கீழ் 368, 370, 371 ஆகிய மூன்று பாடல்கள் இடம்பெறுகின்றன. மேலும் இத்துறையோடு, ஏர்க்கள உருவகமும் பெறுவனவாக 369, 373 ஆகிய பாடல்கள் குறிக்கப்படுகின்றன.

"முழவுறத் திணிதோ ளானை
உழவனாக உரைமலிந் தன்று"(112)

என்பது 'மறக்களவழி' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். செங்கோன் மன்னனை உழவனாக உருவகித்துப் பாராட்டியது இதன் பொருள். புறநானூற்றின் 368-ஆவது பாடலில்,

"இரப்போர் இரங்கும் இன்னா வியன்களத்து
ஆள்அழிப் படுத்த வாளேர் உழவ"(113)

என்று வேந்தனானவன் உழவனாக உருவகிக்கப்படுகிறான். 370, 371 ஆகிய பாடல்களிலும் வேந்தன் இவ்வாறே உழவனாக உருவகிக்கப்படுவதால் இப்பாடல்கள் 'மறக்களவழி' ஆயிற்று. போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகித்துப் பாடுதல் ஏர்க்கள உருவகத்தின் பொருளாதல் வேண்டும். இப்பெயரில் இலக்கணங்களில் துறைஇல்லை. ஆயின் இது 'மறக்களவழி'யில் கூறப்பட்டதன் ஒரு பகுதியேயாகும். புறநானூற்றில் 'மறக்களவழி'யுடன் ஏர்க்கள உருவகத்தையும் பெறுவனவாகக் குறிக்கப்படும் 369, 373 ஆகிய இரண்டு பாடல்களிலும் வேந்தன், உழவனாக உருவகிக்கப்படுவதோடு போர்க்களமும், ஏர்க்களமாக உருவகிக்கப்படுகிறது.

"விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேர்ஏ ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்ந்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி"(114)

புறநானூற்றின் 373-ஆவது பாடலும் மேற்கண்ட பாடலமைப்பினையே கொண்டு விளங்குகிறது. எனவே இவ்விருபாடல்களையும் துறைவகுத்தோர் 'மறக்களவழி', 'ஏர்க்கள உருவகம்' ஆகிய இரண்டு துறைகளுக்கும் உரியனவாகச் சுட்டியுள்ளனர்.

3.8.3 மறக்கள வேள்வி

'களவேள்வி' என இத்துறை புறப்பொருள்வெண்பாமாலையில் குறிக்கப்படுகிறது. வாகை சூடிய வேந்தன் களவேள்வி செய்தது இதன் பொருளாகும். இதனைப் புறப்பொருள்வெண்பாமாலை,

"அடுதிறல் அணங்கார
விடுதிறலான் களம் வேட்டன்று"(115)

என்ற கொளுவில் சுட்டுகிறது. புறநானூற்றின் 372-ஆவது பாடலில்,

> “வதுவை விழவின் புதுவோர்க் கெல்லாம்
> வெவ்வாய்ப் பெய்த பூதநீர் சாலிகெனப்
> புலவுக்களம் பொலிய வேட்டோய்.........”(116)

என, வேந்தன் வேள்வி செய்தமை குறிக்கப்படுவதால் இப்பாடல் மறக்களவேள்வித்துறையின் பாற்பட்டது.

3.8.4 பார்ப்பனவாகை

> “கேள்வியாற் சிறப்பெய்தி யானை
> வேள்வியான் விறல்மிகத் தன்று”(117)

எனபது 'பார்ப்பனவாகை' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளு. மறைகேட்டுச் சிறப்பெய்திய பார்ப்பனனுடைய வெற்றியைக் கூறுவது இதன் பொருளாகும். புறநானூற்றின் 166,305-ஆகிய இரண்டு பாடல்களும் இத்துறைக்குரியனவாகச் சுட்டப்பட்டுள்ளன.

> “நீர்நாண நெய்வழங்கியும்
> எண்நாணப் பல வேட்டும்
> மண்நாணப் புகழ்பரப்பியும்
> அருங்கடிப் பெருங்காலை
> விருந்துற்றநின் திருந்தேந்து நிலை
> என்றும் காண்கதில் அம்மயாமே ....”(118).

> “உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
> எல்லி வந்து நில்லாது புக்குச்
> சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
> ஏணியும் சீப்பும் மாற்றி
> மாண்வினை யானையம் மணிகளைந் தனவே”(119)

எனப் புறநானூற்றின் 166, 305 ஆம் பாடல்களில் பார்ப்பனனுடைய வெற்றி கூறப்படுவதால் இவ்விரு பாடல்களும் பார்ப்பனவாகை ஆயிற்று.

3.8.5 தாபதவாகை

தாபதர் தம் தவவொழுக்கத்திற் பிறழாது மேம்பட்டமையைக் கூறுவது 'தாபதவாகை'. இதனை,

"தாபத முனிவர் தவத்தோடு முயங்கி
ஓவுதல் அறியா ஏழுக்குரைத் தன்று"(120)

என்ற கொளுவின் மூலம் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டுகிறது. புறநானூற்றில் 251, 252 ஆகிய இரண்டு பாடல்களும் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

"கழைக்கண் நெடுவரை அருவி ஆடிக்
கான யானை தந்த விறகின்
கடுந்தெறல் செந்தீ வேட்டுப்
புறழ்ந்தாழ் புரிசடை புலர்த்து வோனே"(121)

எனவும்,

"கறங்குவெள் ளருவி ஏற்றலின் நிறம் பெயர்ந்து
தில்லைஅன்ன புல்லென் கடையோடு
அவ்விலைத் தாளி கொய்யு மோனே"(122)

எனவும், இப் பாடல்களில் தாபதரின் தவமேம்பாடு கூறப்படுவதால் இவை 'தாபதவாகை' ஆயிற்று.

3.8.6 மூதின்முல்லை

மறக்குடி மகளிரின் மறப்பண்புகளைச் சுட்டுவது மூதின்முல்லை

"அடல்மேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கு மறமிகுத் தன்று"(123)

என்பது 'மூதின்முல்லை' குறித்த புறப்பொருள் வெண்பாமாலையின் கொளுவாகும். புறநானூற்றில் இத்துறைக்குரியனவாக, 279, 306, 308, 312, 326-335 ஆகிய 14 பாடல்கள் காணப்படுகின்றன.

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"(124)

இப்பாடலில், முதல்நாள் போரில் தன் தந்தையையும், மறுநாள் போரில் தன் கணவரையும் இழந்த பெண்ணொருத்தி அடுத்தநாள் போரிற்குத் தனது ஒரே மகனையும் அனுப்பத்துணியும் மறப்பண்பு குறிக்கப்படுவதால் 'மூதின்முல்லை' ஆயிற்று. 306-ஆவது பாடலில்,

"ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே என்னையும்
.... வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே"(125)

என்று போர் உண்டாக வேண்டும் என்ற மறக்குடிமகளின் எண்ணம் வெளிப்படுவதால், மூதின்முல்லைத் துறையின்பாற்பட்டது.

"வேந்துடன்று எறிந்த வேலே என்ஐ
சாந்தோர் அகலம் உளம்கழிந் தன்றே
உளங்கழி சுடர்ப்படை ஏந்திநம் பெருவிறல்
ஓச்சினன் துரந்த காலை மற்றவன்
புன்தலை மடப்பிடி நாணக்
குஞ்சரம் எல்லாம் புறங்கொடுத்தனவே"(126)

எனும் 308-ஆவது புறப்பாடலில் தலைவியானவள் தன் தலைவனது மார்பில் பாய்ந்த வேல் குறித்து அவலவுணர்வின்றி, மறவுணர்வு வெளிப்படக் கூறுகிறாள்.

புறநானூற்றின் 312-ஆவது பாடலில்,

"ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"(127)

என்ற மறத்தாய் கூற்றின் வழி அவளின் மறப்பண்பு வெளிப்படுகிறது. இது போன்றே புறநானூற்றின் 326 முதல் 335 வரையிலான 10 பாடல்களும் மறக்குடிமகளின் மறப் பண்பினை வெளிப்படுத்துவனவாக அமைந்திருப்பதால் அனைத்தும் மூதின்முல்லைத் துறையிலேயே அடங்குகின்றன. இவற்றுள் 328-ஆவது பாடல் இடையிடையே சிதைந்துள்ளதால் துறைப் பொருத்தம் சரியாக அறியமுடியவில்லை. புறநானூற்றின் 333,334 ஆகிய இரண்டு பாடல்களும் இல்லுறை மகளிரின் நன்மாட்சியைக் கூறுகின்றன.

"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்
குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்
குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன்றோ விலளே ...."(128).

"..................................... மனையோள்
பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும்
ஊணொலி அரவமொடு கைதூ வாளே"(129)

எனப் புறநானூற்றின் 333, 334 ஆகிய பாடல்களில் இல்லுறைமகளின் நன்மாட்சி கூறப்படுகிறது. மறக்குடி மகளின் மறப்பண்போடு அவளின் நற்குணத்தைக் கூறும் பாடலையும் துறைவகுத்தோர் 'மூதின்முல்லை' துறைக்குரியனவாகவே குறித்துள்ளனர் என்பது இதன் மூலம் பெறப்படுகிறது.

3.8.7 ஏறாண்முல்லை

மறப்பண்பு மேலும் மேலும் வளருமியல்புடைய மறக்குடியின் ஒழுக்கத்தைக் கூறுவது 'ஏறாண்முல்லை' என்பதை,

"மாறின்றி மறங்கனலும்

ஏறாண்குடி எடுத்துரைத்தன்று"[130]

என்ற கொளுவின் மூலம் அறியமுடிகிறது. புறநானூற்றில் 86, 296 ஆகிய இரண்டு பாடல்கள் இத்துறைக்குரியன.

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்

யாண்டுள னோஎன வினவுதி என்மகன்

....

தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே"[131]

எனவும்,

"வேம்புசினை ஒடிப்பவும் காஞ்சி பாடவும்

நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்

எல்லா மனையும் கல்லென் றனவே

வெந்துடன்று எறிவான் கொல்லோ

நெடிதுவந் தன்றால் நெடுந்தகை தேரே"[132]

எனவும் இப்பாடல்களில் மறக்குடியினரின் செயல்கள் கூறப்படுவதால் இவ்விரு பாடல்களும் 'ஏறாண்முல்லை' ஆயின.

3.8.8 வல்லாண் முல்லை

ஒரு மறவனுடைய குடி, ஊர், பண்பு முதலியவற்றைப் பாராட்டி அவனது ஆண்மையை விதந்து கூறுவது 'வல்லாண்முல்லை' ஆகும். இதனை,

"இகலும் பதியும் இயல்புங் கூறி

நல்லாண் மையை நலமிகுத் தன்று"[133]

என்ற கொளுவினால் உணரலாம். புறநானூற்றின் 170, 178-181, 313-325 ஆகிய 18 பாடல்கள் வல்லாண்முல்லைத் துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் 170-ஆவது பாடல் இத்துறையோடு தானைமறத்துறையையும், 180-ஆவது பாடல் இத்துறையோடு பாணாற்றுப்படையையும் பெறுவனவாகச் சுட்டப்பட்டுள்ளன.

"ஈண்டோர் இன்சா யளனே. வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின்
கல்லுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ரானர்
அஞ்சி நீங்கும் காலை
ஏம மாகத் தான்முந் துறுமே"(134)

எனப் புறநானூற்றின் 178-ஆவது பாடலில் மறவன் ஒருவனுடைய பண்பும், ஆண்மைத்தன்மையும் பாராட்டிக் கூறப்படுகின்றன. 179-ஆவது பாடலில்,

"......................... பாண்டியன் மறவன்
படைவேண்டுவழி வாளுதவியும்
வினை வேண்டுவழி அறிவுதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசைநுகம் படாஅ ஆண்டகை உள்ளத்துத்
தோலா நல்லிசை நாலை கிழவன்"(135)

என ஒரு மறவனின் ஆண்மைத் தன்மை புகழப்படுகிறது.

"வலாஅ ரோனெ வாய்வாட் பண்ணன்
உண்ணா அறுங்கடும்பு உய்தல் வேண்டின்
இன்னே செல்மதி நீயே சென்றவன்
பகைப்புலம் படரா அளவைநின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே"(136)

எனும் புறநானூற்றின் 181-ஆவது பாடலில், ஒரு மறவனுடைய கொடைப்பண்போடு, ஆண்மைத் தன்மையும் புகழப்படுகிறது.

"பெருங்கண் குறுமுயல் கருங்கலன் உடைய
மன்றில் பாயும் வன்புலத் ததுவே
கரும்பின் எந்திரம் சிலைப்பின் அயலது
இருஞ்சுவழி வாளை பிரமும் ஆங்கண்
தண்பணை யாளும் வேந்தர்க்குக்
கண்படை ஈயா வேலோன் ஊரோ"(137)

இப்பாடலில் ஒரு மறவனுடைய ஊர் புகழப்படுவதோடு, அவனது ஆண்மைத் தன்மையும் விதந்து கூறப்படுகிறது. மேலே கண்டது போன்றே இத்துறையின் ஏனைய பாடல்களும் அமைந்து வல்லாண்முல்லைத் துறையில் அடங்குகின்றன.

புறநானூற்றின் 170-ஆவது பாடல் 'வல்லாண்முல்லையோடு' தானை மறத்திற்கும் உரியதாகிறது.

"மறைபிரித்து உண்ட நெல்லி வேலிப்
பரலுடை முன்றில் அங்குடிச் சீறூர்"(138)

என ஒரு மறவனின் ஊரும்,

"இரும்புபயன் படுக்கும் கருங்கைக் கொல்லன்
விசைத்தெறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல் அன்ன வல்லா ளன்னே"(139)

என அம்மறவனின் ஆண்மையும் பேசப்படுவதால் இப்பாடல் 'வல்லாண்முல்லை' ஆயிற்று. மேலும்,

"மலைகெழு நாடன் கூர்வேல் பிட்டன்
குறுகல் ஏம்புமின் தெவ்விர் ...."(140)

எனப்பகைவர்களுக்காக இரங்கிக் கூறுவதால் இப்பாடல் தானைமறத்திற்கும் ஆயிற்று. புறநானூற்றின் 180-ஆவது பாடலில்,

"நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமம் தாங்கி
....
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே"(141)

என ஒரு மறவனின் பண்பும், ஆண்மையும் புகழப்படுகின்றன. எனவே இப்பாடல் 'வல்லாண்முல்லை' ஆனது.

மேலும் இப்பாடலில்,

"........................... கொடை எதிர்ந்து
ஈந்தை யோனே பாணபசிப் பகைநன்
இன்மை தீர வேண்டின் எம்மொடு
நீயும் வம்மோ ...."(142)

எனப் பாணனை ஆற்றுப்படுத்துவதால் இப்பாடல் பாணாற்றுப்படையுமாகிறது.

3.8.9 சால்புமுல்லை

சான்றோரின் இயல்பு மிகுதியைச் சொல்லுவது சால்பு முல்லையின் பொருளாகும். இதனை,

"வான்றோயும் மலையன்ன
சான்றோர்தம் சால்புரைத் தன்று"(143)

என்ற கொளுவில் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டுகிறது. தொல்காப்பியம் 'சான்றோர் பக்கம்' என இதனைக் கூறுகிறது. புறநானூற்றின் 285-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகக் குறிக்கப் பெறுகிறது.

"சோறுபடு குருதிச் செம்மல்லுக் கோர
மாறுசெறு நெடுவேன் மார்புளம் போக
நிணம்பொதி கழலொடு நிலஞ்சேர்ந் தனனே
அதுகண்டு, பரந்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந்து
இறைஞ்சி யோனே.................................."(144)

இப்பாடலில், ஒரு மறவன் உயிர் இழக்கும் நிலையிலும் அவனது சான்றாண்மை குன்றாமல் வெளிப்படுகிறது. சான்றாண்மையுடையோர் உயிர் இறக்கும் நிலையிலும் அது குன்றார் என்று சான்றோரின் இயல்பு மிகுதி இப்பாடலில் சுட்டப்படுவதால் இப்பாடல் 'சால்புமுல்லை' ஆயிற்று.

3.9 பாடாண்திணை

புறநானூற்றில் இத்திணையின் கீழ் நூற்றி முப்பத்தொன்பது பாடல்கள் பதினேழு துறைகளில் அமைகின்றன. இவற்றுள் ஒன்பது பாடல்கள் இரண்டு துறைகளையும், ஒரு பாடல் மூன்று துறைகளையும் பெற்றுள்ளன.

	பாடாண் துறைகள்	புறநானூற்றுப்பாடல் எண்	எண்ணிக்கை
1.	பூவை நிலை	56. 59. 374	3
2.	பரிசிற்றுறை [இயன் மொழி அரசவாகை]⊕	126. 135. 148. 154. 161. 163. 168⊕. 200-208. 379	17
3.	இயன்மொழி பூவைநிலை* பரிசிற்றுறை+	8*. 9. 10. 12. 14. 15. 30. 32. 34. 38. 39. 50. 67. 92. 96. 97. 102. 106-108. 122-124. 129-132. 134. 137*. 142. 149. 151. 153. 156. 157. 171-173. 175-177. 212. 215. 216. 376. 378. 380. 381. 388-390. 400	53
4.	பரிசில் கடாநிலை	11. 101. 136. 139. 159. 160. 164. 169. 196-199. 209. 210. 211.266	16
5.	கடைநிலை	127. 382-384. 391-396. 398	11
6.	பரிசில் விடை கடைநிலைவிடை*	140. 152. 162. 165. 397*. 399	6
7.	பாணாற்றுப்படை புலவராற்றுப்படை*	68-70. 138. 141*. 155	6
8.	விறலியாற்றுப்படை	64. 103. 105. 133	4
9.	செவியறிவுறூஉ வாழ்த்தியல்* பொருண்மொழிக் காஞ்சி+	2*. 3. 5*. 6*. 35. 40. 55. 184	8
10.	குடைமங்கலம்	60	1
11.	வாண்மங்கலம்	95	1
12.	புலவராற்றுப்படை இயன்மொழி*	48.49*	2
13.	வாழ்த்தியல் பரிசில்கடாநிலை*	13. 91. 158*. 367. 375. 377. 385-387	9

14.	வாழ்த்து இயன்மொழி*	128*	1
15.	உடனிலை	58	1
		மொத்தப்பாடல்கள்	**139**

⊕ மூன்று துறைகள் கொண்ட பாடல்

*,+ - இரண்டு துறைகள் கொண்ட பாடல்

3.9.1 பூவைநிலை

"கறவை காவலன் நிறனொடு பொரீஇப்
புறவலர் பூவைப் புகழ்ந் தன்று"(145)

என்பது இத்துறை குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். மாயவன் திருவுருவோடு உவமித்துக் காயாம் பூவைப் புகழ்வது இத்துறையின் பொருளாகும். புறநானூற்றின் 56, 59, 374 ஆகிய மூன்று பாடல்கள் இத்துறைக் குரியனவாகக் குறிக்கப்படுகின்றன. இம்மூன்று பாடல்களிலும் வேந்தன் தேவரோடு உவமிக்கப்படுகிறான். இவ்வாறு வேந்தனைத் தேவரோடு உவமிக்கப்படுவதையும் துறை வகுத்தோர் பூவைநிலையாகவே கொண்டுள்ளனர். புறநானூற்றின் 56-ஆவது பாடலில்,

"தோலா நல்லிசை நால்வ ருள்ளும்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுநர் அடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்"(146)

என வேந்தனானவன் தேவரோடு உவமித்துக் கூறப்படுகிறான்.

மேலும் புறநானூற்றின் 59-ஆவது பாடலில்

"ஞாயி றனையைநின் பகைவர்க்குத்
திங்கள் அனையை எம்ம னோர்க்கே"(147)

எனவும், 374-ஆவது பாடலில்

"... எங்கோன்

கழல்கொடி ஆஅய் அண்டிரன் போல

வண்மையும் உடையையோ ஞாயிறு

சொன் விளங் குதியால் விசும்பி னானே"(148)

எனவும் வேந்தன் தேவரோடு உவமிக்கப்படுகிறான். எனவே, இம்மூன்று பாடல்களும் 'பூவைநிலை' ஆயிற்று.

3.9.2 பரிசிற்றுறை

ஒரு இரவலன் வேந்தனிடம் தான் பெறக் கருதிய பொருள் இதுவெனக் கூறல் பரிசிற்றுறையின் பொருளாகும். இதனை,

"மண்ணகங் காவல் மன்னர் முன்னர்

எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று"(149)

என்ற கொளுவினால் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டுகிறது. புறநானூற்றின் 126, 135, 148, 154, 161, 163, 168, 200 – 208, 379 ஆகிய 17 பாடல்கள் இத்துறைக்குரியனவாகும்.

"புலனழுக் கற்ற அந்த ணாளன்

இரந்துசென் மாக்கட்கு இனிஇடன் இன்றிப்

பரந்திசை நிற்கப் பாடினன் ....

....

இம்மை துரப்ப இசைதர வந்துநின்

வண்மையின் தொடுத்தனம் யாமே ...."(150)

இப்பாடலில் புலவர் ஒருவர் வேந்தனிடம், 'கபிலர் பாடிய பின்னர் நின்னைப் புகழ்ந்துபாட ஏதும் இல்லை என்ற போதும் எனது வறுமை நீங்குதற் பொருட்டுப் பாடுகிறேன்' என்கிறார். இங்குப் புலவர் பரிசுப் பொருள் வேண்டுவதால் இப்பாடல் பரிசில்துறை ஆயிற்று. புறநானூற்றின் 135-ஆவது பாடலில் புலவர் ஒருவர் வேந்தனைக் காண்பதே தான் வேண்டும் பரிசில் என்கிறார்.

"களிறும் அன்றே மாவும் அன்றே

ஒளிறுபடைப் புரவிய தேரும் அன்றே

....

.... நின்னைக்

காண்டல் வேண்டிய அளவை ...."(151)

எனவே, இப்பாடல் பரிசில்துறை ஆயிற்று. புறநானூற்றின் 154-ஆவது பாடலில்,

"யானும் பெற்றது ஊதியம் பேறியா தென்னேன்

உற்றனென் ஆதலின் உள்ளிவந் தனனே"(152)

எனப் புலவர் ஒருவர் பரிசுப் பொருள் கேட்கிறார்.

161-ஆவது பாடலில்,

"அருந்துயர் உழைக்கும்என் பொருந்துன் புறவிநின்

தாள்படு செல்வம் காண்டோறும் மருளப்

பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய

உயர்மருப்பு ஏந்திய வரைமருள் நோன்பகடு

ஒளிதிகழ் ஓடை பொலிய மருங்கில்

படுமணி இரட்ட ஏறிச் செம்மாந்து

செலநசைஇ உற்றனென் ...."(153)

என யானையோடு பெருஞ்செல்வம் தருமாறு புலவர் கேட்கிறார். எனவே, இப்பாடல்கள் பரிசில்துறை ஆயின. மேலே குறித்த பதினாறு பாடல்களுள் 148, 163, 202 ஆகிய மூன்று பாடல்கள் தவிர ஏனைய 13 பாடல்களும் மேற்கண்டது போன்றே, வேந்தனிடம் புலவன் பரிசில் வேண்டுவதாக அமைந்து பரிசில்துறையில் அடங்குகின்றன.

புறநானூற்றின் 168-ஆவது பாடல் பரிசிற்றுறை, இயன்மொழி, அரசவாகை ஆகிய மூன்று துறைகளையும் கொண்டதாகக் குறிக்கப்படுகின்றது.

"பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்

பாடுப என்ப பரிசிலர் நாளும்

ஈயா மன்னர் நாண

வீயாது பரந்தநின் வசையில் வான்புகழே"(154)

இப்பாடலின் புலவர் இங்கு, ஈயாத மன்னர் நாணும் படி நாணும் பரிசிலர் நினது புகழைப் பாடுவர் என்று கூறுகிறார். இதன் மூலம் யானும் நின்பால் பரிசில்

பெற்றுப் பாடவேண்டும் எனும் இவரின் கருத்து பெறப்படும். எனவே, இப்பாடல் பரிசிற்றுறை ஆயிற்று.

"கைவள் ஈகைக் கடுமான் கொற்ற"(155)

இவ்வடியில் வேந்தனின் கொடைத்தன்மையும், போர்த்தன்மையுமாகிய வண்மைத்தன்மைகள் குறிக்கப்படுகின்றன. எனவே, இப்பாடல் 'இயன்மொழித் துறையும்' ஆயிற்று. செங்கோன்மையையுடைய அரசனது இயல்பினைக் கூறுவது 'அரசவாகை' ஆகும். இப்பாடலில் வேந்தனின் இயல்பும் நன்கு வெளிப்படுவதால் இப்பாடல் அரசவாகைத்துறைக்கும் ஆகி வந்தது.

3.9.2.1 துறைபொருந்தாப்பாடல்கள்

புறநானூற்றின் 148, 163, 202 ஆகிய மூன்று பாடல்களும் பரிசிற்றுறைக்குரியனவாகக் குறிக்கப்பட்ட போதும், எவ்விடத்தும் இத்துறைப்பொருள் இடம்பெறவில்லை. 148-ஆவது பாடலில்,

"நாடொறும் நன்கலம் களிற்றோடு கொணர்ந்து
கூடுவிளங்கு வியன்நகர்ப் பரிசில்முற் றளிப்பப்
பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளைத்தல்
எய்யா தாகின்றெம் சிறுசெந் நாவே"(156)

என ஒரு வேந்தனின் கொடைத்திறம் புகழப்படுவதால் இப்பாடலினை 'இயன்மொழி'த் துறையின் கீழ் அடக்குவதே பொருத்தமாகும்.

புறநானூற்றில் பரிசிற்றுறைக்கான பாடல்களைக் குறிக்கும் போது 'பரிசிற்றுறை' என்று குறிக்கப்படுகிறது. ஆயின் இதன் 163-ஆவது பாடலின் துறை 'பரிசில்' என்று மட்டும் சுட்டப்படுகிறது. எனவே, இங்குச் சுட்டப்படும் 'பரிசில்' என்பது பரிசிற்றுறையிலிருந்து வேறுபட்டதாகல் வேண்டும். இலக்கண நூல்களில் இத்துறை இல்லை. 163-ஆவது பாடலில் புலவர் ஒருவர் தாம் பெற்ற

பரிசுப்பொருள்களை எல்லோருக்கும் கொடுக்குமாறு தனது மனைவியைப் பணிக்கிறார்.

"இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி.................."(157)

என்று புலவர் தாம் பெற்ற பொருளைத் தம்மைச் சுற்றியுள்ள அனைவருக்கும் கொடுத்து மகிழ்வது இத்துறையின் பொருளாதல் வேண்டும்.

புறநானூற்றின் 202-ஆவது பாடல், புலவர் ஒருவர் வேந்தனிடம் தான் வேண்டும் பரிசில் இதுவெனக் கேட்க; அவ்வேந்தன் மறுத்து விடுகையில் மனம் நொந்த அப்புலவர் பாடியதாகும். இப்பாடலில் புலவர் வேந்தனை இகழ்ந்து பாடுகிறார்.

"கைவண் பாரி மகளிர் என்றஎன்
தேற்றாப் புன்சொல் நோற்றிசின் பெரும
விடுத்தனென் வெலீஇயர் நின்வேலே....."(158)

எனப் பரிசில் மறுக்கப்பட்ட நிலையில், இகழ்ந்து பாடப்பட்ட இப்பாடலினை 'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்' துறைக்குள் அடக்கிக் கூறுவதே பொருத்தமானதாகும்.

3.9.3 இயன்மொழி

புறநானூற்றின் 8-10, 12, 14, 15, 30, 32, 34, 38, 50, 67, 92, 96, 97, 102, 106-108, 122-124, 129-132, 134, 137, 142, 149-151, 153, 156, 157, 171-173, 175, 176, 177, 212, 215, 216, 376, 378, 380, 381, 388-390, 400 – ஆகிய ஐம்பத்துமூன்று பாடல்கள் இயன்மொழித் துறைக்கு உரியனவாகக் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் எட்டாவது பாடல் இயன்மொழியோடு பூவைநிலையையும், 137-ஆவது பாடல் இயன்மொழியோடு பரிசிற்றுறையையும் கூடுதலாகப் பெறுகின்றன.

புறப்பொருள்வெண்பாமாலை இத்துறைக்கு,

"இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல அவைஎமக் கீகென
என்னோரும் அறிய எடுத்துரைத் தன்று"(159)

எனவும்,

"மயலறு சீர்த்தி மான்தேர் மன்னவன்
இயல்பே மொழியினும் அத்துறையாகும்"(160)

எனவும் இரண்டு பொருள்களைக் கூறுகிறது. இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்ட புறநானூற்றின் ஐம்பத்துமூன்று பாடல்களில் 389-ஆவது பாடல் மட்டும்,

"ஆத னுங்கன் போலநீயும்
பசித்த ஒக்கல் பழங்கண் வீட
வீறுசால் நன்கலம் நல்குமதி பெரும"(161)

'இன்னோர் இன்ன பொருள் கொடுத்தார் நீயும் அவர் போல அப்பொருளைத்தருக' எனும் பொருளில் அமைந்தது. ஏனைய ஐம்பத்திரெண்டு பாடல்களும், புறப்பொருள்வெண்பாமாலை இரண்டாவதாகக் குறித்துள்ள 'அரசனது இயல்பினைக்கூறல்' என்ற வகையில் அமைந்துள்ளன. புறநானூற்றின் எட்டாவது பாடலில்,

"ஒடுங்கா வுள்ளத்து ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை"(162)

எனவும், ஒன்பதாவது பாடலில்,

"அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ.."(163)

எனவும், 10-ஆவது பாடலில்,

"நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதிநீ பண்டையிற் பெரிதே"(164)

எனவும் அரசனது இயல்பாகிய தன்மைகள் கூறப்படுகின்றன. எனவே, இப்பாடல்கள் இயன்மொழித் துறையாகின்றன. இது போன்றே இத்துறையின் 215,216 – ஆகிய இரண்டு பாடல்கள் தவிர்த்த ஏனைய நாற்பத்தேழு பாடல்களும், அரசனது கொடை, வீரம், பண்பு முதலாகிய இயல்புகளையே கூறுவதால் இப்பாடல்கள் அனைத்தும் இயன்மொழித் துறையில் அடங்குகின்றன.

புறநானூற்றின் 215,216-ஆகிய இரண்டு பாடல்கள் புலவர் ஒருவரின் இயல்பினை வேந்தனொருவன் கூறுவனவாக உள்ளன.

"பிசிரோன் என்பஎன் உயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லவன் மன்னே"(165)

என 215-ஆவது பாடலிலும்,

"இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
....
காதற்கிழமையும் உடையவன் தன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன்........................."(166)

என 216-ஆவது பாடலிலும் புலவர் ஒருவரின் நற்பண்பாகிய இயல்பு புகழ்ந்து கூறப்பட்டிருப்பதன் மூலம், வேந்தனின் இயல்பு கூறல் மட்டுமன்றி புலவனின் இயல்புகூறலையும் துறைவகுத்தோர் இயன்மொழித்துறையாகவே கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

3.9.3.1 இரண்டு துறைகளைப் பெற்ற பாடல்கள்

புறநானூற்றின் எட்டாவது பாடல் இயன்மொழியோடு, பூவைநிலைத் துறையையும், 137-ஆவது பாடல் இயன்மொழியோடு, பரிசிற்றுறையையும் கூடுதலாகப் பெறுகின்றன. இவற்றுள் எட்டாவது பாடல் இயன்மொழித் துறையானது முன்னர் விளக்கப்பட்டது. மேலும் இப்பாடலில்,

"............................... சேர லாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்"(167)

என ஞாயிற்றோடு வேந்தன் ஒப்புமைப்படுத்திக் கூறப்படுவதால், இப்பாடல் பூவைநிலைக்கும் உரியதாகிறது. புறநானூற்றின் 137-ஆவது பாடலில்,

".. துவன்றிய
கயத்திட்ட வித்து வறத்தற் சாவாது
கழைக்கரும்பின் ஒலிக்குந்து
கொண்டல் கொண்டநீர் கோடை காயினும்
கண்ணன்ன மலர்பூக்குந்து"(168)

நாஞ்சில்நாட்டில் விதைத்த வித்து மழையில்லை எனக் கெடுதலின்றிக் கரும்புபோல வளரும் எனக் குறிக்கப்படுகிறது. இதன் மூலம் அந்நாட்டு மன்னனுடைய செங்கோன்மையாகிய இயல்பு புகழப்படுகிறது. எனவே, இப்பாடல் இயன்மொழியாயிற்று. ஆயின் இப்பாடலில் 'இரவலன் ஒருவன் தான் பெறக்கருதிய பரிசில் இதுவெனக் கூறும்' பரிசிற்றுறைப் பொருள் இடம்பெறவில்லை. புறநானூற்றுக்குத் துறை வகுத்தோர் இப்பாடலுக்குப் பரிசிற்றுறையினையும் குறித்ததற்கான காரணம் புலப்படவில்லை.

3.9.4 பரிசில்கடாநிலை

புறநானூற்றில் பரிசில்கடாநிலைத் துறைக்குரியனவாக 11, 101, 136, 139, 159, 160, 164, 169, 196-199, 209-211, 266—ஆகிய பதினாறு பாடல்கள் குறிக்கப்படுகின்றன. புறப்பொருள்வெண்பாமாலையில் இப்பெயரில் துறை இல்லை. தொல்காப்பியம்,

"பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்"(169)

எனக் கூறுவதனை நச்சினார்க்கினியர் 'பரிசில் கடைஇயநிலையும்', 'கடைக்கூட்டு நிலையும்' என இரண்டாகப் பிரிக்கிறார். இவற்றுள் 'பரிசில்கடைஇயநிலை' என்பதற்கு இவர் "பரிசிலரை நீக்குதலமையாது நெடிது கொண்டு ஒழுகிய தலைவற்குப் பரிசில் வேட்டோன் தன் கடும்பினது இடும்பை முதலியன கூறித் தான் குறித்த பொருண்மையினைச் செலுத்திக் கடாவின நிலையும்"(170) என

விளக்கம் தருகிறார். புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் பரிசில்நிலைத் துறை இதனோடு ஒத்து அமைகிறது.

"புரவலன் மகிழ்ந்தூங்கி
இரவலன் கடைக்கூடின்று"[171]

என்பது இத்துறை குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். மேலே பரிசில்கடைநிலைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ள புறநானூற்றின் பதினாறு பாடல்களுள் 199-ஆவது பாடல் தவிர்த்த ஏனைய பதினைந்து பாடல்களும் நச்சினார்க்கினியர் பரிசில்கடைஇயநிலைக்குக் கூறியுள்ள பொருளமைப்பிலேயே அமைந்துள்ளன. புறநானூற்றின் 11-ஆவது பாடலில் புலவர் ஒருவர்,

"........................... பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சில்
சீருடைய இழைபெற்றிசினே
....
.... பாண் மகனும்மே
எனவாங்கு
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற்றிசினே"[172]

பாடினி பல கழஞ்சால் செய்யப்பட்ட அணிகலத்தைப் பெற்றாள் எனவும், பாணன் பொற்றாமரையாகிய பூப்பெற்றான் எனவும் கூறுதலான், தான் அது பெறுகின்றிலேன் எனப் 'பரிசில்கடாநிலை' ஆனது. புறநானூற்றின் 101-ஆவது பாடலில் வேந்தனொருவன் பரிசில் தராது காலம் நீட்டித்தவழி புலவர்,

"............... பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
ஐயகத் ததுஅது பொய்யா காதே"[173]

'பரிசில் பெறுங்காலம் நீட்டித்தாலும் யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல நம் கையகத்தது அப்பரிசில்' எனும் பொருளில் பாடுகிறார். இங்கு

வேந்தனிடம் பரிசைப் பெற்றுப் பெயர்தல் வேண்டும் என்ற கருத்தான் புலவர் இப்பாடலைப் பாடியுள்ளமையால், இப்பாடல் ‘பரிசில்கடாநிலை’ ஆயிற்று.

“நினக்கொத்து நீநாடி

நல்கினை விடுமதி பரிசில் ....”[174]

எனப் புறநானூற்றின் 136-ஆவது பாடலில், பரிசில் தராது காலம் நீட்டித்த வழி ‘பரிசில் தந்து விடைதருக’ எனப் புலவர் வெளிப்படையாகக் கேட்கிறார். எனவே, இப்பாடல் பரிசில் கடாநிலையாவது வெளிப்படை. இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்ட ஏனைய பாடல்களும் மேற்கண்டது போன்றே வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ பரிசில்கடாநிலையைச் சுட்டிநிற்கின்றன.

3.9.4.1 துறைபொருந்தாப்பாடல்

புறநானூற்றின் 199-ஆவது பாடலின் துறை ‘பரிசில்கடாநிலை’ எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆயின் இப்பாடலின் பொருள் பரிசில்கடாநிலையுடன் ஒத்து அமையவில்லை.

“.......................... புள்ளினம்

அனையர் வாழியே இரவலர் அவரைப்

புரவஎதிர் கொள்ளும் பெருஞ்செய் ஆடவர்

உடைமை ஆகும் அவர் உடைமை

அவர் இன்மையாகும் அவர் இன்மையே”[175]

இப்பாடலில், இவரைக் காத்தற்கு விரும்பி வரவேற்றுப் பேணும் ஆடவரின் செல்வம் அவ்விரப்போரின் செல்வமேயாகும். எனவும் அவ்வாண்மக்களுடைய வறுமை அவ்விரப்போரின் வறுமையே யாகும் எனவும் சுட்டப்படுகிறது. இங்குப் பரிசில்கடாநிலைப் பொருளில்லை. இப்பாடலில் இரவலரின் நிலையே சுட்டப்படுகிறது. இலக்கணங்களில் இப்பொருளில் துறை ஏதும் இல்லை.

3.9.5 கடைநிலை

புறநானூற்றின் 127, 382-384, 391-396, 398 ஆகிய பதினொரு பாடல்கள் ‘கடைநிலை’ துறைக்குரியனவாகச் சுட்டப்படுகின்றன. புறப்பொருள்

வெண்பாமாலையில் இப்பெயரில் துறை இல்லை. தொல்காப்பியம் 'பரிசில்கடைஇய கடைக்கூட்டு நிலை' என்றதனை 'பரிசில் கடைஇயநிலை' எனவும் 'கடைக்கூட்டுநிலை' எனவும் இரண்டாகப் பகுத்துக்கூறும் நச்சினார்க்கினியர் 'கடைக்கூட்டுநிலை' என்பதற்கு, "வாயிலிடத்தே நின்று தான் தொடங்கிய கருமத்தினை முடிக்கும் நிலை"(176) என்கிறார். 'கடை என்பதற்கு வழி, வாயில், புறவாயில் எனப் பொருள் தருகிறது கழகத்தமிழ் அகராதி'(177) புறநானூற்றுக்குத் திணை, துறை வகுத்தோர் இவ்வாறான இடங்களிலிருந்து புலவர்களால் பாடப்படும் பாடல்களைக் கடைநிலையாகக் குறித்துள்ளனர். இவர்கள் புறநானூற்றுப் பாடல்களின் பொருளை மட்டும் நோக்காமல் அப்பாடல்கள் பாடப்பட்ட இடம், சூழல் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டே திணை, துறை வகுத்தனர் என்பது முன்னர் விளக்கப்பட்டது.

புறநானூற்றில் இத்துறையின் கீழ் அமைந்த பதினொரு பாடல்களில் மூன்று பாடல்களில் (புறம். 383, 392, 395) மட்டும் கடைநிலையில் நின்று பாடுவதாகப் பாடலின் இடையில் குறிப்பு வருகிறது.

i) "நெடுங்கடை நின்று பகடுபல வாழ்த்தித்"(178)

ii) "..................... நெடுங்கடை நின்றியான்"(179)

iii) "தன்கடைத் தோன்றி யென்னுற விசைத்தலிற்"(180)

ஏனைய எட்டுப்பாடல்களும்,

1. பரிசில் தந்து விடைதருக என இரவலர் வேண்டல்
2. பாடல்தலைவனின் கொடைச் செயலைப் புகழ்தல்

ஆகிய இரண்டு பொருள்களிலேயே அமைகின்றன. இப்பாடல்கள் கடைநிலையில் நின்று பாடப்பட்டு கடைநிலைத் துறையாயிருத்தல் வேண்டும்.

3.9.6 பரிசில்விடை

"வேந்தன்உள் மகிழ வெல்புகழ் அறைந்தோர்க்கு
ஈந்து பரிசில் இன்புற விடுத்தன்று"(181)

என்பது 'பரிசில்விடை' துறை குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளு. வேந்தன் பரிசிலர்க்குப் பொருள் வழங்கி விடைகொடுத்தது இதன் பொருளாகும்.

இங்கு இரவலன் விடைகூறிச் செல்லுதல் குறிக்கப்படவில்லை. ஆயின் தொல்காப்பியத்தில் இவ்விருவகை விடையும் குறிக்கப்பட்டுள்ளன.

"பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றிய இருவகை விடையும்"(182)

இவ்விருவகை விடையினைக் குறித்து நச்சினார்க்கினியர் "தலைவன் தானே விடுத்தலும் பரிசிலன் தானே போகல் வேண்டுமெனக் கூறிவிடுத்தலுமாம்"(183) என்கிறார். புறநானூற்றின் 140, 152, 162, 165, 397, 399 ஆகிய ஆறு பாடல்கள் இத்துறைக்குரியனவாகச் சுட்டப்படுகின்றன. இவற்றுள் 397-ஆவது பாடல் பரிசில் விடையுடன், கடைநிலைவிடைத் துறையையும் கூடுதலாகப் பெறுகிறது. மேற்குறித்த ஆறு பாடல்களுள் 162-ஆவது பாடலில் மட்டுமே விடை பெற்ற செய்தி வந்துள்ளது.

"நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே"(184)

ஏனைய ஐந்து பாடல்களும், பரிசில் பெற்ற இரவலன் பரிசில் வழங்கியவனைப் புகழ்ந்து பாடுவனவாகவே உள்ளன.

"............................ யாம்சில
அரிசி வேண்டினெ மாகத் தான்பிறர்
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே.............."(185)

என 140-ஆவது பாடலிலும்,

"தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்ம்எனச்
சுரத்திடை நல்கி யோனே........................."(186)

என 152-ஆவது பாடலிலும் இரவலர் பரிசில் பெற்றமை குறிக்கப்படுகிறது. இத்துறையின் ஏனைய மூன்று பாடல்களும் இதே அமைப்புடையன. பரிசில் பெற்ற பின்னர் பாடப்பட்ட இப்பாடல்கள் அனைத்தும் விடைபெறும் நோக்கத்தில் பாடப்பட்டவைகளாதலால் பரிசில்விடைத் துறையில் அடங்குகின்றன.

புறநானூற்றின் 397-ஆவது பாடலில்,

"நெடுங்கடைத் தோன்றி யோனே............"(187)

எனப் பரிசிலர் கடையிடத்தே நின்றமை குறிக்கப்படுகிறது. இப்பாடல், பரிசில் பெற்றுச் செல்லும் இரவலர் விடைபெறும் நோக்கில் கடையிடத்திருந்து பாடப்பட்டதாகல் வேண்டும். இக்காரணத்தாலேயே இப்பாடல் பரிசில்விடை, கடைநிலைவிடை ஆகிய இரண்டு துறைகளையும் பெற்று வந்தது.

3.9.7 பாணாற்றுப்படை

புறநானூற்றின் 68-70, 138, 141, 155 ஆகிய ஆறு பாடல்கள் பாணாற்றுப்படைக்கு உரியனவாகச் சுட்டப்படுகின்றன. இவற்றுள் 141-ஆவது பாடல் புலவராற்றுப்படைக்கும் உரியதாகக் குறிக்கப்படுகிறது. புறப்பொருள் வெண்பாமாலையில் இத்துறை,

"சேணோங்கிய வரையதரிற்
பாணனை ஆற்றுப்படுத்தன்று"(188)

என விளக்கப்படுகிறது. புறநானூற்றில் பாணாற்றுப்படைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ள ஆறு பாடல்களும், பரிசில் பெற்ற பாணன் ஒருவன் அது பெறாத பாணனைப் பரிசில் பெறும் வழியில் ஆற்றுப்படுத்துவனவாகவே உள்ளன.

"உறந்தை யோனே குருசில்
பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே"(189)

எனப் புறநானூற்றின் 68-ஆவது பாடலிலும்,

"கிள்ளி வளவற் படர்குவை ஆயின்
நெடுங்கடை நிற்றலும் இலையே கடும்பகல்
தேர்வீசு இருக்கை ஆர நோக்கி
நீஅவற் கண்ட பின்றைப் பூவின்
ஆடும் வண்டு இமிராத் தாமரை
சூடாய் ஆதல் அதனினும் இலையே"(190)

எனப் புறநானூற்றின் 69-ஆவது பாடலிலும், பரிசில் பெற்ற பாணன் ஒருவன் அது பெரும் வழியில் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துகிறான். இத்துறையின் ஏனைய நான்கு பாடல்களும் இதே அமைப்புடையன. எனவே, இந்த ஆறு புறநானூற்றுப்பாடல்களும் 'பாணாற்றுப்படை' ஆயின. புறநானூற்றின் 141-ஆவது பாடல் மட்டும் ஒரு பாணன் வேறு ஒரு இரவலனை ஆற்றுப்படுத்துவதாக உள்ளது.

"பாணன் சூடிய பசும்பொன் தாமரை
மாணிழை விறலி மாலையோடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்டு அசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனீர்
யாரீ ரோஎன வினவல் ஆனாக்
காரென் ஒக்கல் கடும்பசி இரவல"(191)

'இரத்தலில் வல்லவனே இரவலன் எனக் குறிக்கப்படுகிறான்'(192). அவ்வகையில் புலவர், பாணர் ஆகிய இருவரையும் இப்பாடலுக்குரியோராகக் கொண்டு துறைவகுத்தோர் இப்பாடலினைப் புலவராற்றுப்படையாகவும், பாணாற்றுப் படையாகவும் குறித்துள்ளனர்.

3.9.8 விறலியாற்றுப்படை

"திறல்வேந்தன் புகழ்பாடும்
விறலியை ஆற்றுப்படுத்தன்று"(193)

என்பது விறலியாற்றுப்படை குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். புறநானூற்றின் 64, 103, 105, 133-ஆகிய நான்கு பாடல்கள் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன. இந்நான்கு பாடல்களும் விறலியை வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவனவாகவே உள்ளன.

"நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கி
செல்லா மோதில் சில்வளை விறலி
....
குடுமிக் கோமான் கண்டு
நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே"(194)

என 64-ஆவது பாடலிலும்,

"சுரன்முதல் இருந்த சில்வளை விறலி
செல்வை யாயின் சேணோன் அல்லன்
....
பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் அடையிற் கொழுநிணம் பெருப்ப
அலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்கவன் றாளே"(195)

என 103-ஆவது பாடலிலும்,

"சேயிழை பெறுகுவை வாள்நுதல் விறலி
....
பாரி வேள்பால் பாடினை செலினே"(196)

என 105-ஆவது பாடலிலும்,

"மெல்லியல் விறலிநீ................
....
மாரி யன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே"(197)

என 133-ஆவது பாடலிலும் விறலியானவள் ஆற்றுப்படுத்தப்படுகிறாள். எனவே, இப்பாடல்கள் அனைத்தும் 'விறலியாற்றுப்படை' ஆயின.

3.9.9 செவியறிவுறூஉ

புறநானூற்றின் 2,3,5,6,35,40,55,184 ஆகிய எட்டுப் பாடல்கள் 'செவியறிவுறூஉ' துறைக்குரியனவாகச் சுட்டப்படுகின்றன. அவற்றுள் 2,6-ஆகிய இரண்டு பாடல்கள் கூடுதலாக 'வாழ்த்தியல்' துறையையும், 5-வது பாடல் கூடுதலாக பொருண்மொழிக்காஞ்சித் துறையையும் பெறுகின்றன.

"மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி
அறந்தெரி கோலாற் கறிய உரைத்தன்று"(198)

இது 'செவியறிவுறூஉ' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். செங்கோலினையுடைய மன்னனுக்கு, பிறழ்ச்சியில்லாத நிலைதலையுடைய பெரிய கருத்தினை உணரும்படிக் கூறுதல் இத்துறையின் பொருளாகும்.

"திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ ...."(199)

எனப் புறநானூற்றின் 2-ஆவது பாடலில், வேறுபாடில்லாத திறத்தையுடைய அமைச்சுச் சுற்றத்தோடு ஒழியாது நெடுங்காலம் விளங்கித் தளர்ச்சியின்றி நிலைத்து நிற்பாயாக என்று அறிவுறுத்தலோடு நெடுங்காலம் வாழவும் வாழ்த்துவதால் இப்பாடல் செவியறிவுறூஉவோடு வாழ்த்தியலுமாயிற்று. புறநானூற்றின் 3-ஆவது பாடலில்,

"...................... பெரும்பெயர் வழுதி
நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்"(200)

என அறிவுறுத்தப்படுகிறது. புறநானூற்றின் 5-ஆவது பாடலில்,

".................................... காவல்
குடிவி கொள்பவரின் ஓம்புமதி"(201)

என அறிவுறுத்தப்படுவதோடு,

"அருளும் அன்பும் நீங்கி நீங்கா
நிரயங் கொள்பவரோடு ஒன்றாது........"(202)

அருளும் அன்பும் நீக்கி பாவஞ்செய்தாரை நீங்காத நரகத்தைத் தமக்கு இடமாகக் கொண்டவரோடு பொருந்தாது இருத்தல் வேண்டும் என்ற மெய்ப்பொருளும் உணர்த்தப்படுகிறது. அரசனுக்கு மெய்ப்பொருளைக் கூறுவது பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும். அந்த வகையில் இப்பாடல் பொருண்மொழிக்காஞ்சித் துறையுமாயிற்று.

"தெரிகோல் ஞெமன் போல ஒருதிறம்
பற்றல் இலியரோ..................."(203)

எனப் புறநானூற்றின் 6-ஆவது பாடலில் வேந்தனானவன் துலாக்கோல் போல இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறான். மேலும் இப்பாடலில்,

"தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே"(204)

என, வேந்தன் நிலைபெற்று வாழவேண்டும் என்றும் வாழ்த்தப்படுகிறான். ஆகையால் இப்பாடல் செவியறிவுறூஉவோடு வாழ்த்தியல் துறையையும் பெற்றது.

புறநானூற்றின் 35-ஆவது பாடலில்,

"கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
வெயில் மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே.............................."(205)

எனவும், 40-ஆவது பாடலில்,

"................................. என்றும்
இன்சொல்எண் பதத்தை ஆகுமதி......."(206)

எனவும், 55-ஆவது பாடலில்,

"ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்
வானத்தன்ன வண்மையும் மூன்றும்
உடையை ஆகி ...."(207)

எனவும், 184-ஆவது பாடலில்,

"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்"(208)

எனவும் வேந்தனுக்கு அறிவுறுத்தப்படுகின்றன. எனவே, இப்பாடல்கள் அனைத்தும் 'செவியறிவுறூஉ' துறையாயின.

3.9.10 குடைமங்கலம்

"நாற்றிசையும் புகழ்பெருக
வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று"(209)

என்பது குடைமங்கலம் குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். புறநானூற்றின் 60-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகச் சுட்டப்படுகிறது.

"உச்சிநின்ற உலவுமதி ....

....

வெயின் மறைக் கொண்ட உருகெழு சிறப்பின்

மாலை வெண்குடை ஒக்குமால் எனவே"(210)

என இப்பாடலில் வேந்தனது வெண்கொற்றக் குடையானது மதியோடு ஒப்புமைபடுத்திப் புகழப்படுகிறது. எனவே, இப்பாடல் 'குடைமங்கலம்' துறையாயிற்று.

3.9.11 வாண்மங்கலம்

வேந்தனது வாளினைப் புகழ்வது இத்துறையாகும். புறப்பொருள் வெண்பாமாலை இத்துறையினை,

"கயக்கருங் கடற்றானை

வயக்களிற்றான் வாள்புகழ்ந்தன்று"(211)

எனக்குறிக்கிறது. புறநானூற்றின் 95-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகும்.

"பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து

கொல்துறைக் குற்றில மாதோ என்றும்

....

அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே"(212)

இப்பாடலில் வேந்தனின் வேலானது புகழப்படுவதால், வாண்மங்கலம் ஆனது.

3.9.12 புலவராற்றுப்படை

"இருங்கண் வானத் திமையோருழைப்

பெரும்புலவனை ஆற்றுப் படுத்தன்று"(213)

இது 'புலவராற்றுப்படை' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். பேரறிவாளனைத் தேவர்களிடத்து ஆற்றுப்படுத்துவது புலவராற்றுப்படையின்

பொருளாகும். புறநானூற்றின் 48,49-ஆகிய இரண்டு பாடல்களும் இத்துறைக்குரியனவாகச் சுட்டப்படுகின்றன. இவற்றுள் 49-ஆவது பாடல் 'இயன்மொழித்துறைக்கும்' உரியதாகும். புலவரைத்தேவர்களிடத்து ஆற்றுப்படுத்துவது 'புலவராற்றுப்படை' என்று இலக்கணம் கூற, இவ்விரண்டு புறநானூற்றுப் பாடல்களும் புலவரை வேந்தரிடத்து ஆற்றுப்படுத்துவனவாக உள்ளன. இதன் மூலம் புலவரை வேந்தரிடத்தே ஆற்றுப் படுத்துவதும் புலவராற்றுப்படையே எனத்தெளியலாம்.

> "............................. அவன்எம் இறைவன்
> அன்னோர் படர்தி யாயின் நீயும்
> எம்மும் உள்ளுமோ முதுவாய் இரவல
> அமர்மேம் படுஉங் காலைநின்
> புகழ்மேம் படுநனைக் கண்டனம் எனவே"(214)

என்ற புறநானூற்றின் 48-ஆவது பாடலில் வேந்தரிடத்தே புலவன் ஆற்றுப்படுத்துகிறான்.

புறநானூற்றின் 49-ஆவது பாடலில்

> "நாடன் என்கோ ஊரன் என்கோ
> பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ
> யாங்கனம் மொழிகோ ஓங்குவாள் கோதையைப்"(215)

ஒரு புலவன் மற்றொரு புலவனிடம் எம் வேந்தன் நானிலமும் உடையவனாதலிற் பெருஞ்செல்வம் உடையவன் என்று கூறி நீ அவன்பால் செல்க என ஆற்றுப்படுத்துவதால் இப்பாடல் ஆற்றுப்படை ஆயிற்று. மேலும் இங்கு வேந்தனின் இயல்பு புகழப்படுவதால் இப்பாடல் இயன்மொழித்துறையுமாயிற்று.

3.9.13 வாழ்த்தியல், வாழ்த்து

புறநானூற்றில் 'வாழ்த்தியல்' என்ற துறைப்பெயரில் 13, 91, 158 367, 375, 377, 385, 386, 387 ஆகிய ஒன்பது பாடல்கள் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் 158-ஆவது பாடல் பரிசில்கடாநிலைத் துறையைக் கூடுதலாகப் பெறுகிறது. புறநானூற்றின் 128-ஆவது பாடலின் துறை 'வாழ்த்து' என மட்டும்

குறிக்கப்பட்டுள்ளது. புறப்பொருள் வெண்பாமாலையில் கடவுள் வாழ்த்து, இயல்மொழி வாழ்த்து, நாடு வாழ்த்து, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து ஆகிய பெயர்களிலேயே துறைகள் காணப்படுகின்றன. வாழ்த்தியல், வாழ்த்து என்ற பெயர்களில் துறையில்லை. தொல்காப்பியத்தில் கடவுள் வாழ்த்து இயல்மொழி வாழ்த்து, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து ஆகிய துறைகள் குறிக்கப்படுகின்றன. ஆயின்

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே

நாடுங் காலை நாலிரண் டுடைத்தே"(216)

என்ற நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர் பாடாணின் எட்டு வகைகளுள் வாழ்த்தியல் வகையையும் ஒன்றாகக் குறிக்கிறார். இலக்கண விளக்கம் கடவுள் வாழ்த்தினை 'வாழ்த்து' என்று குறிக்கிறது. "தந்நலம் நோக்காது பிறர் நலமே பேணி வாழ்த்துவது வாழ்த்தியலாகும்" என்பர் ஔவை துரைசாமிப்பிள்ளை".(217)

புறநானூற்றின் 13-ஆவது பாடலில்,

"மறலி அன்ன களிற்றுமிசை யோனே

களிறே முந்நீர் வழங்கு நாவாய் போலவும்

பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்

சுரவினத் தன்ன வாளோர் மொய்ப்ப

மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே

நோயிலன் ஆகிப் பெயர்கதில் அம்ம"(218)

எனப் புலவர் ஒருவர் தன்னால் விரும்பப்படும் வேந்தனுக்குத் தீங்கு வாராது நலமுடன் வாழவேண்டும் என்று வாழ்த்துகிறார்.

புறநானூற்றின் 91-ஆவது பாடலில்,

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி

நீலமணி மிடற்று ஒருவன் போல

மன்னுக பெரும ...."(219)

'நீலமணி மிடற்றுக் கடவுள் போல மன்னுவாயாக' எனப் புலவர், மன்னன் ஒருவனை வாழ்த்துகிறார். புறநானூற்றின் 367-ஆவது பாடலும்,

"................................... வானத்து

வயங்கித் தோன்றும் மீனினும் இம்மென

இயங்கும் மாமழை உறையினும்

உயர்ந்து மேற்தோன்றிப் பொலிகநும் நாளே"(220)

என மன்னன் நீண்டகாலம் வாழ வாழ்த்துவதாக உள்ளது. வாழ்த்தியல் துறைக் குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ள ஒன்பது பாடல்களுள் 158-ஆவது பாடல் தவிர்த்த ஏனைய ஏழு பாடல்களும் மேற்கண்டது போன்றே மன்னன் நீடுழி வாழ வேண்டும் எனப் புலவர் வாழ்த்துவனவாக உள்ளன. எனவே, இப்பாடல்கள் அனைத்தும் 'வாழ்த்தியல்' துறையின் கீழ் அடங்குகின்றன.

புறநானூற்றின் 158-ஆவது பாடல் 'வாழ்த்தியல்' துறைக்கும், பரிசில் கடாநிலைத்துறைக்கும் உரியதாகக் குறிக்கப்பட்ட போதும், 'வாழ்த்தியல்' துறைப் பொருள் இப்பாடலில் இல்லை. ஆயின்

"இரந்தோர் அற்றம் தீர்க்கென விரைந்திவண்

உள்ளி வந்தனென் யானே................."(221)

என பரிசில் கடாநிலைத்துறைப்பொருள் இப்பாடலில் இடம் பெறுகிறது. எனவே, இப்பாடலினை பரிசில் கடாநிலைத்துறைக்கே உரியதாக அடக்கலாம். புறநானூற்றின் 128-ஆவது பாடல் 'வாழ்த்து' மற்றும் இயன்மொழித் துறைக்குரியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இங்குக் குறிக்கப்படும் வாழ்த்து வாழ்த்தியலிலிருந்து வேறுபட்டதாதல் வேண்டும்.

இப்பாடலில்

"ஆடுமகள் குறுகின் அல்லது

பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே"(222).

என ஒரு மன்னனின் கொடைச் சிறப்பும், வென்றிச்சிறப்பும் கூறப்படுகின்றன. ஆகையால் இப்பாடல் இயன்மொழித் துறையைப் பெற்றது. இவ்விடத்தில் குறிக்கப்படும் 'வாழ்த்து' எனும் துறை இலக்கணங்களில் சுட்டப்படாததாலும், இப்பாடலில் வாழ்த்துதல் போன்று தனியாக ஏதும் இடம் பெறாததாலும், இப்பாடலுடன் வாழ்த்துத் துறையை ஒப்பிட்டுப் பார்க்க இயலவில்லை.

3.9.14 உடனிலை

'உடனிலை' என்னும் இத்துறை இலக்கணங்கள் சுட்டாததாகும். புறநானூற்றின் 58-ஆவது பாடல் இத்துறைக்குரியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. சோழனும், பாண்டியனும் ஆகிய இரு வேந்தரும் ஒருங்கிருக்கையில் 'நீங்கள் இருவரும் ஒன்றுபட்டிருக்கின்ற இந்நிலையில் வேறுபடாமல் இருப்பீராயின் இந்த உலகத்தைக் கைப்பற்றுவது பொய்யாகாது' என இப்பாடலில், அவ்விரு மன்னர்களின் ஒருங்கிருப்புப் புகழப்படுகிறது.

"................................. இருவரும்
உடனிலை திரியீர் ஆயின் இமிழ்திரைப்
பெளவம் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே"(223)

இவ்வாறு இரு வேந்தர்கள் ஒருங்கிருக்கையில் பாடப்பட்டதால் இப்பாடல் 'உடனிலை' என்ற பெயரினைக் கொண்ட துறையாயிருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

3.10 பொதுவியல்

பொதுவியல் திணையின் கீழ் புறநானூற்றில் எழுபத்து நான்கு பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் எட்டுத்துறைகளில் அமைகின்றன. இது குறித்த அட்டவணை வருமாறு.

	பொதுவியல் துறைகள்	புறநானூற்றுப்பாடல் எண்	எண்ணிக்கை
1	முதுபாலை	253-256	4
2.	தூபதநிலை	248-250	3
3.	ஆனந்தப்பையுள்	228, 229, 246, 247, 280	5
4.	கையறு நிலை	65, 112-120, 217-227, 230-245	37
5.	முதுமொழிக் காஞ்சி	18, 27, 74	3
6.	பெருங்காஞ்சி	194, 362-364	4
7.	பொருண்மொழிக்காஞ்சி	24,75,121, 182,183,185-193,195, 214	16
8.	இயன் மொழி வாழ்த்து முதுமொழிக்காஞ்சி*	28*, 29	2
	மொத்தப்பாடல்கள்		74

3.10.1 முதுபாலை

"காம்புயர் கடத்திடைக் கணவனை யிழந்த
பூங்கொடி மடந்தை புலம்புரைத் தன்று"(224)

என்பது "முதுபாலை' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். காட்டினிடத்தே கணவனை இழந்த மடந்தையின் புலம்பலைச் சொல்லுவது இதன் பொருளாகும். புறநானூற்றின் 253-256 ஆகிய நான்கு பாடல்களும் காட்டினிடத்தே கணவனை இழந்த மனைவியின் புலம்பலாகவே உள்ளன.

"நகாஅல்என வந்த மாறே எழாநெல்
பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்
வளைஇல் வறுங்கை ஒச்சிக்
கிளையுள் ஒய்வலோ கூறுநின் உரையே"(225)

எனப்புறநானூற்றின் 253-ஆவது பாடலிலும்

"எடுப்ப எழாஅய் மார்பம்மண் புல்ல
இடைச்சுரத்து இறுத்த மள்ள விளர்த்த
வளைஇல் வறுங்கை ஒச்சிக் கிளையுள்
இன்னனாயினன் இளையோன் என்று
நின்னுரை செல்லு மாயின் மற்று
....
ஆனாது புகழும் அன்னை
யாங்கா குவள்கொல் அளியன் தானே"(226)

என 254-ஆவது பாடலிலும், காட்டிடத்தே கணவனை இழந்தவளின் புலம்பல் காணப்படுகிறது. இது போன்றே புறநானூற்றின் 255,256 ஆகிய பாடல்களும் அமைவதால் இவை முதுபாலைத் துறையில் அடங்குகின்றன.

3.10.2 தாபதநிலை

கணவனை இழந்தாளின் கைம்மைநிலையைக் கூறுவது தாபதநிலைத் துறையாகும்.

"குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மை கூறின்று"(227)

இது 'தாபதநிலை' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். புறநானூற்றின் 248-250 ஆகிய மூன்று பாடல்கள் இத்துறைக்குரியன.

"அளிய தாமே சிறுவெள் ஆம்பல்
இளைய மாகத் தழையா யினவே
பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்து
இன்னா வைகல் உண்ணும்
அல்லிப் படூஉம் புல்ஆ யினவே"(228)

எனப் புறநானூற்றின் 248-ஆவது பாடலிலும்,

"உயர்நிலை உலகம் அவன்புக..............
நீறாடு சுளகின் சீறிடம் நீக்கி
அழுதல் ஆனாக் கண்ணள்
மெழுகும் ஆப்பிகண் கலுழ்நீ ரானே"(229)

எனப் புறநானூற்றின் 249-ஆவது பாடலிலும்,

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவி ...."(230)

என 250-ஆவது பாடலிலும் கணவனை இழந்த மனைவியின் கைம்மைநிலைகள் கூறப்படுவதால் இம்மூன்று பாடல்களும் 'தாபதநிலை' ஆயிற்று.

3.10.3 ஆனந்தப்பையுள்

கணவன் பட்டமையால் தலைவி மெலிந்து வருந்துதல் 'ஆனந்தப்பையுள்' துறையாகும்.

"விழுமங்கூர வேய்த்தோள் அரிவை
கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று"(231)

என்பது 'ஆனந்தப்பையுள்' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். புறநானூற்றின் 228, 229, 246, 247, 280 ஆகிய ஐந்து பாடல்கள் இத்துறைக்குரியன. அவற்றுள்,

“மேலார் உலகம் எய்தினன் ஆகலின்
ஒண்டொடி மகளிர்க்கு உறுதுணை ஆகித்
தன்துணை ஆயம் மறந்தனன் கொல்லோ”(232)

எனப்புறநானூற்றின் 229-ஆவது பாடலிலும்,

“பேரஞர்க் கண்ணன் பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்ம தானேதன் கொழுநன்
முழவுகண் துயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுதனி தமியள் ஆயினும்
இன்னுயிர் நடுங்கும் தன் இளமைப்புறங் கொடுத்தே”(233)

என 247-ஆவது பாடலிலும் தலைவியின் வருத்தம் சுட்டப்படுகிறது. புறநானூற்றில் 246, 280 ஆகிய இரண்டு பாடல்களிலும் முறையே,

“பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாமுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே”(234)

எனவும்,

“கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்தல் அதனினும் அரிதே”(235)

எனவும், கணவனை இழந்த மனைவியின் வருத்தம் பேசப்படுவதால் மேற்குறித்த நான்கு பாடல்களும் ‘ஆனந்தப்பையுள்’ துறைக்குள் அடங்குகின்றன. இத்துறைக்குரியதாகக் குறிக்கப்படும் புறநானூற்றின் 228-ஆவது பாடலின் எவ்விடத்தும் மனைவியானவள் வருந்துவதாகக் கூறப்படவில்லை.

“.............................. நெடுமா வளவன்
தேவர் உலகம் எய்தினான் ஆதலின்
அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி
வனைதல் வேட்டனை யாயின் அனைய தூஉம்
இருநிலம் திகிரியாப் பெருமலை
மண்ணா வனைதல் ஒல்லுமோ நினக்கே”(236)

மன்னன் ஒருவன் உயிர்துறக்க, அதற்கு வருந்திய புலவர் தாழி செய்யும் குயவனிடம் மன்னனது புகழைக் கூறி இரங்குவதாக இப்பாடல் அமைகிறது. "இது சுற்றத்தார் இரங்கிக் கூறுதலின் ஆனந்தப்பையுளாயிற்று"(237) என இப்பாடல் ஆனந்தப்பையுள் துறையானதற்குக் காரணம் கூறுவர் ஔவை துரைசாமிப்பிள்ளை. எனினும் இப்பாடல்,

"கழிந்தோன் தன்புகழ் காதலித் துரைப்பினும்
மொழிந்தனர் புலவர் அத்துறை அன்ன"(238)

எனும் கைக்கிளைப் பொருளோடே நன்கு பொருந்தி வருவதால் இப்பாடலினைக் கைக்கிளைத் துறையாகக் கொள்ளுவதே பொருத்தமானதாகும்.

3.10.4 கையறு நிலை

புறப்பொருள் வெண்பாமாலை கையறுநிலைத் துறைக்கு,

"செய்கழல் மன்னன் மாய்ந்தெனச் சோர்ந்தோர்
கையற யுரைத்துக் கைசோர்ந் தன்று"(239)

எனவும்,

"கழிந்தோன் தன்புகழ் காதலித் துரைப்பினும்
மொழிந்தனர் புலவர் அத்துறை அன்ன"(240)

எனவும் இரண்டு கொளுக்களைக் கூறுகிறது. மன்னன் இறந்தானாக அவனைச் சேர்ந்தோர் கையற்றுக் கூறுதலும், இறந்தவனுடைய புகழை எடுத்துக்கூறி இரங்குதலும் முறையே மேற்கண்ட கொளுக்களின் பொருள்களாகும். புறநானூற்றின் 65, 112-120, 217-227, 230-245 ஆகிய முப்பத்தேழு பாடல்கள் கையறுநிலைத் துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன.

3.10.4.1 கையற்றுக்கூறல்

65, 112, 113, 116-120, 217, 219-227, 230-234, 236-238, 240-242, 245 ஆகிய முப்பது பாடல்கள் மன்னன் இறந்தானாக அவனைச் சேர்ந்தோர் கையற்றுக் கூறுவதாக அமைந்தனவாகும். அவற்றுள்ளும் 245-ஆவது பாடல்,

அரசி உயிர் துறக்க அரசன் கையற்றுப் பாடுவதாக உள்ளது. புறநானூற்றுக்குத் துறை வகுத்தோர்' இப்பாடலையும் 'கையறுநிலைத் துறைக்குரியதாகக் குறிப்பதால் அரசன் மட்டுமன்றி அரசி இறக்க, அவளைச் சேர்ந்தோர் கையற்றுக் கூறுதலும்' இத்துறையேயாகும் எனத் தெளியலாம்.

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே"(241)

எனப் புறநானூற்றின் 112-ஆவது பாடலில், தந்தையை இழந்த மகளிரின் கையறுநிலை வெளிப்படுகிறது.

"பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் ...."(242)

எனப் புறநானூற்றின் 113-ஆவது பாடலும்,

"நோகோ யானே தேய்கமா காலை"(243)

எனப் புறநானூற்றின் 116-ஆவது பாடலிலும் மன்னனை இழந்த புலவரின் கையறுநிலை கூறப்படுகிறது. கையற்றுக் கூறல் கூறும் வகைக்குள் அமைந்த முப்பது பாடல்களுள் 112, 245 ஆகிய இரு பாடல்கள் தவிர்த்த ஏனைய இருபத்தெட்டுப் பாடல்களும் மன்னன் இறக்கப், புலவனின் கையறுநிலையைக் கூறுவனவாகவே உள்ளன. எனவே, இப்பாடல்கள் அனைத்தும் கையறுநிலைத் துறையைச் சேர்ந்தன.

"வெள்ளிடைப் பொத்திய விளைவிற்கு ஈமத்து
ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்இதன் பண்பே"(244)

எனும் புறநானூற்றின் 245-ஆவது பாடலில் மனைவியை இழந்த கணவனின், கையறுநிலை நன்கு வெளிப்படுவதால் இப்பாடலும் கையறுநிலையாயிற்று.

3.10.4.2 புகழைக்கூறி இரங்கல்

புறநானூற்றின் 235, 239 ஆகிய இரண்டு பாடல்களும் மாண்ட மன்னனுடைய புகழை எடுத்துக்கூறி இரங்குவனவாகவுள்ளன.

"இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழந் தன்றவன்
அருநிறத் தாங்கிய வேலே
ஆசாரு எந்தை யாண்டுளன் கொல்லோ"(245)

எனப் புறநானூற்றின் 235-ஆவது பாடல் மன்னனுடைய கொடைச் சிறப்பை எடுத்துக் கூறி, இரங்குவதாகவுள்ளது. புறநானூற்றின் 239-ஆவது பாடலும்,

"ஓங்கியல் களிறூர்ந்தனன்
தீஞ்செறி தசாம்பு தொலைச்சினன்
பாண் உவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன், ஆங்குச்
செய்ப வெல்லாம் செய்தன னாகலின்
இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படுவழிப் படுகஇப் புகழ் பெய்யோன் தலையே"(246)

என மாண்ட மன்னனுடைய புகழைக் கூறி இரங்குவதாக உள்ளதால் இவ்விரு பாடல்களும் 'கையறுநிலை' ஆயின.

3.10.4.3 சூழ்நிலையால் துறைபெறும் பாடல்கள்

புறநானூற்றின் 114, 115, 218 ஆகிய மூன்று பாடல்களும் கையறுநிலைக்குரியனவாகச் சுட்டப்பட்டுள்ளன. ஆயின் இம்மூன்று பாடல்களின் பொருள்களை மட்டும் நோக்கும்போது இப்பாடல்களின் துறை பொருந்தவில்லை.

"ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்றுநின் றோர்கரும் தோன்றும் மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப்பிழிந் திட்ட கோதுடைச் சிதறல்
வார்அசும் பொழுகும் முன்றில்
தேர்வீ இருக்கை நெடியோன் குன்றே"(247)

என்பது புறநானூற்றின் 114-ஆவது பாடலாகும். புறநானூற்றின் 115-ஆவது பாடலும் இதே போன்ற அமைப்புடையதாகும். இந்தப் பாடல்களில் எவ்விடத்தும் கையறுநிலைத் துறைப்பொருள் வரவில்லை. இவ்விரண்டு பாடல்களும் மன்னன் ஒருவன் இறந்த பின்பு அவனால் விரும்பப்பட்ட புலவர், அவனது குன்றினை நோக்கிப் பாடியனவாகும். இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது மட்டும் இப்பாடல்களில் கையறுநிலை புலப்படுகிறது. இவைபோன்றே புறநானூற்றின் 218-ஆவது பாடலின் பொருளை மட்டும் நோக்கும் போது,

"பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே"(248)

என்று சான்றோர் குழுவினைப் புகழ்வது மட்டுமே இப்பாடலில் தெரிகின்றது. இங்கு 'கையறுநிலை' இல்லை. ஒரு புலவரின்பால் அன்பு கொண்ட மன்னன் ஒருவன் வடக்கிருந்து உயிர்துறக்க அதனைப் பொறுக்காத அப்புலவரும் வடக்கிருந்து உயிர்விட முற்படுகையில் பாடப்பட்டது இப்பாடலாகும். இச் சூழலைக் கொண்டு நோக்கும் நிலையில் இப்பாடலின் 'கையறுநிலை' தெளிவாகிறது. இவற்றின் மூலம் புறநானூற்றுக்குத் துறை வகுத்தோர் வெறுமனே பாடலின் பொருளை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளாமல் பாடப்பட்ட சூழ்நிலையையும் கருத்தில் கொண்டே துறை வகுத்துள்ளனர் என்பது தெளிவாகும்.

3.10.4.4 புதியபொருள்

புறநானூற்றின் 243-ஆவது பாடலின் துறை 'கையறுநிலை' எனக் குறிக்கப்பட்ட போதிலும், இப்பாடல் ஒருவர் இறந்தாற் பொருட்டு இரங்கிப் பாடப்பட்டதல்ல. புலவர் ஒருவர்,

"நெடுநீர்க் குட்டத்துத் துடும்எனப் பாய்ந்து
குளித்து மணற் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்துண்டு ஊன்றி நடுக்குற்று
இரும்இடை மடைந்த சிலகொல்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே"(249)

என்று தமது இளமைப் பருவம் கழிந்ததற்காக இரங்கிப் பாடியதாகும். புறநானூற்றுக்குத் துறை வகுத்தோர் இறத்தலுக்காக மட்டுமின்றி இளமை கழிந்ததற்காக இரங்கிப் பாடுதலையும் கையறுநிலைத் துறையாகவே கொண்டுள்ளனர். இது புற இலக்கணத்தில் சுட்டப்படாத புதிய பொருளாகும்.

3.10.4.5 சிதைந்த பாடல்

"பாணர் சென்னியும் வண்டுசென்று ஊதா
விறலியர் முன்கையும் தொடியில் பொலியா
இரவன் மாக்களும் ...."(250)

இது சிதைந்த நிலையில் காணப்படும் புறநானூற்றின் 244-ஆவது பாடலாகும். உ.வே.சா. அவர்கள் இப்பாடலுக்குத் திணை, துறை குறிக்கவில்லை. ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் இப்பாடலினைப் பொதுவியல் திணையின் கீழ் அமைந்த கையறுநிலைத்துறைப் பாடலாகக் குறிக்கிறார். இப்பாடலில் 'பாணர்களது தலையும் வண்டுகள் படிந்து தாது ஊதுவது ஒழிந்தன. விறலியர்களுடைய முன்கைகளும் கொடியணிந்து விளங்குவதொழிந்தன' என்று பாணர் முதலியோரின் கையறவு கூறப்படுகிறது. பொருள் கொடுத்துக் காத்த வள்ளல் மாண்ட நிலையில் பாணர் முதலியோருக்குக் கையறவு

ஏற்படுமாகையால் இப்பாடலையும் கையறுநிலைத் துறையினதாகவே கொள்ளலாம்.

3.10.5 முதுமொழிக்காஞ்சி

அறிவுடைய புலவர் அறம், பொருள், இன்பங்களின் இயல்பினை உணர்த்துதல் முதுமொழிக்காஞ்சித் துறையாகும். இதனை,

"பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருள்முடி புணரக் கூறின்று"(251)

என்ற கொளுவினால் புறப்பொருள் வெண்பாமாலை சுட்டுகிறது. புறநானூற்றின் 18, 27, 74 ஆகிய மூன்று பாடல்கள் முதுமொழிக்காஞ்சிக்குரியதாகக் குறிக்கப் படுகின்றன.

"அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண்தட் டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே"(252)

எனவும்,

"வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை யாகுமதி..........."(253)

எனவும்,

"கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம் இரந் துண்ணும் அளவை
ஈனம ரோஇவ் வுலகத் தானே"(254)

எனவும், புலவர்களால் அறமானது உணர்த்தப்படுவதால் இம்மூன்று பாடல்களும் 'முதுமொழிக்காஞ்சி' ஆயின.

3.10.6 பெருங்காஞ்சி

"மலையோங்கிய மாநிலத்து
நிலையாமை நெறியுரைத் தன்று"(255)

என உலகத்தின்கண் தோற்றமுடையவற்றின் நிலையானமயைக் கூறல் பெருங்காஞ்சித் துறையாகும். புறநானூற்றில் 194, 362, 363, 364 – ஆகிய நான்கு பாடல்கள் பெருங்காஞ்சித் துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன.

"ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பணிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்
இன்னா தம்மஇவ் வுலகம்"(256)

எனப் புறநானூற்றின் 194-ஆவது பாடலில் வாழ்வின் நிலையாமை கூறப்படுகின்றது. இது போன்றே ஏணைய மூன்று பாடல்களிளும் நிலையாமை கூறப்படுவதால் இந்நான்கு பாடல்களும் பெருஙகாஞ்சித் துறைக்குள் அடங்கின.

3.10.7 பொருண்மொழிக்காஞ்சி

மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவெனக் கூறல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும். இதனை,

"எரிந்தி லங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருள்மொழிந் தன்று"(257)

என்ற கொளுவினால் புறப்பொருள் வெண்பாமாலை சுட்டுகிறது. புறநானூற்றின் 24, 75, 121, 182, 183, 185-193, 195, 214 ஆகிய பதினாறு பாடல்களும் மெய்ப் பொருளை உணர்த்துவனவாய் உள்ளன.

"வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவல் மாக்கள் ஈகை நுவல
ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி பெரும ஆங்கது
வல்லுநர் வாழ்ந்தோர் என்ப தொல்லிசை
மலர்தலை உலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்று விளிந்தோரே"(258)

எனப் புறநானூற்றின் 24-ஆவது பாடலில் நிலையாமையைக் கூறி இனிதொழுகு என்று கூறப்படுகிறது.

"குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின்அது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கும் மதுனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவன் ஆயின் ஆழ்நீர்
அறுகய மருங்கில் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தால் அம்ம ...."(259)

என 75-ஆவது பாடலில் அரசாட்சி செய்தல் எவ்வாறு என்ற மெய்ப்பொருள் கூறப்படுகிறது. 121-ஆவது பாடலில்,

"வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்"(260)

என ஈதலின் தன்மை உணர்த்தப்படுகின்றது. மேற்கண்டது போன்றே இத்துறைக் குரியனவாகக் குறிக்கப்படும் ஏனைய மூன்று பாடல்களும் மெய்ப்பொருள்களையே கூறி அமைகின்றன. ஆகையால் இப்பாடல்கள் அனைத்தும் பொருண்மொழிக் காஞ்சித் துறையுடன் பொருந்தி வருகின்றன.

3.10.8 இயன்மொழி வாழ்த்து

புறப்பொருள்வெண்பாமாலை பாடாண் திணையின் கீழ் இயன்மொழி வாழ்த்துத் துறையினைக் கூற, புறநானூறு பொதுவியல் திணையின் கீழும் இத்துறையினைக் கூறுகின்றது.

புறநானூற்றின் 28, 29 ஆகிய இரண்டு பாடல்கள் பொதுவியல் திணையின் கீழ் 'இயன்மொழி வாழ்த்து' துறையைச் சேர்நதனவாகக் குறிக்கப் படுகின்றன. இவற்றுள் 28-ஆவது பாடல் முதுமொழிக்காஞ்சிக்கும் உரியதாகச் சுட்டப்படுகின்றது. ஆயின் இவ்விரு பாடல்களிலும் இயன்மொழிவாழ்த்துத் துறைப்பொருள் இல்லை.

"................... அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைந்நின் போற்றா மையே"(261)

என்று 28-ஆவது பாடலிலும்,

"சிறுமனை வாழ்க்கையின் ஓரீஇ வருநர்க்கு
உதவி யாற்று நண்பிற் பண்புடை
ஊழிற் றாகநின் செய்கை ...."(262)

என்று 29-ஆவது பாடலிலும், முதுமொழிக்காஞ்சித் துறைப்பொருள் இடம்பெறுகிறது. எனவே, இவ்விரு பாடல்களையும் முதுமொழிக்காஞ்சித் துறைக்கு உரியனவாகக் கொள்ளலாம்.

3.11 கைக்கிளை

புறநானூற்றில் கைக்கிளைத் திணையின் துறையான பழிச்சுதலின் கீழ் மூன்று பாடல்கள் (புறம் 83-85) உள்ளன. புறப்பொருள் வெண்பாமாலை 'பயந்தோர்ப்பழிச்சல்' எனும் பெயரில் இத்துறையினைச் சுட்டுகிறது.

"இவட்பயந் தெடுத்தோர் வாழியர் நெடிதென
அவட்பயந் தோரை ஆனாது புகழ்ந்தன்று"(263)

என்பது அத்துறையின் கொளுவாகும். தலைவன், தலைவியின் தாய்தந்தையரை வாழ்த்துதல் இதன் பொருளாகும். ஆயின் புறநானூற்றின் 83-85 ஆகிய மூன்று பாடல்களும் மேற்கண்ட புறப்பொருள்வெண்பாமாலையின் பொருளில் அமையாது. மன்னன் ஒருவன் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி அவனைப் புகழ்ந்து கூறுவனவாக உள்ளன. இப்பாடல்கள் பயந்தோரைப் புகழாது தலைமகனையே புகழ்வதால் 'பழிச்சுதல்' துறையாயிற்று.

"அடிபுனை தொடுகழல்....................."(264)

அடியின் கண் புனைந்த வீரக்கழலினை உடையவன் என்றும்,

"போரெதிர்ந்து என்ஐ போர்க்களம் புகினே
கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்
ஏமுற்றுக் கழிந்த மன்னர்க்கு
உமணர் வெரூஉந் துறையன் னன்னே"(265)

பகைவர்களுக்கு வருத்தத்தைத் தருகின்றவன் என்றும்,

"முழாவரைப் போந்தை பொருந்தி நின்று
யான்கண் டனன் அவன் நாடா குதலே"(266)

மற்போரில் வெற்றி பெற்றவன் என்றும், புகழப்படுகிறான்.

இம்மூன்று பாடல்களுள் புறநானூற்றின் 83, 84 ஆகிய இரண்டு பாடல்களில் தலைவியானவள் தலைவன் பொருட்டுத் தனக்கு ஏற்பட்ட மெலிவினைக் கூறுகிறாள். தலைவிக்கு,

"அடிபுனை தொடுகழல் மைஅணர் காளைக்குஎன்
தொடிகழித் திடுதல்யான் யாய்அஞ் சுவவே"(267)

என வளை கழலுவதும்,

"யாமே புறஞ்சிறை இருந்தும் பொன்னன் னம்மே"(268)

எனப் பசலை ஏற்படுவதும் இப்பாடல்களில் இடம்பெறுகின்றன. இவ்வாறு வளை கழலுவதையும், பசலை ஏற்படுவதையும் குறித்து வரும் பாடல்கள் 'மெலிவொடுவைகல்' என்னும் துறையின் பாற்படும் என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.

"மணிவளை நெகிழ மாண்நலந் தொலைய
அணியிழை மெலிவின் ஆற்றல் கூறின்று"(269)

என்பது அது குறித்த கொளுவாகும். எனவே, இவ்விரண்டு பாடல்களையும் (புறம் 83, 84) 'மெலிவொடு வைகல்' துறையின் கீழும் கொள்ளலாம்.

3.12 பெருந்திணை

புறநானூற்றில் இத்திணையின் கீழ் வரும் 143-147 ஆகிய ஐந்து பாடல்களும் 'குறுங்கலி' துறைக்குரியன. இவற்றுள் 143-ஆவது பாடல்

கூடுதலாகத் தாபதநிலைத் துறையையும் பெறுகிறது. புறப்பொருள்வெண்பாமாலை குறுங்கலித் துறையினை,

"நாறிருங் கூந்தல் மகளிரை நயப்ப
வேறுபட வேட்கை வீயக் கூறின்று"(270)

என்கிறது. 'தலைவன் தலைவியைக் கைவிட்டுப் பிற மகளிரை விரும்புவதற்கு அவன் நெஞ்சத்தே மாறுபட்டெழுந்த காம வேட்கை கெடும்படி கூறல்' என்பது இதன் பொருளாகும். புறநானூற்றில் இத்துறைக்குரிய ஐந்து பாடல்களும், மன்னன் ஒருவன் தனது மனைவியைக் கைவிட்டுப் பிற மகளிருடன் இன்புற்றிருக்க, புலவர்கள் அவ்வொழுக்கத்தைக் கைவிட்டு மனைவியிடம் அன்பு கொள்ளும்படி பாடப்பட்டதாகும்.

"எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்
வரூஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்"(271)

என, மன்னன் வேறு பெண்ணை விரும்பிய செய்தியும்,

"வாயில் தோன்றி வாழ்த்தி நின்று
நின்னு நின் மலையும் பாட இன்னாது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மிக்
குழல்இனை வதுபோல் அழுதனள் பெரிதே"(272)

என்று அதனால் வருந்திய அவளது மனைவி நிலையும் கூறி

"அறஞ்செய் தீமோ அருள்வெய் யோய்என
இஃதுயாம் இரந்த பரிசிலஃது இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அரும்படர் களைமே"(273)

என மனைவியை அடையுமாறு இப்பாடல்களில் புலவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு தலைவனின் காமவேட்கை கெடும்படி பாடப்பட்டமையால் இப்பாடல்கள் 'குறுங்கலி' ஆயிற்று. கணவன் இறந்த நிலையில் மனைவியின் கைம்மையைக் குறிக்கும் தாபதநிலைத் துறை புறநானூற்றின் 143-ஆவது பாடலில் இல்லை. இப்பாடலில் கணவனைப் பிரிந்த மனைவி ஒருத்தியின் துயரம் கூறப்பட்டுள்ளதால் 'தாபதநிலை' ஆகாது.

3.13 சிதைந்த பாடல்கள்

புறநானூற்றின் 267, 268 ஆகிய இரண்டு பாடல்கள் முற்றிலும் சிதைந்து விட்டன. ஔவைத் துரைசாமிப்பிள்ளையின் புறநானூற்று உரையில் 282, 289, 361 ஆகிய மூன்று பாடல்கள் இடையிடையே சிதைந்து திணை, துறையின்றி உள்ளன. உ.வே.சா.வின் புறநானூற்று உரையில் 244, 282, 289, 323, 355, 361 ஆகிய ஆறு பாடல்கள் திணை, துறையின்றி காணப்படுகின்றன. இவற்றுள் 244, 323, 355 ஆகிய மூன்று பாடல்களுக்கும் முறையே கையறுநிலை, வல்லாண்முல்லை, மகட்பாற்காஞ்சி ஆகிய துறைகளைக் கூறுகிறார் ஔவை துரைசாமிப்பிள்ளை. இது முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

3.14 தொகுப்புரை

- புறப்பொருள்வெண்பாமாலை சுட்டியுள்ள பன்னிரெண்டு புறத்திணைகளில் உழிஞை, தவிர்த்த ஏனைய பதினொரு திணைகளில் புறநானூற்றுப்பாடல்கள் அமைகின்றன. இப்பாடல்கள் எழுபது துறைகளில் உள்ளன.
- புறநானூற்றின் 2, 5-8, 17, 22, 23, 28, 31, 37, 49, 128, 137, 141, 143, 158, 170, 180, 259, 260, 262, 357, 369, 373, 397 ஆகிய 26 பாடல்கள் இரண்டு துறைகளைப் பெறுவனவாகத் துறைவகுத்தோரால் குறிக்கப்படுகின்றன.
- இரண்டு துறைகளைப் பெறும் பாடல்களுள், 28-ஆவது பாடல் இயன்மொழி வாழ்த்து, முதுமொழிக்காஞ்சி ஆகிய துறைகளைப் பெறுவதாகக் குறிக்கப்பட்டபோதும் அப்பாடலில் இயன்மொழிவாழ்த்து துறைப்பொருள் இல்லை. எனின் கையறுநிலையை அது கூடுதலாகப் பெறுகிறது.
- 137-ஆவது பாடல் பரிசிற்றுறை, இயன்மொழி ஆகிய இரண்டு துறைகளைப் பெறுவதாகக் குறிக்கப்படுகிறது. இப்பாடலில் பரிசிற்றுறைப் பொருள் இலலையாதலால், இயன்மொழி மட்டுமே இப்பாடலுக்கான துறையாகும்.

- 143-ஆவது பாடல் குறுங்கலி, தாபதநிலை ஆகிய இரண்டு துறைகளைப் பெறுவதாகக் குறிக்கப்பட்டபோதும், இப்பாடல் தாபதநிலைத் துறைக்குப் பொருந்தவில்லை.
- 158-ஆவது பாடல் வாழ்த்தியல், பரிசில்கடாநிலை ஆகிய துறைகளைப் பெறுவதாகக் குறிக்கப்படுகின்றது. வாழ்த்தியல் துறைப்பொருள் இப்பாடலில் இல்லையாதலால், பரிசில்கடாநிலை மட்டுமே இப்பாடலுக்கான துறையாகும்.
- 259-ஆவது பாடல் போர்மலைதல், பிள்ளைப் பெயர்ச்சித் துறைகளைப் பெறுவதாகக் குறிக்கப்பட்டபோதும், போர்மலைதல் மட்டும் இப்பாடலுக்கான துறையாகும்.
- 260-ஆவது பாடல் கையறுநிலை, பாண்பாட்டுத் துறைகளுக்குரியதாகக் குறிக்கப்படுகிறது. இப்பாடலில் பாண்பாட்டுத் துறைப்பொருள் இல்லை. எனவே, கையறுநிலை மட்டும் இப்பாடலுக்குரியது.
- 357-ஆவது பாடல் பெருங்காஞ்சி, மறக்காஞ்சித் துறைகளைப் பெறுவதாகக் குறிக்கப்பட்டபோதும், இப்பாடல் பெருங்காஞ்சித் துறையை மட்டுமே பெறுகிறது.
- 29-ஆவது பாடல் இயன்மொழித் துறைக்குரியதாகக் குறிக்கப்படுகிறது. இப்பாடலில் இயன்மொழித் துறைப்பொருள் இல்லை. முதுமொழிக்காஞ்சித் துறையே இப்பாடலுக்கான துறையாதல் வேண்டும்.
- 148, 202-ஆகிய இரண்டு பாடல்களும் பரிசிற்றுறைக்குரியனவாகச் சுட்டப்படுகின்றன. இப்பாடல்களுக்கு இத்துறை பொருந்தவில்லை. 148-ஆவது பாடலினை இயன்மொழித் துறைக்கும் 202-ஆவது பாடலினைக் கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் துறைக்கும் கூறுவதே பொருத்தமானதாகும்.
- 199-ஆவது பாடல் பரிசில்கடாநிலைத் துறைக்குரியதாகக் குறிக்கப் பட்டபோதும், அத்துறை பொருந்தவில்லை. 228-ஆவது பாடல் ஆனந்தப்பையுள் துறைக்குரியதாகக் குறிக்கப்பட்டபோதும், இப்பாடலினைக் கையறுநிலைக் குரியதாகக் கொள்ளுவதே பொருத்தமானதாகும். மேலே குறிக்கப்பட்ட பன்னிரெண்டு புறநானூற்றுப் பாடல்கள் தவிர்த்த ஏனைய பாடல்கள் அனைத்தும், துறைவகுத்தோர் குறித்த துறைகளிலேயே அடங்குகின்றன.

- புறநானூற்றிற்குத் துறை வகுத்தோர், பாடற்பொருளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு துறை வகுக்கவில்லை. பாடல் பாடப்பட்ட சூழலினையும் கருத்தில் கொண்டே துறை வகுத்துள்ளனர். புறநானூற்றின் 109-111 ஆகிய மூன்று மகண்மறுத்தல் துறைப்பாடல்களும், 283, 284, 311 ஆகிய மூன்று பாண்பாட்டுத் துறைப்பாடல்களும், 114, 115, 218 ஆகிய மூன்று கையறுநிலைத் துறைப்பாடல்களும் இவ்வகையில் அமைந்தனவாகும்.
- புறப்பொருள்வெண்பாமாலை தும்பைத் திணையின் உவகைக்கலுழ்ச்சி துறையினை மனைவிக்குரியதாகச் சுட்ட, புறநானூற்றுப்பாடல்கள் (புறம். 277, 278, 295) தாய்க்குரிய நிலையில் இத்துறையினைக் குறிக்கின்றன.
- மறக்குடி மகளின் மறப்பண்பினைக் கூறல் மூதின்முல்லைத் துறை என்கிறது புறப்பொருள்வெண்பாமாலை. புறநானூற்றிற்குத் துறை வகுத்தோர் பெண்ணொருத்தியின் கொடை முதலாகிய நற்குணங்களைப் புகழும் பாடல்களையும் (புறம். 333, 334) இத்துறைக்குரிய பாடல்களாகவே குறித்துள்ளனர்.
- புறப்பொருள்வெண்பாமாலை பாடாண் திணையின் இயன்மொழித் துறையினை, வேந்தனின் இயல்பு கூறல் என்கிறது. புறநானூற்றின் 215, 216 ஆகிய இரண்டு பாடல்களிலும் புலவரின் இயல்பு கூறப்பட்டபோதும், அப்பாடல்களையும் துறைவகுத்தோர் இயன்மொழிக்குரியனவாகவே குறித்துள்ளனர்.
- ஒருவர் இறத்தலுக்குக் கையற்றுப்பாடுதல் மட்டுமன்றி ஒருவர் தமது இளமைப்பருவம் கழிந்ததற்கு வருந்திப்பாடுதலும் கையறுநிலைத் துறையேயாகும் (புறம். 243).
- புறநானூற்றின் 83-85 ஆகிய மூன்று பாடல்களும் கைக்கிளைத் திணையின் பழிச்சுதல் துறையில் உள்ளன. புறப்பொருள்வெண்பாமாலையில் 'பயந்தோர்ப் பழிச்சல்' என்ற பெயரிலேயே துறை அமைகிறது. இத்துறை ஆண்பாற்குரியதாகும். ஆயின் மேற்குறித்த புறநானூற்றுப் பாடல்களில் ஒரு தலைவியானவள் தலைவனின் பயந்தோரை வாழ்த்தாமல், அத்தலைவனையே வாழ்த்துகிறாள். எனவே, துறைவகுத்தோர் இப்பாடல்களை 'பழிச்சுதல்' என்ற துறையாகக் குறித்தனர். மேலும் 83, 84 ஆகிய இரண்டு பாடல்களும்

'மெலிவொடு வைகல்' என்னும் துறையையும் கூடுதலாகப் பெறுகின்றன. துறைவகுத்தோர் இதனைக் குறிக்கவில்லை.

- துணைவஞ்சி, மனையறம் துறவறம், முதல்வஞ்சி, பரிசில், உடனிலை ஆகிய புதிய துறைகளைப் புறநானூற்றின் மூலம் அறியமுடிகிறது. இத்துறைகள் இன்று கிடைக்கும் இலக்கணநூல்களால் குறிக்கப்படாதவைகளாகும். இவற்றுள் முதல்வஞ்சி தவிர்த்த ஏனைய நான்கு துறைகளின் பொருள்களையும் அவ்வத் துறைகளுக்குரிய புறநானூற்றுப் பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.
- பகை கொண்ட இருவரைச் சந்துசெய்வித்தல் துணைவஞ்சித் துறையின் பொருளாகும் (புறம். 36, 45-47, 57, 213).
- மனையறத்தோடு துறவறத்தை ஒப்பிட்டுக் கூறுதல் மனையறம் துறவறம் ஆகும் (புறம். 358).
- புலவர் தாம் பெற்ற பொருளைத் தம்மைச் சுற்றியுள்ள அனைவருக்கும் கொடுத்து மகிழ்வது பரிசில் துறையாகும் (புறம். 163).
- இரு வேந்தர்கள் உடனிருக்கையில் அவர்களது ஒற்றுமையைப் புகழ்ந்து பாடுவது உடனிலையாகும் (புறம். 58).

அடிக்குறிப்புகள்

1. அ.கிருட்டினமூர்த்தி. புறநானூற்றுச் சொற்பொழிவுகள், ப.70.
1. சாமி. சிதம்பரன், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.193
2. புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சி, கொளு ; 14
3. புறநானூறு, 258; 2-5
4. மேலது, 269 ; 4-5
5. மேலது, 297 ; 5-6
6. புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சி, கொளு ; 12
7. புறநானூறு, 262
8. ஔவை துரைசாமிப்பிள்ளை, புறநானூறு - மூலமும் உரையும், ப.116
9. கழகத்தமிழ் அகராதி, ப. 489
10. புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தை, கொளு ; 4
11. மேலது, கரந்தை கொளு ; 12
12. புறநானூறு, 249 ; 2-4
13. புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தை, கொளு ; 10
14. புறநானூறு, 264 ; 3-7
15. புறப்பொருள் வெண்பாமாலை, தும்பை, கொளு ; 11
16. மேலது, கரந்தை, கொளு ; 11
17. புறநானூறு, 298 ; 3-5
18. மேலது, 287 ; 5-7
19. புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தை, கொளு ; 13
20. புறநானூறு, 286 ; 2-3
21. மேலது, 291 ; 6-8
22. புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தை, கொளு ; 14
23. புறநானூறு, 290 ; 3-5
24. புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சி கொளு ; 8
25. புறநானூறு, 7 ; 6-10
26. மேலது, 7 ; 7-10

27. புறப்பொருள் வெண்பாமாலை. வஞ்சி. கொளு ; 15
28. புறநானூறு. 16 ; 4
29. மேலது. 16 ; 17
30. புறப்பொருள் வெண்பாமாலை. வஞ்சி. கொளு ; 23
31. புறநானூறு. 292 ; 1-2
32. ஔவை துரைசாமிப்பிள்ளை. புறநானூறு - மூலமும் உரையும். ப.103
33. புறநானூறு. 36 ; 9-13
34. மேலது. 46 ; 6-8
35. புறப்பொருள் வெண்பாமாலை. காஞ்சி. கொளு ; 6
36. தொல்காப்பியம். புறத்திணையியல். நூ. 19 ;1
37. இளம்புரணர். தொல்காப்பியம். புறத்திணையில். உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.237
38. புறநானூறு. 359 ; 9-10
39. புறப்பொருள் வெண்பாமாலை. பொதுவியல் கொளு ; 31
40. மேலது. காஞ்சி கொளு ; 9
41. புறநானூறு. 71 ; 1-6
42. புறப்பொருள் வெண்பாமாலை. காஞ்சி கொளு ; 10
43. புறநானூறு. 293 ; 1-3
44. தொல்காப்பியம். புறத்திணையியல். நூ. 19 ; 3-4
45. புறநானூறு. 357 ; 7-8
46. புறப்பொருள் வெண்பாமாலை. காஞ்சி கொளு ; 19
47. புறநானூறு. 281 ; 1-7
48. புறப்பொருள் வெண்பாமாலை. காஞ்சி கொளு ; 24
49. புறநானூறு. 336 ; 1-2
50. மேலது. 338 ; 5-9
51. மேலது. 341 ; 1
52. மேலது. 343 ; 12-13
53. மேலது. 358 ; 3-4

54. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, நொச்சி, கொளு ; 4

55. <u>புறநானூறு</u>, 271 ; 2-8

56. மேலது, 272 ; 1-8

57. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, நொச்சி, கொளு ; 5

58. <u>புறநானூறு</u>, 299 ; 1-3

59. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, நொச்சி, கொளு ; 9

60. <u>புறநானூறு</u>, 109

61. ஔவை துரைசாமிப்பிள்ளை, <u>புறநானூறு - மூலமும் உரையும்</u>, ப.243

62. <u>புறநானூறு</u>, 87

63. மேலது, 300 ; 3-6

64. மேலது, 90 ; 8-13

65. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, தும்பை, கொளு ; 7

66. <u>புறநானூறு</u>, 273 ; 5-7

67. மேலது, 302 ; 1-2

68. மேலது, 303 ; 1-2

69. மேலது, 304 ; 3

70. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, தும்பை, கொளு ; 11

71. சோமசுந்தரனார், <u>புறப்பொருள்வெண்பாமாலை, மூலமும் உரையும்</u>, ப.142

72. <u>புறநானூறு</u>, 284 ; 4-8

73. ஔவை துரைசாமிப்பிள்ளை, <u>புறநானூறு - மூலமும் உரையும்</u>, ப.169.

74. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, தும்பை, கொளு ; 13

75. <u>புறநானூறு</u>, 275 ; 3-4

76. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, தும்பை, கொளு ; 16

77. <u>புறநானூறு</u>, 309 ; 5-7

78. மேலது, 310 ; 6-8

79. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, தும்பை, கொளு ; 20

80. <u>புறநானூறு</u>, 307 ; 2

81. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, தும்பை, கொளு ; 22

82. <u>புறநானூறு</u>, 276 ; 4-6

83. மேலது. 288 ; 5-9

84. புறப்பொருள் வெண்பாமாலை. தும்பை. கொளு ; 24

85. மேலது. தும்பை. கொளு ; 25

86. புறநானூறு. 277 ; 3-6

87. மேலது. 295 ; 6-8

88. மேலது. 278 ; 8-9

89. புறப்பொருள் வெண்பாமாலை. தும்பை. கொளு ; 28

90. புறநானூறு. 62 ; 7-13

91. மேலது. 63 ; 5-10

92. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 3

93. தொல்காப்பியம். புறத்திணையியல். நூ. 16 ;2

94. இளம்பூரணர். தொல்காப்பியம் புறத்திணையில். உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.176

95. புறநானூறு. 94 ; 3-5

96. மேலது. 20 ; 17-19

97. மேலது. 21 ; 11-13

98. மேலது. 25 ; 5-6

99. மேலது. 43 ; 15-20

100. மேலது. 44 ; 6-9

101. மேலது. 17 ; 5

102. மேலது. 17 ; 40

103. மேலது. 22 ; 11-13

104. மேலது. 22 ; 33

105. மேலது. 23 ; 12-14

106. மேலது. 23 ; 7-11

107. மேலது. 31 ; 1-2

108. மேலது. 31 ; 5-6

109. மேலது. 31 ; 14-17

110. மேலது. 37 ; 10-14

111. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 5

112. புறநானூறு. 368 ; 12-13

113. மேலது. 369 ; 8-13

114. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 6

115. புறநானூறு. 372 ; 10-12

116. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 9

117. புறநானூறு. 166 ; 21-26

118. மேலது. 305 ; 2-6

119. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 14

120. புறநானூறு. 251 ; 4-7

121. மேலது. 252 ; 1-3

122. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 21

123. புறநானூறு. 279

124. மேலது. 306 ; 3-7

125. மேலது. 308 ; 6-11

126. மேலது. 312 ; 5-6

127. மேலது. 333 ; 9-13

128. மேலது. 334 ; 5-7

129. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 22

130. புறநானூறு. 86 ; 1-6

131. மேலது. 296

132. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 23

133. புறநானூறு. 178 ; 6-11

134. மேலது. 179 ; 5-10

135. மேலது. 181 ; 6-10

136. மேலது. 322 ; 5-10

137. மேலது. 170 ; 1-2

138. மேலது. 170 ; 15-17

139. மேலது. 170 ; 8-9

140. மேலது. 180 ; 1-13

141. மேலது. 180 ; 6-9

142. புறப்பொருள் வெண்பாமாலை. வாகை. கொளு ; 31

143. புறநானூறு. 285 ; 10-14

144. புறப்பொருள் வெண்பாமாலை. பாடாண். கொளு ; 4

145. புறநானூறு. 56 ; 10-14

146. மேலது. 59 ; 6-7

147. மேலது. 374 ; 15-18

148. புறப்பொருள் வெண்பாமாலை. பாடாண். கொளு ; 5

149. புறநானூறு. 126 ; 11-18

150. மேலது. 135 ; 14-20

151. மேலது. 154 ; 6-7

152. மேலது. 161 ; 14-20

153. மேலது. 168 ; 19-22

154. மேலது. 168 ; 17

155. மேலது. 148 ; 3-7

156. மேலது. 163 ; 5-7

157. மேலது. 202 ; 15-17

158. புறப்பொருள் வெண்பாமாலை. பாடாண். கொளு ; 6

159. மேலது. பாடாண். கொளு ; 7

160. புறநானூறு. 389 ; 13-15

161. மேலது. 8 ; 4-5

162. மேலது. 9 ; 6-8

163. மேலது. 10 ; 3-6

164. மேலது. 215 ; 7-9

165. மேலது. 216 ; 6-12

166. மேலது. 8 ; 5-6

167. மேலது. 137 ; 4-8

168. தொல்காப்பியம். புறத்திணையியல். நூ. 30 ;13

169. நச்சினார்க்கினியர். தொல்காப்பியம் புறத்திணையில். உரைவளம். மதுரை காமராசர்ப் பல்கலைக்கழகம். ப.342

170. புறப்பொருள் வெண்பாமாலை. பாடாண். கொளு ; 25

171. புறநானூறு. 11 ; 11-18

172. மேலது. 101 ; 5-8

173. மேலது. 136 ; 23-24

174. மேலது. 199 ; 3-7

175. நச்சினார்க்கினியர். தொல்காப்பியம் புறத்திணையில். உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.342

176. கழகத்தமிழ் அகராதி. ப.262.

177. புறநானூறு. 383 ; 4

178. மேலது. 392 ; 2

179. மேலது. 395 ; 24

180. புறப்பொருள் வெண்பாமாலை. பாடாண். கொளு ; 26

181. தொல்காப்பியம். புறத்திணையியல். நூ. 30 ; 14-15

182. நச்சினார்க்கினியர். தொல்காப்பியம் புறத்திணையில். உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.343

183. புறநானூறு. 162; 6-7

184. மேலது. 140 ; 4-8

185. மேலது. 152 ; 28-30

186. மேலது. 397 ; 11

187. புறப்பொருள் வெண்பாமாலை. பாடாண். கொளு ; 28

188. புறநானூறு. 68 ; 18-19

189. மேலது. 69 ; 16-21

190. மேலது. 141 ; 1-6

191. கழகத்தமிழ் அகராதி. ப.118.

192. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண், கொளு ; 31

193. புறநானூறு, 64; 1-7

194. மேலது, 103 ; 4-12

195. மேலது, 105 ; 1-8

196. மேலது, 133 ; 1-7

197. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண், கொளு ; 33

198. புறநானூறு, 2; 19-20

199. மேலது, 3 ; 13-14

200. மேலது, 5 ; 6-7

201. மேலது, 5 ; 5-6

202. மேலது, 6 ; 9-10

203. மேலது, 6 ; 27-29

204. மேலது, 35 ; 19-21

205. மேலது, 40 ; 8-9

206. மேலது, 55 ; 15-18

207. மேலது, 184 ; 5-6

208. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண், கொளு ; 34

209. புறநானூறு, 60; 3-12

210. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண், கொளு ; 35

211. புறநானூறு, 95; 4-9

212. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண், கொளு ; 42

213. புறநானூறு, 48; 5-9

214. மேலது, 49 ; 1-3

215. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ. 20

216. ஔவை துரைசாமிப்பிள்ளை, புறநானூறு - மூலமும் உரையும், ப.37

217. புறநானூறு, 13; 4-9

218. மேலது, 91 ; 5-7

219. மேலது, 367 ; 15-18

220. மேலது. 158 ; 19-20

221. மேலது. 128 ; 6-7

222. மேலது. 58 ; 20-23

223. புறப்பொருள் வெண்பாமாலை. பொதுவியல். கொளு ; 15

224. புறநானூறு. 253; 3-6

225. மேலது. 254 ; 2-4

226. புறப்பொருள் வெண்பாமாலை. பொதுவியல். கொளு ; 18

227. புறநானூறு. 248

228. மேலது. 249 ; 11-14

229. மேலது. 250 ; 4-5

230. புறப்பொருள் வெண்பாமாலை. பொதுவியல். கொளு ; 27

231. புறநானூறு. 229 ; 22-24

232. மேலது. 247 ; 6-10

233. மேலது. 246 ; 11-15

234. மேலது. 280 ; 14-15

235. மேலது. 228 ; 10-15

236. ஔவை துரைசாமிப்பிள்ளை. புறநானூறு - மூலமும் உரையும். ப.64

237. புறப்பொருள் வெண்பாமாலை. பொதுவியல். கொளு ; 29

238. மேலது. பொதுவியல். கொளு ; 28

239. மேலது. பொதுவியல். கொளு ; 29

240. புறநானூறு. 112

241. மேலது. 113 ; 5-7

242. மேலது. 116 ; 9

243. மேலது. 245 ; 4-7

244. மேலது. 235 ; 10-15

245. மேலது. 239 ; 15-21

246. மேலது. 114

247. மேலது. 218

248. மேலது. 243 ; 9-14

249. மேலது. 244

250. புறப்பொருள் வெண்பாமாலை. பொதுவியல். கொளு ; 30

251. புறநானூறு. 18 ; 27-30

252. மேலது. 27 ; 15-17

253. மேலது. 74 ; 4-7

254. புறப்பொருள் வெண்பாமாலை. பொதுவியல். கொளு ; 31

255. புறநானூறு. 194 ; 1-6

256. புறப்பொருள் வெண்பாமாலை. பொதுவியல். கொளு ; 32

257. புறநானூறு. 24 ; 29-36

258. மேலது. 75 ; 4-10

259. மேலது. 121 ; 3-4

260. மேலது. 28 ; 15-17

261. மேலது. 29 ; 20-22

262. புறப்பொருள் வெண்பாமாலை. கைக்கிளை. கொளு ; 5

263. புறநானூறு. 83 ; 1

264. மேலது. 84 ; 3-6

265. மேலது. 85 ; 7-8

266. மேலது. 83 ; 1-2

267. மேலது. 84 ; 2

268. புறப்பொருள் வெண்பாமாலை. கைக்கிளை. கொளு ; 14

269. மேலது. பெருந்திணை. கொளு ; 37

270. புறநானூறு. 144 ; 11-12

271. மேலது. 143 ; 11-15

272. மேலது. 145 ; 7-10

இயல்- 4

புறப்பொருளும் பதிற்றுப்பத்தும்

புறப்பொருளும் பதிற்றுப்பத்தும்

4.1 முன்னுரை

4.2 பதிற்றுப்பத்து

4.3 பதிற்றுப்பத்தின் திணை

4.4 பதிற்றுப்பத்தின் துறைகள்

4.4.1 பெருஞ்சோற்றுநிலை

4.4.2 தும்பையரவம்

4.4.3 ஒள்வாளமலை

4.4.4 காவன்முல்லை

4.4.5 பரிசிற்றுறைப்பாடாண் பாட்டு

4.4.6 இயன்மொழி வாழ்த்து

4.4.7 நாடுவாழ்த்து

4.4.8 களவழி

4.4.9 பாணாற்றுப்படை

4.4.10 விறலியாற்றுப்படை

4.4.11 முல்லை

4.4.12 செந்துறைப்பாடாண்பாட்டு

4.4.12.1 படர்க்கைக்கண் புகழ்தல்

4.4.12.2 முன்னிலையில் பரவுதல்

4.4.13 வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு

4.4.14 வாகைத்துறைப்பாடாண்பாட்டு

4.4.15 வாகை

4.4.16 காட்சி வாழ்த்து

4.4.17 குரவைநிலை

4.4.18 உழிஞையரவம்

4.5 தொகுப்புரை

4.1 முன்னுரை

"இலக்கியம் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையைப் புலப்படுத்துகிறது. அது மனிதனின் ஆன்மாவையும், அவன் கருத்துக்கள், உணர்ச்சிகள், தலைநோக்கங்கள் முதலியவற்றையும் சொல்-வடிவிலே காட்டும் குறிப்பாகும்"(1) என்பர் எஸ்.வையாபுரிபிள்ளை. பதிற்றுப்பத்து இவ்வகையில் அமைந்த சிறந்ததொரு இலக்கியமாகும். இதில் தற்போது எண்பது பாடல்கள் உள்ளன. இந்த எண்பது பாடல்களும் பதினெட்டுத் துறைகளில் அமைகின்றன. புறநானூற்றில் ஒரு சில பாடல்கள் இரண்டு துறைகளைப் பெறுவது போல் இந்நூலில் ஒரு பாடல் கூட அமையவில்லை. எல்லாப் பாடல்களும் ஒரு துறையினைப் பெறுவனவாகவே துறைவகுத்தோரால் குறிக்கப் படுகின்றன. பதிற்றுப்பத்திலுள்ள பதினெட்டுத் துறைகளில், தொல்காப்பியம் ஏழு துறைகளோடும், புறப்பொருள்வெண்பாமாலை பதினொரு துறைகளோடும் பொருந்தி வருகின்றன. பதிற்றுப்பத்தின் ஐந்து துறைகள் எந்த இலக்கணநூலும் சுட்டாத, பதிற்றுப்பத்தில் மட்டுமே காணப்படும் புதிய துறைகளாகும். புதிற்றுப்பத்தின் துறைகளை இலக்கணத்தோடு ஒப்பிட்டுப்பார்ப்பதும், புதிய துறைகளின் பொருள்களைக் கண்டறிவதும் இவ்வியலின் நோக்கமாகும்.

4.2 பதிற்றுப்பத்து

பத்துப்பத்து அகவற்பாக்களால் அமைந்த பத்துப் பகுதிகளைக் கொண்ட நூல் ஆதலின், இது 'பதிற்றுப்பத்து' என்று பெயர் பெற்றது. இப்பாடல்கள் பத்து சேர மன்னர்களைப் பற்றி பாடப்பட்டவை. "தமிழிலக்கியத்தை வளர்த்த வகையில் சேர அரசர்களின் வள்ளன்மையையும் இது நன்கு விளக்குவதாகும்"(2) என்று இந்நூலினைக் குறிப்பர் கிருஷ்ணசாமி ஐயங்கார். 'சேர மன்னர்களைக் குறித்த பதிற்றுப்பத்தின் செய்திகள் புனைந்துரை அல்ல'(3) என்பது சதாசிவபண்டாரத்தாரின் ஆய்வு முடிபாகும்.

இப்பதிற்றுப்பத்துப் பாடல்கள் ஒரே காலத்தில் பாடப்பட்டவை அல்ல. பல காலத்தில், பல சேரமன்னர்களைக் குறித்துப் பல புலவர்களால் பாடப்பட்டவை. "இந்நூலின் காலம் கிபி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது"[4] என்பர்.

4.3 பதிற்றுப்பத்தின் திணை

பதிற்றுப்பத்தின் பாடல்களுக்குத் துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகியவற்றைக் குறித்தவர்கள் திணை இன்னது என எவ்விடத்தும் குறிக்கவில்லை. "சேரவேந்தர்களின் ஆற்றல் மிக்க ஒழுகலாறுகளைப் புலவர்கள் தம் பாடற்குரிய பொருளாகக் கொண்டு பாராட்டும் முறையில் இப்பதிற்றுப்பத்துப் பாடல்கள் யாவும் அமைந்துள்ளன. ஆகவே இத்தொகையின்கண் அமைந்த நூறு பாடல்களும் பாடாண்திணை என்ற ஒரு திணையையே பொருளாகக் கொண்டு பாடப்பெற்றன"[5] என்பர் க.வெள்ளைவாரணன். தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியரும், "பதிற்றுப்பத்து நூறும் இவ்வாறே வருதலிற் பாடாண்டிணையாயிற்று"[6] எனப் பதிற்றுப்பத்தின் பாடல்கள் பாடாண்திணை ஆனமையைக் குறிக்கிறார்.

புறப்பொருள்வெண்பாமாலையுடன் பொருந்திவரும் பதிற்றுப்பத்தின் பதினொரு துறைகளில் பரிசில் துறைப்பாடாண்பாட்டு, இயன்மொழிவாழ்த்து, நாடுவாழ்த்து, களவழிவாழ்த்து, பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை ஆகிய ஆறு துறைகளே புறப்பொருள் வெண்பாமாலையின் பாடாண்திணைத் துறைகளாகும். ஏனைய ஐந்து துறைகளில் 'பெருஞ்சோற்றுநிலை', வஞ்சித்திணையிலும், 'தும்பையரவம்', 'ஒள்வாளமலை' ஆகியன தும்பைத்திணையிலும், 'காவன்முல்லை' வாகைத் திணையிலும், 'முல்லை' பொதுவியல் திணையிலுமாகப் புறப்பொருள்வெண்பாமாலையில் இடம் பெறுகின்றன. ஒரு திணைக்குரிய துறையின் கீழ் அமையும் பாடலை அத்திணைக்குரிய பாடலாகவே கொள்ளுதல் வேண்டும். அந்த வகையில் வஞ்சி, தும்பை, வாகை, பொதுவியல் ஆகிய திணைகளும் பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ளன. ஆயின் நச்சினார்க்கினியரும், வெள்ளைவாரணரும் பதிற்றுப்பத்தின் எல்லாப்பாடல்களும் பாடாண்திணைக்கே உரியனவாகக்

குறிப்பது இவ்விடத்துச் சிந்திக்கத்தக்கது. 'ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட, ஒரு புலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டிப்பாடுவது பாடாண்திணை'(7) என்கிறார் நச்சினார்க்கினியர். மேலும் 'பாடும் புலவன் ஒரு பொருளை நச்சிய குறிப்புடன் பல திணை, துறைகளும் விரவிவரப் பாடப் பெறும் பாடல்கள் அனைத்தும் பாடாண்திணையில் அடங்கும்'(8) என்பதும் இவரின் கருத்தாகும்.

இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நோக்கின் பதிற்றுப்பத்தின் எல்லாப்பாடல்களும் 'பாடாண்திணையிலேயே அடங்குகின்றன. ஏனெனில் இந்நூலின் ஒவ்வொரு பத்தின் தொடக்கத்திலும் பாடப்பட்ட வேந்தன், பாடிய புலவன், அவன் பெற்ற பரிசில் ஆகியவற்றைக் குறித்த பதிகம் ஒன்று உள்ளது. இதன் மூலம் பதிற்றுப்பத்தில், வேறு திணைக்குரிய துறைகள் இடம்பெற்றாலும் அவற்றையும் பாடாண்திணைக்குரியதாகவே கொள்ள வேண்டும் எனத்தெளியலாம்.

4.4 பதிற்றுப்பத்தின் துறைகள்

பதிற்றுப்பத்தின் எண்பது பாடல்கள் பதினெட்டுத் துறைகளில் அமைவது குறித்த அட்டவணை வருமாறு

	பதிற்றுப்பத்தின் துறைப்பெயர்கள்	பாடல் எண்ணிக்கை
1	பெருஞ்சோற்றுநிலை	1
2.	தும்பையரவம்	2
3.	ஒள்வாளமலை	1
4.	காவன்முல்லை	1
5.	பரிசிற்றுறைப்பாடாண்பாட்டு	2
6.	இயன்மொழி வாழ்த்து	5
7.	நாடுவாழ்த்து	1
8.	களவழி	1
9.	பாணாற்றுப்படை	1
10.	விறலியாற்றுப்படை	6
11.	முல்லை	1

12.	செந்துறைப்பாடாண்பாட்டு	37
13.	வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு	10
14.	வாகைத்துறைப்பாடாண்பாட்டு	1
15.	வாகை	2
16.	காட்சி வாழ்த்து	6
17.	குரவைநிலை	1
18.	உழிஞையரவம்	1
	மொத்தப்பாடல்களின் எண்ணிக்கை	80

மேற்கண்ட அட்டவணை புறப்பொருள்வெண்பாமாலையை அடிப்படையாகக் கொண்டு வஞ்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல் என்ற வரிசையில் துறைகளைக் கொண்டுள்ளது. இறுதியில் இலக்கணத்தில் சுட்டப்படாத புதிய துறைகள் இடம்பெறுகின்றன.

4.4.1 பெருஞ்சோற்றுநிலை

மூன்றாம் பத்தின் பத்தாவது பாடல் 'பெருஞ்சோற்றுநிலை' துறைக்குரியதாகக் குறிக்கப்படுகிறது. வேந்தன், தனது மறவர்கள் பகைப்புலத்தை அழித்துத் தருவர் என்று சொல்லி அம் மறவர்களுக்கு மிக்க சோற்றுத்திரளைக் கொடுத்தது இத்துறையின் பொருளாகும். இதனை,

"திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவரெனப்
பெருஞ்சோ றாடவர் பெறுமுறை வகுத்தன்று"(9)

என்ற கொளுவினால் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டுகிறது. புறநானூற்றிலும் இத்துறையின் கீழ் ஒரு பாடல் (புறம். 292) இடம் பெறுகிறது. பதிற்றுப்பத்தில்,

"ஓடாப் பூட்கை யொண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்பதன் மறவர்
உருமுநில னதிர்க்குங் குரலோடு கொளை புணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியும்
கடுஞ்சின வேந்தேநின் றழங்குகுரன் முரசே"(10)

எனப் பெருஞ்சமம் ததைத்த செருப்புகல் மறவர்க்குப் பெருஞ்சோறு வழங்குவது குறிக்கப்படுவதால் இப்பாடல் 'பெருஞ்சோற்றுநிலை' ஆயிற்று.

4.4.2 தும்பையரவம்

பதிற்றுப்பத்தில் தும்பையரவத்தை நான்காம்பத்தின் நான்காவது பாடலும், ஒன்பதாம் பத்தின் மூன்றாவது பாடலும் சுட்டுகின்றன.

"பொன்புனைந்த கழலடியோன்
தன்படையைத் தலையளித்தன்று"(11)

என்பது தும்பையரவம் குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். போர் கருதித் தும்பை சூடிய மன்னன் தனது படையைத் தலையளி செய்தது இத்துறையின் பொருள்.

"செவ்வுளைய மாவூர்ந்து
நெடுங்கொடிய தேர்மிசையும்
ஒடை விளங்கு முருகெழு புகர்நுதற்
பொன்னணி யானை முரண்சே ரெருத்தினும்
மன்னிலத் தமைந்த ....
....
.... நீ யோம்பன் மாறே"(12)

இப்பாடலில் மன்னன் தனது படை மறவர்களைத் தலையளி செய்தமை கூறப்பட்டுள்ளது. எனவே, இப்பாடல் 'தும்பையரவம்' ஆயிற்று. மேலும், இத்துறைக்குரியதாகக் குறிக்கப்படும் ஒன்பதாம் பத்தின் மூன்றாவது பாடலில் இத்துறைப் பொருள் வெளிப்படையாக இல்லாவிடினும் மறைமுகமாகச் சுட்டப்படுகிறது.

"கொல்களிறு மிடைந்த ப∴றோற் றொழுதியொடு
நெடுந்தேர் நுடங்குகொடி யவிர்வரப் பொலிந்து
செலவு பெரிதினிதுநிற் காணு மோர்க்கே
இன்னா தம்மவது ....
....

மாறுகொள் வேந்தர் பாசறை யோர்க்கே"[13]

இங்கு, பகைவரின் மேல் படையெடுத்துச் செல்லும் மன்னரின் செலவானது அவனைச் சேர்ந்தோர்க்கு இன்பம் தருவது என்றும் பகைவர்க்குத் துன்பம் செய்வது என்றும் குறிக்கப்படுகிறது. மன்னனின் படைமறவர்களும் அவனைச் சேர்ந்தோர் எனும் அடிப்படையில் தலையளி செய்தது இங்கு உணர்த்தப்படுவதால் இப்பாடல் 'தும்பையரவம்' என்னும் துறையாகின்றது.

4.4.3 ஒள்வாளமலை

ஆறாம்பத்தின் ஆறாவது பாடல் 'ஒள்வாளமலை' துறைக்குரியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. வாளேந்திய தும்பை மறவர்கள் போரிற்பட்ட பகையரசனைச் சூழ்ந்து ஆடியது இத்துறையின் பொருளாகும். இதனை,

"வலிகெழுதோள் வாள்வயவர்
ஒலிகழலான் உடனாடின்று"[14]

என்ற கொளு சுட்டுகிறது. ஆறாம் பத்தின் ஆறாவது பாடலில்,

"வலம்படு முரசந் துவைப்ப வாளுயர்த்
திலங்கும் பூணன் பொலெங்கொடி யுழிஞையன்
மடம்பெரு மையி னுடன்றுமேல் வந்த
வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே"[15]

என வேந்தனொருவன் போர்க்களத்தில் பகைவேந்தனைக் கொன்று வாளை உயர ஏந்தி ஆடியமை குறிக்கப்படுவதால் இப்பாடல் 'ஒள்வாளமலை' துறையாயிற்று.

4.4.4 காவன்முல்லை

வேந்தனது உலகங் காக்கும் தொழிலைச் சிறப்பிப்பது காவன்முல்லைத் துறையாகும்.

"தவழ்திரை முழங்குந் தண்கடல் வேலிக்
கமழ்தார் மன்னவன் காவல்மிகுத் தன்று"(16)

என்ற கொளுவினால் இதனை அறியலாம். பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தின் ஒன்பதாவது பாடல் இத்துறைக்குரியதாகச் சுட்டப்படுகிறது.

"பல்வே லிரும்பொறை நின்கோல் செம்மையின்
நாளி னாளி னாடுதொழு தேத்த
உயர்நிலை யுலகத் துயர்ந்தோர் பரவ"(17)

இங்கு வேந்தனின் நாடு காவல் காரணமாக அவனைப் புகழ்வது குறிக்கப்படுகிறது. ஆகையால் இப்பாடல் காவன்முல்லை யாயிற்று.

4.4.5 பரிசிற்றுறைப்பாடாண் பாட்டு

இரண்டாம் பத்தின் ஒன்பதாவது பாடலும், ஏழாம் பத்தின் ஐந்தாவது பாடலும் 'பரிசிற்றுறைப் பாடாண்பாட்டு' துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலையில் இது 'பரிசில்துறை' என்று இடம்பெற்றுள்ளது.

"மண்ணகங் காவல் மன்னர் முன்னர்
எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று"(18)

வேந்தனிடம் இரவலன் ஒருவன் தான் பெறக் கருதிய பொருள் இஃதெனக் கூறுவது இத்துறையின் பொருளாகும். புறநானூற்றில் இத்துறையின் கீழ் பதினாறு பாடல்கள் உள்ளன என்பது குறிக்கத்தக்கது.

பதிற்றுப்பத்தில் இரண்டாம்பத்தின் ஒன்பதாவது பாடலில், வேந்தன் ஒருவன் போர்வினையில் ஈடுபட்டு எப்பொழுதும் பாசறையிலேயே தங்கியிருக்க; அங்கு சென்ற புலவர் அவனது தேவியின் பிரிவாற்றாமையைக் கூறி அவள்பாற் செல்லும்படி வேண்டுகிறான்.

"எல்லும் நனியிருந் தெல்லிப் பெற்ற
அரிதுபெறு பாயற் சிறுமகி ழானும்
கனவினு ளுறையும் பெருஞ்சால் பொடுங்கிய
நாணுமலி யாக்கை வாணுத லரிவைக்
கியார்கொ லளியை" (19)

இங்கு வேந்தன் அவனது மனைவிபால் செல்ல வேண்டும் எனப் புலவர் கேட்பதால் இப்பாடல் 'பரிசில்துறை' ஆனது.

" .... நின்
நாண்மகி ழிருக்கை யினிதுகண் டிருமே
தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையு ளுறுப்பிற் பண்ணுப் பெயர்த்தாங்குச்
சேறுசெய் மாரியி னளிக்கும் நின்
சாறுபடு திருவி னனைமகி ழானே"(20)

என ஏழாம்பத்தின் ஐந்தாவது பாடலில் புலவர் ஒருவர் வேந்தனிடம், நின் நாண்மகிழிருக்கையைக் காண்பதே தான் விரும்புவது என்பதாகப் பாடுவதால் இப்பாடலும் பரிசில் துறையாயிற்று.

4.4.6 இயன்மொழி வாழ்த்து

பதிற்றுப்பத்தில் 'இயன்மொழி வாழ்த்து' துறைக்குரியனவாக ஐந்து பாடல்கள் உள்ளன. புறநானூற்றில் ஐம்பத்துமூன்று பாடல்கள் இத்துறைக்குரியன. புறப்பொருள்வெண்பாமாலை இத்துறைக்கு,

"இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல அவைஎமக் கீகென
என்னோரும் அறிய எடுத்துரைத் தன்று"(21)

எனவும்,

"மயலறு சீர்த்தி மான்தேர் மன்னவன்
இயல்பே மொழியினும் அத்துறையாகும்"(22)

எனவும் இரண்டு பொருள்களைக் கூறுகிறது. பதிற்றுப்பத்தில் இரண்டாம்பத்தின் எட்டு, பத்து ஆகிய இரண்டு பாடல்களும், மூன்றாம் பத்தின் நான்காவது பாடலும், ஐந்தாம் பத்தின் மூன்று, எட்டு ஆகிய இரண்டு பாடல்களுமாக இத்துறையில் அமைகின்றன. இந்த ஐந்து பாடல்களும் புறப்பொருள்வெண்பாமாலை இரண்டாவதாகக் கூறியுள்ள 'மன்னனின் கொடை, வீரம் ஆகிய இயல்புகள் கூறல் என்ற நிலையில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள்

ஐந்தாம் பத்தின் எட்டாவது பாடல் தவிர ஏனைய நான்கு பாடல்களிளும் 'மழை பொய்ப்பினும் இரவலர்க்குக் கொடுத்தலில் பொய்க்காதவன்' என்றே மன்னனின் கொடைத் தன்மை புகழப்படுகிறது.

"மண்ணுயி ரழிய யாண்டுபல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட
தண்ணிய லெழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவ தாயினும்
சேர லாதன் பொய்யல னசையே"(23)

என இரண்டாம்பத்தின் எட்டாவது பாடலிலும்,

"மன்னுயி ரழிய யாண்டுபல மாறித்
தண்ணிய லெழிலி தலையா தாயினும்
வயிறுபசி கூர வீயலன்"(24)

எனப் பத்தாவது பாடலிலும் மன்னனின் கொடைத்தன்மையாகிய இயல்புகள் மழையோடு ஒப்புமைப்படுத்திப் புகழப்படுகின்றன. மூன்றாம்பத்தின் நான்காவது பாடலும், ஐந்தாம் பத்தின் மூன்றாவது பாடலும் இதே போன்ற அமைப்புடையன. ஐந்தாம்பத்தின் எட்டாவது பாடலில்,

"பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி
ஒண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டிக்
கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ"(25)

என ஒரு மன்னனின் கொடையும், வீரமும் புகழப்படுகின்றன. பதிற்றுப்பத்தில் 'இயல்மொழி வாழ்த்து' துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ள ஐந்து பாடல்களும் அத்துறையிலேயே பொருந்தி வருகின்றன.

4.4.7 நாடு வாழ்த்து

பதிற்றுப்பத்தில் 'நாடு வாழ்த்து' எனும் துறைக்குரியதாக மூன்றாம்பத்தின் எட்டாவது பாடல் குறிக்கப்படுகிறது. புறநானூற்றில் இத்துறையின் கீழ் பாடல் ஏதும் இடம்பெறவில்லை.

"தாட்டாழ் தடக்கையான்
நாட்டது வளமுரைத்தன்று"(26)

என்பது இத்துறை குறித்த புறப்பொருள்வெண்பாபாலையின் கொளு. மன்னனது நாட்டின் வளத்தைச் சுட்டுவது இதன் நோக்கமாகும்.

"..................... வாய்பரந்து மிகீஇயர்
உவலை கூடி யுருத்துவரு மலிர்நிறைச்
செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே"(27)

என மூன்றாம் பத்தின் எட்டாவது பாடலில் மன்னனின் நாடானது வாழ்த்தப்பட்டு 'நாடு வாழ்த்து' துறைக்குள் அடங்குகிறது. மேலும் இப்பாடலில்,

"திருவுடைத் தம்ம பெருவிறற் பகைவர்
பைங்கண் யானைப் புணர்நிறை துமிய
உரந்துரந் தெறிந்த கறையடிக் கழங்காற்
கடுமா மறவர் கதழ்தொடை மறப்ப
இளையினிது தந்து விளைவுமுட் டுறாது
புலம்பா வுறையு ணீதொழி லாற்றலின்"(28)

என்று நாடு வாழ்த்தப்படுவதோடு, மன்னனின் காவல்தொழிலும் சிறப்பிக்கப்படுகிறது. ஒரு மன்னனின் காவல்தொழிலைச் சிறப்பித்துக் கூறுவது 'காவன்முல்லை' துறைக்கும் உரியதாகக் கொள்ளலாம். ஆயின் பதிற்றுப்பத்திற்குத் துறை வகுத்தோர் இதனைக் குறிக்கவில்லை.

4.4.8 களவழி

பதிற்றுப்பத்தில் நான்காம்பத்தின் ஆறாவது பாடல் 'களவழி' துறைக்குரியதாகக் குறிக்கப்படுகிறது. புறப்பொருள் வெண்பாமாலையில் இத்துறை 'களவழி வாழ்த்து' என்று இடம் பெறுகிறது. யாழ்ப்பாணர், ஒரு மன்னன் போர்க்களத்தே கொண்ட வளவிய செல்வத்தை விளம்பின்று சொல்லியது இத்துறையின் பொருளாகும். இதனை,

"செங்களத்துச் செழுஞ்செல்வம்

வெண்டுறையாழ்ப் பாணர்விளம்பின்று"(29)

என்ற கொளுவினால் உணரலாம். மேற்குறித்த பதிற்றுப்பத்துப் பாடலில்,

"வீயா யாணர் நின்வயி னானே

தாவா தாகு மலிபெறு வயவே"(30)

ஒழியாத புதுவருவாயைத் தரும் உன்னுடைய மிகுதி பெற்ற வலியானது கெடாது நிலைபெற வேண்டும் என யாழ்ப்பாணர் மன்னனிடம் கூறுகிறார். இங்குப் போர்க்களத்தில் பகைவரை வென்று அதன் மூலம் பெருஞ்செல்வம் ஈட்டுதலையே பாணர் விரும்பிக் கூறுகிறார். ஆதலால் இப்பாடல் 'களவழி வாழ்த்து' ஆனது.

4.4.9 பாணாற்றுப்படை

பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தின் ஏழாவது பாடல் 'பாணாற்றுப்படை' துறைக்குரியதாகச் சுட்டப்படுகிறது. புறநானூற்றில் இத்துறையின் கீழ் ஆறு பாடல்கள் அமைகின்றன. பரிசில் பெற்றுவரும் பாணன் ஒருவன் எதிர்வரும் மற்றொரு பாணனைப் பரிசில் பெறும் வழியில் செலுத்துவது 'பாணாற்றுப்படை' ஆகும். இதனை,

"சேனோங்கி வரையதரிற்

பாணனை ஆற்றுப்படுத்தன்று"(31)

என்ற கொளுவினால் புறப்பொருள்வெண்பாமாலை குறிக்கிறது. பதிற்றுப்பத்தில், ஏழாம்பத்தின் ஏழாவது பாடலில்,

"கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு

பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்

கடனறி மரபிற் கைவல் பாண

தென்கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவை

....

.... பாடுசா னெடுவரைக்

கல்லுயர் நேரிப் பொருநன்

செல்வக் கோமாற் பாடினை செலினே"(32)

நேரிமலைக்குரிய தலைவனைப் பாடிச் சென்றால் தென்கடலில் எடுக்கப்பட்ட முத்துக்களோடு நல்ல அணிகலன்களையும் பெறலாம். எனப் பாணன் ஒருவன் ஆற்றுப்படுத்துவதால் இப்பாடல் 'பாணாற்றுப்படை' ஆயிற்று.

4.4.10 விறலியாற்றுப்படை

புறநானூற்றின் நான்கு பாடல்களில் இடம்பெறும் இத்துறை. பதிற்றுப்பத்தில் ஆறு பாடல்களில் அமைகின்றது. வெற்றியை யுடைய மன்னனது புகழைப் பாடும் விறலியை ஒரு வள்ளலிடத்தே வழிப்படுத்துவது 'விறலியாற்றுப்படை" யாகும்.

"திறல்வேந்தன் புகழ்பாடும்
விறலியை ஆற்றுப்படுத்தன்று"(33)

என்பது இத்துறை குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளு.

பதிற்றுப்பத்தில் விறலியாற்றுப்படைப் பாடல்கள் அமைவது குறித்த அட்டவணை

துறை	பத்து	பாடல் எண்	எண்ணிக்கை
விறலியாற்றுப்படை	நான்காம்பத்து	10	1
	ஐந்தாம்பத்து	9	1
	ஆறாம்பத்து	7,10	2
	எட்டாம்பத்து	8	1
	ஒன்பதாம்பத்து	7	1
	மொத்தப் பாடல்கள்		6

நான்காம்பத்தின் பத்தாவது பாடலில்

"செல்லா யோதில் சில்வளை விறலி
மலர்ந்த வேங்கையின் வயங்கித ழணிந்து
மெல்லியன் மகிளி ரெழிலைஞ் சிறப்பப்
பாணர் பைம்பூ மலைய ....
....
தொழில்புகழ் யானை நல்குவன் பலவே"(34)

என விறலி ஆற்றுப்படுத்தப்படுகிறாள். இது போன்றே எட்டாம் பத்தின் எட்டாவது பாடலிலும்.

"வலம்படு முரசி னிலங்குவன விழூஉம்
அவ்வெள் ளருவி யுவ்வரை யதுவே
சில்வளை விறலி செல்குவை யாயின்"(35)

ஒன்பதாவது பத்தின் ஏழாவது பாடலிலும்.

"சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை
....
பல்வேறு பொறையன் வல்லனா ளளியே"(36)

ஏனைய பாடல்களிலும் விறலி ஆற்றுப்படுத்தப்படுகிறாள். இதன்மூலம் பதிற்றுப்பத்தில் 'விறலியாற்றுப்படை" துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ள ஆறு பாடல்களும் அத்துறைக்கே பொருந்தி அமைகின்றன என்பது பெறப்படுகின்றது.

4.4.11 முல்லை

பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தின் முதலாவது பாடல் முல்லைத் துறைக்குரியதாகக் குறிக்கப்படுகின்றது. புறநானூற்றில் இத்துறையில் பாடல் இல்லை. புறப்பொருள்வெண்பாமாலை இத்துறையினைப் பொதுவியல் படலத்தில்

"தடவரை மார்பன் தன்னமர் காதல்
மடவாற் புணர்ந்த மகிழ்ச்சிநிலை உரைத்தன்று"(37)

என்கிறது. பெரிய மலை போன்ற மார்பினையுடைய தலைவன் தன்னை விரும்பின காதலையும் மடப்பத்தையுமுடைய தன் தலைவியைப் புணர்ந்த மகிழ்ச்சியினது மிகுதியைச் சொல்லுதல் இதன் பொருளாகும். பதிற்றுப்பத்தில் இத்துறைக்குரியதாகக் குறிக்கப்படும் பாடலில் இப்பொருள் நேரடியாக இடம் பெறவில்லை. தலைவியைப் பிரிந்து பாசறையில் இருக்கும் தலைவனைத் தலைவியின்பாற் சென்று அவளை இன்பப்படுத்தும்படியாகக் கூறுவதே இப்பாடலாகும். பதிற்றுப்பத்திற்குத் துறை வகுத்தோர் இப்பொருளினை முல்லைத் துறைக்குரியதாகக் கருதியிருத்தல் வேண்டும்.

"பெருந்தகைக் கமர்ந்த மென்சொற் றிருமுகத்து
மாணிழை யரிவை காணிய வொருநாட்
பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்"(38)

எனப் பதிற்றுப்பத்தின் பாடலில் முல்லைத் துறை இடம்பெறுகிறது. மேலும் இப்பாடலில் புலவர் மன்னனிடம் அவனது மனைவியைக் காணச் செல்லுமாறு வேண்டுகிறார். ஆகையால் இப்பாடலினைப் பரிசில்துறைக்கும் உரியதாகக் கூறலாம். துறை வகுத்தோர் இதனைக் குறிக்கவில்லை.

4.4.12 செந்துறைப்பாடாண்பாட்டு

பதிற்றுப்பத்தில் 'செந்துறைப்பாடாண்பாட்டு' துறையின் கீழ் முப்பத்தேழு பாடல்கள் உள்ளன. ஆயின் புறநானூற்றில் இத்துறையின் பெயரில் ஒரு பாடல் கூட இடம்பெறவில்லை. புறப்பொருள்வெண்பாமாலை குறிக்காத இத்துறை தொல்காப்பியத்தில் பாடாணின் பகுதிகளில் ஒன்றாக இடம்பெறுகிறது.

"வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பிலும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே"(39)

என்பது 'செந்துறைப்பாடாண்' குறித்த நூற்பாவாகும். இதற்கு உரை எழுதிய வெள்ளைவாரணர், "செந்துறை மார்க்கமாகிய வண்ணப்பகுதி உலக வழக்குடன் ஒத்து இயலும் பக்கத்து ஒருவரைப் படர்க்கைக்கண் புகழ்தலும் முன்னிலைக்கண் பரவுதலும் கருதின பாராட்டும் பக்கத்தும் முன்னோர் (பின்வரும் மக்களினத்தார் உணர்ந்து உய்திபெறும் நோக்குடன்) அறம், பொருள், இன்பமாகிய நாற்பொருளை அறிவுறுத்தும் பக்கத்தும் பாடாண்திணையின்கண் வரைவின்றிக் கொள்ளப்படும்"(40) என்கிறார். உரையாசிரியர் நச்சினார்க்கினியர் செந்துறை குறித்து, "செந்துறையாவது விகாரவகையான் அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தினைப் போலாது உலகினுள் இயற்கை வகையான் இயன்றமக்களைப்பாடுதல்: இது செந்துறைப்பாடாண்பாட்டெனப்படும்"(41) என விளக்கம் தருகிறார்.

“மக்களை வாழ்த்தியும் புகழ்ந்தும் பாடுதலும், அறம் பொருளின்பம் பற்றிப் பாடுதலும் செந்துறைப்பாடாண்பாட்டு எனப்படும்”(42) என்பது செந்துறைப்பாடாண்பாட்டு குறித்துப் புலவர் குழந்தை தரும் விளக்கமாகும். ‘செந்துறை என்பது பாடற்கேற்ற பாட்டு, ஒரு வெண்பா’(43) என்கிறது கழகத் தமிழ் அகராதி.

மேற்கண்ட விளக்கங்களின் மூலம் செந்துறைப்பாடாண்பாட்டு என்பது, புனைந்துரை வகையால் மிகைபட உயர்த்திப் புகழாது ஒருவருக்கு இயல்பாக அமைந்த நலன்களை இசைபடப் புகழ்ந்தேத்தும் பாடாண்பாட்டு எனத் தெரியலாம். பதிற்றுப்பத்தில் இத்துறைப் பாடல்கள் அமைவது குறித்த அட்டவணை வருமாறு –

துறை	பத்து	பாடல் எண்	எண்ணிக்கை
செந்துறைப்பாடாண்பாட்டு	இரண்டாம்பத்து	1 – 7	7
	மூன்றாம்பத்து	1,7	2
	நான்காம்பத்து	1,2,7,8	4
	ஐந்தாம்பத்து	2,4 – 7	5
	ஆறாம்பத்து	3,5,8,9	4
	ஏழாம்பத்து	2,3,6,8,10	5
	எட்டாம்பத்து	1 – 6, 9	7
	ஒன்பதாம்பத்து	5,6,8	3
	மொத்தப்பாடல்கள்		37

மேலே அட்டவணையில் செந்துறைப்பாடாண்பாட்டிற்கு உரியனவாகக் குறிக்கப்பட்டுள்ள முப்பத்தேழு பாடல்களும் மன்னர்களது வீரம், கொடை, முதலான இயல்புகளைக் கூறுவனவாக உள்ளன. இந்த முப்பத்தேழு பாடல்களுள் ஐந்து பாடல்கள் மன்னனைப் படர்க்கைக்கண் புகழ்வனவாக உள்ளன. ஏனைய முப்பத்திரெண்டு பாடல்களும் மன்னனை முன்னிலைக்கண் பரவுவனவாகும்.

4.4.12.1 படர்க்கைக்கண் புகழ்தல்

பதிற்றுப்பத்தில் 'படர்க்கைக்கண் புகழ்தல்' எனும் வகையில் ஐந்தாம் பத்தின் ஆறு ஏழு ஆகிய இரண்டு பாடல்களும், ஆறாம் பத்தின் எட்டாவது பாடலும், ஏழாம் பத்தின் ஆறாவது பாடலும், ஒன்பதாம் பத்தின் ஆறாவது பாடலும் அமைகின்றன. இவற்றுள் ஆறாம் பத்தின் எட்டாவது பாடலும், ஏழாம் பத்தின் ஆறாவது பாடலும் முறையே விறலியிடமும், பாணனிடமும் கூறுவனவாகும். ஏனைய மூன்று பாடல்களும் யாரிடம் கூறப்படுவன என்ற குறிப்பில்லாமல் இருக்கின்றன.

"இனிதுபுறந் தந்தவர்க் கின்மகிழ் சுரத்தலிற்

....

கோடுநரல் பெளவங் கலங்க வேலிட்

டுடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய

வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்

செல்குவ மென்னார் பாடுபு பெயர்ந்தே"(44)

எனும் பாடலில் படர்க்கைக்கண், ஒரு மன்னனின் கொடையும் வீரமும் புகழப்படுகின்றன. இது போன்றே,

"அட்டா னானே குட்டுவ னடுதோறும்

பெற்றா னாரே பரிசிலர் களிறே"(45)

என்ற பாடலும் அமைகின்றது. ஒன்பதாம் பத்தின் ஆறாவது பாடலில் வறியவருடைய துன்பத்தைப் போக்குபவன் என்றும் நீரைக்காட்டிலும் தெளிவாக இனிய தண்ணிய மென்மையை உடையவன் என்றும் ஒரு மன்னனிடம் இயல்பாக அமைந்த நலங்கள் புகழப்படுகின்றன. இதனை,

"தில்லோர் புன்கண் டீர நல்கும்

நாடல் சான்ற நயனுடை நெஞ்சில்

பாடுநர் புரவல னாடுநடை யண்ணல்

....

சாந்து வருவானி நீரினும்

தீந்தண் சாயலன் மன்ற தானே"(46)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலே கண்ட மூன்று பாடல்களும், படர்க்கைக்கண் மன்னனின் இயல்புகளைப் புகழ்வனவாக அமைந்து செந்துறைப்பாடாண்பாட்டாயின. இம் மூன்று பாடல்களும் யாரிடம் கூறப்படுவன என்ற குறிப்பின்றி அமைந்தவை.

ஆறாம்பத்தின் எட்டாவது பாடலில்,

"ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்
....
பொய்படு பறியா வயங்குசெந் நாவின்
எயிலெறி வல்வி லேவிளங்கு தடக்கை
ஏந்தெழி லாகத்துச் சான்றோர் மெய்ம்மறை"(47)

என விறலியிடமும் பரிசிலரிடமும் ஒரு மன்னனின் குணம் புகழப்படுகின்றது. இது போன்றே ஏழாம் பத்தின் ஆறாவது பாடலில்,

"................ பேரியாழ் பாலைப் பண்ணிப்
படர்ந்தனை செல்லு மதுவா யிரவல
....
கொன்றுபுறம் பெற்ற பிணம்பயி லழுவத்துத்
தொன்று திறைதந்த களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை விரிந்துறை போக்கிய
ஆர்பத நல்கு மென்ப ...."(48)

எனப் பாணன் ஒருவனிடம், மன்னனின் இயல்பாகிய நலன் புகழப்படுகின்றது. இவ்வாறு பதிற்றுப்பத்தில் படர்க்கைக்கண் செந்துறைப்பாடாண்பாட்டுக்கள் அமைகின்றன.

4.4.12.2 முன்னிலையில் பரவுதல்

இந்த வகையில் பதிற்றுப்பத்தில் முப்பத்திரெண்டு பாடல்கள் உள்ளன. இம்முப்பத்திரெண்டு பாடல்களிலும் மன்னர்களின் கொடையும், வீரமுமே பெரும்பான்மையும் புகழப்படுகின்றன. இந்தப் பாடல்களிள் எவ்விடத்தும் புனைந்துரை இல்லை. மன்னர்களின் இயல்பான குணங்களும், அவர்கள் பெற்ற வெற்றிகளுமே கூறப்படுகின்றன.

"வயவர் வீழ வாளின் மயக்கி
இடங்கவர் கடும்பி னரசுதலை பனிப்பக்
கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே"(49)

இங்கு மன்னனின் குணம் பேசப்படுகின்றது. மேலும் இரண்டாம்பத்தின் நான்காவது பாடலிலும் இதே போன்று,

"............................ துணிவுடை யாண்மை
அக்குர னனைய கைவண் மையையே
அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர்பீ டழித்த செருப்புகன் முன்ப
கூற்று வெகுண்டுவரினு மாற்று மாற்றலையே"(50)

என, துணிவுடைமையாகிய குணம் புகழப்படுகின்றது. இப்பத்தின் ஐந்தாம் பாடலில்

"புலவுவில் லுழவிற் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை யரம்பின்
அறியா மையான் மறந்துப் பெதிர்ந்தநின்
பகைவன் நாடு ...."(51)

என மன்னனின் வீரச் சிறப்பு கூறப்படுகிறது.

இவ்விரண்டாம்பத்தின் ஆறாவது பாடலில்,

"............. மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை யாகலிற் காண்குவந் திசினே"(52)

என மன்னனிடம் இயல்பாக அமைந்த ஆண்மைத் தன்மையும், ஏழாவது பாடலில்,

"புரைவது நினைப்பிற் புரைவதோ வின்றே
பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்துதிறை பகரக் கொள்ளுநை யாதலின்"(53)

என அவனின் பொறையுடைமையும் பாராட்டப்படுகின்றன. இரண்டாம் பத்தின் ஒன்று முதல் ஏழு வரையிலான பாடல்கள் அனைத்தும் இது போன்றே அமைந்து செந்துறைப்பாடாண்பாட்டாயின. மூன்றாம் பத்தின் முதலாம் பாடலும் ஏழாம் பாடலும் இவ்வகையில் அமைந்தன. இவற்றுள் முதலாம் பாடலில்,

"போர்ப்புறு முரசங் கறங்க வார்ப்புச்சிறந்து
நன்கலந் தருஉ மண்படு மார்ப"(54)

எனவும்,

"குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை"(55)

எனவும் மன்னனின் இயல்பு சிறப்பிக்கப்படுகிறது. இப்பத்தின் ஏழாவது பாடலில்

"சிதைந்தது மன்றநீ சிவந்தனை நோக்கலின்
……………………………………………….
பூச லறியா நன்னாட்
டியான ரறாஅக் காமரு கவினே"(56)

என அம்மன்னனின் வீரச் சிறப்புக் கூறப்படுகிறது. நான்காம் பத்தின் ஒன்று, இரண்டு, ஏழு, எட்டு ஆகிய நான்கு பாடல்கள் மன்னனை முன்னிலையில் வைத்துப் பரவுவனவாக உள்ளன. இவற்றுள் முதலாவது பாடலில்

"துளங்குகுடி விழுத்துணை திருத்தி முரசுகொண்
டாண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு"(57)

என மன்னனின் ஆண்மையும்,

"வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்ட னனையைமன் னீயே……………"(58)

எனக் கொடையும் புகழப்படுகின்றன. இப்பத்தின் இரண்டாவது பாடலில் அம்மன்னனின் பொறையுடைமையாகிய பண்பு,

"வையா மாலையர் வசையுநர்க் கறுத்த
பகைவர் தேஎத் தாயினும்
சினவா யாகுத லிறும்பூதாற் பெரிதே"(59)

எனச் சுட்டப்படுகிறது. இதன் ஏழாவது பாடலில்,

"பகைவ ராரப் பழங்க ணருளி
நகைவ ரார நன்கலஞ் சிதறி
ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால்"(60)

என்று மன்னனின் வீரம், கொடை, ஐம்புலன்களை வென்றமை ஆகியன பாராட்டப்படுகின்றன. இவை போன்றே எட்டாவது பாடலும்,

"பரிசிலர் வெறுக்கை பாணர் நாளவை
வாணுதல் கணவ மள்ள ரேறே
மையற விளங்கிய வடுவாழ் மார்பின்
வசையில் செல்வ ...."(61)

என மன்னனின் குணத்தினைப் பாராட்டுவதாக அமைகின்றது.

ஐந்தாம் பத்தின் இரண்டு, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய ஐந்து பாடல்கள் செந்துறைப்பாடாண்பாட்டிற்குரியன. இவற்றுள் ஆறாம் பாடலும் ஏழாம் பாடலும் படர்க்கையில் புகழ்வனவாகும். இது முன்னர் விளக்கப்பட்டது. ஏனைய மூன்று பாடல்களும் 'முன்னிலையில் பரவல்' எனும் இவ்வகையில் அடங்குகின்றன.

இப்பத்தின் இரண்டாவது பாடலில்,

"அண்ணல் யானை யடுபோர்க் குட்டுவ"(62)

என வீரமும்,

"ஓம்பா வீகையின் வண்மகிழ் சுரந்து"(63)

எனக் கொடையுமாகிய மன்னனின் இயல்புகள் பாராட்டப்படுகின்றன. நான்காவது பாடலிலும்,

"பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற
அரிய வென்னா தோம்பாது வீசிக்
கலஞ்செலச் சுரத்த லல்லது கனவினும்
களைகென வறியாக் கசடி னெஞ்சத்
தாடுநடை யண்ண ...."(64)

என அதே இயல்புகள் பாராட்டிக் கூறப்படுகின்றன. இப்பத்தின் ஐந்தாவது பாடலில்,

"எழுமுடி மார்பி னெய்திய சேரல்
....
நிலம்பெறு திணிதோ ளுயர வோச்சிப்
பிணம்பிறங் கழுவத்துத் துணங்கையாடிச்"(65)

என்று மன்னனின் வீரச் சிறப்புக் கூறப்படுகின்றது. இவ்வாறு ஐந்தாம் பத்தில் செந்துறைப்பாடாண் பாட்டிற்குரியனவாகக் குறிக்கப்பட்ட பாடல்கள் அனைத்தும் அத்துறையிலேயே அடங்குகின்றன.

ஆறாம் பத்தில் மூன்று, ஐந்து, எட்டு, ஒன்பது ஆகிய நான்கு பாடல்கள் செந்துறைப்பாடாண்பாட்டிற்குரியனவாகச் சுட்டப்படுகின்றன. இவற்றுள் எட்டாவது பாடல் படர்க்கைக்கண் அமைவதால் முன்னர் விளக்கப்பட்டது.

"வென்று கலந்தரீஇயர் வேண்டுபுலத் திறுத்தவர்
வாடா யாணர் நாடுதிறை கொடுப்ப
நல்கினை யாகுமதி யெம்மென் றருளிக்"(66)

என இப்பத்தின் மூன்றாவது பாடலில் மன்னனின் வீரச் சிறப்பும், பகைவர்க்கு அருளும் தன்மையும் பாராட்டப்படுகின்றன. ஐந்தாம் பாடலில்,

"ஆன்றோள் கணவ சான்றோர் புரவல
நின்னயந்து வந்தனெ னடுபோர்க் கொற்றவ"(67)

என மன்னனின் இயல்பும்,

"...................... செருப்புக லாண்மைத்
தாங்குநர்த் தகைந்த வொள்வாள்
ஓங்க லுள்ளத்துக் குருசினின் னாளே"(68)

என் பதில் ஆண்மையும் பாராட்டப்படுகின்றன. இப்பத்தின் ஒன்பதாவது பாடலில்,

"இரவலன் மாக்கள் சிறுகுடி பெருக
உலகந் தாங்கிய மேம்படு கற்பின்
வில்லோர் மெய்ம்மறை வீற்றிருங் கொற்றத்துச்
செல்வர் செல்வ சேர்ந்தோர்க் கரணம்"(69)

என அம்மன்னனின் இயல்பாகிய குணம் போற்றப்படுகிறது. எனவே, இப்பத்தில் செந்துறைப்பாடாண்பாட்டிற்குரியனவாகக் குறிக்கப்பட்ட பாடல்கள் துறையின் பொருளோடு பொருந்தியே அமைகின்றன.

ஏழாம்பத்தின் இரண்டு, மூன்று, ஆறு, எட்டு, பத்து ஆகிய ஐந்து பாடல்கள் 'செந்துறைப்பாடாண்பாட்டு' துறைக்குரியனவாகச் சுட்டப்படுகின்றன. இப்பாடல்களுள் ஆறாவது பாடல் படர்க்கையில் அமைந்ததால் முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

"துப்புத் துறைபோகிய கொற்ற வேந்தே

....

.... தோட்டி செப்பிய

பணிந்துதிறை தருபநின் பகைவ ராயிற்

....

பாயல் சான்றவவ ரகன்றலை நாடே"(70)

என்று ஏழாம்பத்தின் இரண்டாவது பாடலில் மன்னனின் வீரச் சிறப்பும், மூன்றாவது பாடலில்,

"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே

பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ

நாட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே

வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகலம்

மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே

நிலந்திறம் பெயருங் காலை யாயினும்

கிளந்த சொன்னீ பொய்ப்பறி யலையே"(71)

என்று அவனின் பணிவும், வீரமும், அன்பும், வாய்மையும் பாராட்டிக் கூறப்படுகின்றன.

ஏழாம் பத்தின் எட்டாவது பாடலில், காமவேட்கையில் மனம் செலுத்தாது வென்றி வேட்கையினை விரும்பும் மன்னனின் இயல்பு நலம் போற்றப்படுகிறது. இதன் பத்தாவது பாடலில்,

"நகையினம் பொய்யா வாய்மைப் பகைவர்

புறஞ்சொற் கேளாப் புரைதீ ரொண்மைப்

....

வணங்கிய சாயல் வணங்கா வாண்மை

இளந்துணைப் புதல்வரின் முதியோர்ப் பேணித்

தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்"(72)

என வாய்மையும், குற்றம் தீர்ந்த அறிவினையும், ஆண்மையும் உடையவனாக மன்னன் பாராட்டுப்படுகிறான். இவ்வாறு ஏழாம்பத்தின் மேற்கண்ட பாடல்களில் மன்னனின் இயல்பான நலன்கள் பாராட்டிக் கூறப்படுவதால் அவை 'செந்துறைப்பாடாண்பாட்டு' துறைக்குள் அடங்குகின்றன.

எட்டாம் பத்தின் ஒன்று முதல் ஆறு வரையிலான ஆறு பாடல்களும், அப்பத்தின் ஒன்பதாம் பாடலும் சேர்த்து மொத்தம் ஏழு பாடல்கள் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. முதலாவது பாடலில், பகைவர்கள் திறை கொடுத்துப் பணிந்தமையால் அவர்களுக்கு அருள் செய்த மன்னனின் இயல்பு கூறப்படுகிறது. இது முன்னர் விளக்கப்பட்டது. எட்டாம் பத்தின் இரண்டாவது பாடலில்,

"...................................... நின்
முன்றினை முதல்வர்க் கோம்பின ருறைந்து
மன்பதை காப்ப வறிவு வலியுறுத்து
நன்றறி யுள்ளத்துச் சான்றோ ரன்னநின்
பண்புநன் கறியார் ...."(73)

என்று மன்னனுடைய சூழ்ச்சி வன்மை குறிக்கப்படுகிறது. மூன்றாவது பாடலில்

"......................................நின்
வளனு மாண்மையுங் கைவண் மையும்
மாந்த ரளவிறந் தனவெனப் ...."(74)

என அம்மன்னனுடைய செல்வமும், வீரமும், கொடையும் பாராட்டப்படுகின்றன. இப்பத்தின் நான்காவது பாடலும், மேற்கண்ட பாடல் போன்றே மன்னனின் வீரத்தையும் கொடையையும் புகழ்வனவாக உள்ளன. இதன் ஐந்தாவது பாடலில்,

"இரும்புலி கொன்று பெருங்களி றடூஉம்
அரும்பொறி வயமா னனையை பல்வேற்
பொலந்தார் யானை யியறேர்ப் பொறைய"(75)

என அவனிடம் இயல்பாக அமைந்த வலி போற்றப்படுகிறது. ஆறாவது பாடலில் முன்னைய பாடல்களில் கண்டது போன்றே வீரமும், கொடையும் ஆகிய மன்னனின் இயல்புகள் பாராட்டப்படுகின்றன. எனவே, இப்பாடல்கள் அனைத்தும் செந்துறைப்பாடாண்பாட்டாயின.

ஒன்பதாம் பத்தின் ஐந்து, ஆறு, எட்டு ஆகிய மூன்று பாடல்கள் செந்துறைப்பாடாண்பாட்டுத் துறைக்குரியன. இவற்றுள் ஆறாவது பாடல் படர்க்கைக்கண் அமைந்ததால் முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

"ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
இட்ட வெள்வேன் முத்தைத் தம்மென
....
.... நல்லிசைக்
கபிலன் பெற்ற வூரினும் பலவே"(76)

என்று இப்பத்தின் ஐந்தாவது பாடலில், மன்னனின் வீரச் சிறப்புப் போற்றப்படுகிறது. எட்டாவது பாடலில்,

"வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்ற மெய்திய பெரியோர் மருக
வியலுளை யரிமான் மறங்கெழு குரிசில்"(77)

என மன்னனின் வீரமும்,

"வருநர் வரையாச் செழும்பஃ றாரம்
கொளக்கொளக் குறையாது தலைத்தலைச் சிறப்ப"(78)

எனக் கொடையும் போற்றப்படுகின்றன. இவ்வாறு ஒன்பதாம் பத்தின் ஐந்து, எட்டு ஆகிய பாடல்களும் 'செந்துறைப்பாடாண்பாட்டு' துறைக்குள்ளாக அடங்குகின்றன.

மேற்குறித்த செந்துறைப்பாடாண்பாட்டுப் பாடல்கள் இயன்மொழி வாழ்த்துத் துறையுடன் பெரிதும் ஒத்து அமைகின்றன. இவ்விரண்டிற்குமான வேறுபாடு சிந்திக்கத் தக்கதாகும். தொல்காப்பியத்தில் குறிக்கப்படும் பாடாணின் எட்டுப் பகுதிகளாவன,

1. அமரர்கண் முடியும் அறுவகை
2. புரைதீர்காமம் புல்லியவகை
3. செந்துறை வண்ணப்பகுதி

என்பவையாகும். "பிற திணைகளுக்கும் பாடாணில் பிற பகுதிகளுக்கும் பயிலாத செந்துறை வண்ணப்பாடல் இதிற்குரித்த சில பாடாண் பகுதிகளுக்கு விலக்கில்லை"(79) என்பது சோமசுந்தரபாரதியார் செந்துறைப்பாடாண்பாட்டிற்கும், பிற திணை மற்றும் பாடாணின் பகுதிகளுக்கும் இடையே தரும் வேறுபாடாகும். "மற்றைய பாடாண் துறைகளில் பண்டைச் சான்றோர் செந்துறைக்குரியவெனக் குறித்தவற்றிற்கே இசைப்பா வண்ணம் ஏற்புடைத்து; அல்லனவெல்லாம் இயற்பாக்களே ஏற்குமென்ப"(80) என்பதும் இவரின் கருத்தாகும்.

செந்துறைப்பாடாண் பாடல்களில் இசைப்பா வண்ணக்கூறுகள் வந்து பயிலும் என்பது பாரதியாரின் எண்ணம்.

க.வெள்ளைவாரணன் அவர்கள் "முற்குறித்த எழுவகைகளும் புறமும் அகமுமாகிய செய்திகளைப் பற்றிப் பாடப்பெறுவன என்றும் முற்கூறிய செந்துறை வண்ணப்பகுதியொன்றும், செயற்கை வகையானன்றித் தன்னியல்பிற் பாடப்பெறுவது என்றும் பகுத்துணர்ந்து கோடற் பொருட்டெனக் கொள்ள வேண்டியுள்ளது"(81) என செந்துறைப்பாடாணைப், பாடாண்திணையின் பிற வகைகளின்றும் பிரிக்கின்றார். சோமசுந்தர பாரதியாரும், வெள்ளைவாரணரும் தரும் இவ்வேறுபாடுகளே செந்துறைப்பாடாண்பாடல்களுக்கும், இயன்மொழித்துறை முதலான பிற துறைப் பாடல்களுக்குமிடையேயான வேறுபாடுகளாகும்.

4.4.13. வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு

இலக்கணங்களில் சுட்டப்படாத 'வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு' எனும் இத்துறையின் கீழ் பதிற்றுப்பத்தில் பத்துப் பாடல்கள் உள்ளன. இது குறித்த அட்டவணை வருமாறு

துறை	பத்து	பாடல் எண்	எண்ணிக்கை
வஞசித்துறைப்பாடாண்பாட்டு	மூன்றாம்பத்து	2,3,5,6,9	5
	நான்காம்பத்து	3	1
	ஐந்தாம்பத்து	10	1
	ஆறாம்பத்து	1	1
	ஏழாம்பத்து	9	1
	எட்டாம்பத்து	10	1
	மொத்தப்பாடல்கள்		10

இலக்கணங்களில் இத்துறை இல்லையாதலால், இத்துறைக்கான பொருளைப் பதிற்றுப்பத்தின் பாடல்கள் மூலமாகவே அறியவேண்டியுள்ளது. பதிற்றுப்பத்து உரையில் ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் இத்துறையினைப் பாடலோடு ஒப்பிடும் போது "எடுத்துச் செலவினை மேலிட்டுக்

கூறினமையால் வஞ்சித்துறைப் பாடாண் பாட்டாயிற்று"[82] என்றும் அடுத்தூர்ந்து அட்ட கொற்றம் முதலான "பல துறையும் விரவி வரத் தொடுத்தமையின் இப்பாட்டு வஞ்சித்துறைப் பாடாணாயிற்று"[83] என்றும் "எதிரூன்றுவாரின்மை தோன்றக் கூறியதனால் வஞ்சித்துறைப்பாடாணாயிற்று"[84] என்றும் கூறுகிறார்.

மேலே வஞ்சித்துறைப் பாடாண் பாட்டிற்குரியனவாகக் குறிக்கப்பட்டவற்றுள் எட்டாம் பத்தின் பத்தாவது பாடல் ஒரு மன்னனின் போர்ச்சிறப்பையும் அவனை எதிர்த்துப் போரிடும் பகைவரின்மையையும் சுட்டுகிறது.

"................................. பகைவர்
கால்கிளர்ந் தன்ன கதழ்பரிப் புரவிக்
கடும்பரி நெடுந்தேர் மீமிசை நுடங்குகொடி
புலவரைத் தோன்றல் யாவது சினப்போர்
நிலவரை நிறீஇய நல்லிசைத்
தொலையாக் கற்பநின் றெம்முனை யானே"[85]

நான்காம் பத்தின் மூன்றாவது பாடலும் இதே போன்று 'எதிரூன்றுவாரின்மை'யினைச் சுட்டுவனவாகவே அமைகின்றது. இவ்விரு பாடல்கள் தவிர இத்துறையின் ஏனைய எட்டுப் பாடல்களும், மன்னன் படையெடுத்துச் செல்லுதல், பகைவரின் நாடழிபு கூறல் முதலான வஞ்சித்திணை நிகழ்ச்சிகளைப் புகழ்ந்து கூறுவனவாகவே உள்ளன.

இவற்றின் மூலம் 'வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு' என்பது ஒரு மன்னனின் வஞ்சிப்போரின் சிறப்பால் அவனை எதிர்த்துப் போரிடுவாரின்மையைக் கூறுவதும் பல வஞ்சித்திணை நிகழ்ச்சிகளைப் புகழ்ந்து கூறுவதுமாகும் எனத் தெளியலாம். மூன்றாம் பத்தின் இரண்டாவது பாடலில் பகைவர் நாடழிவாகிய 'கொற்றவள்ளை',

"..................................... யாணர்
நாடுகெழு தண்டனை சீறினை யாதலின்
....
கவலை கோடா நன்பக லமையத்துக்
கவலை வெண்ணரி கூவுமுறை பயிற்றிக்

கழல்கட், கூகை குழற்குரற் பாணிக்

கருங்கட் பேய்மகள் வழங்கும்

பெரும்பா ழாகுமன் னளிய தாமே"(86)

என இடம்பெறுகிறது. மேலும், இப்பாடலில் 'சீறினையாதலின் நாடு கெழு தன் பனை பாழாகுமென' எடுத்துச் செலவினை மேலிட்டும் கூறப்படுகிறது. இப்பத்தின் மூன்றாவது பாடலும் இதே போன்ற அமைப்புடையது.

இம் மூன்றாம் பத்தின் ஐந்தாவது பாடலில், மன்னனின் கொடியும் முரசும் புகழப்படுவதோடு அவனது பகைவரின் நாடழிவும் அது அழியும் திறமும் விளக்கிக் கூறப்படுகிறது.

"மாவா டியபுல நாஞ்சி லாடா

கடாஅஞ் சென்னிய கடுங்கண் யானை

இனம்பரந்த புலம் வளம்பரப் பறியா

நின்படைஞர் சேர்ந்த மன்றங் கழுதைபோகி"(87)

எனப் பகைவரின் நாடழிவு குறிக்கப்படும் இப்பாடலில், பகைவரின் நாட்டினைத் தீக்கொளுத்தியதனைக் குறிக்கும் உழுபுலவஞ்சியும்,

"கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப்

பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கின்

ஆண்டலை வழங்குங் கானுணங்கு கடுநெறி"(88)

என இடம்பெறுகிறது. இப்பத்தின் ஆறாவது பாடலில்,

"தேஎர் பரந்தபுல மேஎர் பரவா

களிறா டியபுல நாஞ்சி லாடா

மத்து ரறியமனை இன்னிய மிமிழா

ஆங்குப் பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின்

நோகே யானே நோதக வருமே"(89)

என்று பகைவர் நாடழிவும் அதற்கு இரங்குதலும் கூறப்படுகிறது. ஐந்தாம் பத்தின் பத்தாவது பாடலில் பகைவரின் நாட்டைக் கைப்பற்றி அவரது புகழ்கெடும்படியாகவும் சினம் அழியும்படியாகவும் செய்தமை சுட்டப்படுகிறது.

"..........................வமர்கடந் துருத்த

ஆண்மலி மருங்கி னாடகப் படுத்து

நல்லிசை நனந்தலை யிரிய வொன்னார்

உருப்பற நிரப்பினை ...."[90]

ஆறாம் பத்தின் முதலாவது பாடலில், தாம் மேற்செல்லுமிடத்து எதிருன்றும் பகைவருடைய பெரிய கையையுடைய யானையின் தொடியணிந்த கொம்பினை ஒரு வீச்சிலே எறிந்தழிக்கும் வீரர்களை உடையவன் என்று மேற்சேறல் குறிக்கப்படுவதோடு,

"மறங்கெழு போந்தை வெண்டோடு புனைந்து

நிறம்பெயர் கண்ணிப் பருந்தூ றளப்பத்"[91]

எனப் போர்மறவரின் செயலினைப் புகழ்ந்து கூறும் கொற்றவைநிலையும் இடம்பெறுகிறது. ஏழாம் பத்தின் ஒன்பதாவது பாடலில்,

"ஆய்ந்துதெரிந்த புகன்மறவரொடு

படுபிணம் பிறங்க நூறி பகைவர்"[92]

என மேற்சேறல் குறிக்கப்படுகிறது. அதனோடு இங்குப் பகைவரின் பிணங்கள் மலை போலக்குவியப் பெற்றன என்று கூறுவதன் மூலம், பகைவர் நாடு, குடிவளம் குன்றிக் கெடுதலும் சுட்டப்படுகிறது. இவ்வாறு வஞ்சித்துறைப் பாடாண்பாட்டுக்கள் பத்தும் பதிற்றுப்பத்தில் அமைகின்றன.

4.4.14 வாகைத்துறைப்பாடாண்பாட்டு

'வாகைத்துறைப்பாடாண்பாட்டு' எனும் இத்துறையும் இலக்கணங்கள் சுட்டாத துறையாகும். பதிற்றுப்பத்தில் நான்காம்பத்தின் ஐந்தாவது பாடல் இத்துறைக்குரியதாகக் குறிக்கப்படுகிறது. இப்பாடலினைக் கொண்டே இத்துறைக்கான பொருளையும் அறியவேண்டியுள்ளது. பதிற்றுப்பத்திற்கு உரை எழுதியுள்ள ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் இப்பாடலுக்குத் துறைப் பொருத்தம் கூறுகையில் "உரை சான்ற நின் வெற்றியெனக் கூறினமையான் வாகைத் துறைப்பாடாணாயிற்று"[93] என்கிறார். இப்பாடலில் மன்னனின் போர்வெற்றி கூறப்படுவதோடு,

"புரைசான் மைந்தநீ யோம்பன் மாறே

உரைசான் றனவாற் பெருமைநின் வென்றி"[94]

அவன் தனது தானையைப் பாதுகாப்பவன் என்றும் அவனுடைய வென்றிகளும் பொருளும் படையும் சான்றோர் புகழும் புகழமைந்தன என்றும் சுட்டப்படுகிறது.

ஒருவனுடைய வென்றியினைக் கூறுவது வாகைத்திணையாகும். மேற்குறித்த பாடலில் ஒரு மன்னனுடைய வென்றியே சிறப்பிக்கப்படுகிறது. இவற்றின் மூலம், தனது தானையினைப் பாதுகாக்கும், சான்றோர் புகழும் புகழடைந்த வேந்தன் ஒருவனுடைய வென்றி முதலியவற்றைப் புகழ்ந்து கூறுதல் 'வாகைத்துறைப்பாடாண்பாட்டு' எனத் தெளியலாம்.

4.4.15 வாகை

'வாகை' என்ற துறைப்பெயரில் நான்காம் பத்தின் ஒன்பதாவது பாடலும், ஒன்பதாம் பத்தின் நான்காவது பாடலும் என இரண்டு பாடல்கள் அமைந்துள்ளன. தொல்காப்பியமும், புறப்பொருள்வெண்பாமாலையும் வாகையினைத் திணையாகவே குறிக்கின்றன.

"வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"(95)

என்பது வாகைத்திணை குறித்த தொல்காப்பியத்தின் நூற்பாவாகும். புறப்பொருள் வெண்பாமாலை இதிலிருந்து சிறிது மாறுபட்டு,

"இலைபுனை வாகை சூடி இகல்மலைந்து
அலைகடல் தானை அரசட் டார்ந்தன்று"(96)

எனப் பகைவேந்தனைக் கொன்று வாகை மாலை சூடி ஆரவாரிக்கும் ஒழுக்கம் வாகைத் திணை என்று சுட்டுகிறது. பதிற்றுப்பத்தில் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்படும் இரண்டு பாடல்களுள் ஒன்பதாம் பத்தின் நான்காவது பாடல் புறப்பொருள் வெண்பாமாலை வாகைத்திணைக்குக் கூறியுள்ள விளக்கத்தை ஒட்டி அமைந்துள்ளது.

"காஞ்சி சான்ற செருப்பல செய்துநின்
குவவுக்குரை யிருக்கை யினிது கண்டிகுமே
காலைமாரி பெய்து தொழி லாற்றி
விண்டு முன்னிய புயனெடுங் காலைக்

கல்சேர்பு மாமழை தலைஇப்

பல்குரற் புள்ளி னொலியெழுந் தாங்கே"[97]

நெடுங்காலம் பெய்யாதிருந்த மழை பெய்த போது பல குரலையுடைய புள்ளின் ஒலி எழுந்தது போல, படையெடுத்து பெற்ற வெற்றியின் காரணமாகப் படையினரிடையே மிக்க ஆரவாரம் எழுந்ததாக இங்குச் சுட்டப்படுகிறது. நான்காம் பத்தின் ஒன்பதாவது பாடலில் இது போன்ற செய்தி இல்லை. இப்பாடலில் மன்னனின் வென்றிச் சிறப்பும் கொடைச்சிறப்பும் கூறப்படுகின்றன.

"பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே

எமக்கிலென் னார்நின் மறங்கூறு குழாத்தர்"[98]

இப்பாடலுக்குத் துறைப்பொருத்தம் எழுதிய ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் "மறவரது கொடைக்குக் காரணம் அவன் வென்றியாகலின் துறை வாகையாயிற்று"[99] என்கிறார்.

இதன் மூலம் மன்னனின் வெற்றியையும், வென்ற படையின் ஆரவாரத்தினையும் கூறுதல் வாகைத் துறையின் பொருளாகக் கருதலாம். புறப்பொருள் வெண்பாமாலையில் திணையாகக் குறிக்கப்பட்ட 'வாகை' பதிற்றுப்பத்தில் துறையாக இடம் பெற்றுள்ளது. இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இரண்டு இலக்கணநூல்களும் வாகையினைத் துறையாகவே சுட்டுவது இவ்விடத்தில் எண்ணத்தக்கது.

4.4.16 காட்சிவாழ்த்து

'காட்சி வாழ்த்து' எனும் இத்துறை இலக்கணங்கள் சுட்டாத துறையாகும். பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தின் முதலாவது பாடலும், ஆறாம் பத்தின் நான்காவது பாடலும், ஏழாம் பத்தின் ஒன்று, நான்கு ஆகிய இரு பாடல்களும், ஒன்பதாம் பத்தின் இரண்டு, பத்து ஆகிய இரு பாடல்களுமாக மொத்தம் ஆறு பாடல்கள் இத்துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன. இந்த ஆறு பாடல்களும் புலவர்கள் மன்னனைக் கண்டு வாழ்த்துவனவாகவே உள்ளன.

"................................திண்டேர்

வசையி னெடுந்தகை காண்குவந் திசினே"[100]

என ஐந்தாம் பத்தின் முதலாவது பாடலிலும்,

"வள்ளியை யென்றலின் காண்குவந் திசினே
உள்ளியது முடித்தி வாழ்கநின் கண்ணி"(101)

என ஆறாம்பத்தின் நான்காவது பாடலிலும் புலவர் மன்னனைக் கண்டு வாழ்த்துவது சுட்டப்படுகின்றன. ஏழாம்பத்தின் முதலாவது பாடலில்,

"...........................னளிக்கென
இரக்கு வாரே னெஞ்சிக் கூறேன்
ஈத்த திரங்கா னீத்தொறு மகிழான்
ஈத்தொரு மாவள் ளியனென நுவலுநின்
நல்லிசை தரவந் திசினே ...."(102)

எனவும் இப்பத்தின் நான்காவது பாடலில்,

".....................நின் னோன்றாள் வாழ்த்திக்
காண்கு வந்திசிற்..................................
....
.... உயர்ந்த
மழையினும் பெரும்பயம் பொழிதி யதனால்
பசுயுடை யொக்கலை யொரீஇய
இசைமேந் தோன்றநின் பாசறை யானே"(103)

எனவும் இத்துறை இடம்பெறுகிறது. இப்பத்தின் முதலாவது பாடல் காட்சிவாழ்த்தானமையை "செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் முதன் முதலாகக் கண்டு மகிழ்ந்து வாழ்த்தியபோது பாடியதாகலின், இம்முதற்பாடல் "காட்சிவாழ்த்து" எனறும் துறை அமைக்கப்பெற்றது"(104) என்பர் முருகவேள். ஒன்பதாம் பத்தின் இரண்டாவது பாடலிலும் பத்தாவது பாடலிலும் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்திப் பாடுவதற்காகத், தான் வந்ததாகப் புலவர் பாடுகிறார்.

"பாடிக் காண்கு வந்துசிற் பெரும
....
.... சான்றோர்
வண்மையுஞ் செம்மையுஞ் சால்பு மறனும்
புகன்று புகழ்ந் தசையா நல்லிசை

நிலந்தரு திருவி னெடியோய் நின்னை"[105]

என்று இரண்டாவது பாடலிலும்,

"நின்னாள், திங்க ளனைய வாக திங்கள்
யாண்டோ ரனைய வாக யாண்டே
ஊழி யனைய வாக வூழி
வெள்ள வரம்பின வாகென வுள்ளிக்
காண்கு வந்திசின் யானே செருமிக்
குருமென முழங்கு முரசிற்
பெருநல் யானை யிறைகிழ வோயே"[106]

என்று பத்தாவது பாடலிலும் இது இடம்பெறுகிறது. இவ்வாறு காட்சிவாழ்த்துத் துறைப்பாடல்கள் பதிற்றுப்பத்தில் அமைகின்றன.

4.4.17 குரவைநிலை

பதிற்றுப்பத்தில் ஆறாம்பத்தின் இரண்டாவது பாடல் "குரவைநிலை' எனும் துறைக்குரியதாகச் சுட்டப்படுகிறது. புற இலக்கணங்கள் சுட்டாத இத்துறையின் பொருளையும் இப்பாடலினைக் கொண்டே உய்த்துணர வேண்டியுள்ளது. இப்பாடலில் மன்னனின் வெற்றிகளைக் கூறி வரும் புலவர்,

"சுடரும் பாண்டிற் றிருநாறு விளக்கத்து
முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணையாகச்
சிலைப்புவல் லேற்றிற் றலைக்கை தந்துநீ
நளிந்தனை வருத லுடன்றன ளாகி"[107]

என இப்பாடல் இடையில், மன்னன் மகளிரோடு துணங்கைக் கூத்து ஆடியதனால் அவனது மனைவி ஊடல் கொண்டமையைக் கூறுகிறார். இதுவே இத்துறையின் பொருளாதல் வேண்டும். 'பதிற்றுப்பத்தின் பழைய உரையாசிரியர் கூறும் துறைப்பொருத்தமும் இதனை வலியுறுத்துகிறது'.[108]

இதன் மூலம் மன்னன் மகளிரோடு துணங்கையாடியதனால் அவனது மனைவி ஊடல் கொள்ளுதல் குரவைநிலைத் துறையின் பொருள் எனத் தெளியலாம்.

4.4.18 உழிஞையரவம்

புறப்பொருள்வெண்பாமாலை வெட்சி, கரந்தை, வஞ்சி, தும்பை, வாகை ஆகிய போர்த்திணைகளுக்கு 'அரவம்' கூறியுள்ளபோதும், உழிஞை, நொச்சி ஆகியவற்றிற்கு இத்துறையினைக் கூறவில்லை எனினும் உழிஞைப்படை போருக்கு எழும்போது ஏற்படும் அரவமே 'உழிஞையரவம்' என்பதனை முன்னைய அரவத்துறைகளின் மூலம் உணரலாம். பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்தின் ஏழாவது பாடல் இத்துறைக்குரியதாகச் சுட்டப்படுகிறது.

"மன்பதை பெயர வரசுகளத் தொழியக்
கொன்றுதோ ளோச்சிய வென்றாடு துணங்கை
மீபிணத் துருண்ட தேயா வாழியிற்
பண்ணமை தேரு மாவு மாக்களும்
எண்ணற் கருமையி னெண்ணின்றோ விலனே"(109)

என இப்பாடலில் மன்னனொருவனின் படைப்பெருமை கூறப்படுகிறது. இப்பாடலின் எவ்விடத்தும் 'உழிஞையரவம்' நிகழ்ந்தாகக் குறிப்பில்லை. எனின் இப்பாடலினை உழிஞையரவமாகக் குறித்ததற்கான காரணம் நன்கு புலப்படவில்லை. ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்களும் இப்பாடலுக்கான துறைப்பொருத்தம் கூறுகையில் '"இப்பாட்டிற் பொதுப்படப் படையெழுச்சி கூறியதனை உழிஞையரவ மென்றது ஆண்டு அப்படை யெழுங்காலத்து நொச்சி மதிற்போர் குறித்தெழுந்ததை ஒரு காரணத்தால் அறிந்து போலும்" என்று பழையவுரை கூறியது ஆராயத்தக்கது'(110) என்கிறார். முன்னைய இயலில் கண்டது போல் இப்பாடலின் துறை, பாடல்பாடப்பட்ட சூழல், புலவரின் எண்ணம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு குறிக்கப்பட்டிருக்க வேண்டும். புறநானூற்றின் 114,115,218 – ஆகிய மூன்று பாடல்கள் இந்த வகையில் அமைந்தவை என்பது முன்னைய இயலில் விளக்கப்பட்டது.

4.5 தொகுப்புரை

- பதிற்றுப்பத்திலுள்ள புறம் சுட்டும் பாடல்கள் அனைத்தும் பரவலும், புகழ்ச்சியும் விரும்பும் தலைவர்களை; வீடுபேறு முதலிய பரிசில் வேண்டும் புலவர்கள் பாடியவைகளாதலால் பாடாண்திணையில் அடங்குகின்றன.
- பதிற்றுப்பத்தில் எண்பது பாடல்கள் பதினெட்டுத் துறைகளின் கீழ் அமைகின்றன. இவற்றுள் ஒரு பாடல் கூட இரண்டு துறைகளைப் பெறுவதாக இதற்குத் துறை வகுத்தோரால் குறிக்கப்படவில்லை. சில பாடல்கள் (3:8,9:1) ஒன்றுக்கும் மேற்பட்ட துறைப் பொருள்களைக் கொண்டிருந்த போதும் துறை வகுத்தோர் அவற்றிற்கும் ஒரு துறையே குறித்துள்ளனர்.
- வஞ்சித் துறைகள் விரவிவரும் பாடல்களையும் 'வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு' என்று ஒரே துறையில் இத்துறை வகுத்தோர் குறித்துள்ளனர்.
- பதிற்றுப்பத்தின் மூலம் அறியலாகும் பதினெட்டுத்துறைகளில் பெருஞ்சோற்றுநிலை, ஒள்வாளஅமலை, காவன்முல்லை, இயன்மொழி வாழ்த்து, பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, செந்துறைப்பாடாண்பாட்டு முதலான ஏழு துறைகள் தொல்காப்பியத்தில் உள்ளன. ஏனைய பதினொரு துறைகளும் தொல்காப்பியம் சுட்டாத பதிற்றுப்பத்திற்கே உரிய துறைகளாக வெளிப்படுகின்றன.
- புனைந்துரை வகையால் மிகைபட உயர்த்துப் புகழாது ஒருவருக்கு இயல்பாக அமைந்த நலன்களை இசைபடப்புகழ்ந்தேத்தும் பாடாண்பாட்டு 'செந்துறைப்பாடாண்பாட்டு" ஆகும். இதனைத் தொல்காப்பியம் 'செந்துறை வண்ணப்பகுதி' என்று சுட்டுகிறது. பதிற்றுப்பத்தில் செந்துறைப்பாடாண்பாட்டு என்னும் துறையின் கீழ் முப்பத்தேழு பாடல்கள் அமைந்துள்ளன. இதுவே அதிகப் பாடல்களைக் கொண்ட துறையாகும். [பதிற். 2: 1,2,3,4,5,6,7., 3: 1,7., 4: 1,2,7,8., 5: 2,4,5,6,7., 6: 3,5,8,9., 7: 2,3,6,8,10., 8: 1,2,3,4,5,6,9., 9: 5,6,8]
- செந்துறைப்பாடாண்பாட்டு, வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு, வாகைத்துறைப் பாடாண்பாட்டு, வாகை காட்சி வாழ்த்து, குரவைநிலை, உழிஞையரவம் ஆகிய ஏழு துறைகள் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டாத பதிற்றுப்பத்தின் துறைகளாகும். இவற்றுள் வாகை என்னும் துறையினைப் புறப்பொருள் வெண்பாமாலை திணைப் பொருளாகக் கூறியுள்ளது.

- வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு, வாகைத்துறைப் பாடாண்பாட்டு, காட்சி வாழ்த்து, குரவைநிலை, உழிஞையரவம் ஆகிய ஐந்து துறைகள் எந்த இலக்கணநூலும் சுட்டாத பதிற்றுப்பத்தில் மட்டுமே காணப்படும் துறைகளாகும். ஆகையால் இத்துறைகளுக்கான பொருள்களைப் பதிற்றுப்பத்தின் பாடல்கள் மூலமே அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.
- வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு என்பது ஒரு மன்னனது வஞ்சிப் போரின் சிறப்பால் அவனை எதிர்த்துப் போரிடுவரின்மையைக் கூறுவதும், பல வஞ்சித் திணை நிகழ்ச்சிகளைப் புகழ்ந்து கூறுவதுமாகும். இத்துறையில் பத்துப்பாடல்கள் உள்ளன். [பதிற். 3: 2,3,5,6,9., 4: 3., 5: 10., 6:1., 7: 9., 8:10.]
- சான்றோர் புகழும் புகழமைந்த வேந்தன் ஒருவனுடைய வென்றி முதலியவற்றைப்புகழ்ந்து கூறுதல் 'வாகைத்துறைப்பாடாண்பாட்டு' ஆகும். பதிற்றுப்பத்தில் ஒருபாடல் மட்டுமே இத்துறையைப் பெற்று விளங்குகிறது. [பதிற். 5:5]
- 'காட்சிவாழ்த்து' என்பது புலவன் மன்னனைக் கண்டு வாழ்த்தி; தான் வந்ததற்கான காரணத்தையும் கூறிப்பிடுதலாகும். பதிற்றுப்பத்தின் ஆறு பாடல்கள் இத்துறையையுடையனவாகக் குறிக்கப்பெற்றுள்ளன. [பதிற். 5:1., 6:4., 7: 1,4., 9:2,10.]
- மன்னன் பிறமகளிரோடு துணங்கைக்கூத்து ஆடியதனால் அவனது மனைவி ஊடல் கொள்ளுதல் "குரவைநிலை" என்னும் துறையாகும். இத்துறையில் ஒரு பாடல் மட்டுமே உள்ளது. [பதிற். 6:2]
- வெட்சி முதலான பிற அரவத்துறைகளைக் கொண்டு 'உழிஞையரவம்' என்பதனை உழிஞைப்படையினரின் ஆரவாரம் என ஊகிக்கலாம். ஆயின் இத்துறைக்குரியதாகக் குறிக்கப்படும் எட்டாம்பத்தின் ஏழாவது பாடலில் இக்குறிப்பில்லை. புறநானூற்றின் 114, 115, 218 –ஆகிய மூன்று பாடல்களும் பாடப்பட்ட சூழலால் துறை பெற்றது போல, இப்பாடலும் இத்துறையினைப் பெற்றிருக்க வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கியச்சிந்தனைகள், ப.17.
2. எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார், சேரன் - வஞ்சி (வஞ்சிசேரர் தலைநகர்), ப.84.
3. தி.வை.சதாசிவபண்டாரத்தார், இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும், பக்: 141-142.
4. செ.சதாசிவம், சேரநாடும் செந்தமிழும், ப.18.
5. க. வெள்ளைவாரணன், பதிற்றுப்பத்து – உரைநலம், ப.17.
6. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் - புறத்திணையியல் (உரைவளம்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.261
7. மேலது, ப.258
8. மேலது, பக்.259-260.
9. புறப்பொருள்வெண்பாமாலை வஞ்சி, கொளு ; 23
10. பதிற்றுப்பத்து, 3.10; 40-44
11. புறப்பொருள்வெண்பாமாலை, தும்பை, கொளு ; 2
12. பதிற்றுப்பத்து, 4.4 ; 4-12
13. மேலது, 9.3 ; 3-9
14. புறப்பொருள்வெண்பாமாலை, தும்பை, கொளு ; 21
15. பதிற்றுப்பத்து, 6.6 ; 4-8
16. புறப்பொருள்வெண்பாமாலை, வாகை, கொளு ; 24
17. பதிற்றுப்பத்து, 9.9 ; 9-11
18. புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண், கொளு, ; 5
19. பதிற்றுப்பத்து 2.9 ; 11-15
20. மேலது, 7.5 ; 12-17
21. புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண், கொளு ; 6
22. மேலது ,, கொளு ; 7
23. பதிற்றுப்பத்து, 2.8 ; 8-12

24. மேலது 2.10 ; 25-27

25. மேலது. 5.8 ; 1-4

26. <u>புறப்பொருள்வெண்பாமாலை</u>, பாடாண், கொளு ; 17

27. <u>பதிற்றுப்பத்து</u>, 3.8 ; 11-14

28. மேலது. 3.8 ; 1-6

29. <u>புறப்பொருள்வெண்பாமாலை</u>, பாடாண், கொளு, ; 19

30. <u>பதிற்றுப்பத்து</u> 4.6 ; 1-2

31. <u>புறப்பொருள்வெண்பாமாலை</u>, பாடாண், கொளு, ; 28

32. <u>பதிற்றுப்பத்து</u> 7.7 ; 1-23

33. <u>புறப்பொருள் வெண்பாமாலை</u>, பாடாண், கொளு ; 31

34. <u>பதிற்றுப்பத்து</u>, 4.10 ; 21-31

35. மேலது. 8.8 ; 1-3

36. மேலது. 9.7 ; 1-5

37. <u>புறப்பொருள்வெண்பாமாலை</u>, பொதுவியல், கொளு, ; 36

38. <u>பதிற்றுப்பத்து</u> 9.1 ; 30-32

39. <u>தொல்காப்பியம், பொருளதிகாரம்</u>, புறத்திணை நூ. 22

40. க.வெள்ளைவாரணன், <u>தொல்காப்பியம் - புறத்திணையியல்</u> (உரைவளம்) மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.283.

41. நச்சினார்க்கினியர், <u>தொல்காப்பியம் - புறத்திணையியல்</u> (உரைவளம்) மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.278.

42. புலவர்குழந்தை, <u>தொல்காப்பியர்காலத் தமிழ்</u>, ப.284

43. <u>கழகத்தமிழ் அகராதி</u>, ப.486

44. <u>பதிற்றுப்பத்து</u>, 5.6 ; 7-14

45. மேலது, 5.7 ; 1-2

46. மேலது, 9.6 ; 6-13

47. மேலது, 6.8 ; 1-11

48. மேலது, 7.6 ; 2-9

49. மேலது. 2.2 ; 1-3

50. மேலது. 2.4 ; 6-10

51. மேலது. 2.5 ; 12-15

52. மேலது. 2.6 ; 8-9

53. மேலது. 2.7 ; 1-3

54. மேலது. 3.1 ; 18-19

55. மேலது. 3.1 ; 24

56. மேலது. 3.7 ; 1-16

57. மேலது. 4.1 ; 13-14

58. மேலது. 4.1 ; 22-23

59. மேலது. 4.2 ; 15-17

60. மேலது. 4.7 ; 3-5

61. மேலது. 4.8 ; 9-12

62. மேலது. 5.2 ; 8

63. மேலது. 5.2 ; 13

64. மேலது. 5.4 ; 3-7

65. மேலது. 5.5 ; 6-12

66. மேலது. 6.3 ; 1-3

67. மேலது. 6.5 ; 1-2

68. மேலது. 6.5 ; 19-21

69. மேலது. 6.9 ; 7-10

70. மேலது. 7.2 ; 9-19

71. மேலது. 7.3 ; 1-7

72. மேலது. 7.10 ; 12-23

73. மேலது. 8.2 ; 3-7

74. மேலது. 8.3 ; 11-13

75. மேலது. 8.5 ; 1-3

76. மேலது. 9.5 ; 3-13

77. மேலது. 9.8 ; 13-15

78. மேலது. 9.8 ; 26-27

79. சோமசுந்தரபாரதியார். தொல்காப்பியம் - புறத்திணையியல் (உரைவளம்) மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.283.

80. மேலது. ப.280

81. க.வெள்ளைவாரணன். தொல்காப்பியம் - புறத்திணையியல் (உரைவளம்) மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.284.

82. ஔவை துரைசாமிப்பிள்ளை. பதிற்றுப்பத்து - மூலமும் உரையும். ப.88.

83. மேலது. ப.106

84. மேலது. ப.383

85. பதிற்றுப்பத்து 8.10 ; 12-17

86. மேலது. 3.2 ; 30-38

87. மேலது. 3.5 ; 1-4

88. மேலது. 3.5 ; 6.8

89. மேலது. 3.6 ; 1-5

90. மேலது. 5.10 ; 13-16

91. மேலது. 6.1 ; 31-32

92. மேலது. 7.9 ; 8-9

93. ஔவை துரைசாமிப்பிள்ளை. பதிற்றுப்பத்து - மூலமும் உரையும். ப.154.

94. பதிற்றுப்பத்து 4.5 ; 1-2

95. தொல்காப்பியம். பொருளதிகாரம். புறத்திணையியல் நூ:15

96. புறப்பொருள்வெண்பாமாலை. வாகை. கொளு ; 1

97. பதிற்றுப்பத்து. 9.4 ; 19-24

98. மேலது. 4.9 ; 1-2

99. ஔவை துரைசாமிப்பிள்ளை. பதிற்றுப்பத்து - மூலமும் உரையும். ப.171.

100. பதிற்றுப்பத்து 5.1 ; 15-16

101. மேலது. 6.4 ; 1.2

102. மேலது. 7.1 ; 10-14

103. மேலது. 7.4 ; 14-20

104. முருகவேள், பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள், ப.207

105. பதிற்றுப்பத்து 9.2 ; 11-16

106. மேலது. 9.10 ; 51-57

107. மேலது. 6.2 ; 13-16

108. ஔவை துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து - மூலமும் உரையும், ப.252.

109. பதிற்றுப்பத்து 8.7 ; 3-7

110. ஔவை துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து - மூலமும் உரையும், ப.371.

இயல்- 5

புறத்திணைக் குறிக்கோள்

புறத்திணைக் குறிக்கோள்

5.1 முன்னுரை

5.2 புறத்திணை இயல்பு

5.2.1 புறம்

5.2.2 புறப்புறம்

5.2.3 அகப்புறம்

5.3 புறநானூறு, பதிற்றுப்பத்து அமைப்புமுறை

5.4 புறத்திணையாளர்கள்

5.5 புறத்திணைக்காலம்

5.6 நாடகவழக்கு

5.7 உண்மை இலக்கியம்

5.8 கூற்றுமுறை

5.9 புறத்திணைப்புலவர்கள்

5.10 தொகுப்புரை

5.1 முன்னுரை

தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழு என்று கூற, பின்வந்த புறப்பொருள்வெண்பாமாலை அவற்றைப் பன்னிரெண்டாக விரிக்கின்றது. இது புறப்பொருளின் வளர்ச்சி என முன்னர் விளக்கப்பட்டது. புறநானூறும் இவ்வளர்ச்சி நிலையை ஏற்று அமைகிறது. பதிற்றுப்பத்தில் துறைகளின் வளர்ச்சியைக் காணமுடிகிறது. இவ்வளர்ச்சிமுறைகளில் ஓர் ஒழுங்கும் முன்னையவற்றின் தொடர்பும் உள்ளன. "புறம் சார்ந்த பாடுபொருள் - அடிக்கருத்து என்பதும் மிகவும் தேர்ந்து, பொறுக்கியெடுத்துப் பாடப்பட்டது"(1) என்பர் தமிழண்ணல். இவ்வாறு வளர்ச்சியோடு தேர்ந்தெடுத்துப் பாடப்பட்ட புறத்திணையின் இயல்பு, அதன் தலையாய குறிக்கோள் ஆகியவற்றைக் குறித்து ஆய்வது இன்றியமையாதது. வ.சுப.மாணிக்கம் தமது 'தமிழ்க் காதல்' எனும் நூலில் "அகத்திணை காமத்திணையே யன்றிக் கவலைத் திணையன்று"(2) என்றும் "காமவாழ்க்கையில் காதலன் காதலி தம் உள்ளப் புணர்வே அகத்திணையின் உயிர்நாடி. இந்நாடி கொண்டு காமக் காதலைப் புனைவதே அதன் குறிக்கோள்"(3) என்றும் அகத்திணையின் குறிக்கோளினைச் சுட்டுகிறார். ஆயின் புறத்திணை இவ்வாறு இன்பத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமைந்ததன்று. இதில் மகிழ்வும் பேசப்படும், சோகமும் பேசப்படும். போர்ச் சிறப்போடு, போரழிவும் குறிக்கப்படும். கொடுப்போரைப் புகழ்வதோடு, கொடாதவரைப் பழிப்பதும் இடம்பெறும் எனவே, இத்திணையினை வாழ்க்கைத்திணை, உண்மைத்திணை என்றும் சுட்டலாம். இவ் வாழ்க்கைத்திணை புலவர்களால் பாடப்பட்டதன் நோக்கம், குறிக்கோள் குறித்து ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

5.2 புறத்திணை இயல்பு

பன்னிரெண்டு புறத்திணைகளுள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை ஆகிய ஏழு புறத்திணைகளும் போர்நிகழ்ச்சிகளைக் கூறுவன (புறம்). வாகை, பாடாண், பொதுவியல் ஆகிய மூன்றும் வேந்தர் முதலானோரின் வெற்றியையும், புகழையும் கூறுவதோடு அறக்கருத்துக்களையும்

கொண்டுள்ளன (புறப்புறம்). இறுதியில் அமைந்த கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் காதல் வாழ்வோடு தொடர்புடையனவாய் புறத்தில் அடங்குகின்றன (அகப்புறம்). புறத்தில் பெரும்பங்கு வகிக்கும் போருக்கான காரணங்கள் சிந்திக்கத்தக்கன. போரின் தோற்றம் குறித்து கா.கோவிந்தன் "பண்டைத்தமிழர் போர் நெறி" எனும் தமது நூலில், "பகுத்துணரும் அறிவாற்றலைச் சிறிது முன்னர்ப் பெற்ற ஒருவன், அவ்வறிவு பெறும் வாய்ப்பின்றித் தன்னோடு வாழும் பிறரும் அதைப் பெறவேண்டும்; அவர் அவ்வறிவு பெறத் தான் துணைபுரிதல் வேண்டும் என்று எண்ணாமல், அவர்கள் அறிவின்மையைப் பயன் கொண்டு, அவர்களை ஏமாற்றிப் பிழைக்க எண்ணிய காரணத்தால், அவ்வாறு எண்ணிய காலத்தில் உருப்பெற்றது போர்"[4], என்கிறார். "ஒரு சமுதாயத்தினரின் நன்மை தீமைகளை எண்ணியே போர் நிகழ்கிறது"[5]. என்பர் கி.வா.ஜகந்நாதன். 'குயின்சிரைட் என்னும் அறிஞர், உணவு பெறுதல், பாலுணர்வு, நாட்டு எல்லையை விரிவாக்கல், வீரச்செயல்-வேட்கை, தற்காப்பு, பிறரை அடக்கி ஆளும் விருப்பம், விடுதலை வேட்கை, சமுதாயச் சூழல் ஆகியவற்றைப் போருக்கான காரணங்களாகக் குறிப்பிடுகிறார்'[6]. பண்டைய தமிழரும் போருக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதனை சங்கப்புற இலக்கண, இலக்கியங்களில் வழி உணரலாம். "அன்றைய மக்கள் ஏர்க்கள உழவு அல்லது போர்க்கள உழவு என்னும் இரண்டை மட்டுமே முக்கியத் தொழிலாகக் கருதினர்"[7] எனும் மகா.வெங்கடராமனின் கூற்று இதனை உறுதிப்படுத்தும். 'சங்ககாலத்தில் நடைபெற்ற போர்களால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தேற்படுவதில்லை'[8]. என்பது சாமி. சிதம்பரனின் முடிபாகும். சங்க காலத்திய போர் நிலைகளையும், அவற்றின் நோக்கங்களையும் குறித்துப் புறம், புறப்புறம் முதலிய தலைப்புகளில் ஆய்வுசெய்யப்படுகிறது.

5.2.1 புறம்

பகைவரின் ஆநிரைகளைக் கவர்தல் வெட்சித்திணை, ஆநிரைக்குரியார் கவரப்பட்ட தமது ஆநிரைகளை மீட்டுக் கொள்ளுதல் கரந்தைத் திணை. இங்குச் சங்ககாலத்தில் பகைவரின் ஆநிரைகளைக் கவர்தல்

அறச் செயலாகக் கருதப்பட்டதா? புலவர்கள் இதனை ஆதரித்தனரா? என்ற வினாக்கள் எழுகின்றன. தற்காலத்தில் பகைநாடேயாயினும் அவரது பொருட்களைக் கவர்தல் பழிக்கத் தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்வாறிருக்க, போர்க்களத்திலும் அறத்தினைப் பின்பற்றிய சங்க காலச் சமுதாயம் அறம் பிறழ்ந்து நடக்க வாய்ப்பில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. சங்ககாலத்தில் வெட்சியார் பகைவரின் ஆநிரைகளை ஏன் கவர்ந்தனர் என்பதற்குப் புறநானூற்றின் ஒன்பதாவது பாடல் விடையாக அமைகின்றது.

"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுது நும்மண் சேர்மின்என"(9)

இப்பாடலில் வேந்தனொருவன் பகை நாட்டின் மீது போர்த்தொடுக்கும் முன்பு அந்நாட்டிலுள்ள ஆவும், பார்ப்பனரும், பெண்டிரும், பிணியுடையாரும், புதல்வர்களைப் பெறாதவர்களும் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும்படியாக அறிவுறுத்தப்படுகின்றது. மேற்குறித்தவர்களுள் ஆநிரைகளைத் தவிர ஏனைய அனைவரும் இவ்வறிவுறுத்தலை உணர்ந்து பாதுகாப்பான இடங்களைச் சேர்வர். இதனை உணரமாட்டாத ஆநிரைகளைப் பாதுகாக்கும் பொருட்டாகப் போரிடக் கருதிய வேந்தன் போரிடும் முன்னர் அவற்றைக் கைப்பற்றி தனது நாட்டிற்குக் கொண்டு வருவான். இவ்வாறு ஆநிரைகள் வருந்தாமலும், கொல்லப்படாமலும் தவிர்க்கும் பொருட்டே, சங்க காலத்தில் ஆநிரைகள் கவரப்பட்டுள்ளன. வெட்சியார் தாம் கைக்கொண்ட ஆநிரைகள் வருந்தாதபடி வழியின்கட் செலுத்தியது 'சுரத்துய்த்தல்' என்னும் வெட்சித்துறையாகும்.

"அருஞ்சுரத்தும் அகன்கானத்தும்
வருந்தாமல் நிரையுய்த்தன்று"(10)

என்பது இதனைக் குறித்த கொளுவாகும். இத்துறையின் மூலம் ஆநிரைகளை வருந்தவிடாமல் பாதுகாக்கும் வெட்சியாரின் நல்லெண்ணம் புலப்படுகிறது. இத்தகைய எண்ணம் கொண்ட வெட்சியார் பகைவரின் நாட்டினைத் தாக்கும் போது அவ்விடத்து ஆநிரைகள் இருப்பின் அவை பெரிதும் வருந்தும் என்றே அஞ்சியிருப்பர். அஃறிணையாயினும் ஓர் உயிரானது வருந்தாமல் பாதுகாப்பது

முற்றிலும் அறமே யாகும். அவ்வகையில் ஆநிரை கவர்தலும் அறச்செயலாகவே கருதப்பட்டுள்ளது. வெட்சியார் ஆநிரைகளைக் கவர்ந்த பின்பு அவற்றை ஊர்ப் பொது மன்றத்தில் வைத்து பங்கிட்டுக்கொள்வதும் கொடை வழங்குவதும் உண்டு. ஆநிரை கவர்தல் அறமற்றதாயின் இவ்விரண்டு நிகழ்ச்சியும் நடைபெறா. தொல்காப்பியரும் இவ்வறம் இன்றியமையாதது செய்யத் தகுவது என்பதை 'ஆதந்து ஓம்பல்' எனவும் 'மேவற்றாகும்' எனவும் குறிப்பர்.

புறப்பொருள்வெண்பாமாலை இத்திணைக்குரியதாக பத்தொன்பது துறைகளைக் கூறியுள்ளபோதும், சங்க இலக்கியத்தில் (புறநானூற்றில் மட்டும்) ஐந்து பாடல்கள் இத்திணையில் அமைந்து உண்டாட்டு, தலைத்தோற்றம் ஆகிய இரண்டு துறைகளுக்குள் அடங்கிவிடுகின்றன. இதனால் ஆநிரை கவர்தலைச் சங்கச் சான்றோர் ஏற்றுக்கொண்ட போதும் அதனை விரும்பிப் போற்றிப் பாடவில்லை என்பதை அறியலாம்.

புறநானூற்றுப் புலவர்கள் கரந்தைத் திணையின் கீழ் பன்னிரெண்டு பாடல்களைப் பாடியுள்ளனர். இவை ஏழு கரந்தைத் துறைகளில் அமைகின்றன. இவற்றுள் அதிகபட்சமாக கையறுநிலைத் துறையின் கீழ் ஆறு பாடல்கள் உள்ளன. புறப்பொருள்வெண்பாமாலை 'பொதுவியல்' திணையில் சுட்டும் துறைகள் அனைத்தும் எல்லாப் புறத்திணைகளுக்கும் பொதுவானவைகளாகும். அந்த வகையில் பொதுவியல் திணையில் கையறுநிலைத் துறை குறிக்கப்பட்டுள்ள போதும், கரந்தைத் திணையிலும் கூடுதலாக இத்துறை குறிக்கப்படுகின்றது. புறநானூற்றிலும் இவ்வமைப்பினைக் காணமுடிகிறது. அதாவது, புறநானூற்றில் கரந்தைத் திணையின் கையறுநிலைத் துறையில் ஆறு பாடல்களும், பொதுவியல் திணையின் கையறுநிலைத் துறையில் முப்பத்தேழு பாடல்களும் உள்ளன. இது ஏனைய புறத்திணைகளில் இல்லாத ஒன்று. வெட்சி முதலான பிற போர்களிலும் கையறுநிலை ஏற்படும் என்ற போதும், அவற்றைப் பொதுவியலினுள் அடக்கிவிட்டு கரந்தைத் திணையில் மட்டும் 'கையறுநிலை'த் துறையினைக் கூடுதலாகச் சுட்டியுள்ளமை ஆயத்தக்கதாகும். சாதாரணமாகப் போர் செய்து மாண்டு போவதை விட தமது உரிமைக்காக – பொருளுக்காகப் போரிட்டு உயிர் துறப்போர் மீது இரக்கம் அதிகமாக ஏற்படுதல் இயல்பானதாகும். கரந்தைப் போரானது கவரப்பட்ட தமது ஆநிரையை மீட்கும் பொருட்டு நடைபெறுவதாகும். அப்போரில் தமது ஆநிரையை மீட்டு உயிர் துறப்போர் மீது,

ஏனைய போரில் உயிர் துறப்போரிலும் அதிக ஈர்ப்பும், இரக்கமும் ஏற்படும். இதன் பொருட்டே புலவர்கள், கரந்தைத் திணையின் துன்ப நிகழ்ச்சியான ஆநிரை மீட்டு உயிர் துறத்தலைச் சிறப்பாகத் தனியாகக் குறிக்கும் பொருட்டு கையறுநிலைத் துறை ஒன்றினைக் கூடுதலாகக் கரந்தைத் திணைக்குச் சுட்டியுள்ளனர்.

வஞ்சிப் பூமாலையைத் தலையில் சூடி ஓர் அரசன் தன் பகைவன் மண்ணைக் கைப்பற்றுதலைக் கருதியது வஞ்சித்திணை.

"வாடாவஞ்சி தலைமலைந்து

கூடார்மண் கொளல் குறித்தன்று"[11]

என்பது இதனைக் குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாகும். பகைவரின் மண்ணைக் கைப்பற்றுதலைத் தவறாகக் கருதும் இன்றைய சமூக சூழ்நிலையில், சங்க காலத்தில் இது அச்சமூகத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா? புலவர்கள் இதனைப் புகழ்ந்து பாடினரா? என்பதனைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடியும். தொல்காப்பியர் இவ்வஞ்சித்திணையினை,

"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்

அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே"[12]

என்று குறிக்கிறார். இந்நூற்பாவிற்கு உரை எழுதிய வெள்ளைவாரணர், "ஒழியாத மண்ணை நச்சுதலையுடைய பகை வேந்தனை மற்றொரு வேந்தன் அவன் அஞ்சும்படி படையுடன் மேற்சென்று பொருது அழித்தலைக் குறித்தது அவ்வஞ்சித் திணையாகும்"[13] என்கிறார். இதன் மூலம் தொல்காப்பியருக்குப் பகைவரின் மண்ணைக் கைப்பற்றுவதில் உடன்பாடில்லை என்பது தெளிவாகும். நச்சினார்க்கினியர் மேற்குறித்த நூற்பாவிற்கு உரை எழுதுகையில் "இரு பெருவேந்தர்க்கும் இடையீடாகிய மண்ணிடத்து வேட்கையானே ஆண்டு வாழ்வோர்க்கு அஞ்சுதலுண்டாக அந்நாட்டிடத்தே சென்று ஒரு வேந்தனை ஒரு வேந்தன் கொற்றங் கோடல் குறித்தன் மாத்திரைத்து வஞ்சித்திணை"[14] என வஞ்சித்திணையினைக் குறிக்கிறார். இவரது கருத்தினைச் சோமசுந்தரபாரதியார், "இவருரை சூத்திரச் சொல்லமைதிக்கு ஏற்காததோடு, வஞ்சியியல்பை இழிதகுபழி தரும் பிழையொழுக்கமாகவும் பண்ணுகிறது"[15] என வண்மையாக மறுத்துரைக்கிறார். மேலும் இவர், "மன்னர் போர் கருதிப்படை யெடுப்பதன் நோக்கமெல்லாம் பிறர் மண் கவரும் வேட்கைதான் எனும் கொள்கை நாகரிக

உலகம் மதிக்கும் போரறமழித்துப் பழிக்கிடனாக்கும். தக்க காரணமின்றித் தவறற்ற மெலியாரின் நாட்டை வலியார் மண் வேட்கையாலே படையெடுத்துச் சென்று வென்று கவர்தலே வஞ்சித்திணை எனக் கூறுவது உயர்ந்த பழந்தமிழ் ஒழுக்கத்தைப் பழிக்கத்தகும் பிழையாக்கி முடிப்பதாகும்"[16] என்கிறார்.

இவ்விடத்து புறப்பொருள்வெண்பாமாலை பகைவரின் மண்ணினைக் கைப்பற்றுதல் வஞ்சித்திணை எனக் கூறுவதற்கான காரணம் சிந்திக்கத்தக்கது. சங்க காலத்தில் ஆட்சி செய்த எல்லா வேந்தர்களுமே நல்லவர்களாக, அறச் சிந்தனை உடையவர்களாக இருந்திருக்க வாய்ப்பில்லை. பெண் கொலை புரிந்த நன்னன் போன்ற மன்னர்களும் அக்காலத்தில் இருந்துள்ளனர். இத்தகைய இழிகுணமுடையவர்கள் பகைவர் நாட்டின் மண்ணின் மீது ஆசை கொண்டு படையெடுப்பினை மேற்கொண்டிருப்பர். வாழ்க்கையின் நிகழ்வுகளை, வரலாறுகளைக் குறிப்பதான புறத்திணையில் இதனைக் குறிக்காது விடுதல் பெரும் பிழையாகவே அமையும். தொல்காப்பியம் வஞ்சித்திணையில் இச்செயலினைக் குறிப்பதோடு, அச்செயலினைக் கடிந்தும் கூறி விடுகிறது. புறப்பொருள்வெண்பாமாலை புறத்திணையினை விரிவாகக் கூற எழுந்த நூல் ஆகையால் இச்செயலினைத் தனித் திணையாகக் குறிக்கின்றது. இவ்வாறு புறத்திணையில் பகைவர் மண்ணினைக் கைப்பற்றும் செயல் குறிக்கப்பட்ட போதும், புலவர்கள் இச்செயலினைப் புகழ்ந்து பாடவில்லை என்பது நோக்கத்தக்கது.

புறநானூற்றில் இவ்வஞ்சித் திணையின் கீழ் பதினொரு பாடல்கள் அமைகின்றன. அவற்றுள் ஆறு பாடல்கள் இலக்கணங்களில் சுட்டப்படாத 'துணைவஞ்சி' துறைக்குரியன. 'சந்து செய்வித்தலை' இத்துறையின் பொருளாகப் புறநானூற்றுப் பாடல்களின் மூலம் உணரமுடிகின்றது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கரூர் மன்னனுடன் போர் தொடுக்கையில் அதனைத் தடுத்துச் சந்து செய்விப்பதாக ஆலத்தூர் கிழார் பாடிய ஒரு பாடலும் (புறம். 36), சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போரிட முயலுகையில் அதனை நீக்கி சந்து செய்விப்பதாகக் கோவூர்கிழார் பாடிய ஒரு பாடலும் (புறம். 45), சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக் காற்கீழிட்டுக் கொல்ல முயன்ற போது அதனைத் தடுத்துக் கோவூர்கிழார் பாடியதாக ஒரு பாடலும் (புறம். 46), சோழன் நெடுங்கிள்ளி இளந்தத்தன் என்னும்

புலவரைக் கொல்ல முயன்ற போது அதனைத் தடுத்துக் கோவூர்கிழார் பாடியதாக ஒரு பாடலும் (புறம். 47), இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய பாண்டியன் நன்மாறன் மேற்கொள்ள இருந்த போரினைத் தடுத்து அவனை அமைதிப்படுத்தும் முகமாகக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடிய ஒரு பாடலும் (புறம். 57), புறநானூற்றில் 'துணைவஞ்சி' துறைக்குரியனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்களில் எவ்விடத்தும் பகைவரின் மண் கவரும் வஞ்சித்திணையின் செயலினைப் புலவர்கள் பாராட்டவில்லை என்பது வெளிப்படை. அதற்கு மாறாகப் பகையினை நீக்கி சந்து செய்வித்தலையே அவர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பதும் உணரலாகும். புறநானூற்றில் இத்திணையின் கீழ் அமைந்த ஏனைய ஐந்து பாடல்கள் கொற்றவள்ளை, மழுபுலவஞ்சி, பெருஞ்சோற்றுநிலை ஆகிய மூன்று துறைகளில் அடங்கிவிடுகின்றன. இவற்றின் மூலம் சங்கப்புலவர்கள் பகைநாட்டின் மண்ணைக் கவரும் வஞ்சித்திணையினை விரும்பிப்பாடவில்லை என்று முடிவுசெய்யலாம்.

தமது நாட்டைக் கைப்பற்ற வரும் வஞ்சியாரை எதிர்த்து அந்நாட்டு மறவர்கள் போரிடுதல் காஞ்சித்திணை. புறநானூற்றில் முப்பத்திரெண்டு பாடல்கள் இத்திணையில் அமைகின்றன. இவற்றுள் நான்கு பாடல்கள் நிலையாமையைச் சுட்டும் 'பெருங்காஞ்சி' துறையில் அமைந்துள்ளன. காஞ்சிப் போரானது வஞ்சியாரை எதிர்த்துக் கடுமையாகப் போரிடுவதாகையால், இவ்விடத்து நிலையாமையை வேந்தர்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் புலவர்கள் இப்பாடல்களைப் பாடியிருக்க வேண்டும். அடுத்ததாக மூன்று பாடல்கள், வஞ்சிவேந்தனை எதிர்த்துக் காஞ்சி வேந்தன் வஞ்சினம் கூறுவதான 'வஞ்சினக்காஞ்சியில்' அமைகின்றன. இம்மூன்று பாடல்களும், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் (புறம். 71), தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் (புறம். 72), சோழன் நலங்கிள்ளி (புறம். 73) ஆகிய வேந்தர்களால் பாடப்பட்டவைகளாகும். தம்மை இகழ்ந்து தம் நாட்டின் மீது படைகொண்டு வரும் வேந்தனை எதிர் சென்று அழித்தலே வேந்தரின் கடமை என்பதனை இப்பாடல்கள் உறுதிசெய்கின்றன.

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேன னாயிற் ....

....

குடிபழி தூற்றுங் கோலே னாகுக

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவ னாக

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்

புலவர் பாடாது வரைகவென் நிலவரை"(17)

அவ்வாறு செய்யாத மன்னனை, அவனது குடிமக்கள் தூற்றுவர் எனவும், புலவர்கள் புகழ்ந்து பாடமாட்டார்கள் எனவும் இப்பாடலின் மூலம் உணரலாம்.

காஞ்சித்திணையின் ஏனைய துறைகளைவிட மகட்பாற்காஞ்சித் துறையில் அதிகபட்சமாக இருபத்தொரு பாடல்கள் (புறம்.336–356) புறநானூற்றில் உள்ளன.

"ஏந்திழையாள் தருகென்னும்

வேந்தனோடு வேறுநின்றன்று"(18)

என்பது 'மகட்பாற்காஞ்சி' குறித்த புறப்பொருள்வெண்பாமாலையின் கொளு. வஞ்சி வேந்தன் மண் காரணமாக மட்டுமன்றி, பெண் காரணமாகவும் போரிட்டுள்ளான் என்பதனை இதன் மூலம் உணரலாம். புறநானூற்றில் இருபத்தொரு பாடல்கள் இத்துறையில் அமைவதால் சங்க காலத்தில் இதன் பொருட்டும் போர்கள் நடைபெற்றிருக்க வேண்டும். இந்த இருபத்தொரு பாடல்களிலும், எவ்விடத்தும் மகட்கொடை வேண்டியவன் யார் என்றோ, மறுத்தவன் யார் என்றோ குறிக்கப்படவில்லை. எல்லாப் பாடல்களுமே பெயர் ஏதும் சுட்டப்படாமல் அகப்பாடல்கள் போன்று அமைகின்றன. எனின் இத்துறைக் குரியதாகக் குறிக்கப்படும் புறநானூற்றின் 349-வது பாடல் மட்டும் 'பெருஞ்சிக்கல் கிழான் எனும் வேளாண் தலைமகன் மகண்மறுத்தது என்று இளம்பூரணர் சுட்டுவதாகக் குறிக்கப்படுகிறது'(19). இதன் மூலம் வேந்தனிடம் மட்டுமன்றி குடிமக்களிடமும் வஞ்சிவேந்தன் மகட்கொடை வேண்டி சண்டையிட்டதனை அறியமுடிகிறது. மகட்பாற் காஞ்சித் துறைப் பாடல்கள் பெயர் சுட்டப்படாமல் பாடப்பட்டதற்கான காரணம் ஆய்வு செய்யத் தக்கதாகும். மகட்கொடை வேண்டி மறுக்கப்பட, அதன் பொருட்டுச் சண்டையிடுதல் என்பது உலகத்தாரால் என்றும் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகும். இத்தகைய சூழலில் 'மகட்கொடை வேண்டி மறுக்கப்பட்டு, அதன் காரணமாக இவ்வேந்தன் சண்டையிட்டான்' என்று ஒரு

வேந்தனைச் சுட்டிக் கூறுதல். அவனுக்கும் அவனது நாட்டிற்கும் பெரிய இழிவாகையால் பெயர் சுட்டப்படாமல் இப்பாடல்கள் பாடப்பட்டிருத்தல் வேண்டும். புறநானூற்றுப் புலவர்களும் மகட்கொடை மறுக்கப்பட்டதனால் போர் மேற்கொண்ட வேந்தனின் செயலினை அறமற்றதாகக் கடிந்து கூறுகின்றனர். புறநானூற்றின் 344-வது பாடல் மகட்பாற்காஞ்சி துறைக்குரியதாகும். இதில்,

"................................... ஊரொடு
நிறைசால் விழுப்பொருள் தருதல் ஒன்றோ
புகைபடு கூர்எரி பரப்பிப் பகைசெய்து
பண்பில் ஆண்மை தருதல் ஒன்றோ
இரண்டினுள் ஒன்று ஆகாமை அரிதே"(20)

மகட்கொடை நேர்ந்த வழி மகளைப் பெற்ற தந்தை மிக்க பொருள் பெறுவான் என்றும் மறுத்த வழி பகைமை கொண்டு புகையெழும் மிக்க தீயானது ஊர்களில் பரந்தெரியக் கொழுவி அருட்பண்பில்லாத மறச்செயல் ஏற்படும் என்றும் குறிக்கப்படுகிறது. இங்கு மகட்கொடை மறுத்தல் காரணமாகப் போரிடும் வேந்தனின் செயல், பண்பில்லாத செயலாகச் சுட்டப்படுதல் வெளிப்படை.

நொச்சித்திணையின் கீழ் புறநானூற்றில் ஆறு பாடல்கள் அமைய, அவற்றுள் மூன்று பாடல்கள் (புறம்.109-111) 'மகண் மறுத்தல்' துறைக்குரியனவாகக் குறிக்கப்படுகின்றன. இத்துறை

"வெம்முரணான் மகள்வேண்ட
அம்மதிலோன் மறுத்துரைத்தன்று"(21)

எனப் பொருளளவில் மகட்பாற்காஞ்சித் துறையுடன் பொருந்துகிறது. புறநானூற்றின் 109, 110, 111 – ஆகிய மூன்று பாடல்களும் 'மகண்மறுத்தல்' துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்ட போதும், இப்பாடல்களின் எவ்விடத்தும் அத்துறைப் பொருள் இடம்பெறவில்லை என்பதும் இப்பாடல்கள், பாடப்பட்ட சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டே துறை வகுக்கப்பட்டன என்பதும் இரண்டாவது இயலில் விளக்கப்பட்டது. இப்பாடல்கள் பாரியிடம் மகட்கொடை வேண்டி மறுக்கப்பட்ட மூவேந்தரும், அதன் பொருட்டுப் பகைமை கொண்டு பாரியின் பறம்பைத் தம் பெரும் படையுடன் போந்து முற்றிக் கொண்ட போது கபிலரால் பாடப்பட்டவைகளாகும். இப்பாடல்களிடத்தும் புலவர், பறம்பினை முற்றிய மூவேந்தர்களின் பெயர்களைக் குறிக்காது விட்டமை நோக்கத்தக்கது.

மூவேந்தராலும் முற்றுகையிடப்பட்ட பாரி இறுதியில் மாண்டதும், கபிலர் பாரியின் மகளிரை பாதுகாப்பாகத் தம்முடன் கூட்டிச் சென்றமையும் வரலாற்றுச் செய்திகள் ஒருவகையில் நோக்கும் போது பாரியினை வென்றது மூவேந்தர்களுக்கும் வெற்றியே ஆகும். எனினும் இந்த வெற்றியை எந்த ஒரு புலவரும் புகழ்ந்து பாடவில்லை. மேலும் எவரும் இதனைத் தமது பாடலில் குறிக்கவும் இல்லை. இவற்றின் மூலம் புலவர்கள் மூவேந்தர்களின் பறம்பு முற்றுகையினை இழிவான செயலாகக் கருதினர் என்பது புலனாகும்.

உழிஞைத் திணையின் கீழ் புறப்பொருள்வெண்பாமாலையில் இருபத்தெட்டு துறைகள் குறிக்கப்பட்டுள்ள போதும் சங்க இலக்கியத்தில் ஒரு பாடல் கூட இத்திணையில் அமையவில்லை. போரின்கண் ஒரு மறவன் தனக்காற்றாது புறங்கொடுப்பார்பால் படைவிடாத பேராண்மையைச் சுட்டும்

“அழிகுநர் புறங்கொடை அயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று”(22)

தழிஞ்சித் துறையைப் புகழ்ந்த புலவர்கள், அரணுள் அடைபட்டிருக்கும் வேந்தனை முற்றுகையிட்டுப் போரிடும் செயலான உழிஞையினைப் பாடாதது இயல்பானதே ஆகும். உழிஞைத் திணையில் அவர்களுக்கு உடன்பாடில்லை என்பதனையே இது காட்டுகிறது. எனின் இலக்கணத்தில் உழிஞைத் திணையினைச் சுட்டியதன் காரணம், சங்க காலத்தில் உழிஞைப் போர்களும் நடைபெற்றதாலேயே என முடிவு செய்யலாம். பாரியின் பறம்பினை மூவேந்தர்களும் முற்றுகை இட்டமை இதனை உறுதி செய்யும்.

போர்ச் செயல்களைக் குறிக்கும் திணைகளில் இறுதியாக அமைவது தும்பைத் திணையாகும். புறப்பொருள்வெண்பாமாலையில் இருபத்து மூன்று துறைகள் இத்திணைக்கு உரியனவாய்ச் சுட்டப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலான துறைகள் கடும்போர்ச் செயல்களைக் கூறுவனவாக அமைகின்றன. இரு வேந்தர்கள் தும்பைப் பூச்சூடி போருக்கு எழுவதில் தொடங்கும் இத்திணை போரிட்ட இரு பெரு வேந்தரும் படைஞரும் ஒருவரொழியாமல் அனைவரும் களத்தில் படுவதோடு முடிவடைகின்றது. இத்திணையில்,

“தாம்படைத் தலைக்கொள்ளாமை
ஒம்படுத்த உயர்புகூறின்று”(23)

என்று போருக்கெழுந்த இரு படைகளைப் போர் செய்யவிடாமல் விலக்கிப் பாதுகாத்த சிறப்பினைக் கூறுவதோடு, அதற்கு மாறாக

"பூம்பொழிற் புறங்காவலனை

ஓம்படுத்தற்கும் உரித்தெனமொழிப"(24)

என அரசனுக்கு உறுதி கூறிப்போர் செய்வித்தலும் சுட்டப்படுகிறது. எனவே போர் செய்யும்படி ஊக்குவித்தலும், போர் செய்து மடியாமல் விலக்குதலுமாகிய இரண்டு இயல்புகளையும் கொண்டனவாகத் தும்பைத் திணை அமைகின்றது. வஞ்சித் திணையினை விரும்பாத சங்கப் புலவர்கள், வேந்தனுக்கு உறுதிகூறிப் போர் செய்வித்தல் என்பது, நியாயமான வேளைகளிலேயே நடைபெற்றுள்ளது. இதனை,

"இருநில மண்கொண்டு சிலைக்கும்

பொருநரும் உளரோ நீகளம் புகினே"(25)

எனும் பாடலடிகள் உறுதி செய்யும்.

5.2.2 புறப்புறம்

வாகை, பாடாண், பொதுவியல் ஆகிய மூன்று திணைகளும் வெட்சி முதலான ஏழு புறத்திணைகளுடன் தொடர்பு பெறுவதோடு, சாதாரண குடிமக்களைக் குறித்தும் பேசுகின்றன. இத்திணைகளில் மக்களுக்கு இன்றியமையாத அறக்கருத்துக்கள் பலவும் கூறப்படுகின்றன. புறப்பொருள்வெண்பாமாலை வாகைத் திணையினை

"இலைபுனை வாகை சூடி இகல்மலைந்து

அலைகடல் தானை அரசட் டார்த்தன்று"(26)

என வேந்தனின் மேலிட்டுக் கூறினாலும், தொல்காப்பியத்தைப் பின்பற்றி பார்ப்பன், வாணிகன், வேளாளன், பொருநன், அறிவன், தாபதன், கணிவன், சான்றோன், வல்லாண் ஆகியோரின் வெற்றிகளையும் இத்திணையினுள் கூறுகிறது. இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களிலும் இவ்வமைப்பிலேயே வாகைத் திணை அமைந்துள்ளது. இதன் மூலம், 'வாழ்க்கையில் மக்களின் வெற்றியைக் கூறுவது வாகைத்திணை' என்பதில் இலக்கணநூல்கள் ஒன்றுபடுகின்றன என்று முடிவுசெய்யலாம். இதுவே வாகைத் திணையின் இயல்பாகும். புறநானூற்றில் இத்திணையில் எண்பது பாடல்கள் உள்ளன. அவற்றுள் முப்பத்தைந்து பாடல்கள்

அரசனின் இயல்பைக்கூறும் அரசவாகைத் துறையில் அடங்குகின்றன. ஏனைய பாடல்களுள் மறவனுடைய ஆண்மையை விதந்து கூறுதலாகிய வல்லாண்முல்லையில் பதினெட்டுப் பாடல்களும், மறக்குடி மகளிரின் மறப்பண்பினைக் கூறும் முதின்முல்லைத் துறையில் பதினான்கு பாடல்களும், பார்ப்பனனின் வெற்றியைக் கூறும் பார்ப்பனவாகையில் இரண்டு பாடல்களும், தாபதரின் வெற்றியைக் கூறும் தாபதவாகையில் இரண்டு பாடல்களும், சான்றோரின் இயல்பு மிகுதியைக் கூறும் சால்புமுல்லைத் துறையில் ஒரு பாடலும் அமைகின்றன. வாணிகன், வேளாளன், பொருநன் முதலான பிறருக்குப் புறநானூற்றில் பாடல் இல்லை. இவர்கள் புறநானூற்றுப் புலவர்களிடையே செல்வாக்குப் பெறாமலிருந்ததனையே இது காட்டுகிறது.

பதிற்றுப்பத்தில் 'வாகை' என்ற துறைப்பெயரில் இரண்டு பாடல்களும், 'வாகைத்துறைப் பாடாண்பாட்டு' என்ற துறைப் பெயரில் ஒரு பாடலும் உள்ளன. ஆயின் இப்பாடல்கள் பாடாண் திணையிலேயே அடங்கிவிடுகின்றன. இது முன்னைய இயலில் விளக்கப்பட்டது.

பரிசில் வேண்டும் புலவன் ஒருவன் வேந்தனது வீரம், புகழ், கொடை முதலியவற்றைப் புகழ்ந்து கூறுவதோடு, உலக உண்மையையும் கூறுவது பாடாண் திணையின் இயல்பாக அமைகின்றது. புறப்பொருள்வெண்பாமாலை முதலான இலக்கண நூல்களின் பாடாண் துறைகள் இவ்வியல்பினைக் கொண்டுள்ளன. தொல்காப்பியப் பாடாண் துறைகளும் இதே போன்ற இயல்பினை உடையனவாகும். புறநானூற்றில் நூற்று நுப்பத்தொன்பது பாடல்கள் இத்திணையில் உள்ளன. பதிற்றுப்பத்தின் நூறு பாடல்களும் இத்திணைக்கு உரியனவாகும். இன்று கிடைக்கும் பதிற்றுப்பத்தின் எண்பது பாடல்களும் சேர வேந்தர்களது வீரம், கொடை முதலானவற்றைப் புகழ்வனவாக உள்ளன. புறநானூற்றில், வேந்தர்களின் வெற்றி, கொடை முதலியவற்றைப் புகழும் 'இயன்மொழி' துறையில் ஐம்பத்து மூன்று பாடல்கள் காணப்படுகின்றன. மேலும் இத்திணையின் பாணாற்றுப்படைத் துறையில் ஆறு பாடல்களும், விறலியாற்றுப்படைத் துறையில் நான்கு பாடல்களும் அமைகின்றன. இப்பாடல்கள் அனைத்தும் வேந்தனது கொடைச் சிறப்பினைப் புகழ்வனவாகும். இவ்வாறு பாடாண் திணையின் பெரும்பான்மைப் பாடல்கள், வேந்தனிடம் பரிசில் பெற்று அவனைப் புகழ்வனவாக அமைந்த போதும், இத்திணையின் எல்லாப் பாடல்களும்

அவ்வாறு அமைந்தன அல்ல. வேந்தனுக்குச் சிறந்த அறிவுரை கூறி அவனை நல்வழிப்படுத்தும் துறையான 'செவியறிவுறூஉ'-வும் இத்திணையின் துறையேயாகும். இத்துறையில் புறநானூற்றில் எட்டுப் பாடல்கள் உள்ளன என்பது குறிக்கத்தக்கது. மேலும் இதில், ஒரு வேந்தனிடம் இரவலன், தான் பெறக் கருதிய பரிசில் இதுவெனக் கூறும் 'பரிசில்துறை'யில் பதினேழு பாடல்கள் அமைய, வேந்தன் பரிசில் தராது காலம் நீட்டித்தலைச் செய்வதனைப் பொருளாகக் கொண்ட பரிசில்கடாநிலைத் துறையில் பதினாறு பாடல்கள் அமைகின்றன. இதன் மூலம் வெறும் புகழ்ச்சியை மட்டும் பாடுவது பாடாண் அல்ல என்பதும், உலகில் நடந்த உண்மைகளைப் பாடுவது அதன் இயல்பு என்பதும் தெளிவாகும்.

எல்லாப் புறத்திணைகளுக்கும் பொதுவான துறைகளைக் கொண்டதே பொதுவியல் திணையாகும். புறப்பொருள்வெண்பாமாலை இத்திணையின் கீழ் முப்பத்தேழு துறைகளைக் கூறுகிறது. இவற்றுள் அறிவுடைய புலவர் அறம், பொருள், இன்பங்களின் இயல்பினை உணர்த்துவதான 'முதுமொழிக்காஞ்சி'; மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவென அதன் இயல்புணர்த்தும் 'பொருள்மொழிக்காஞ்சி'; அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினுள் வீட்டினது தன்மையைச் சொல்லும் 'புலவரேத்தும் புத்தேள்நாடு'; நித்தியா நித்தியப் பொருள்களின் இயல்புணர்த்தும் 'முதுகாஞ்சி' ஆகிய நான்கு துறைகள், வாழ்க்கைக்குத் தேவையான அறக் கருத்துக்களை உணர்த்துவனவாகும். இத்துறைகளுள் புறநானூற்றில், முதுமொழிக்காஞ்சியின் கீழ் மூன்று பாடல்களும், பொருள்மொழிக்காஞ்சியின் கீழ் பதினாறு பாடல்களும் அமைகின்றன. புறப்பொருள்வெண்பாமாலையின் ஏனைய பொதுவியல் துறைகள், இறந்தவன் பொருட்டுச் சுற்றத்தாரும் மனைவியும் வருந்துதல், இறந்தவனுக்கு நடுகல் நடுதல், நிலையாமையைக் கூறல், தலைவன் தலைவி நிலையைக் கூறல் ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ளன.

புறநானூற்றில் இத்திணையின் கீழ் அமைந்த எழுபத்து நான்கு பாடல்களில், முற்குறித்த பத்தொன்பது பாடல்களுடன் (முதுமொழிக்காஞ்சி, பொருள்மொழிக்காஞ்சிப் பாடல்கள்), இயன்மொழிவாழ்த்துத் துறையின் கீழ் அமைந்த இரு பாடல்களும் தவிர்த்த ஏனைய ஐம்பத்து மூன்று பாடல்களும் முதுபாலை, தாபதநிலை, ஆனந்தப்பையுள், கையறுநிலை, பெருங்காஞ்சி ஆகிய

துன்பத் துறைகளிலேயே அமைகின்றன. தலைவன் தலைவியைப் புணர்ந்த மகிழ்ச்சியினைக் கூறும் 'முல்லை' முதலான இன்பத்துறைகள் இப்பொதுவியல் திணையில் இருந்த போதும், புலவர்கள் அவற்றை எல்லாம் விடுத்து துன்பத்துறைகளில் ஐம்பத்து மூன்று பாடல்களைப் பாடியுள்ளனர். இதன் மூலம் புலவர்கள் தாங்கள் கண்ட, பாதித்த நிகழ்ச்சிகளையே பாடல்களாக வடித்துள்ளனர் எனத் துணியலாம். பொதுவியல் திணை இதற்கு மிகுந்த இடமளித்துள்ளது.

5.2.3 அகப்புறம்

கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டு திணைகளும் இவ்வகையில் அடங்குகின்றன. தலைவன் தலைவி ஆகிய இருவரிடத்தும் ஒருங்கே காதல் தோன்றாமல், யாரேனும் ஒருவரிடத்தில் மட்டும் தோன்றும் காதல் நிகழ்வுகளைக் கூறுவனவாகவே கைக்கிளைத் திணையின் துறைகள் அமைகின்றன. இதுவே இத்திணையின் இயல்பாதல் வேண்டும். புறநானூற்றில் இத்திணையின் கீழ் மூன்று பாடல்கள் (புறம்.83-85) உள்ளன. இம்மூன்று பாடல்களும் பெருங்கோழி நாய்கன் மகளாகிய நக்கண்ணையார் என்பார் போரவைக் கோப்பெருநற்கிள்ளி மீது ஒரு தலையாகக் காதல் கொண்டு பாடியனவாகும். இப்பாடல்களில், அவர் கிள்ளியினைப் புகழ்ந்து பாடுவதால், இம்மூன்று பாடல்களும் 'பழிச்சுதல்' எனும் கைக்கிளைத் துறையில் அடங்குகின்றன.

புறப்பொருள்வெண்பாமாலையில் பெருந்திணையின் கீழ் முப்பத்தாறு துறைகள் கூறப்படுகின்றன. இம்முப்பத்தாறு துறைகளும் தலைவன், தலைவி ஆகியோரின் பண்பில்லாத காமம், மிக்க காமம் ஆகியவற்றைக் கூறுவதோடு, மாறுபட்டெழுந்த காம வேட்கை கெடும்படியும் கூறி அமைகின்றன. உலக நடைமுறையில் இத்தகைய மிக்க காமம் இருத்தல் தவிர்க்க முடியாததேயாகும். இதனைச் சுட்டும் பொருட்டு இலக்கணத்தில் இத்தகைய துறைகள் இடம்பெற்றுள்ளன. எனின் சங்க காலப்புலவர்கள் மிக்க காமத்தினையோ, பண்பில்லாத காமத்தினையோ கூறுவனவாக ஒரு பாடல் கூடப் பாடவில்லை. மாறாகத் தலைவன் தலைவியைக் கைவிட்டுப் பிற மகளிரை விரும்புவதற்கு

அவன் நெஞ்சத்தை மாறுபட்டெழுந்த காமவேட்கை கெடும்படி கூறும். குறுங்கலித் துறையிலேயே ஐந்து பாடல்களைப் (புறம்.143-147) பாடியுள்ளனர். இந்த ஐந்து பாடல்களும் 'வையாவிக் கோப்பெரும் பேகன்' தனது மனைவி கண்ணகியைத் துறந்து பரத்தையின் பால் புறத்தொழுக்கம் கொண்டொழுகிய போது, அதனை விட்டு மனைவியிடம் சேருமாறு கபிலர், பரணர், அரிசில்கிழார் பெருங்குன்றூர் கிழார் ஆகியோர் பாடியனவாகும்.

5.3 புறநானூறு, பதிற்றுப்பத்து அமைப்பு முறை

புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புறநூல்களின் அமைப்பு முறையில், பதிற்றுப்பத்து நூல் முழுமையும் வேந்தர்களைப் புகழும் பாடாண் திணையிலேயே அமைந்து விடுகிறது. சேர வேந்தர்களின் வீரம், கொடை ஆகியவற்றைப் (காலவரிசைப்படி) புகழ்ந்து கூறுவதே இதன் இயல்பாகும். "இதில் சேரநாட்டு வருணனை மிகுதி, சேர மன்னர்களின் ஆற்றலையும், வீரத்தையும், இன்பச் சிறப்பையும், புகழ்ந்து வாழ்த்துவதையே நோக்கமாகக் கொண்டெழுந்தவை இவை"(27) என்று பதிற்றுப்பத்து எழுந்ததன் குறிக்கோளினைக் கூறுவார் தமிழண்ணல்.

ஆயின் புறநானூற்றின் அமைப்பு முறையும், குறிக்கோளும் இதிலிருந்து மாறுபட்டவை. பொதுவாகப் புறநானூற்றின் நானூறு பாடல்களையும் இருபெரும் பிரிவாகப் பிரிக்கலாம். முன்னுள்ள இருநூறு பாடல்கள் மக்களின் சிறப்பையும், உலகின் சிறப்பையும் காட்டுகின்றன. பின்னுள்ள இருநூறு பாடல்கள் தலைவர்கள், மக்கள் இவர்தம் பண்பின்மை, துறவு, போரழிவு, தனி மறவர்களின் வீரச்சாவு, நிலையாமை, கையறுநிலை முதலிய துன்பியற் பகுதிகளைக் கொண்டுள்ளன. அதியமான் பரிசில் கொடுத்த நற்பண்பு முன்பகுதியில் இருப்பதும் (புறம்.91), அவன் பரிசில் கொடாச் செய்தி பின் இருநூற்றில் (புறம் 206) அமைந்திருப்பதும் இதற்குச் சான்றாகும். இவ்விரு தன்மைகளையும் ஔவையாரே பாடியிருந்தாலும், புகழ்ந்தமை முன்பகுதியிலும், பழித்தமை பின்பகுதியிலும் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, பண்டைத் தமிழகத்தின் நிலையைக் காட்டுவது புறநானூற்றின் இயல்பு என்று துணியலாம்.

5.4 புறத்திணையாளர்கள்

புறத்தில் பெண்களை விட ஆண்களே முக்கியப் பங்கு வகிக்கின்றனர். "போர் விருப்பம் மிகுந்த அன்றைய தமிழர் போர் முயற்சிக்குப் பெரிதும் பயன்படும் ஆண் இனத்திற்குச் சிறப்பளித்தனர்"[(28)] என்பர் மகா.வெங்கடராமன். வேந்தன், மறவன், மகளிர், புலவன், இரவலர், சாதாரணக் குடிமக்கள் முதலிய உலக மக்கள் அனைவருமே புறத்திணையில் குறிக்கப்படும் புறத்திணையாளர்கள் ஆவர். இவர்களுள் வேந்தனைச் சுற்றியே புறத்திணையின் பெரும்பகுதி அமைகிறது. புறப்பொருள்வெண்பாமாலையில் எண்பத்துமூன்று புறத்துறைகள் வேந்தனுக்குரியவை. புறநானூற்றில் இருநூற்று எழுபத்தேழு பாடல்கள் வேந்தர், குறுநில மன்னர் ஆகியோர்க்குரியன. பதிற்றுப்பத்தின் எல்லாப் பாடல்களும் வேந்தர்களைக் குறித்துப் பாடப்பட்டவை. ஆகையால் வேந்தனையே புறத்திணையின் தலைவனாகக் குறிக்கலாம். புறநானூற்றுப்பாடல்கள் பெரும்பான்மையும் வேந்தனைப் புகழ்வனவாகவே அமைந்துள்ள போதும், சில பாடல்கள் அவன் செய்யத் துணிந்த பிழைகளைச் சுட்டிக்காட்டி திருத்துவனவாகவும், அறத்தினை உணர்த்துவனவாகவும் உள்ளன.

> "நிலனொளி மருங்கின் நிர்நிலை பெருகத்
> தட்டோ ரம்ம இவண்தட் டோரே
> தள்ளா தோர் இவண் தள்ளா தோரே"[(29)]

என்று பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறத்தினைக் கூறி அறிவுறுத்துகின்றார். புறநானூற்றின் 46-ஆவது பாடல் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் பகைவனான மலையமான் மக்களைக் கொலையானைக் காற்கீழிட்டுக் கொல்ல முயன்ற போது கோவூர்கிழார்,

> "நீயோ புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
> இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
> இவரே புலனுழுதுண்மார் புன்கண் அஞ்சித்
> தமதுபகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்
> களிறுகண்டு அழுவம் அழாஅல் மறந்த
> புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
> விருந்திற் புன்கண்நோ வுடையார்

கேட்டனை யாயினநீ வேட்டது செய்ம்மே"[30]

என்று கூறி கிள்ளிவளவன் செய்ய இருந்த பிழையைத் தமது பாடல் திறத்தால் தடுக்கிறார். புறநானூற்றின் 196-ஆவது பாடல், ஆவூர்மூலங்கிழார் எனும் புலவர், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் தமக்குப் பரிசில் தராது காலம் நீட்டித்த வழி வருத்தமுற்றுப் பாடியதாகும்.

"ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது
இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் அத்தை
அனைத்தா கியர்இனி இதுவே எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம் அதனால்
நோயிலர் ஆகநின் புதல்வர் ...."[31]

என இப்பாடலில் அவர், பாண்டியனைப் பழிக்கிறார். இவற்றின் மூலம், வேந்தர்களைக் குறித்த புறநானூற்றுப் பாடல்கள் வெறும் புகழ்ச்சியாய் மட்டும் அமைந்தவை அல்ல என்பதும், அவர்களுக்குச் சிறந்த அறத்தினைக் கூறுவனவாகவும், பிழை செய்யத் துணிந்த போது அதனைச் சுட்டிக்காட்டி திருத்துவனவாகவும், தவறு செய்யின் பழித்துக்கூறுவனவாகவும் அமைந்தவை என்பதும் பெறப்படும்.

வெட்சி முதல் தும்பை வரையிலான போர்த்திணைகளில் வேந்தர்களைக் காட்டிலும் மறவர்களே பெரும்பங்கு வகிக்கின்றனர். புறப்பொருள் வெண்பாமாலையில் வேந்தர்களுக்கு அடுத்ததாக எழுபத்தைந்து துறைகள் இவர்களுக்கு உரியனவாகக் குறிக்கப்படுகின்றன. மறவர்களின் குணத்தையும், போர்த்திறத்தையும் கூறுவனவாக, இத்திணைகளின் மறவர் துறைகள் அமைகின்றன. வெட்சித் திணையின் கொடை, புலனறிசிறப்பு, பிள்ளைவழக்கு ஆகிய துறைகள், மறவர்களும் கொடை வழங்கும் இயல்புடையவர்கள் என்பதைத் தெளிவாக்குகின்றன. புறஇலக்கியத்தில் இது குறித்த பாடல் ஏதும் இல்லை. புறநானூற்றில் மறவர்களைக் குறித்த பாடல்கள், அவர்களின் போர்ச்சிறப்பைக் கூறுவனவாகவும், மறவர்கள் உயிர்துறக்க அவரின் சுற்றத்தார் கையற்றுக் கூறுவனவாகவும் அமைகின்றன. சில கையறுநிலைப் பாடல்களின் இடையே மறவனின் கொடைத்தன்மையும் பேசப்படுகின்றன. ஆயின் பாடாண் திணையில்

மறவர்க்குரியதாக ஒரு துறை கூட இடம்பெறவில்லை. இது பரிசுக்காகப் புலவர்கள் மறவர்களிடம் சென்று புகழ்ந்து பாடவில்லை என்பதை உறுதிப்படுத்தும். புறநானூற்றின் கரந்தைத் திணையில் அமைந்துள்ள ஆறு கையறுநிலைத் துறைப் பாடல்களும் (புறம். 260, 261, 263-265, 270) மறவன் உயிர் துறக்கையில் புலவன் கையற்றுப் பாடியன.

"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
இனிநட் டனரே கல்லும் கன்றொடு
கறவை தந்து பகைவ ரோட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது
இன்னும் வருங்கொல் பாணரது கடும்பே"(32)

எனபது ஆநிரை மீட்டு உயிர் துறந்த மறவனொருவனைக் குறித்து, உறையூர் இளம்பொன் வாணிகனார் கையற்றுப் பாடிய பாடலாகும். ஏனைய ஐந்து கையறுநிலைப் பாடல்களும் இதுபோன்ற அமைப்பினையே பெற்றுள்ளன. இதன் மூலம் சிறந்த போர்மறவன் ஒருவன் உயிர் துறக்கையில், அவனையறிந்த புலவன் மனம் வருந்திப் பாடியனவே, இம்மறவர்களைக் குறித்தெழுந்த கையறுநிலைப் பாடல்கள் எனத் தெளியலாம். புறநானூற்றில் அமைந்துள்ள எருமை மறம், தானை மறம், களிற்றுடனிலை, நூழிலாட்டு, வல்லாண்முல்லை, செருவிடைவீழ்தல் ஆகிய துறைப் பாடல்கள் மறவர்களின் வீரப்பண்பினையும், வீரச் செயல்களையும் காட்டுவனவாக உள்ளன.

"............................. பெருந்தகை மறவன்
மேல்வரும் களிற்றொடு வேல்துரந்து இனியே
தன்னும் துரக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பின் ஊக்கி மெய்க் கொண்டனளே"(33)

என்று ஒரு மறவனின் வீரச்செயலினை, உலோச்சனார் தமது பாடலில் குறிக்கிறார். இந்த வகையில் புறநானூற்றில் நாற்பத்துமூன்று பாடல்கள் அமைகின்றன.

புறப்பொருள்வெண்பாமாலையில் மகளிரை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையாக எழுபத்தொரு துறைகளைக் காணமுடிகிறது. இவற்றுள் கைக்கிளையில் பத்துத் துறைகளும் பெருந்திணையில் முப்பத்தொரு துறைகளுமாக மொத்தம் நாற்பத்தொரு துறைகள் கழிந்த ஏனைய முப்பது துறைகளும் முற்றிலும் புறவாழ்வோடு தொடர்புடையனவாகும். அகவாழ்வு மட்டுமன்றி புறவாழ்விலும் மகளிருக்கு இருந்த முக்கியத்துவத்தினை இது காட்டுகிறது. போர் மேற்சென்ற தம் கணவன் வெற்றியோடு திரும்ப வேண்டும் என வெறியாட்டு நிகழ்த்தும் மறமகள்,

> "வாலிழையோர் வினைமுடிய
> வேலனொடு வெறியாடின்று"(34)

அவ்வினையின் போது அவன் உயிர் துறப்பின்

> "மண்டமருள் மாறாமைந்திற்
> கொண்டான் தலையொடு கோல்வளை முடிந்தன்று"(35)

எனத் தம் கணவனுடன் உயிர் துறக்கிறாள். இவ்வாறு புறத்தில் மகளிரின் இயல்பினைக் கூறும் புறப்பொருள்வெண்பாமாலை, மறக்குடி மகளிரின் மறப்பண்பினைக் கூறும் மூதின்முல்லைத் துறையையும் கொண்டுள்ளது. புறநானூற்றில் இத்துறையின் கீழ் பதினான்கு பாடல்கள் அமைவது குறிக்கத்தக்கது. இப்பாடல்கள் அனைத்தும் சங்க கால மகளிரின் வீரப்பண்பினைத் தெளிவாக உணர்த்துகின்றன.

> "கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
> மூதின் மகளிர் ஆதல் தகுமே
> மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்ஐ
> யானை எறிந்து களத்தொழிந் தனனே
> நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
> பெருநிரை விலக்கி ஆண்டுப்பட் டனனே
> இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
> வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
> பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
> ஒருமகன் அல்லது இல்லோள்
> செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"(36)

எனும் முதின்முல்லைத் துறைப்பாடல் சங்க காலமகளிரின் வீரப்பண்பினைக் காட்டும் சிறந்த பாடலாகும். ஆனால் புறத்திணையின் எவ்விடத்தும் மகளிர் போர் புரிந்ததாகச் செய்தி இல்லை. அவர்கள் தங்களது நிலையிலேயே வீரத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் புறநானூற்றில், போர்களத்தின்கண் விழுப்புண்பட்டு மாய்ந்தவனை அவனது தாய், மனைவி கண்டு கண்ணீர் உகுத்ததனைக் கூறும் 'உவகைக் கலுழ்ச்சி' துறையில் மூன்று பாடல்களும், காட்டில் கணவனை இழந்த மனைவி ஒருத்தியின் தனிமையைக் கூறும் முதுபாலைத் துறையில் நான்கு பாடல்களும், கணவனை இழந்தவளின் கைம்மையினைக் கூறும் தாபதநிலைத் துறையில் மூன்று பாடல்களும், கணவனை இழந்து வருந்தும் மனைவியின் நிலையைக் கூறும் 'ஆனந்தப்பையுள்' துறையில் ஐந்து பாடல்களும் மகளிர்க்குரியனவாக அமைகின்றன.

மேலே குறித்த மூவர் தவிர தெய்வம், புலவர், இரவலர், சான்றோர், ஒற்றர், வாணிகர், வேளாளர், துறவியர் ஆகியோரும் பேய், குதிரை, முரசு, யானை, வாள், தேர், கோழி, ஆட்டுக்கிடாய், பறவை ஆகியனவும் புறத்திணையில் இடம்பெறுகின்றன.

5.5 புறத்திணைக்காலம்

"இளமைக்காலமே ஐந்திணைக்குரிய காலம்"(37) என்றும் "ஒவ்வொரு வகை இலக்கியத்திற்கும் பொருள்வரம்பு உண்டு. ஐந்திணையிலக்கியத்திற்குக் காமக் காலமே, அக்காலச் செவ்வியில் தோன்றும் காதல் வினைகளே பொருளாம்"(38) என்றும் குறிஞ்சி முதலான அகனைந்திணைகளுக்கும் உரிய காலத்தினைக் குறிக்கிறார் வ.சுப.மாணிக்கம். இவ்விடத்துப் புறத்திணைகளுக்கு உரிய காலம் குறித்துச் சிந்திப்பதும் இன்றியமையாதது.

வெட்சித்திணை முதல் தும்பைத்திணை வரையிலான ஏழு புறத்திணைகளுக்கும், போர்த்திணைகளாகையால், இந்த ஏழு புறத்திணைகளுக்கம் உரிய காலம் இளமைக்காலம் என்பது உறுதிப்படும். புறநானூற்றின் 279-ஆவது பாடலில் முதல் நாள் போரில் தந்தையையும் மறுநாள் போரில் கணவனையும் இழந்தவள்,

"இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி

வேல்கைக் கொடுத்து வெளிதுவிரிந்து உடீஇப்
பாறுமயிர்க் குருமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"[39]

எனத் தனது மகனான, சிறுவனைப் போருக்கு அனுப்புகிறாள். ஆயின் இது சிறுபான்மையாகும், உடல்வலிமை நன்கு அமையப்பெற்ற இளமைக்காலத்தே, போர்ப்பயிற்சியும் பெற்ற பின்னரே மறவர்கள் போர்க்களம் புகுந்திருப்பர். அந்த வகையில் மேற்குறித்தபடி, ஏழு போர்த்திணைகளுக்கும் உரிய காலம் இளமைக்காலம் எனத் தெளியலாம்.

வாகை, பாடாண், பொதுவியல் ஆகிய மூன்று திணைகள் எல்லாப் பருவங்களையும் கொண்டுள்ளன. பாடாண் திணையின், பொலிவுமங்கலத் துறையும், குழவிக்கண் தோன்றிய காமப்பகுதித் துறையும் குழந்தைப் பருவத்தினைக் குறித்த துறைகளாகும். மறக்களவழி, வல்லாணமுல்லை போன்ற சில போர்த்துறைகள் இளமைப்பருவத்திற்குரியனவாய் அமைந்த போதும், அரசனுடைய இயல்பைக் கூறும் 'இயன்மொழி', அரசனது திருவிளக்கின் தன்மையைக் கூறும் 'விளக்குநிலை', அரசன் தேவர்களும் மனம் மகிழும்படி வேள்வி செய்தமையைக் கூறும் 'வேள்விநிலை' போன்ற துறைகள் இளமை, முதுமை ஆகிய இரு பருவங்களுக்கும் உரியனவாக அமைகின்றன. கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டு புறத்திணைகளின் துறைகளையும் நோக்கும் போது, இவ்விரண்டு திணைகளும் காமப்பருவம் மிக்க இளமைப்பருவத்திற்கே உரியனவாகக் காட்சியளிக்கின்றன.

5.6 நாடகவழக்கு

தொல்காப்பிய அகத்திணையியலில்,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்பனார் புலவர்"[40]

என உலக-வழக்கோடு, நாடக-வழக்கும் சுட்டப்படுகிறது. இளம்பூரணர் இந்நூற்பாவிற்கு விளக்கம் தருகையில், "நாடக வழக்காவது சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்"(41) என்றும் "உலகியல் வழக்காவது உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது"(42) என்றும் நாடக, உலகவழக்குகள் குறித்து விளக்குகிறார். எனவே, இந்நூற்பாவின் மூலம் உலகவழக்கு, நாடகவழக்கு ஆகிய இரண்டு வழக்குகளும் அகத்திணையில் வரும் என முடிவு செய்யலாம். ஆயின் புறத்திணையில் இவ்விருவகை வழக்குகள் குறித்து ஏதும் சுட்டப்படவில்லை. ஆகையால் புறத்திணையில் உலக, நாடகவழக்குகள் குறித்து ஆய்வு செய்வதும், அவற்றை இலக்கணத்தில் கூறாமல் விட்டதற்கான காரணத்தைக் காண்பதும் இன்றியமையாததாகின்றன.

புற, இலக்கணம் மற்றும் இலக்கியங்களின் மூலம் அக்கால மக்களின் நிலை, வாழ்க்கை முறை, நடந்த போர்கள், வெற்றி பெற்ற மன்னர்கள், கொடை வழங்கிய மன்னர்கள், பரிசில் கொடாதவர்கள் முதலான எல்லா உலக நிகழ்வுகளையும் அறியமுடிகிறது. எனவே ஐயத்திற்கு இடமின்றி உலகவழக்குப் புறத்திணையில் இடம்பெற்றது என்று துணியலாம். நாடக வழக்கு என்பது சுவைபடக் கூறும் கற்பனை வழக்காகும். "செல்வத்தானும், குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போரு மின்றி அடுப்போரு மின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்"(43) என நாடகவழக்கிற்கு உதாரணம் கூறுவர் இளம்பூரணர். புறத்திணையில் இதுபோன்ற தொடர்ச்சியான கற்பனை அமைப்பினைக் காணமுடியவில்லை.

வெட்சித்திணையில் ஆநிரை கவரப்புறப்படும் வெட்சியினரின் ஆரவாரத்தைக் கூறல், அதன் பொருட்டு நற்சொல் கேட்டல், ஆநிரை கவருதற்காகக் காட்டிடத்தே செல்லுதல், ஒற்றர்கள் ஒற்றுக்கூறல், ஒற்று நன்றாகத் தெரிந்த பின் பகைவருடைய ஆநிரைப் புறத்தே தங்கியிருத்தல், பகைவரின் அரணினை அழித்தல், பகைவர்களைக் கொன்று அவர்தம் ஆநிரைகளைக் கைப்பற்றுதல், ஆநிரை கொண்ட பின்னரும் தம்மேல் வந்து பூசலிட்ட கரந்தையாரைக் கொன்று அப்பூசலை மாற்றல், ஆநிரைகளை வருத்தமின்றி

கொண்டு செல்லுதல். ஆநிரை கைப்பற்றி வருகின்ற வரவினை அறிந்து சுற்றத்தார் மகிழ்தல். ஆநிரைகளை வெட்சியார் ஊரம்பலத்தே கொண்டு வந்து நிறுத்துதல் முதலான நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாகக் கூறப்பட்டுள்ள போதும். இந்நிகழ்ச்சிகள் கற்பனை வழக்கல்ல. ஆநிரை கவரச்செல்வோரின் செயல் இவ்வரிசை முறையிலேயே நடைபெறும். கரந்தை. உழிஞை. நொச்சி ஆகிய திணைகளிலும் இதே போன்றதொரு தொடர்ச்சி முறையினைக் காணமுடிகின்றது. பிற புறத்திணைகளில் இவ்வரிசை முறை இல்லை. வஞ்சித்திணையில். வஞ்சி வேந்தன் பகைவர் திறை கொடுக்க சினந்தணிந்து மீண்டு போதலைக் கூறும் 'பேராண்வஞ்சி' எனும் துறையினைக் கூறியதன் பின்னர். வஞ்சி வேந்தன் பகை நாட்டினைத் தீக் கொளுத்தியதனைக் கூறும் 'உழுபுலவஞ்சி'. பகைநாட்டைக் கொள்ளையிட்டதைக் கூறும். 'மழபுலவஞ்சி' போன்ற துறைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் தொடர்ச்சியான ஒரு வரிசைமுறை இல்லை. காஞ்சித் திணையும் இதே போன்று. காஞ்சி மறவர் வஞ்சிமறவரை எதிர்த்துத் தமது போர் வலிமையை வெளிப்படுத்திய 'பெருங்காஞ்சி' எனும் துறையை அடுத்து. வஞ்சியார் போர்க்கழைத்த பின் அவர் படையிடத்தே காஞ்சியரசன் வாளினைப் போகவிடுதலைக் கூறும் 'வாள்செலவு" துறை கூறப்படுகிறது. தும்பை. வாகை. பாடாண். பொதுவியல் ஆகிய திணைகளிலும் முழுமையான வரிசைமுறை பின்பற்றப்படவில்லை. பொதுவியல் திணையைப் பொறுத்த அளவில் கற்காண்டல். கற்கோள்நிலை. கல்நீர்ப்படுத்தல். கல்நடுதல். கல்முறைப்பழிச்சல். இற்கொண்டு புகுதல் ஆகிய நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாகக் கூறப்பட்டுள்ள போதும். இவை நடைமுறையில் இருந்த சடங்கு முறைகளாகும். வெறும் கற்பனை அல்ல.

கைக்கிளை. பெருந்திணை ஆகிய அகப்புறத்திணைகளுள். கைக்கிளையில் காட்சி. ஐயம். துணிவு. உட்கோள். பயந்தோர்ப்பழிச்சல். நலம் பாராட்டல் என்ற வரிசைமுறையில் பொருள் தொடர்ச்சி அமைகின்றது. பெருந்திணையில் இது இல்லை. கைக்கிளைத் திணையில் தலைவியைக் கண்ட தலைவன் அவளைத் தெய்வமோ? மானிடமகளோ என ஐயமுறுவதாகக் கூறப்படுவதும். அதன் பின்னர் அமைந்த துணிவு. உட்கோள். பயந்தோர்ப்பழிச்சல் முதலான துறைகளும் தொல்காப்பியம் அகத்திற்குக் கூறிய நாடகவழக்கை ஒட்டி அமைகின்றன. இந்த ஒரு அகப்புறத்திணை தவிர. வரிசைமுறையில் அமைந்த பிற திணைகளான வெட்சி. கரந்தை. உழிஞை. நொச்சி ஆகியன உலகவழக்கை

ஒட்டியே அமைந்தவை. இவற்றின் வரிசைமுறையில் சுவைபடக்கூறும் கற்பனை கிடையாது.

போர்க்களத்தில் புண்பட்டு வீழ்ந்த மறவனைப் பேய் காவல் செய்யும் 'பேய்நிலை' களத்தில் விழுப்புண்பட்டு வீழ்ந்த மறவரைப் பேய் அச்சமுறுத்தும் 'பேய்க்காஞ்சி', 'மனையின்கட் பாதுகாக்கப்படும் மறவனுடைய புண்ணைப் பேய்தீண்டும் தொட்ட காஞ்சி, ஒரு காஞ்சி மறவனுடைய புண்ணைத் தீண்டச் சென்ற பேய் தீண்ட அஞ்சும் 'தொடாக்காஞ்சி', தும்பை மன்னனுடைய தேரின் முன்னும் பின்னும் பேய்கள் ஆடும் 'பேய்க்குரவை', வாகை சூடிய மன்னன் தேர் முன்னர்ப் பேய்கள் கூத்தாடும் 'முன்தேர்க்குரவை' ஆகிய ஆறு புறத்துறைகள் மட்டுமே புறத்திணையில் கற்பனையாக இடம்பெற்றுள்ளன. இவையும் தொடர்ச்சியான பொருளமைப்பில் அமைந்தவை அல்ல. தனித் தனிப்பொருளுடன் தனித்தனியே அமைந்தவை. சங்க இலக்கியத்தில், மேற்கண்ட ஆறு துறைகளுள் தொடாக்காஞ்சித் துறையில் மட்டும் ஒரு பாடல் (புறம்.281) உள்ளது. இப்பாடலும் பேயினைக் குறித்து எழுந்த முழுக் கற்பனைப் பாடல் அல்ல. இப்பாடலில், ஒரு மறவனின் மனைவி போரின் போது விழுப்புண்பட்ட தனது கணவனைப் பேயானது தீண்டாமல் இருக்கும் பொருட்டுச் சில சடங்குகளைச் செய்கிறாள்.

"தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப்பு யாழொடு பல்இயம் கறங்கக்
கைபயப் பெயர்த்து மைஇழுது இழுதி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்"(44)

இது மறக்குடி மகளொருத்தியின் நம்பிக்கையைக் காட்டுவதே யன்றி வெறும் கற்பனை அல்ல. இவற்றின் மூலம், புறத்தில் நாடகவழக்கு மிகச் சிறுபான்மை என்பதும் உலகவழக்கே அதன் இயல்பு என்பதும் பெறப்படுகிறது.

இளம்பூரணர் கூறும் நாடகவழக்குத் தவிர மற்றொரு வகையான நாடகவழக்கினையும் அகத்திணையில் காணமுடிகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்களுக்கும் தனித்தனியே புணர்தல் முதலான ஐந்து உரிப் பொருள்களும் உரியன என்பதே உலகவழக்கு. ஆயின்

புணர்தலெல்லாம் குறிஞ்சிக்கண்ணும், இருத்தலெல்லாம் முல்லைக்கண்ணும், ஊடலெல்லாம் மருதத்தின் கண்ணும், இரங்கலெல்லாம் நெய்தற்கண்ணும், பிரிதலெல்லாம் பாலைக்கண்ணும் நடந்தனவாக வைத்துப் பாடப்படுதல் வேண்டும் என்பது அகத்திணையின் மற்றுமொரு நாடகவழக்காகும். புறத்திணையில் வெட்சி முதலான திணைகளுக்கு இது போன்று நிலம் ஏதும் குறிக்கப்படவில்லை. ஆநிரை கவரும் போரும், வஞ்சிப்போரும், உழிஞைப்போரும், தும்பைப் போரும் எந்நிலத்தில் வேண்டுமாயினும் நடைபெறலாம். இவற்றுள் இப்போர் இந்நிலத்தில்தான் நடைபெறும் என்று கூறுவது, அகத்திணைக்குக் கூறியது போல் சிறப்பாக அமையாது. அகத்திணையில் புணர்தல் ஒழுக்கத்தைக் குறிஞ்சி நிலத்தின் பின்னணியில் வைத்துப் பாடும் போதும், பிரிதல் ஒழுக்கத்தைப் பாலை நிலத்தின் பின்னணியில் வைத்துப் பாடும்போதும் ஏற்படும் இலக்கியச் சுவை, புறத்திணைப் போர்களுக்கு நிலம் சுட்டினாலும் ஏற்படுவதில்லை. மேலும் புறத்திணை நடந்த நிகழ்வுகளையும், போர்களையும் அப்படியே கூறுகின்றதாகையால், எந்நிலத்தில் எப்போர் நடந்தோ, அப்போரினை அந்நிலத்தில் வைத்தே புலவர்கள் பாடுகின்றனர். இதன் பொருட்டே இலக்கணத்தில் புறத்திணைகளுக்கு நிலம் சுட்டப்படவில்லை.

> "அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
> புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
> வெட்சி தானே குறிஞ்சியது புறனே
> உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே"(45)

எனும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை கூறப் போந்த இளம்பூரணர், "நிரை கோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின் கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயின் பிறநாட்டு ஆநிரையைக் களவிற்கோடல் ஒருபுடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும் அதற்கு அது புறனாயிற்று"(46) என்கிறார். இது போன்றே பிற புறத்திணைகளுக்கும் நிலம் கூறுகிறார் இளம்பூரணர். இவரின் கூற்றுப்படி உழிஞைத்திணை மருதநிலத்தில் நடைபெறவேண்டும். ஆயின் புறநானூற்றில் வேள்பாரி மகட்கொடை மறுத்துப் புரியும் நொச்சிப் போரானது பறம்பு மலையாகிய குறிஞ்சியில் நடைபெறுவதாகக் குறிக்கப்படுகின்றது.

> "அளிதோ தானே பாரியது பறம்பே

நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே தீஞ்சுளைப் பலாவின் பழம்வீழ்க் கும்மே
முன்றே கொடுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே அணிநிற ஓரி பாய்தலின், மீது அழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே
வாண்கண் அற்றவன் மலையே வானத்து"(47)

என அப்பாடலில் குறிஞ்சி நிலத்தின் வளமும் பேசப்படுகின்றது. இது இளம்பூரணர் புறத்திணைக்குக் கூறிய நிலக்கொள்கையிலிருந்து மாறுபட்டது. எனவே இளம்பூரணர் புறத்திணைகளுக்குக் கூறியுள்ள நிலங்கள் பொருந்தாது. முன்பு விளக்கியது போல், எல்லாப் புறத்திணைகளும், எல்லா நிலங்களிலும் வரும் என்பதே புறத்திணையின் இயல்பாகும்.

மேலும் அகத்திணையியலில், கார்காலமும் மாலைப்பொழுதும் முல்லைத்திணைக்குரிய காலமாகவும், கூதிர் காலமும் யாமப்பொழுதும் குறிஞ்சித் திணைக்குரிய காலமாகவும், வைகறையும் விடியலும் மருதத்திணைக்குரிய காலமாகவும், எற்பாடு நெய்தல் திணைக்குரிய காலமாகவும், நண்பகலும் வேனிலும் பாலைக்குரிய காலமாகவும் குறிக்கப்படுகின்றன. புறத்திணைகளுக்கு இது போன்ற காலவரம்புகள் இலக்கணங்களில் சுட்டப்படவில்லை. எனினும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் அகப், புறத் திணைகளுக்கு ஒப்புமை கூறுகையில், புறத்திணைகளுக்கு நிலத்தை வரையறுத்துக் கூறியது போன்று காலத்தையும் வரையறுத்துக் கூறியுள்ளனர். நச்சினார்க்கினியர் உழிஞைத் திணையினை, மருதத்திணையுடன் ஒப்புமை படுத்தும்போது, "மருதம்போல இதற்கும் பெரும்பொழுது வரைவின்மையானுஞ், சிறு பொழுதினும் விடியற்காலமே போர் செய்தற்குக் காலமாதலானும் உழிஞை மருதத்திற்குப் புறனாயிற்று"(48) என்கிறார். இவரின் கூற்றுப்படி விடியற்காலமே போர் செய்தற்கு உரிய காலமாயின் வஞ்சி, தும்பை, முதலான போர்களுக்கும் அவ்விடியற்காலமே வருதல் வேண்டும். ஆயின் முல்லைத் திணைக்குரிய 'கார்'காலத்தையும், நெய்தல் திணைக்குரிய 'எற்பாடு' காலத்தையும் முறையே வஞ்சி, தும்பை ஆகிய புறத்திணைகளின் காலங்களாக நச்சினார்க்கினியர் குறிக்கின்றார். எனவே,

அகத்திணையோடு புறத்திணையினை ஒப்புமை கூறும் பொருட்டு இவர் குறிக்கும் இக்காலப் பொருத்தங்கள் சரியானதாக அமையவில்லை. வலிந்து பொருத்தம் கூறுவனவாகவே உள்ளன. மேலும் புற இலக்கியத்தில் நிகழ்ச்சி அல்லது போர் நடைபெற்ற காலத்தையே புலவர்கள் தங்களது பாடல்களில் குறிப்பார்களே யன்றி, இன்ன திணை, இன்ன காலத்தில்தான் பாடவேண்டும் என்ற வரையறைகளை அவர்கள் பின்பற்றார். எனவே, புறத்திணைக்கு நிலக்கட்டுப்பாடுகள் இல்லாதது போன்று காலக்கட்டுப்பாடுகளும் இல்லை.

மேலும், புற இலக்கியத்தில் அக இலக்கியத்தைப் போன்று இயற்கைப் புனைவுகூட இடம்பெறவில்லை. "புறத்திணை செய்யுட்களில் பொருட்கு உரிய இயற்கைப் புனைவு இல்லை. இருப்பனவெல்லாம் இயற்கையுவமைகள்"(49) எனறும் "தமிழ்ச் சமுதாய வழக்க வொழுக்கங்களைக் காட்டுதற்கும், உவமைகள் கூறுவதற்குமே புறத்திணைப் புலவர்கள் இயற்கையைக் கையாண்டனர்"(50) என்றும் இதனைக் கூறுவர் வ.சுப.மாணிக்கம் எனவே புறத்திணை நாடகவழக்கு இல்லாதது.

5.7 உண்மை இலக்கியம்

புறத்திணையில் நாடகவழக்கு இல்லை என்பது முன்னர் விளக்கப்பட்டது. அதற்கு முக்கிய காரணம் புறத்திணையானது பண்டைய மக்களுடைய வாழ்க்கையினையும், நடந்த உண்மை நிகழ்வுகளையும் கூறுவதேயாகும். "புறத்திணையானது, பண்டையரசருடையவும், போர்வீரருடையவும் ஏனையமக்களுடையவும் அரும் பெருங்குணங்களையும் செயல்களையும் பழங்காலத்து வழங்கிய முறை தவறாது கூறுவதென்பதும், ஆதலால் அப்பகுதி முழுவதும் பழைய சரித்திரக் கூறுகளே என்பதும் ஆராய்ந்து கொள்ளத் தக்கன"(51) என்கிறார் மு.இராகவையங்கார்.

புறநானூற்றின் முதல் எண்பத்தைந்து பாடல்கள் சேரர், பாண்டியர், சோழர் ஆகிய மூவேந்தர்களைப் பற்றி அமைகின்றன. இவற்றுள் பெரும்பான்மைப் பாடல்கள் வேந்தர்களின் கொடை, வீரம் முதலான இயல்புகளைப் புகழ்ந்து கூறுவனவாக உள்ளன. வேந்தர்களைக் குறித்த இப்பாடல்கள் வெறும் புகழ்ச்சியாய் மட்டும் அமையின் அதன் உண்மைத் தன்மையில் கேள்வி எழும்.

ஆயின் புறநானூற்றுப் பாடல்கள் அவ்வாறமைந்தவை அல்ல. இப்பாடல்கள் வேந்தர்களைப் புகழுமிடத்து புகழ்ந்தும், அறிவுறுத்துமிடத்து அறிவுறுத்தியும், தவறு செய்யுமிடத்துக் கடிந்து கூறியும் பாடப்பட்டவை. இது முன்னரும் விளக்கப்பட்டுள்ளது.

"................................ பெரும்பெயர் வழுதி

நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்"(52)

என்பது பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதிக்கு, இரும்பிடர் தலையார் கூறும் அறிவுரையாகும். புறநானூற்றின் 5-ஆவது பாடல் சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும் பொறையை நரிவெரூஉத்தலையார்,

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா

நிரயங் கொள்பவரோ டொன்றாது காவல்

குழவி கொள்பவரின் ஓம்புமதி"(53)

என்று அறிவுறுத்துகின்றார். பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை, காரிக்கிழார் அறிவுறுத்தும் பாடல்,

"பணியியர் அத்தைநின் குடையே முனிவர்

முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே

இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த

நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே

வாடுக இறைவநின் கண்ணி ஒன்னார்

நாடுசுடு கமழ்புகை எறித்தலானே

செலிஇயர் அத்தைநின் வெகுளி வாலிழை

மங்கையர் துனித்த வாள்முகத்து எதிரே"(54)

என்பதாகும். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளைக்குடி நாகனார் பாடிய (புறம்.35) பாடலும், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிளநாகனார் பாடிய (புறம்.55) பாடலும், மேற்கண்டது போன்றே செவியறிவுறுத்துவனவாக அமைகின்றன.

புறநானூற்றில் துணைவஞ்சித் துறைக்குரியனவாகக் குறிக்கப்பட்டுள்ள ஆறு பாடல்களும் (புறம்.36,45,46,47,57,213) வேந்தர்கள் தவறு செய்யத்துணிந்த போது அதனைத் தடுக்கும் பொருட்டுப் பாடப்பட்டவை. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு அஞ்சி கருவூர் மன்னன்

அரண்மனைக்குள் அடங்கிக் கிடந்த போதும், கிள்ளிவளவன் போரினைக் கைவிடாது தொடர்ந்து அவனைத் தாக்கினான். சோழனின் இச்செயல் இழிவு தருவதாகும் என்று கூறி கிள்ளிவளவனைச் சந்து செய்விப்பதாக அமைந்தது ஆலத்தூர் கிழார் பாடிய புறநானூற்றின் 36-வது பாடல். சோழன் நெடுங்கிள்ளியும், நலங்கிள்ளியும் தாம் சோழ மரபினர் என்பதை மறந்து தம்முள் போர்புரிந்தபோது அதனைத் தடுப்பதாகக் கோவூர்கிழார் பாடிய புறநானூற்றின் 45-ஆவது பாடல் அமைகின்றது. கிள்ளிவளவன் தன் பகைவனான மலையமான் மக்களைக் கொலையானைக் காற்கீழிட்டுக் கொல்ல முயன்ற போது கோவூர்கிழார் அச்செயலினைத் தடுத்துப்பாடுவது புறநானூற்றில் 46-ஆவது பாடலாக இடம்பெறுகிறது. சோழன் நெடுங்கிள்ளி நலங்கிள்ளியிடத்திலிருந்து போந்த இளந்தத்தன் என்னும் புலவனை அவனுடைய ஒற்றனெனக் கருதிக் கொல்ல முயன்றபோது அதனைக் கோவூர்கிழார் தடுத்துப்பாடியது புறநானூற்றின் 47-ஆவது பாடலாகும். இதன் 57-ஆவது பாடல், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய பாண்டியன் நன்மாறன் தனது பகைவன் மீது போர் தொடுக்க முயன்றபோது அதனைத்தடுக்கும் பொருட்டுக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனாரால் பாடப்பட்டதாகும். கோப்பெருஞ்சோழன் பிழை செய்த தன் மகன்களுடன் போரிடத் துணிந்தபோது புல்லாற்றூர் எயிற்றியனார் அச்செயலைத் தடுத்துப் பாடியது புறநானூற்றின் 213-ஆவது பாடலாகும். இவ்வாறு புறநானூற்றின் துணைவஞ்சித் துறைப் பாடல்கள் வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ளன. தனது மகன்கள் மீது போர் தொடுக்க முயன்று புல்லாற்றூர் எயிற்றியனாரால் தடுக்கப்பட்ட கோப்பெருஞ்சோழன், தனது மக்கள் செயலால் மானம் பொறாது வடக்கிருந்த செய்தியையும் புறநானூற்றுப் பாடல்களின் (புறம்.214-223) மூலம் அறியமுடிகிறது.

புறநானூற்றின் 62,63-ஆகிய இரண்டு பாடல்களும் தும்பைத் திணையின் தொகைநிலைத் துறையில் அமைந்தனவாகும். இப்பாடல்களில் சேரமான் குடக்கோ-நெடுஞ்சேரலாதனும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் தமது படையினருடன் மொத்தமாக மாண்டமை குறிக்கப்படுகின்றன. மேலும் புறநானூற்றில் பரிசில்கடாநிலைத் துறைக்குரியனவாகக் குறிக்கப்படும் பதினாறு பாடல்களும் (புறம்.11,101,136,139,159,160,164,169,196-199,209-211,266) பரிசில் கொடுக்காமல் காலம் தாழ்த்தியவர்களைப் பற்றி பேசுகின்றன. சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ, அதியமான் நெடுமான் அஞ்சி, வேள் ஆய் அண்டிரன்,

நாஞ்சில் வள்ளுவன், குமணன், பிட்டங்கொற்றன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், மூவன், சேரன் குடக்கோச் சேரலிரும் பொறை, சோழன் இளஞ்சேட்சென்னி ஆகியோர் புலவர்களுக்குப் பரிசில் தராமல் காலம் நீட்டித்ததாக இத்துறைப் பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது.

வேள்பாரியிடம் மகட்கொடை வேண்டி மறுக்கப்பட்ட மூவேந்தரும், அதன் காரணமாகப் பாரியின் மீது போர் தொடுத்தனர் என்பதைப் புறநானூற்றின் 109,110,111 ஆகிய மூன்று பாடல்களின் வழி அறியமுடிகின்றது. அப்போரில் வேள்பாரி இறந்துவிட, அவனின் மகளிரைக் கபிலர் தம்முடன் அழைத்துச் சென்று விச்சிக்கோ (புறம். 200), இருங்கோவேள் (புறம். 201) ஆகிய மன்னர்களிடம் பாரிமகளிரை மணந்து கொள்ளும்படி வேண்டுகிறார். அவர்கள் மறுத்துவிடுகின்றனர். இந்நிலையில் இருங்கோவேள் மீது கோபம் கொண்ட கபிலர்

"இருபால் பெயரிய உருகெழு மூதூர்க்
கோடிபல அடுக்கிய பொருள்நுமக்கு உதவிய
நீடுநிலை அரையத்துக் கேடும் கேள்ளினி
நுந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே இயல்தேர் அண்ணல்
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றுஇவர்
கைவண் பாரி மகளிர் என்றஎன்
தேற்றாப் புன்சொல் நோற்றிசின் பெரும
விடுத்தனென் வெலீஇயர் நின்வேலே........"(55)

என்று அவனை இகழ்ந்து பாடுகிறார். இறுதியில் இவர் பாரிமகளிரைப் பார்ப்பாரிடத்தே அடைக்கலமாகத் தந்து வடக்கிருந்து உயிர் துறக்கிறார் (புறம்.236). இவ்வாறான வரலாற்றுச் செய்திகளை இத்தொகைநூலின் மூலமே அறியமுடிகின்றது. மேலும் இந்நூலில் அமைந்துள்ள கையறுநிலைத் துறைப் பாடல்களும் சிறந்த வரலாற்றுக் கருவூலமாக விளங்குகின்றன. இவ்வகையில் புறநானூற்றில் முப்பத்தேழு பாடல்கள் (பொதுவியல் - கையறுநிலை)

அமைகின்றன. இப்பாடல்களின் மூலம் இறந்தவர்களின் பெயர்கள், இறப்பின் காரணம், அதனால் வருந்தியவர்களின் நிலை, வருந்திப்பாடிய புலவர்களின் பெயர்கள், முதலானவற்றை அறியமுடிகின்றது. வேள்பாரி இறந்தபோது அவனின் மகளிர் பாடிய (புறம் 112) பாடலும், கபிலர் பாடிய பாடல்களும் (புறம்.113-120) இக்கையறுநிலைத் துறைக்குரிய பாடல்களேயாகும். அதியமான் நெடுமானஞ்சியினால் பெரிதும் விரும்பப்பட்ட ஔவையார் அவனிறந்த போது பாடிய கையறுநிலைப்பாடல், புறநானூற்றில் 231-ஆவது பாடலாக உள்ளது. இந்நூலின் 245-வது பாடல், சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை தனது மனைவி பெருங்கோப்பெண்டு துஞ்சியகாலைப்பாடியதாகும். இவ்வாறு புறநானூற்றின் கையறுநிலைத் துறைப்பாடல்கள் நடந்த வரலாற்று நிகழ்வுகளை, உண்மைகளைக் கூறுவனவாக உள்ளன.

பெருங்கோழி நாய்க்கன் மகள் நக்கண்ணையார், போரவைக் கோப்பெருநற்கிள்ளியின் மீது ஒருதலையாகக் காதல் (கைக்கிளை) கொண்டமையை இத்தொகைநூலின் 83-85 ஆகிய மூன்று பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது. மேலும், வையாவிக்கோப்பெரும்பேகன் தனது மனைவி கண்ணகியைக் கைதுறந்து பரத்தையோடு புறத்தொழுக்கம் (பெருந்திணை) கொண்டொழுகியதையும் (புறம்.143-147) இந்நூல் சுட்டுகிறது. இவ்வாறு கைக்கிளை, பெருந்திணை ஆகிய திணைகளிலும் வரலாற்று நிகழ்வுகளைக் காணமுடிகின்றது.

இத்தொகையிலிருந்து பல பெரும் போர்களை அறியமுடிகின்றது. நெடுஞ்செழியனின் தலையாலங்கானத்துப் போரும், பெருவழுதியின் கானப்பேரெயில் வெற்றியும், கிள்ளிவிளவனது கருவூர் முற்றுகையும், நலங்கிள்ளியின் உறையூர் முற்றுகையும், கரிகாலனது சேரநாட்டுப் போரும், பூதப்பாண்டியனின் ஒல்லையூர்ப் போரும் இத்தொகையில் இடம்பெற்றுள்ளன. பாடினோர் பெயர்க்கும், பாடப்பட்டோர் பெயர்க்கும் கொடுத்துள்ள அடைகளிலிருந்து ஊர்ப்பெயர்கள், போர்ப் பெயர்கள், துஞ்சிய இடங்கள் சில பழக்க வழக்கங்கள் தெரிகின்றன. பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி பல்யாகசாலை அமைத்தான், பெருநற்கிள்ளி இராசசூயம் வேட்டான் என்று அடைகள் காட்டுகின்றன. சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டியன் கூடகாரத்தத் துஞ்சிய மாறன் வழுதி, பாண்டியன் இலவந்திகைப்

பள்ளித்துஞ்சிய நன்மாறன், சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன், பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி முதலிய அடைகளால் இறந்த இடங்கள் தெரிகின்றன.

பண்டைக்கால மக்களின் பல்வேறு பழக்க வழக்கங்களும், விழாக்களும், கலைகளும், உணவுவகை, உடைவகைகளும், நம்பிக்கைகளும் ஏராளமாக இத்தொகையிலிருந்து அறியவருகின்றன. ஆய்தங்களுக்கு நெய்பூசி, மயிற்பீலி அணிந்து, மாலை சூடுவர். ஆம்பற் கொடியை வளையாக அணிவர். ஊர் காப்பாளர் யாமத்து விளக்கேற்றி ஊர் காப்பர். இறந்தவர்க்குப் பிண்டச்சோறு அமைத்துக் கிரியை செய்வர். இறந்தோர் உடம்பைச் சுடுவர். நோயால் இறந்த அரசர் உடம்பைத் தருப்பையிற் கிடத்தி வாளால் வெட்டுவர். ஊடலை வெறுத்து வடக்கிருப்பர். உடன்கட்டை ஏறுவர். கருவுற்ற மகளிர் மண்ணை உண்பர். பேய்க்கு அஞ்சி வேப்பந்தளிரைச் சூடுவர், என்பன இத்தொகையின் மூலம் அறியப்படும் சில பழக்க வழக்கங்களாகும்.

புறநானூறு மேற்கண்டவாறு பண்டைத் தமிழரின் வாழ்க்கையினைக் கூறி அமைய, பதிற்றுப்பத்து சேர வேந்தர்களின் வரலாற்றினைக் கால வரிசைப்படி கூறுகின்றது. இதில் சேர வேந்தர் பதின்மரின் வீரம், கொடை பற்றிப் பத்துப் பாடல்கள் பத்துத் தனிப் புலவர்களாற் பாடப்பட்டுள்ளன. பண்டைக்காலத்து முறையான வரலாற்று மனப்பான்மை இருந்தது என்பதற்கு, ஒரு குலமன்னர்கள் பற்றி எழுந்த இந்நூல் சான்றாகும். இன்று முதற்பத்தும், இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. ஆதலால் எட்டு சேர வேந்தர்களைக் குறித்தே இந்நூலின் மூலம் அறியமுடிகின்றது. இவர்களைக் குறித்த பாடல்கள், புலவர்களால் பரிசில் பெறும் நோக்கோடு பாடப்பட்ட பாடாண்திணைப் பாடல்களாதலால், மக்களைக் குறித்த பிறவரலாற்றுச் செய்திகளைப் புறநானூற்றைப் போன்று இந்நூல் கொண்டிருக்கவில்லை. பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படைகளும், பதிற்றுப்பத்தைப் போன்று மன்னர்களைக் குறித்து எழுந்த பாடாண்திணைப் பாட்டுக்களாக அமைகின்றன. இவ்வெல்லாச் செய்திகளின் மூலம் புறத்திணை என்பது நடந்த உண்மை நிகழ்ச்சிகளைக் கூறுவது எனத் தெளியலாம்.

5.8 கூற்றுமுறை

தொல்காப்பிய அகத்திணையியலில் தலைவன், தலைவி, தோழி முதலானோருக்குரிய கூற்றுக்கள் இவை எனச் சுட்டப்பட்டுள்ளன. ஆயின் புறத்திணையியலில் கூற்று குறித்து ஏதும் விளக்கப்படவில்லை. புறப்பொருள் வெண்பாமாலை முதலான பிற இலக்கண நூல்களிலும் இது இடம்பெறவில்லை. இதற்கான காரணம் சிந்திக்கத் தக்க ஒன்றாகிறது.

அகத்திணை உலகவழக்கோடு நாடகவழக்கையும் கொண்டது. ஆயின் புறத்திணை உலகவழக்கை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இது முன்னர் விளக்கப்பட்டது. அவ்வகையில் நாடக வழக்கிற்கே இன்னின்ன கூற்றுக்கள் இவரிவர்க்குரியன என்ற கூறுதல் பொருந்தும். மேலும் அகத்தைப் போன்று புறம் குறுகியதல்ல. காதலினைத் தவிர்த்த பிற எல்லா நிகழ்வுகளும் புறத்தில் அடங்குவதால் இதன் எல்லை விரிந்தது. எந்த ஒரு புறச் செயலுக்கும் பாடல் எழலாம். அது யாராலும் பாடப்படலாம். எனவே, இவை எல்லாவற்றையும் குறித்து, அவற்றிற்குரிய கூற்றுக்களையும் கூறுதல் இயலாத ஒன்று என்பதைவிட பொருந்தாத ஒன்றாகும். அகத்திணையில் புலவர்களே தலைவன், தலைவி, தோழி முதலானோரின் கூற்றுக்களில் பாடல்களைப் பாடுவர் என்ற போதும், அதில் அவர்கள் தன்னிலை தோன்றப் பாடமாட்டார்கள். வ.சுப.மாணிக்கம் அவர்களும் இதே கருத்தில் "அகத்திணை நாடகப்பண்புடையதாகலின், புலவன் தன்னிலை தோன்றப் பாடான். கூற்றோடு வேற்றுமையின்றி கலந்து விடுவான். தானொரு கூற்றாகத் தனிநின்று பாடும் பெற்றி அப்புலவனுக்கு என்னானும் இல்லை"(56) என்று கூறுகிறார். ஆயின் புறத்திணைப்பாடல்கள் புலவர்களால் தன்னிலை தோன்றப் பாடப்பட்ட பாடல்களாகும். அவர்கள் தாங்கள் கண்ட நிகழ்ச்சிகளையும் அனுபவித்த உணர்வுகளையும் பாடியனவே புறத்திணைப் பாடல்களாகும். ஆகையால் புலவர் கூற்றே புறத்திணையில் மிகுதி. ஒரு பாணனை மற்றொரு பாணன் ஆற்றுப்படுத்தும் பாணாற்றுப்படை, ஒரு பொருநனை மற்றொரு பொருநன் ஆற்றுப்படுத்தும் பொருநர் ஆற்றுப்படை போன்ற ஒரு சில துறைப்பாடல்கள் தவிர பெரும்பான்மைப் பாடல்கள் புலவன் கூற்றுப் பாடல்களேயாகும்.

ஒல்லையூர்தந்த பூதப்பாண்டின், கடலுள் மாயந்த இளம்பெருவழுதி, சேரமான் கணைக்காலிரும்பொறை, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய

கிள்ளிவளவன், சோழன் நல்லுருத்திரன், சோழன் நலங்கள்ளி, பாண்டியன் அறிவுடைநம்பி, பாண்டியன் ஆளிப்படை கடந்த நெடுஞ்செழியன், பாண்டியன் தலையாங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ – ஆகிய வேந்தர்களின் பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. இவ்வேந்தர்களும் பாடல் இயற்றியமையால் புலவர்களாகவே கருதப்படுவர். ஆயின் இவர்கள் பாடிய பாடல்கள் அனைத்தையும் புலவர் கூற்றுப்பாடல்களாகக் கொள்ள இயலாது. ஏனெனில் இவர்கள் வேந்தனின் நிலையிலிருந்து, பகைவரை எதிர்த்து வஞ்சினம் கூறும் பாடல்களை வேந்தன் கூற்றுப் பாடல்களாகவே கொள்ள வேண்டிவரும்.

"சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்குஅகப் படேஎன் ஆயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"(57)

என்பது, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கூறும் வஞ்சினமாகும். ஓல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பாடிய புறநானூற்றின் 71-வது பாடலும், சோழன் நலங்கிள்ளி பாடிய புறநானூற்றின் 73-வது பாடலும் இதே போன்ற வஞ்சினப்பாடல்களாகும். ஏனைய வேந்தர்களின் பாடல்கள் புலவர் கூற்றுப்பாடல்கள் போன்றே நீதியைக் கூறுவனவாகவும், உலக இயல்பைக் கூறுவனவாகவும் அமைகின்றன. பதிற்றுப்பத்தின் பாடல்கள் அனைத்தும் புலவர் கூற்றேயாகும்.

இவற்றின் மூலம் உலக நிகழ்வுகளைக் கூறும் புறத்திணைக்குக் கூற்று வரையறுத்துக் கூறுதல் பொருந்தாது என்பது தெளிவாகும். மேலும் புறத்திணையில் அமைந்த பெரும்பாண்மை பாடல்கள் புலவர் கூற்றில் அமைந்தவை என்றும் முடிவு செய்யலாம்.

5.9 புறத்திணைப் புலவர்கள்

'புலவர்கள், வீரநிலைக் காலமாகிய சங்ககாலத்தில் புகழ் விரும்பும் அரசர்களை மகிழ்விப்பதோடு அவர்தம் புகழ் பரப்பும் வாயிலாகவும் பணிபுரிந்தனர் என்று கூறுவர் க.கைலாசபதி'[58] சங்க இலக்கியத்தில் மொத்தமுள்ள 2381 – பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 473 ஆகும். இவர்களுள் அகத்திணையைப் பாடாது புறத்திணையை மட்டும் பாடியோர் தொகை 95. அகமும் புறமும் பாடிய இருதிணைப் புலவோர் எண்ணிக்கை 71. இவர்களுள் 15 பேர் பெண்பாற் புலவர்கள் ஆவர்.

புறத்திணைப் புலவர்களின் பெயரையும், பெயரடைகளையும் நோக்கும் போது அரசர், பெண்டிர், கூத்தர், குறவர், வணிகர், அந்தணர் வேறுபல தொழிலுடையோர் பலரும் புலவர்களாக விளங்கியமையை அறியமுடிகிறது. சேர, பாண்டிய, சோழராகிய முடியுடைவேந்தர்கள் பாடப்பட்டவர்களாக மட்டுமின்றி பாடிய புலவர்களாகவும் உள்ளனர். ஆரிப்படைகடந்தநெடுஞ்செழியன், இளம்பெருவழுதி, பூதப்பாண்டியன் முதலியோர் அரசகுலத்துப் புலவராவர். ஔவையார், குறமகள் இளவெயினி, காவற்பெண்டு, பூதப்பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவி, நன்முல்லையார், நக்கண்ணையார் முதலியோர் பல்தொழில் சார்ந்த புலவராவர். இவர்கள் அன்றி கபிலர், பரணர், கோவூர்கிழார், நக்கீரனார், குமட்டூர்க்கண்ணனார், பாலைக்கௌதமனார், அரிசில்கிழார் முதலிய பெரும் புலவர் பாடல்களையும் புறத்தில் காணமுடிகிறது. இதனால் புலமையும் கல்வியும் எங்கும் பரவியிருந்த சிறப்பு நிலையை அறியலாம். இப்புலவர்கள் சமுதாயத்தின் மீது கொண்டிருந்த பற்று அளவற்றது.

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"[59]

என ஈகையினை வலியுறுத்தும் புறத்திணைப் புலவர்கள்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"[60]

என்று கல்வியின் இன்றியமையாமையை மக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தரவ ாரா"[61]

என்பது கணியன் பூற்குன்றனாரின் உலகப் பொதுமொழி. இவ்வாறு பல சீரிய கருத்துக்களை மக்களுக்குக் கூறுவதோடு இப்புறத்திணைப் புலவர்கள் பல பெரிய போர்களையும் தடுத்து உயிர்களைக் காத்துள்ளனர். முன்னர். துணைவஞ்சித் துறைக்குரியனவாகக் குறித்த பாடல்கள் அனைத்தும் இவ்வகையில் அடங்குவனவாகும். மேலும் இவர்கள் அரசன் செங்கோல் தவறும் போது இடித்துரைத்தனர்.

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்
அதுநற்கு அறிந்தனை யாயின் நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகுடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறம் தருகுவை ...."[62]

இது விளையா நிலத்திற்கு வரியை விலக்கும்படி, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு வெள்ளைக்குடி நாகனார் இடித்துரைத்ததாகும். அதிகமான் மக்களைக் கிள்ளிவளவன் யானைக்கு இடமுயன்றபோது கோவூர்கிழார் தடுத்து உய்யக் கொண்டார். கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் மேல் போர் தொடுக்கச் சென்ற போது எயிற்றியனார் உள்நாட்டுப் போரைத் தடுத்தார்.

மேலும் புலவர்களுக்கும் மன்னர்களுக்குமிடையே இருந்த நட்பும் போற்றத்தக்க ஒன்றாக இருந்துள்ளது. கோப்பெருஞ்சோழனுடன் பிசிராந்தையாரும், பொத்தியாரும் கொண்டிருந்த நட்பும், பாரியுடன் கபிலர் கொண்டிருந்த நட்பும், அதிகமானுடன் ஔவையார் கொண்டிருந்த நட்பும் இவ்வகையில் அடங்குவனவாகும். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் துறந்த பின்னர் அதன் துயர் தாங்காமல் பிசிராந்தையாரும் பொத்தியாரும் அதே போன்று வடக்கிருந்தமை, இவர்களுக்கிடையே இருந்த நட்பின் தன்மையைக் காட்டுகிறது. மூவேந்தர்களுடன் நடந்த போரில் பாரி இறந்து விட, அவனின் மகளிரைக் கபிலர் பாதுகாப்பாகத் தம்முடன் அழைத்துச் சென்றது பாரி-கபிலரின் நட்புத் திறத்தைக்

காட்டுகிறது. பாடிப் பரிசில் பெறுவது மட்டுமே புறத்திணைப் புலவர்களின் நோக்கமாயின், அரசர்கள் பாடல் இயற்றியிருக்க மாட்டர், புறத்தில் அறக்கருத்துக்கள் இடம்பெற்றிருக்காது. போர் தடுப்புப் பாடல்கள் பாடப்பட்டிருக்காது. கோப்பெருஞ்சோழன் உயிர்துறக்க அதன் பொருட்டுப் புலவர்களும் உயிர் துறந்திருக்கமாட்டர். கபிலர் பாரியின் மகளிரைத் தம்முடன் அழைத்துச் சென்றிருக்க மாட்டார். எனவே, பாடிப்பரிசில் பெறுவது மட்டுமே புறத்திணைப் புலவர்களின் நோக்கமன்று. அமைதியான சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதே அவர்களின் நோக்கம் என்பது இதன் மூலம் தெளிவாகும்.

5.10 தொகுப்புரை

- வெட்சி முதல் தும்பை வரையிலான ஏழு புறத்திணைகளும் போர் நிகழ்வுகளைக் கூறுவன. வாகை, பாடாண், ஆகிய இரண்டு திணைகளும் மனித வெற்றி, கொடை, குறித்துப் பேசுகின்றன. பொதுவியல் திணையானது நிலையாமைக் கருத்துக்களையும், அறக்கருத்துக்களையும் கொண்டுள்ளது. புறத்திணையின் இறுதியில் அமைந்துள்ள கைக்கிளை ஒருதலைக் காதலையும், பெருந்திணை மிக்க காமத்தையும் கூறி அமைகின்றன. உலகில் மக்களின் அகம் தவிர்ந்த புறவாழ்வு முழுவதையும் கூறுதற்காக எழுந்ததே இப்பன்னிரு புறத்திணைகளாகும்.
- இந்த பன்னிரெண்டு புறத்திணைகளுள் உழிஞை தவிர்த்த பதினொரு திணைகளைக் கொண்டதாகப் புறநானூறு அமைகிறது. இதில் முதலில் தாக்குதல், நடத்தும் திணைகளான, வெட்சி, வஞ்சித் திணைகளில் பாடல்கள் மிகக் (16 பாடல்கள்) குறைவாகவும், காத்துக் கொள்ளும் பொருட்டு நடத்தும் போர்களான கரந்தை, காஞ்சி ஆகிய திணைகளில் பாடல்கள் அதிகமாகவும் (44 பாடல்கள்) உள்ளன. மேலும் அரணினுள் இருப்பவனைத் தாக்கும் உழிஞைத் திணையில் ஒரு பாடல்கூட இத்தொகையில் இடம்பெறவில்லை. உழிஞையினரை எதிர்த்துப் போரிடும் நொச்சியில் ஆறு பாடல்கள் உள்ளன. இதன் மூலம் வலியச் சென்று போர் செய்வதனைப் பண்டைய தமிழ்ச்சமுதாயம் போற்றவில்லை என்பதும், பகைவர் தம்மேல் படையெடுத்து

வருகையில் அதனை எதிர்த்துப் போரிடலைப் போற்றியது என்பதும் பெறப்படும்.

- புறநானூற்றின் வாகை, பாடாண் திணைப் பாடல்கள் வெற்றி, கொடையினைக் குறித்து அமைய பொதுவியல் திணைப் பாடல்கள் மக்களுக்குச் சிறந்த பல அறக்கருத்துக்களைக் கூறுகின்றன. சங்கச் சான்றோர் இத்திணையின் பெருங்காஞ்சித் துறைப் பாடல்களின் மூலம் நிலையாமையை உணர்த்தி, மக்கள் நல்வாழ்வு வாழ முதுமொழிக்காஞ்சி, பொருள்மொழிக்காஞ்சி ஆகிய அறத்துறைகளின் வழி பாடல்களைப் பாடியுள்ளனர்.
- புறநானூற்றுப் பாடல்கள் அனைத்தும் பண்டைக்காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. வாழ்த்திப் பாடும் துறைகள் தவிர்ந்த, பரிசில் கடாநிலை, செவியறிவுறூஉ, துணைவஞ்சி முதலான துறைகள் இதனை மெய்ப்பிக்கும்.
- பதிற்றுப்பத்து முற்றிலும் புறநூலாயினும், புறநானூறு போன்று இதில் மக்களின் வாழ்க்கை இடம்பெறவில்லை. இந்நூல் முழுமையும், சேர வேந்தர்களின் வீரமும், கொடையுமே புகழப்பட்டுள்ளன. இதன் பாடல்கள் அனைத்தும் பரிசில் பெறும் நோக்கோடு பாடப்பட்ட பாடாண்திணைப் பாட்டுக்களாகும். பத்துப் பாட்டிலுள்ள ஆற்றுப்படை நூல்களும், பதிற்றுப்பத்தினைப் போன்று பாடாணில் அமைந்துவிடுகின்றன. எனவே, புறநானூறு மட்டுமே முழுமையான புறக்கூறுகளைக் கொண்டுள்ளது. பதிற்றுப்பத்தும், ஆற்றுப்படைகளும் பாடாண் திணையினை மட்டும் கூறி 'புறப்புற' நூல்களாகி விடுகின்றன.
- வேந்தன் முதல் சாதாரணக்குடிமகன் வரை, உலக மக்கள் அனைவருமே புறத்திணையாளர்கள் ஆவர். இவர்களுள் வேந்தனைச் சுற்றியே புறத்திணையின் பெரும்பகுதி அமைகிறது. அகத்திணையில் சிறப்பிடம் பெறும் மகளிர், இப்புறத்திணையிலும் பெரும்பங்கு வகிக்கின்றனர். புறப்பொருள்வெண்பாமாலையில் எழுபத்தொரு துறைகள் மகளிர்க்குரியதாக அமைவதும், மகளிர் அவர்களது நிலையில் மறப்பண்புடன் செயல்படுவதாகக் கூறும் மூதின்முல்லைத் துறையில், புறநானூற்றில் பதினான்கு பாடல்கள் அமைவதும் இதனை உறுதிப்படுத்தும்.

- வெட்சி முதல் தும்பை வரையிலான ஏழு புறத்திணைகளுக்கும், கைக்கிளை, பெருந்திணை ஆகிய அகப்புறத்திணைகளுக்கும் உரிய காலம் இளமைக்காலம். வாகை, பாடாண், பொதுவியல் ஆகிய திணைகளில் மறக்களவழி, இல்லாண்முல்லை போன்ற சில துறைகள் தவிர்த்த பிற துறைகள் எல்லா பருவத்திற்கும் பொருந்தி வருவனவாகும்.
- அகத்திணை நாடகவழக்குடையதாகையால், இதற்குக் கூற்று வரையறை பொருந்தி வருகிறது. புறத்திணையில் நாடகவழக்கு இல்லையாதலாலும், நடந்ததைக் கண்டவர் அதனை அப்படியே கூறவேண்டி இருப்பதாலும், கூற்றினை வரையறுத்துக் கூறுவது பொருந்தாது. இதில் புலவன் தான் கண்டு, உணர்ந்த நிகழ்ச்சிகளையே பாடுகின்றான். எனவே, புறப்பாடல்கள் பெரும்பான்மையும் புலவனை உளப்படுத்திய, புலவன் கூற்றுப் பாடல்களாகவே உள்ளன.
- அரசர், பெண்டிர், கூத்தர் முதலான பல்வேறு தொழில் புரிவோரும் புறத்திணைப் புலவர்களாக இருந்துள்ளனர். இவர்கள் உலகில் மக்கள் அனைவருக்கும் பயன்தரத்தக்க சிறந்த அறக்கருத்துக்களைத் தமது பாடல்களில் கூறுவதனையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். கோவூர்கிழார் முதலான பெரும் புலவர்கள் சமுதாயம் அமைதியுடன் திகழ, தமது புறப்பாடல்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- இவற்றின் மூலம் அமைதியான, அறமிக்க சமுதாயத்தைப் படைப்பதே புறத்திணையின் குறிக்கோள் எனத் துணியலாம்.

அடிக்குறிப்புகள்

1. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.16.
2. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.216
3. மேலது, ப.28
4. கா.கோவிந்தன், பண்டைத் தமிழர் போர் நெறி, முன்னுரை, ப.V
5. கி.வா.ஜகந்நாதன், அறப்போர், ப.16
6. Quincy Wright, A Study of War, P.14
   [Drives, Food, Sex, Territory, Adventure, Self-Spreervation, Domination, Independence, Society]
7. மகா.வேங்கடராமன், புறநூல்களில் பொருளியல் கோட்பாடுகள், ப.61.
8. சாமி.சிதம்பரன், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.205.
9. புறநானூறு, 9; 1-5
10. புறப்பொருள்வெண்பாமாலை, வெட்சி, கொளு ; 10
11. மேலது, வஞ்சி, கொளு ; 1
12. தொல்காப்பியம் - புறத்திணையியல், நூ. 6 ; 2-3
13. க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம் - புறத்திணையியல், உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.95
14. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் - புறத்திணையியல், உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.89
15. சோமசுந்தரபாரதியார், தொல்காப்பியம் - புறத்திணையியல், உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ப.91
16. மேலது, ப.91
17. புறநானூறு, 72; 8-16
18. புறப்பொருள்வெண்பாமாலை, காஞ்சி, கொளு ; 24
19. ஔவை துரைசாமிப்பிள்ளை, புறநானூறு மூலமும் உரையும், ப.349
20. புறநானூறு, 344; 3-7
21. புறப்பொருள்வெண்பாமாலை, நொச்சி, கொளு ; 9
22. மேலது, வஞ்சி, கொளு ; 20

23. மேலது. தும்பை. கொளு ; 3
24. மேலது. தும்பை. கொளு ; 4
25. புறநானூறு. 90; 12-13
26. புறப்பொருள்வெண்பாமாலை. வாகை. கொளு ; 1
27. தமிழண்ணல். புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு. ப.146
28. மகா. வேங்கடராமன். புறநூல்களில் பொருளியல் கோட்பாடுகள். ப.61.
29. புறநானூறு. 18; 28-30
30. மேலது. 46
31. மேலது. 196; 4-10
32. மேலது. 264
33. மேலது. 247; 2-7
34. புறப்பொருள்வெண்பாமாலை. வெட்சி. கொளு ; 20
35. மேலது. காஞ்சி. கொளு ; 13
36. புறநானூறு. 279
37. வ.சுப.மாணிக்கம். தமிழ்க்காதல். ப.220
38. மேலது. ப.220
39. புறநானூறு. 279 ; 7-11
40. தொல்காப்பியம் - அகத்திணையியல். நூ. 56
41. இளம்பூரணர். தொல்காப்பியம் - அகத்திணையியல். உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.585
42. மேலது. ப.585
43. மேலது. ப.585
44. புறநானூறு. 281 ; 1-6
45. தொல்காப்பியம் - அகத்திணையியல். நூ. 1
46. இளம்பூரணர். தொல்காப்பியம் - அகத்திணையியல். உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.5
47. புறநானூறு. 109 ; 1-9
48. நச்சினார்க்கினியர். தொல்காப்பியம் - அகத்திணையியல். உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம். ப.119

49. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.160

50. மேலது, ப.160

51. மு.இராகவையங்கள், தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, ப.152.

52. புறநானூறு, 3; 13-14

53. மேலது, 5 ; 5-7

54. மேலது, 6; 17-24

55. மேலது, 202 ; 6-17

56. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.254

57. புறநானூறு, 72 ; 7-12

58. K.Kailasapathy, Tamil Heroic Poetry, p.77
[There is considerable evidence to suggest that the praise of the bards were designed not only to please pleasure seeking, flattery– loving princes but also to serve as propaganada and Publicity for them among others]

59. புறநானூறு, 189 ; 5-8

60. மேலது, 183 ; 1-2

61. மேலது, 192; 1-2

62. மேலது, 35 ; 27-33

முடிவுரை

முடிவுரை

- தொல்காப்பியம், புறப்பொருள்வெண்பாமாலை கூறியுள்ள பன்னிரெண்டு புறத்திணைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆயின், எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றிற்கு இலக்கணம் சொல்லுதல், குறிஞ்சி முதலான ஏழு அகத்திணைகளுக்கும் முறையே வெட்சி முதலான ஏழு புறத்திணைகளோடு ஒப்புமை சொல்லுதல் எனும் அமைப்பு முறைகளுக்கு ஏற்ப இவற்றை ஏழாகக் குறிக்கிறது. இவற்றுள்ளும் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றைத் தொல்காப்பியம் அகமாகச் சுட்டுகிறது.
- பெயர் சுட்டி வரும் கைக்கிளை, பெருந்திணைப் பாடல்கள் புறம் என்றும், பெயர் சுட்டாமல் வரும் கைக்கிளை, பெருந்திணைப் பாடல்கள் அகம் என்றும் கொள்ளப்படும். புறநானூற்றில் 83,84,85 ஆகிய மூன்று கைக்கிளைப் பாடல்களும், 143 முதல் 147 வரையமைந்த ஐந்து பெருந்திணைப் பாடல்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.
- தொல்காப்பியத்தில் ஏழாகக் குறிக்கப்பட்ட புறத்திணைகள், புறப்பொருள் வெண்பாமாலையில் பன்னிரெண்டானது காலவளர்ச்சியில் ஏற்பட்டதாகும். புறப்பொருள்வெண்பாமாலை, தொல்காப்பியத்தின் சொல்முடிபோடும், பொருள்முடிபோடும் ஒத்தே இப்பன்னிரெண்டு புறத்திணைகளையும் கூறுவதால் இதனைப் புறத்திணை வளர்ச்சியாகக் கொள்ள வேண்டும்.
- புறப்பாடலொன்றின் திணைக் குறியீட்டைப் பார்த்த அளவிலேயே, அப்பாடலின் தன்மையினை ஐயமின்றி உணர்ந்து கொள்ள உதவுவது புறத்திணை வளர்ச்சியின் பயனாகும்.
- வீரசோழியம் புறத்திணைகளைப் பத்தாகக் குறிப்பிடுகிறது. கைக்கிளை, பெருந்திணைகளை இது குறிக்கவில்லை. இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் தொல்காப்பியத்தைப் பின்பற்றி புறத்திணைகளை ஏழாகவே குறிப்பிடுகின்றன.
- வெட்சித்திணையில் 16 துறைகளிலும், கரந்தைத் திணையில் எட்டுத் துறைகளிலும், வஞ்சித்திணையில் 15 துறைகளிலும், காஞ்சித்திணையில் ஒன்பது துறைகளிலும், உழிஞைத்திணையில் 13 துறைகளிலும், நொச்சித்திணையில் நான்கு துறைகளிலும், தும்பைத்திணையில் 12

துறைகளிலும், வாகைத்திணையில் 22 துறைகளிலும், பாடாண்திணையில் 28 துறைகளிலும், பொதுவியல் திணையில் 23 துறைகளிலும், தொல்காப்பியமும், புறப்பொருள்வெண்பாமாலையும் ஒத்து அமைகின்றன.

- புறப்பொருள்வெண்பாமாலை கைக்கிளைத் திணையின் கீழ் 19 துறைகளையும் பெருந்திணைத்திணையின் கீழ் 36 துறைகளையும் கூறுகின்றது. இத்துறைகள் தொல்காப்பியம் அகத்திணையின்கண் குறித்த கைக்கிளை, பெருந்திணை நிகழ்ச்சிகளின் வளர்ச்சியே ஆகும்.
- வீரசோழியம் மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே புறத்துறைகளைக் கூறியுள்ளது. இலக்கணவிளக்கமும், சுவாமிநாதமும் புறத்திணைகளைத் தொல்காப்பியத்தைப் பின்பற்றி ஏழு எனக்குறித்த போதும், புறத்துறைகளை விளக்கும் விதத்தில் முற்றிலும் புறப்பொருள்வெண்பாமாலையையே பின்பற்றுகின்றன.
- தொல்காப்பியம், புறப்பொருள்வெண்பாமாலை, இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் புறத்துறைகளை விளக்கும் வகையில் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும், பெரும்பான்மையும் ஒத்தே அமைகின்றன. தொல்காப்பியத்தை விட பின்னைய நூல்களில் எண்ணிக்கையளவில் அதிகத் துறைகள் காணப்படுகின்றன. இது புறத்துறைகளின் வளர்ச்சியாகும்.
- பன்னிரெண்டு புறத்திணைகளில், உழிஞைத்திணை தவிர்த்த பதினொரு திணைகளில் புறநானூற்றுப் பாடல்கள் அமைகின்றன. இப்பாடல்கள் எழுபது துறைகளில் உள்ளன.
- புறநானூற்றில் 26-பாடல்கள் (புறம்.2, 5-8, 17, 22, 23, 28, 31, 37, 49, 128, 137, 141, 143, 158, 170, 180, 259, 260, 262, 357, 369, 373, 397) இரண்டு துறைகளைப் பெறுவனவாகத் துறைவகுத்தோரால் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் ஆறு பாடல்கள் (புறம்.137, 143, 158, 259, 260, 359) ஒரு துறைக்கு மட்டுமே பொருந்தி வருகின்றன.
- புறநானூற்றின் 29-ஆவது பாடல் இயன்மொழித்துறைக்குரியதாகக் குறிக்கப்பட்ட போதும், முதுமொழிக்காஞ்சித்துறையே இப்பாடலுக்கான துறையாதல் வேண்டும்.

- புறநானூற்றின் 148, 202 ஆகிய இரண்டு பாடல்களும் பரிசிற்றுறைக் குரியனவாகச் சுட்டப்பட்டுள்ளன. இப்பாடல்களுக்கு இத்துறை பொருந்தவில்லை. 148-ஆவது பாடலினை இயன்மொழித் துறைக்கும், 202-ஆவது பாடலினை 'கொடுப்போர் ஏத்திக் கொடார்ப்பழித்தல்' துறைக்கும் கூறுவதே பொருத்தமானதாகும்.
- புறநானூற்றின் 228-ஆவது பாடல் ஆனந்தப்பையுள் துறைக்குரியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இத்துறை இப்பாடற் பொருளுடன் ஒத்து அமையவில்லை. கையறுநிலைத் துறையே இப்பாடலுக்கான துறையாதல் வேண்டும்.
- புறநானூற்றிற்குத் துறை வகுத்தோர் பாடற்பொருளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு துறை வகுக்கவில்லை. பாடல் பாடப்பட்ட சூழலினையும் கருத்தில் கொண்டே துறை வகுத்துள்ளனர். புறநானூற்றின் 109-111 ஆகிய மூன்று மகண்மறுத்தல் துறைப்பாடல்களும், 283, 284, 311 ஆகிய மூன்று பாண்பாட்டுத் துறைப்பாடல்களும், 114, 115, 218 ஆகிய மூன்று கையறுநிலைத் துறைப்பாடல்களும் இவ்வகையில் அமைந்தனவாகும்.
- பகைகொண்ட இருவரை சந்து செய்விக்கும் துணைவஞ்சி, மனையறத்தோடு துறவறத்தை ஒப்பிட்டுக்கூறும் மனையறம்துறவறம், புலவர் தாம் பெற்ற பொருளைத் தம்மைச் சுற்றியுள்ள அனைவருக்கும் கொடுத்து மகிழும் பரிசில், இரு வேந்தர்கள் உடனிருக்கையில் அவர்களது ஒற்றுமையைப் புகழ்ந்து பாடும் உடனிலை ஆகிய நான்கு புதிய, இலக்கணங்கள் சுட்டாத துறைகளைப் புறநானூற்றின் மூலம் அறியமுடிகின்றது.
- பதிற்றுப்பத்தின் பாடல்கள் அனைத்தும், பரவலும் புகழ்ச்சியும் விரும்பும் தலைவர்களைப் பரிசில் வேண்டிப் புலவர்களால் பாடப்பட்டவையாகும். எனவே, இப்பாடல்கள் அனைத்தும் பாடாண்திணையில் அடங்குகின்றன.
- பதிற்றுப்பத்தின் எண்பது பாடல்கள் பதினெட்டுத் துறைகளில் அமைகின்றன. புறநானூற்றில் ஒரு சில பாடல்களுக்கு இரண்டு துறைகள் குறிக்கப்பட்டது போல், இதில் ஒரு பாடலுக்குக்கூட இரண்டு துறைகள் குறிக்கப்படவில்லை.
- பதிற்றுப்பத்திலுள்ள பதினெட்டுத் துறைகளில், பெருஞ்சோற்றுநிலை, ஒள்வாளமாலை, காவன்முல்லை, இயன்மொழி வாழ்த்து, பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, செந்துறைப்பாடாண்பாட்டு ஆகிய ஏழு துறைகள்

தொல்காப்பியம் சுட்டியனவாகும். ஏனைய பதினொரு துறைகளும் தொல்காப்பியம் சுட்டாத பதிற்றுப்பத்தின் துறைகளாகும்.

- செந்துறைப்பாடாண்பாட்டு, வஞ்சித்துறைப்பாடாண்பாட்டு, வாகைத்துறைப் பாடாண்பாட்டு, வாகை, காட்சிவாழ்த்து, குரவைநிலை, உழிஞையரவம் ஆகிய ஏழு துறைகள் புறப்பொருள்வெண்பாமாலையில் கூறப்படாத பதிற்றுப்பத்தின் புதிய துறைகளாகும். இவற்றுள் வாகை என்னும் துறையினைப் புறப்பொருள்வெண்பாமாலை திணைப்பொருளாகக் கொண்டுள்ளது.
- ஒரு மன்னனின் வஞ்சிப் போரின் சிறப்பால் அவனை எதிர்த்துப் போரிடுவரின்மையைக் கூறும் வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு, சான்றோர் புகழும் புகழமைந்த வேந்தன் ஒருவனுடைய வென்றி முதலியவற்றைப் புகழ்ந்து கூறும் வாகைத்துறைப் பாடாண்பாட்டு, புலவன் மன்னனைக் கண்டு வாழ்த்தி தான் வந்ததற்கான காரணத்தைக் கூறும் காட்சிவாழ்த்து, மன்னன் பிற மகளிரோடு துணங்கைக் கூத்து ஆடியதனால் அவனது மனைவி ஊடல் கொள்ளுதலைக் கூறும் குரவைநிலை ஆகிய நான்கு புதிய, இலக்கணங்கள் சுட்டாத துறைகளைப் பதிற்றுப்பத்தின் பாடல்களின் மூலம் உணரமுடிகின்றது.
- மக்களின் அகம் தவிர்ந்த புறவாழ்வு முழுவதையும் கூறுவதற்காக எழுந்ததே வெட்சி முதலான பன்னிருதிணைகளாகும். இவை உலகில் நடந்த உண்மை நிகழ்வுகளைக் காட்டுகின்ற வரலாற்றுக் கருவூலங்களாகும்.
- வலியச் சென்று போர் செய்வதைப் போற்றாத பண்டையத் தமிழ்ச் சமுதாயம், பகைவர் தம்மேல் படையெடுத்து வருகையில் அதனை எதிர்த்துப் போரிடலைப் போற்றியது.
- வாகை, பாடாண் திணைப்பாடல்கள் தனி ஒருவரின் வெற்றி, கொடை முதலியவற்றைப் புகழ்வனவாக அமைய, பொதுவியல் திணைப் பாடல்கள் மக்களுக்குச் சிறந்த பல அறக்கருத்துக்களைக் கூறுகின்றன.
- துணைவஞ்சித்துறைப் பாடல்கள் (புறம்.36, 45, 46, 47, 57, 213) சங்க காலச் சமுதாயம் அமைதியுடன் திகழ புலவர்கள் மேற்கொண்ட நற்செயல்களைக் காட்டுகின்றன.
- அமைதியான, அறமிக்க சமுதாயத்தைப் படைப்பதே புறத்திணையின் குறிக்கோளாகும்.

துணைநூற்பட்டியல்

துணைநூற்பட்டியல்

1. அகத்தியலிங்கம், ச., - சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, மணிவாசகர் நூலகம், சிதம்பரம். (1997)

2. இராகவையங்கார், மு., - தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, தமிழ்ச் சங்க வித்தியா சாலை, மதுரை. (1929)

3. இராசமாணிக்கனார், மா., - பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. (1970)

4. இராமகிருஷ்ணன், எஸ்., - இந்தியப் பண்பாடும் தமிழரும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. (1971)

5. இலக்குவனார், சி., - இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்ககாலம்) வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை. (1972)

6. இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை,- பண்டையகேரளம், தமிழ்ப் புத்தகாலையம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை – 5. (1970)

7. ஐயன்பெருமாள் கோனார், - பண்டைத் தமிழர் பண்பாடு, பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை. (1961)

8.	கிருஷ்ணசாமி ஐயங்கார், எஸ்.,-	<u>சேரன் - வஞ்சி.</u> (வஞ்சி—சேரர் தலைநகர்) எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, நுங்கம்பாக்கம், சென்னை. (1946)
9.	கைலாசபதி, க., -	<u>ஒப்பியல் இலக்கியம்.</u> சென்னை புக்ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை. (1969) முதற் பதிப்பு
10.	கோபாலையர், தி.வே., - (பதி)	<u>இலக்கண விளக்கம்.</u> சரசுவதிமகால் நூல் நிலையம், தஞ்சை. (1972)
11.	கோவிந்தன், கா., -	<u>பண்டைத் தமிழர் போர்நெறி.</u> வள்ளுவர் பண்ணை, சென்னை. (1965)
12.	கோவிந்தராசமுதலியார்,கா.ர.,-	<u>வீரசோழியம்.</u> பெருந்தேவனார் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
13.	சஞ்சீவி, நா., -	<u>சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்.</u> சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. (1973)
14.	சண்முகம், மு.வை., - (பதி)	<u>சுவாமிநாதம்.</u> அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம். (1975)
15.	சதாசிவபண்டாரத்தார், தி.வை.,-	<u>இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும்.</u> தொல்காப்பியர் நூலகம், 202, ஜானி ஜான்கான் தெரு, சென்னை — 14. (1961)

16. சாமிநாதையர் உ.வே., (பதி) - பதிற்றுப்பத்து - மூலமும் உரையும்.
லிபர்டி அச்சுக்கூடம்.
சென்னை. (1941)

17. சாமிநாதையர், உ.வே., (பதி) - பரிபாடல்.
பரிமேலழகர் உரை.
ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு.
சென்னை (1956)

18. சாமிநாதையர், உ.வே., (பதி) சாமுண்டிதேவநாயகர் (உ.ஆ) - புறப்பொருள்வெண்பாமாலை.
கபீர் அச்சுக்கூடம்.
சென்னை. (1963)

19. சாமிநாதையர், உ.வே., - புறநானூறு - மூலமும் உரையும்.
தமிழ்ப் பல்கலைக்கழகம்.
தஞ்சாவூர். (1985)

20. சிவகுருநாதன், கோ., - வாகைத்திணை.
மணிவாசகர் பதிப்பகம்.
55, லிங்கி தெரு.
சென்னை. (1992)

21. சீனிவாசன், அ., - புறத்திணை.
பெரியநாயகி அச்சகம்.
மதுரை. (1977)

22. சுந்தரமகாலிங்கம், பொ., - புறத்திணை விருந்து.
சேகர் பதிப்பகம்.
சென்னை. (1977)

23. சுப்புரெட்டியார், ந., - தொல்காப்பியர் காட்டும் மனித வாழ்க்கை.
பழனியப்பா பிரதர்ஸ்.
திருச்சி. (1972)

24. செயராமன், நா., - சங்க இலக்கியத்தில் பாடாண்திணை.
மீனாட்சி புத்தக நிலையம்.
மதுரை. (1975)

25. செயராமன், நா., - <u>தமிழ் இலக்கிய நெறிகள்,</u>
குமரன் பதிப்பகம்,
3/270 சதாசிவநகர்,
வண்டியூர்,
மதுரை – 20. (1979)

26. சேதுப்பிள்ளை, ரா.பி., - <u>தமிழர் வீரம்,</u>
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை – 5. (1964)

27. சோமசுந்தரனார், பொ.வே., - <u>புறப்பொருள்வெண்பாமாலை,</u>
(உ.ஆ)
திருநெல்வேலி, சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
சென்னை – 18. (1996)

28. தமிழண்ணல், - <u>ஒப்பிலக்கிய அறிமுகம்,</u>
(இராம. பெரியகருப்பன்)
சோலை நூலக வெளியீடு,
மதுரை. (1973) முதற்பதிப்பு

29. தமிழண்ணல், - <u>புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.</u>
(இராம. பெரியகருப்பன்)
அன்புச் செல்வி பதிப்பகம்,
மதுரை. (1980) முதற்பதிப்பு

30. திருகூடசுந்தரம், பொ., - <u>சங்ககால வீரம்,</u>
ஸ்ரீ பாபுஜி பதிப்பகம்,
சென்னை. (1966)

31. துரைசாமிப்பிள்ளை,ஔவை சு.,- <u>புறநானூறு - மூலமும் உரையும்,</u>
(உ. ஆ)
(2 பாகங்கள்)
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
சென்னை. (1999, 1996)

32. துரைசாமிப்பிள்ளை,ஔவை சு.,- <u>பதிற்றுப்பத்து - மூலமும் உரையும்,</u>
(உ. ஆ)
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
சென்னை. (1999)

33. நாராயணையங்கார், மு.ரா., - தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி,
மதுரை தமிழ்ச்சங்கம்,
மதுரை. (1960)

34. பட்டாபிராமன், து., - புறத்திணை இலக்கணங்களின் திணைதுறை,
பிரியா பதிப்பகம், 243, மாரியப்பா நகர்,
அண்ணாநகர் - 2. (1986)

35. பாண்டுரங்கன், கி., - பண்டைத் தமிழர் போரியல் வாழ்க்கையும்,
தற்காலப் போர் நடவடிக்கையும்,
வெற்றிவேல் வெளியீடு,
63, தென்மேற்கு போக் சாலை,
தியாகராய நகர், சென்னை—17. (1986)

36. பாலசந்திரன், சு., - இலக்கிய இயக்கங்களும் திறனாய்வும்,
கோமதி நூலகம்,
சென்னை. (1982)

37. பாலசுந்தரம் பிள்ளை, தி.சு.,- (இளவழகனார்), பண்டைத்தமிழர் பொருளியல் வாழ்க்கை,
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
சென்னை. (1963)

38. பாலசுப்பிரமணியன், சி., - சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்,
நறுமலர்ப் பதிப்பகம்,
19, சயம்மாள் தெரு, ஐயாவு குடியிருப்பு,
சென்னை — 29. (1985)

39. பாலசுப்பிரமணியன், கு.வெ., - சங்க இலக்கியத்தில் புறப்பொருள்,
உமா பதிப்பகம்,
26, திருவள்ளுவர் நகர்,
கும்பகோணம். (1986)

40. பிள்ளை, கே.கே., - தமிழக வரலாறு — மக்களும் பண்பாடும்,
தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம்,
சென்னை. (1981)

41. மாணிக்கம், வ.சுப., - தொல்காப்பியப் புதுமை,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.

42. மாணிக்கம், வ.சுப., - தமிழ்க்காதல்,
மெய்யப்பன் தமிழாய்வகம்,
53, புதுத்தெரு,
சிதம்பரம். (2002)

43. முத்துச்சண்முகன், வீராச்சாமி (பதி) - தொல்காப்பியம் - பொருளதிகாரம் - அகத்திணையியல் உரைவளம்,
அருணாச்சலம்பிள்ளை ஆய்வுரை,
தமிழ்த்துறை, மதுரைப்பல்கலைக்கழகம்,
பல்கலைநகர், மதுரை – 21. (1975)

44. வரதராசன், மு., - இலக்கியத்திறன்,
பாரி நிலையம், 184, பிராட்வே,
சென்னை – 18. (1987)

45. வித்தியானந்தன், சு., - தமிழர் சால்பு (சங்க காலம்)
பாரி புத்தகப்பண்ணை,
சென்னை. (1954) முதற்பதிப்பு

46. வெள்ளைவாரணன், க., - தொல்காப்பியம்-புறத்திணையியல் உரைவளம்,
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 21. (1983)

47. வேங்கடராமன், மகா., - புறநூல்களில் பொருளியல் கோட்பாடுகள்,
அகத்தியர் அறிவாலயம்,
85, தெற்கு வண்டிக்காரத் தெரு,
உறையூர், திருச்சி. (1989)

48. வையாபுரிப்பிள்ளை, எஸ்., - இலக்கியச் சிந்தனைகள்,
பாரி நிலையம், பிராட்வே,
சென்னை. (1956)

49. ஜகந்நாதன். கி.வா., - அறப்போர்.
அமுதநிலையம் லிமிடெட்.
தேனாம்பேட்டை.
சென்னை – 18. (1952)

50. ஜான்சாமுவேல். ஜி., - இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்.
ஐந்திணைப்பதிப்பகம்.
சென்னை. (1978) முதற்பதிப்பு

51. .... - பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள்.
திருநெல்வேலி. தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்.
சென்னை (1952)

52. .... - புறநானூற்றுச் சொற்பொழிவுகள்.
(பன்னிருவர் சொற்பொழிவுகள்)
திருநெல்வேலி. தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்.
சென்னை. (1966)

53. .... - பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்.
(பேராசிரியர் ஒன்பதின்மர் ஆற்றியன)
திருநெல்வேலி. தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்.
சென்னை. (1966)

கருத்தரங்கமலர்கள். கோவை

54. அகத்தியலிங்கம். ச., முதலியோர். (பதி) - பதினாறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை.
(தொகுதி – 1)
இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்.
அண்ணாமலைநகர். (1984)

55. அகத்தியலிங்கம், ச., முதலியோர். (பதி) - பதினெட்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை. (தொகுதி – 1)
இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்,
அண்ணாமலைநகர். (1986)

56. சொக்கலிங்கம், தே., - புறத்திணை மகளிர்.
புறத்திணைக் கருத்தரங்கக் கட்டுரை.
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி (1988)

57. முத்துச்சண்முகன், பெரியகருப்பன், இராம. (பதி) ([illegible]) - வையைமலர் - 2.
வியாழவட்டக் கருத்தரங்கு மலர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை. (1975)

58. முத்துச்சண்முகன், ஆண்டியப்பன், தே. (பதி) - வையைமலர் - 3.
வியாழவட்டக் கருத்தரங்கு மலர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை. (1976)

அகராதி

59. .... - கழகத்தமிழ் அகராதி.
திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,
சென்னை.(2000)

ஆங்கிலநூல்கள்

60. Chakravarthi, P.C., - The Art of War in Ancient India,
Oriental Publishers,
Delhi – 6. (1972)

61. Kailasapathy, K., - Tamil Heroic Poetry,
Oxford University Press,
London. (1968)

62. Meenakshisundaram, T.P.,- A History of Tamil Literature,
Annamalai University,
Annamalai Nagar. (1965)

63. Quincy Wright., - A Study of War,
The University of Chicago Press,
Chicago & London. (1965)

64. Thani Nayagam, X.S., - Tamil Culture and Civilization,
Asia Publishing House,
Bombay. (1970)

65. Vaiyapuripillai, S., - History of Tamil Language and Literature,
(Beginning to 1000 A.D),
New Centry Book House,
Madras. (1956).

66. William K. Wimsatt JR & Cleanth Brooks - Literary Criticism,
Oxford & IBH Publishing Co.,
Calcutta. (1967)